
# எதிர் மறை



நீ.பி.அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர் மறை

சிறுகதைத்தொகுதி

நீ.பி.அருளானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்குறிப்பு
# எதிர்மறை

உரிமை :- நீ.பி.அருளானந்தம்
முதற்பதிப்பு :- ஆவணி 2023
உருபா:- 1000/=

ISBN – 978-624-6049-02-7


ETHIR MARAI
SUBJECT :
SHORT STORY
AUTHOR:
N.P.ARULANANTHAM
COPY RIGHT:
AUTHER [TYPE SETTING
MISS.R.BAWATHARANI
MISS.T.ABINAYA
DESIGN COVER PAGE
MR.RONALD
FIRST EDITION :
AUGUST – 2023
PUBLISHED BY:
THIRUMAGAL
PATHIPAGAM
NO:102,
1ST CROSS STREET,
VAVUNIYA
PRINTED :
POIHAI PRINTING PRESS
KANTHASAMYKOVIL
ROAD, VAVUNIYA
024 222 8088

வகை:
சிறுகதைத்தொகுதி
ஆசிரியர் :
நீ.பி.அருளானந்தம்
கணனி தட்டச்சமைப்பு
செல்வி.பவதாரணி
செல்வி.த.அபினயா
அட்டைப்பட வடிவமைப்பு
திரு.பொ.றொனால்ட்
ஓவியம் :
திரு.K.தர்சன் (ஆசிரியர்)
பதிப்பு :
திருமகள் பதிப்பகம்
இல:102,
1ம் குறுக்குத்தெரு,
வவுனியா
தொ.இல- 0761080479
அச்சுப்பதிப்பு :
பொய்கை பதிப்பகம்
கந்தசாமிகோவில் வீதி,
வவுனியா
024 222 8088



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை



**நா**டறிந்த எழுத்தாளர். இருபத்துமூன்று(23) நூல்களின் சொந்தக்காரர். “இவரது துயரம் சுமப்பவர்கள்” நாவலைப்பற்றி எழுதிய பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் கூற்று ஒன்றே போதும் இவருடைய எழுத்தின் வலிமையைப் புரிந்துகொள்ள.

இதுவரை யாரும் தொடாத, தொடத் தயங்குகின்ற கருவை எடுத்து எழுதிய நாவல் அது. நகரைத் துப்பரவாக்கும் தொழிலாளர்களின் வாழ்வைப்படம் பிடித்துக் காட்டிய முதல் நாவல் அது.

இவரது அயற் சூழலில் வாழும் நகரைச் சுத்தம் செய்யும் அந்த ஏழை எளிய மக்களின் துன்பங்களை, துயரங்களை துயரம் சுமப்பவர்கள் என்ற தலைப்பிலேயே முழுமையையும் பூடகமாக எடுத்துக் காட்டி தன் எழுத்தின் வீரியத்தைக் பறைசாற்றியவர் நீ.பி.அருளானந்தம்.

இவருடைய எதிர்மறை சிறுகதைத்தொகுப்பிற்கு முன்னுரை எழுதக் கிடைத்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது.

மூத்த எழுத்தாளர் நீ.பி.அருளானந்தம் எழுதிய “எதிர்மறை” என்கிற இச்சிறுகதைத் தொகுப்பின் கதைகள் யாவும் - எம்மக்கள் பட்ட வேதனைகளின் வெளிப்பாடுகள் என்றுதான் குறிப்பிட வேண்டும். வாழ்க்கையில் பலவிதமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து துன்பத்தில் வாழும் மக்களைக்கொண்டது எமது சமூகம். இச்சமூகத்தின் பிரச்சினைகளை கருப்பொருளாகக் கொள்ளாமல் யாரும் எழுதிடவே முடியாது என்பதை நன்குணர்ந்து, தனது “எதிர்மறை” சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார் நூலாசிரியர் நீ.பி.அருளானந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை என்பது ஒன்றை விவரிப்பது. ஒரு புள்ளியில் பேருருவம் காட்டுவது. கருத்துக் களமும் தொடக்கமும் முடிவும் தலைப்பும் மொழிநடையும் சிறந்திருந்தால் காலவெள்ளத்தில் சிறுகதையின் அடிப்படை பண்புகள் நிலைபெறும். எங்கே தொடங்கி எப்படி முடிக்க வேண்டும், எவற்றைக் கருப்பொருளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும், மையப் பொருளைப் புலப்படுத்தும் வகையில் தலைப் பினை சூட்ட வேண்டும் பாத்திரங்களின் இயல்புகளுக்கேற்ப மொழி நடையைக் கையாள வேண்டும் என்பவற்றில் நீ.பி.அருளானந்தம் மிகவும் நுட்பமாகக் கவனம் செலுத்தியுள்ளார்.

இத்தொகுப்பில் நெஞ்சத்து ரகசியம், ஆம்பல், கனவுப்பூ, சிவந்த கண், துயரார்ந்த மறைவுகள், மனம் செலுத்தும் திசை, தீபச்சுடர், இது ஒரு பேய்க்கதை, எதிர்மறை, கசந்து செல்லும் நாட்கள், உருவமும் குணமும், இரண்டாவது வாழ்க்கை, வானவில், நிலை மாற்றம், பிரதி அசலாகாது, வெறும்வெளி, தலைக்கு மேல், எப்போதும் உயர்ந்தவர், இரண்டு பன்றிகள் தூக்கியவன், சிதை யாத அன்பு, இளமையின் வசந்தம், வேளாண்மை விளைச்சல், வீரன் விளையாட்டு ஆகிய இருபத்துமூன்று (23) சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

இச்சிறுகதைகளில் சமகால யுத்தத்தையும் அதன் பல்வேறு தாக்கங்களையும் தாங்கிய சிறுகதைகளாக துயரார்ந்த மறைவு கள், தீபச்சுடர், கசந்து செல்லும் நாட்கள் ஆகியன இடம்பெறு கின்றன. துயரார்ந்த மறைவுகளில் ஈஸ்டர் குண்டு வெடிப்பையும் தீபச்சுடரில் யுத்தத்தினால் ஏற்பட்ட வறுமையிலும் சகோதர பாசத்தை இழக்காத அக்காவையும், கசந்து செல்லும் நாட்களில் பேரனுக்காக வாழும் பாட்டியையும், இரண்டாவது வாழ்க்கையில் யுத்தகாலத்தில் பங்கரின் முக்கியத்துவத்தையும் இயல்பாகக்காட்டி வாசகர்களையும் அந்தந்த இடங்களுக்கு கூட்டிச் செல்வதோடு அந்த உணர்வுகளையும் பெறவைப்பதனையும் பார்க்கலாம்.

வெளிநாட்டு வாழ்க்கையையும் முதியோரின் மன நிலையையும் நெஞ்சத்து இரகசியம், சிதையாத அன்பு ஆகிய கதைகளினூடு சுட்டிக்காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சத்து ரகசியத்தில் வெளிநாட்டில் இருக்கும் எட்டு வயதுப் பேரப்பிள்ளையுடன் மனைவியை இழந்தவர் கதைக்கும் போது "ஏன் அம்மப்பா நீங்கள் இன்னொரு கலியாணம் முடிக்கலாம் தானே"? என்று கேட்பதும், அம்மப்பாவிற்கு எல்லாமே இனிப்பான சொற்களாகவே இருந்தன என்று கூறுவதும் உளவியல் ரீதியான பார்வையைத் காட்டுகிறது. அதேபோல் சிதையாத அன்பிலும் பிள்ளைகள் வெளிநாட்டில் இருக்க தந்தை சொந்த நாட்டில் இருக்கும் அவலநிலை நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதுவும் இன்றைய காலகட்டத்திற்கு அதிகம் பொருத்தமானதே.

கதைகளினூடே தன் அனுபவங்களையும் தேடல்களையும் வாசகர்களுக்கு பயனுறும் வகையில் கலைத்துவமாக அதேவேளை கதையோடு கதையாக வளர்த்துச் செல்வதையும் பார்க்கலாம். நடைப்பயிற்சியின் முக்கியத்துவம், இயற்கையுடன் இயைந்து வாழ்வதன் அவசியம், செயற்கை உரங்களின் தீமை... எனப் பல்வேறு விடயங்களையும் வாசகர்கள் புரிந்து கொள்ளும் எளிமையான மொழிநடையில் பதிவு செய்துள்ளார் நீ.பி.அருளானந்தம்.

இதுவரை பத்திற்கு மேற்பட்ட சிறுகதைத் தொகுப்புக்கள் உட்பட 23 நூல்களை எழுதி வெளியிட்டுள்ள நீ.பி.அவர்கள் "எதிர்மறை" சிறுகதைத் தொகுப்புடன் வாசகர்களின் வாசிப்புக்கு வளம் சேர்ப்பதோடு மேலும் பல ஆக்கங்களை எழுதி வெளியிட வேண்டும் என்று கேட்டு நிறைவு செய்கிறேன்.

**ந.பார்த்திபன்**
**(ஓய்வுநிலை உபபீடாதிபதி**
**தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தின் பயணம்

**வா**ழ்க்கை என்கிற மையத்திலே நிகழ்ந்ததான உண்மை! அவற்றினூடாக நம் சமூகத்து மக்கள் வெவ்வேறு காலங்களிலே வாழப் பட்டதான வாழ்ந்து தொலைத்து விட்ட சொல்லப்படாத அத்தகைய வாழ்க்கை! அவற்றுடன் நம்மவர்கள் இன்றும் கடை பிடித்தொழுகும் பண்பாட்டு கலாசாரங்கள்!

இந்த வாழ்க்கையிலே இன்றும் கூட விலகாத துயர்கொண்ட நம் சமூகத்து மக்களது நிலைமை, அவர்களது துயர்மிக்கதான இன்றைய இருப்பு! மன உள்வலி! இவைகளை எல்லாம் நெஞ்சி லிருந்து மறக்காத நினைவுகளோடு இந்த சிறு கதைகளை நான் எழுதும் போது அவ்வவ்வேளைகளிலே என் மனம் வேதனைகளில் தகித்ததாகத்தான் இருந்திருக்கிறது. இப்படியாக நடந்து முடிந்த அந்த சம்பவங்கள் இனிவரும் காலங்களிலே சுவடே இல்லாமல் துடைத்தெறியப்பட்டது போன்று மறைக்கப்பட்டதாகிவிடுமோ! என்ற எண்ணத்திலே நம் சமூகத்திலுள்ள ஒரு சில எழுத்தாளர்களைப் போல, நானும் அவற்றினை நினைவில் கொண்டதாக அத்தகைய ஒரு படைப்பாளியாகத்தான் இன்றும் இருக்கின்றேன். இந்நூலில் அடங்கலாயுள்ள சிறுகதைகளிலே அனைத்துத் தரப்பு மனிதர் களது மாறுபாடான வாழ்க்கை நிலைவரங்களையும் அவர்களது மன இயல்புகளையும் வெளிச்சம் போட்டதாக விளங்கதக்க அளவிலாக சொல்லி இருக்கின்றேன்.

இந்த விதமான செயலானது இருட்டைப்பின்னுக்குத் தள்ளிக் கொண்டு வெளிச்சத்தில் நடக்கின்ற அசாதாரணமான ஒரு நிலமை யாகும். எதிர்மறை என்கிற தத்துவார்த்தமான இந்த சிந்தனை என்பது எவர் மனதிலும் பொதுப்பதமாக ஏற்றுக்கொள்ளக் கூடிய தான சிந்தனைக்குரிய ஒன்றான சொல்லக் கூடியதாகவே அமைந்த தாக இருக்கிறது.

அந்த விதத்தில் தத்துவஞானிகள் தம்கூற்றினை உறுதி செய்த தாகத்தான் அதற்கு சார்புடையதாக எழுதப்பட்டுள்ள இந்த சிறுகதை நூலுக்குப் பொருந்தக்கூடியதான எதிர்மறை என்ற தலைப்பை நான் அமைத்ததாக்கினேன். தமிழ் சிறுகதை உலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை ஆரம்பித்து மேம்படுத்துவதற்கான அடுக்குகளை உருவாக்கியவர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் மகாகவி பாரதியும், அவருக்கு பின்னராக எழுத்தாளர் புதுமைப்பித்தன் எனப்படுபவர் ஆவார்கள்.

அடிப்படையில் மீறக்கூடாத விதிகள் என்று சொல்லப்படுகின்ற பழமையை மீறி புது இலக்கியம் துணிவுடன் படைத்து புதிய வெளிச்சம் காட்டியவர்கள் இவர்கள். இவர்களினது வித்தியாசமான சீரான படைப்புத் திறனைத்தான் நானும் என் தகுதிக்கு கைக் கொண்டு என்னால் இயன்ற இலக்கியம் படைக்கவென்று என் இன்றைய காலத்திலுமாக விரும்புகிறேன்.

நான் பிறந்து வாழ்ந்த இந்த தமிழ் மண்ணின் வட்டாரமொழி வழக்கோடு வாழ்ந்ததில் அந்த இனிமையான பேச்சுவழக்கையே கையிலெடுத்ததாய் அந்தந்த பாத்திரப்படைப்பினூடாக பல சிறுகதை ஆக்கங்களை இதற்குள்ளாக நான் எழுதியிருக்கிறேன்.

இங்கு வாழும் தமிழ் பேசுகின்ற மக்களாகிய நாம் இங்குள்ள ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள அந்தந்த மொழி வழக்கையும் பண்பாட்டு கலாசாரங்களையும் மிகவும் அக்கறையோடு பாதுகாத்து மறையாமல் வளர்க்கப்பட வேண்டும் என்பதும் என் அவாவாகும்.

எதிர்மறையாக உள்ள சில வாழ்வியல் சார்ந்த நடைமுறைகளை வெளிப்படையாக எழுதுவதென்பது, ஆழம் தெரியாத நீர்த்தடத்தில் கால்களால் பார்த்து ஒருவன் வழியை தீர்மானிப்பது போன்ற ஒரு சிக்கலுக்கு உரியதாகத்தான் ஏற்பட்டு விடுகிறது.

என்றாலும் அந்தவிஷயம்தனை நியாயப்படுத்தி சொல்லவென ஆதாரமான நடப்பு சம்பவங்களும் இருக்கிறதுதானே! அந்த விஷயங்களை எல்லாம் தேவையான இடத்தில் இந்த சிறுகதைகளிலே நான் பதிவு செய்திருக்கிறேன்.

நான் எழுதிய இந்த சிறுகதைகளை எல்லாம் சகலரும் படித்து அறிந்து கொள்ளவான வெளிச்சத்தின் பரப்பில் இவற்றை அறியப்பட உதவி புரிந்த சாதனங்களானவை, பத்திரிகைகள், கலை இலக்கிய சஞ்சிகைகள் ஆகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சாதனங்களின் உதவியின்றி ஒரு எழுத்தாளனது படைப்புக்களானவை சகலரும் அறிந்து தெரிந்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பானது அமையாததாகிவிடும். எம்மைப் போன்றவர் தம் படைப்புக்கள் பலராலும் வாசித்து அறிந்து கொள்வதற்கு அளப் பரிய சேவை செய்து எமக்கு ஏணி போன்று உதவியதாக ஏற்றம் பெற வைப்பவர்கள் அவர்களே என்பதில் அதை நன்றியுடன் உள்ளத்தில் இருத்தி அதன் கண் அதன் ஆசிரியர்களுக்கு நன்றி கூறுவதில் நான் மிக்க மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

ஒரு புத்தகத்தை வாசிப்பதற்கென்று திறக்கும் போது முதன் முதல் அந்த புத்தகத்தின் வாசிப்புக்கு கண்ணில் படுவது அந்த புத்தகத்தினது முன்னுரையாகும். அதுவே அந்த நூலின் தொடர் வாசிப்புக்கு வாசல் திறந்து விடுவதைப்போல ஆர்வம் கொள்ளச் செய்கிறது.

அத்தகைய சிறந்த முன்னுரையை இந்த நூலுக்கு எழுதியவர் பசுமை கலை இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியரான திரு.ந. பார்த்தீபன் ஆவார். இந்நூலில் வெவ்வேறு விதத்தில் அமைந்த கதைகளின் சாரத்தை திறன் கொண்டதாய் அறிந்து படிப்பவர்கட்கு ஆர்வத்தை உண்டு பண்ண பரிமாறுவதில் திறமையுடன் அவர் வழி சமைத்திருக்கிறார். திரு.ந.பார்த்தீபன் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதியாக பணியாற்றி இக்காலம் ஓய்வுபெற்றிருக்கிறார். செழுமை வாய்ந்த நல்ல சிந்தனையும், சமூக சேவை உணர்வும் கொண்டு செயல்படும் அன்னார் இந் நூலுக்கு முன்னுரை எழுதி தந்தமைக்காக அவருக்கு நன்றியை இங்கு கூறுகிறேன்.

அத்துடன் என் நூல்களை வாங்கி வாசித்து என் தொடர் இலக்கிய பணியதனையும் ஊக்குவிக்கும் வாசகர்களையும் மனதில் இருத்தி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியதனையும் தெரிவித்தாகிய அன்போடு,

**நீ.பி.அருளானந்தம்**

T.P- 076-1080479
072 2784954



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளீடு


| | | |
|---|---|---|
| 1. | நெஞ்சத்து இரகசியம் | 1 |
| 2. | ஆம்பல் | 11 |
| 3. | கனவுப்பூ | 22 |
| 4. | சிவந்த கண் | 29 |
| 5. | துயரார்ந்த மறைவுகள் | 34 |
| 6. | மனம் செலுத்தும் திசை | 41 |
| 7. | தீபச்சுடர் | 48 |
| 8. | இது ஒரு பேய்க்கதை | 60 |
| 9. | எதிர்மறை | 66 |
| 10. | கசந்து செல்லும் நாட்கள் | 76 |
| 11. | உருவமும் குணமும் | 85 |
| 12. | இரண்டாவது வாழ்க்கை | 92 |
| 13. | வானவில் | 98 |
| 14. | நிலைமாற்றம் | 107 |
| 15. | பிரதி அசலாகாது | 116 |
| 16. | வெறும்வெளி | 119 |
| 17. | தலைக்கு மேல் | 128 |
| 18. | எப்பொழுதும் உயர்ந்தவர் | 137 |
| 19. | இரண்டு பன்றிகள் தூக்கியவன் | 142 |
| 20. | சிதையாத அன்பு | 154 |
| 21. | இளமையின் வசந்தம் | 160 |
| 22. | வேளாண்மை விளைச்சல் | 171 |
| 23. | வீரன் விளையாட்டு | 182 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



தமிழ்மொழி இலக்கிய இயங்கு
தளத்தில் செழுமை வாய்ந்த
அறிஞராக பிரகாசித்த
பேராசிரியர்க் கெல்லாம்
பேராசான் என்று சொல்லத்தகு
தகமை சால் பெருந்தகை,
பல்லாண்டுகளாக என்
எழுத்துப் பயணத்திற்கு
வழிகாட்டியாக இருந்த நல்
ஆசான் - கார்த்திகேசு
சிவத்தம்பி - அவர்களுக்கு என்
நெஞ்சு மறக்காத
நினைவுகளுடன் இந்நூலை
அவருக்கு சமர்ப்பிதம்
செய்கிறேன்.

**நீ.பி.அருளானந்தம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சத்து இரகசியம்



எல்லா நிறங்களும் சுழன்று வரும் ஒளிக்கதிருடன் சூரியன் விடியலைத் தொட்டதாய் எழுந்து விட்டான். பக்கத்து வீட்டிலிருந்து தனி வாசனை கொண்ட நல்ல கறி சமைக்கப்படும் நறுமணம் இந்நேரம் அந்த வீடுதாண்டியும் இங்கே அவரது அறைக்குள் ளாகவும் வருகிறது.

இரவு நித்திரை வந்து கண் இறுகிச்சொருகியும் வேலாயுதம் உடனே படுக்கைக்குப் போகவில்லை. மனைவி இறந்து ஒரு வருடம் பூர்த்தியான நாள் இன்று என்ற யோசனையில் இரவு பெருமூச்சு விட்ட கவலையோடும் அவர் இருந்தார். பூட்டிய கதவுக ளுக்கு இடையே விரியும் ஆளற்ற தனிமையின் அறுப்பறுக்கும் வெறுமை காகம் தலைசாய்த்துப் பார்ப்பது போல சில இரவுகளில் அவரைப் பார்க்கின்ற நிலையாகவும் வந்துவிடுவதுண்டு. ஆனாலும், நேற்று இரவு என்னவோ எல்லா மன அமைதியையும் அவரிடமி ருந்து திருடிக்கொண்டு போன இரவாகவே அப்படியாக அது அமைந்திருந்தது. ஆனாலும் அதிலேயே கிடந்து மூழ்கித் தத்தளித் துப் புலம்புகிற ஒரு நிலைக்குப் போகாமல் சிவனே என்று கடவு ளிடம் தன் பாரத்தை கொடுத்த நிலையில்தான் அவர் பிறகு நித்தி ரைக்குப் போய் இருந்தார். "குளிர்ச்சி நிரம்பிய முகமுடைய சீதேவி அவள்! என்னை விட்டுப் போய்... ம்... ஒரு வருடமும் கூட முடிஞ் சும் போயிற்றுது" கட்டிலால் இருந்து எழுந்ததும் இதை நினைத்த படி ஒரு பெருமூச்சுடன் அவை எல்லாமே இனி தன் மனதிலிருந்து அழிய வேண்டும் என்ற நியதியுடன் வேலாயுதம் தன் காலைக் கடன்களை சரிவர நிறைவேற்றும் செயலினை தொடர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன அழுத்தத்திற்கும் உடல் சோம்பலுக்கும் சூடாக ஒரு கப் தேநீர் குடித்தால் அவையெல்லாம் தள்ளி நிற்கும்! காலையில் வெறுவயிற்றிற்கும் வாய்க்கும் அமுதாய்ச் சேர்வது என்பது அவருக் கென்னவோ இந்த சுடு தேத்தண்ணீர்தான்.

குசினிக்குள் போய் இதை தயாரித்துக் கொண்டு வெளி விறாந்தையடிக்கு வந்து அங்கே கதிரையில் இருந்தவாறே தேநீர் குடிக்க ஆரம்பித்தார். வளவுக்குள் உள்ள தென்னைகளில் பட்சிக ளின் ஆங்காரமான கூச்சலான கத்தல்கள் இப்போது இல்லை! ஆனால், வெயில் ஏறிய பொழுதில் அணில்கள் மாத்திரம் வேப்பம் மரத்தில் இருந்தபடி நெஞ்சிறங்கும் அளவுக்கு மூச்சாகக் கத்திக் கொண்டிருந்தன. அணில்களின் சத்தத்தைக் கேட்டுக் கொண்டு, தேநீர் ருசி பார்த்தலுடன் வேலிப்பக்கம் அவருக்கு கண் பார்வை நீண்டது.

"ஏதோவொன்று வேலியில் கிடந்து சுருள்கிறது. என்ன அது?" என்ற கேள்வியுடன் தெளிவோடு பார்க்கிறார். மூப்பான கண் பார்வை என்றாலும் சமசியம் இல்லாமல் "இது தான்!" என்று அவருக்கு அது இப்போது உடனே சந்தித்து விட்டது. "ஓகோ!" இவரே ஆள் நீர்? எனக்கு இப்பவெல்லாம் மயிலைப் பார்த்தாலும் ஒண்டுதான்! உன்னைப் பார்த்தாலும் அது மாதிரி ஒண்டுதான்! எதுவும் எனக்கு இப்பவா வித்தியாசமே இல்ல!" என்று சொல்லிய வாறு கறுத்த வருணமான அதை பின்பு ஒரு வார்த்தையும் வெளி விடாமல் பார்த்தார்.

எப்படியாக இருந்தாலும் மூச்சில் வரும் காற்று அவருக்கு கொஞ்சமாகவே அசைந்தது. அந்தப் பாம்பின் ஊர்தலின் தொடரா னது வேலி மரக் கிளைகளிலே நழுவி சரிவாக ஊர்ந்து பின்பு அவரின் பார்வைக்கு தெளிவடையாததாய் தரையிறங்கிக் கடந்து போய்விட்டது.

"போப் போ! வீட்டுப் பக்கமா இனி வராத என்ன! அப்பிடி இங்கேயாய் உனக்கென்ன ஒரு ஊர்வலம் எண்டு கேக்கிறன்? உன்னைய விட பவர்புல்லான மனுசரெல்லாம் இப்ப உலகத்தில நடமாடுறாங்கள் எண்டு தெரியுமே உனக்கு? இப்ப உன்னய விட அந்த மாதிரியான மனுசர்களைக் கண்டுதானே இப்பவா பயப்பிட வேண்டியும் கிடக்கு!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமையாச் சிலையாக ஒரு கணம் இருந்தவாறே பாம்பு போய் மறைந்த தடயத்தைப் பார்த்தவாறே அவர் இதை யோசனை யோடே சொன்னார்.

“சீ இந்த யன்னல்கள் இப்பவா திறந்து வைச்சாலும் சிதறிப் பறந்து வந்து இந்தப் பக்கம் மூடுற தூசிப் படை வீட்டுக் குள்ளயும் வருகுது முந்திய எங்கட காலம் மாதிரியே இப்பவாக் கிடக்கு! இப்ப எங்கட நாட்டில சனத்தொகையைவிட வாகனங்கள் தானே கூடவாகக் கிடக்கு இப்பிடியா அசைஞ்சசைஞ்சு போற பழைய லொறி எல்லாம் கக்கி விடுற புகை மனுசரிண்ட முகம் மறைச்சு மூக்குக்குள்ளயும் அடிச்சு உச்சியிலயும் போய் விரியுது. றோட்டுக்குப் பக்கத்தில வீடு இருக்கிறது நல்லம் எண்டு பாத்தால், இப்ப அதுதானே பிரச்சனையாப் போயிட்டு! இப்பிடியா அவ்வள வுக்கு உள்ளயும் நல்ல மரம் செடி கொடி இல்ல! வைச்சிட்டுவெளி நாடுகள் எண்டு போயிற்றுதுகள் என்ர பிள்ளயள்!”

என்று தன் பாட்டுக்கு வாய் பேசாது யோசனையிலே மட்டுமாக இதையே பேசுகிறதாக இருந்தபடி, இருகைகளிலும் ரேகை பதிகிற அளவிற்கு அவர் இறுகித்தேய்த்தபடி உஷ்ணம் ஏற்றிக் கொண்டார். இந்நேரம் குடை சுருக்கிக் கொண்டு கேற்றடி யில் ஒருவர் நிற்கிறதைப் போல அவருக்கு பார்க்கவும் விளங்கி யது. “டொக் டொக்” என்று தட்டும் சத்தம் கேட்டது. “இவர் சஙகிலியன்தான்! வேற ஆர் என்னட்ட இங்க வாறது” நினைத்துக் கொண்டு “வாறன்! நான் வாறன்!” என்றவாறு போய் இரும்பு அரைக் கேற்றைத் திறந்தார். “வாரும் வாரும் சங்கிலி.”

“ஓமோம் வாறன்! என்னவும் வேலாயுதம் நீர் இண்டைக் கப்பா வெளியால நடக்க வெண்டு போகேல்லயே? நீர் போற வாறத வீட்டில நிண்டு எப்பிடியும் மதிலுக்கு மேலால ஒருக்கா நானும் பாக்கிறனான்தானே! அதுதான் ஆள் என்னப்பா இண்டைக்கு காலேலயா உதால போறவர்காணேல்ல! எண்டு நான் போட்டு ஒருக்கா உம்மை வந்து பாப்போம் எண்டிட்டு இங்கயா வந்தன்” என்று அவர் விரிப்பாக இதை சொல்ல, “என்னிலயா நீர் அக்கறை தான் காணும்! நல்லம்தான் இப்பிடி அக்கறையா ஒரு ஆள் எண்டாலும் பாக்கிறதுக்கு எண்டு இங்க வந்து போறதாகவும் இருக்கிறது. தச்சமயம் ஒரு நேரம் ஆள் நான் முடிஞ்சு கிடிஞ்சு போனாலும் என்ரை வெளிநாட்டில இருக்கிற பிள்ளையளுக் கெண்டாலும் அறிவிக்க வெண்டு ஒரு ஆள் வேணும் என்னவும்?”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆ! அதெல்லாம் இப்ப வேண்டாத கத! இதுகள அதுகள ஏனப்பா நீர் கதைக்கிறீர்? அதுகள விட்டிட்டி இப்பநீர் எனக்கு இதைச் சொல்லும்? நீர் ஏன் காணும் இண்டைக்கு நடக்கப் போகேல்லயே? காலேல ஆனந்தமா வெளியால நடந்து போய் வராட்டி உமக்கு பொழுது விடியாதே! நடந்து போற அந்த இடத்திலயும் அரசமரத்துக் கீழ போய் இருந்து இருபத்தி நாலு நிமிஷம் தியானம் பண்ணுறன் எண்டு சொல்லுறீர். இந்த அரச மரத்ததுக்குப் பக்கதில ஊசி வேம்பு, சக்கரைவேம்பு, நாட்டு வேம்பு, புங்க மரம் எண்டு நிக்கிறதால அந்த இடம் தியானம் செய்யிற ஆக்களுக்கு இனி இல்லை எண்ட சோக்கான இட மெண்டும் நீர் முதல் எனக்கு அப்ப சொன்னீர் தானே?" என்று அவர் கேற்றடியிலேயே நின்றபடி வேலாயுதத்தை நேரே பார்த்த வாறு இதை சொல்ல, "என்ன கேற்றைத் திறந்த உடனயே என்னட்டயா இப்ப கேக்க இருக்கிறது இந்த அரச மரத்துக் கதையே? மெல்ல மெல்ல இதையெல்லாமே அங்க விறாந்தையில இருந்து ஆறுதலாக் கதைக்கலாம் தானே? ஆதால அங்க போய் முதல்ல இருப்பமே வாருமன்?

என்று கண் இமை மூடாத ஒரு சிரிப்புடனும் சொல்லிய வாறே நட்போடு அவரை ஒரு கையால் அணைத்தவாறு விறாந்தை யடிக்கு அவரை கூட்டிக் கொண்டு சென்றார் வேலாயுதம். அங்கே போய் கதிரையில் இருந்தவுடன் சங்கிலிக்கு முன்னம் கதைத்த கதையினது தொடர் சேர்ந்தது.

"ஆகா இவ்வளவு பெரிய மூலிகைக் காற்றுத் தரும் தெய்வீகமான மரங்கள் ஒன்டாய் ஒரு இடத்தில அதுவும் பக்கத்தில பக்கத்திலயா அங்கினையா நிக்கிறதெண்றது எவ்வளவு அபூர்வமப்பா! கிடைக்குமே எங்கேயுமே இப்படியா ஒரு இடம் அந்த மரத்துப் பச்சிலையெல்லாம் மனம் வந்து தாற காற்றாக பிராண வாய்வைத்தனே மிகச் சுத்தமாக வெளிவிடும். அதிலும் இந்த அரச மரம் எண்டுறது வேற எல்லா மரங்களிலும் இருந்து சிறந்ததாகத் தானே இருக்குது. இதனாலதானேப்பா கீதையிலையும் கூட கண்ணனும் மரங்களனைத்திலும் நான் அரசமரம் எண்டு சொல்லு றார்" "ஓமோம் நீர் இப்பவா சொன்னது எல்லாம் சரிதான்! நல்லா இதையெல்லாம் நீர் அறிஞ்சு கூட வைச்சிருக்கிறீர்! எண்டாலும் நான் நடந்து போற அந்த இடம் பார்த்தால் கொஞ்சம் தூரமா கிட்டத்தான் இருக்கு! ஆனாலும் நீர் ஏன் இப்படியா நடக்கிறதுத்து எண்டும் ஒரு நேரத்தை ஒதுக்கேல்ல? என்னோட அந்த இடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடிக்கு நீரும் வந்தால் இப்படியான நல்ல மன உடல் சுக பலத்தையும் அடையலாம்தானே?" என்று இதை அவர் சொல்லிக் கொண்டு இருக்கையில், பக்கத்து வளவு வீட்டிலிருந்து மைனா குருவி கதைப்பது நல்ல துலக்கமாகக் கேட்டது.

"என்ன கறி!கறி! என்ன கறிகறி!"

"என்னவாம் அது சொல்லுது? கறி கறியாமோ? மைனாவே அது! இப்படி அந்த வீட்டில உள்ளவயளிட்டயாக் கேக்குது?" "ஓமோம் அது அவயளிண்ட வளர்ப்பு மைனாதான்! காலேல அது குளிருக்குள்ள ஒண்டுமே கதைக்காது கண்டீரோ, ஆனாலும் வெயில் ஏறாவா விட்டு அப்பா எவ்வளவோ அது இப்படி இப்பிடி வேற அந்த இந்த கதையெல்லாம் அது கதைக்கத் துவங்கீடும்.!" "உண்ணாணயே?" அவர் கேட்டு விட்டு சிரித்தார். வேலாயுதமும் அவர் சிரிக்கத்தானும் சேர்ந்து சிரித்தார்.

"அதில சங்கிலி இப்ப அந்த வீட்டில நடவடிக்கை என்னடா எண்டா அதைச் சொல்லேக்கிளயே சிரிப்பும் கூட வந்திடும் பாரும்" என்று சொன்னதோடு அடக்க முடியாது சிரிப்பும் வந்தது அவருக்கு "கிக்கிக்கிக்" என்றதில் எச்சில் பறந்தது. "என்னப்பா நீர் மட்டுமே சிரிக்கிறீர்? அந்த கதையை எனக்கும் கூட ஒருக்கா சொல்லிப் போட்டு சிரியுமன்? அவருக்கும் கண்ணில் ஊறிய நீரோடு ஒளி பளிச்சிட்டது. "அங்கப்பக்கத்து வீட்டிலயா குடும்பத்தில உள்ள அவர் சங்கதி என்னென்டதா கண்டீரோ ஆள் அவர் கொஞ்சம் தண்ணியும் போடுகிறவர்! அவர் தண்ணியப் போட்டிட்டு வீட்ட வந்தால் மனுசியிட்ட எடியேய் இண்டைக்கு என்ன கறி? என்னகறி? எண்டு சத்தம் போடுவார்! அவர் போடுற சத்தம் இங்கயா எனக்குக் கூட கேக்கும்! இதைவிட கொஞ்சம் கனக்கவும் தண்ணியப் போட்டிட்டு அவர் நல்ல சுப்பா ஏறினதா வந்தாரெண்டால் ஆள் கொஞ்சம் இருந்தாப்போல அப்பிடி இப்பிடியும் தெரியாதே காதால கேக்க ஏலாத அப்பிடியான தமிழும் கதைப்பார். இதெல்லாம் கேட்டுப்போட்டு அந்த மைனாவும் அவற்றை டைப்பிலயா பிறகு கதை சொல்லத்துவங்கீட்டுது! அதால அவர் இப்ப என்ன பண்ணி யிருக்கிறார் தெரியுமோ?" "ஏன்னப்பா விட்டிட்டீர் கதய சொல்லுமன் என்னெண்டு? அதத்தானே நானும் கேக்கிறன் எப்படியெண்டு அதை எனக்கும் சொல்லுமன்.?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதென்னண்டா இப்ப அந்த வீட்டில என்ன நடந்திருக்கு எண்டு தெரியுமே. ஆள் இப்பவா அவர் சங்கிலி குடிகிறது எண்டுறத இப்ப நிப்பாட்டீட்டார் போலத்தான் கிடக்கு. இப்ப இப்பிடித்தான் அவற்றைய நடவடிக்கை எண்டும் எனக்கும் விளங்குது.. கதைக்கிற கதை ஒவ்வொண்டையும் அந்த மைனாவுக்குப் பயத்தில கவன மாக் கதைக்கிறார்க்கும் எண்டுதான் நானும் நினைக்கிறன்" "அட சோக்கெல்லோ இப்படியான ஒரு செய்தி. அப்ப குடிகாரர் வீட்டில இப்பிடி ஒரு மைனா வளத்தா திறம் எண்ட மாதிரிமெல்லே இருக்கு இந்தக் கதை."

"அப்படியா எல்லா இடமும் இதுதான் நடக்கப் போகுதே? சில வீடுகளில நாங்களும்தான் கதைக்கிறோம் அதைத்தானே மயினாவும் கதைக்கிது எண்டுபோட்டு மைனாவையும் அதுகள் தங்கட குடும்பத்தில ஒரு அங்கத்தவரா சேர்த்துக் கொண்டது மாதிரி சந்தோஷமாகவும் கேட்டு சிரிச்சுக் கொண்டு இருக்குங்கள் தானே?"

"ஓமோம் சிலதுகளுக்கு இது பழக்கமாயும் போயிரும்தான்! என்னவோ உமக்கும் இப்பிடி அப்பிடியா இதுகளை கேட்டு பிராக்கா பொழுதும் போய்க் கொண்டிருக்கு! எனக் கெண்டா உம்மை வந்து இங்கே பார்க்கேக்கிள்ள மனதுக்க ஒரு சந்தோஷம் வாறதுதான்1 அது எதுக்கெண்டா, ஒரு சிலபேர் மனுசி செத்துப் போனா பிறகு அப்பிடியே முகத்தையம் கவலை கஷ்டத்தில விழுந்தவன் மாதிரி தொங்கப் போட்டுக் கொண்டு ஒரு மனசரோட பேசிப் பறையவே சரியாக் கஷ்டப்படுவாங்கள்! பழைய குரங்கு மனுசரிண்ட சித்திரம் போல தாடியும் வளர்த்துக் கொண்டு பிரேத வாய்வில வீங்கின பிணம் மாதிரி முகமும் வீங்கினதா அதைச்சுப் போன அளவுக்கு இருப்பாங்கள். ஆனா நீர் வாழ்கை இது தான் எண்டு அறிஞ்சு சீவிக்கிறீர். இது தானே அப்பா மனுசருக்கெண்டதா இருக்க வேண்டியது. ஆனாலுமப்பா இப்ப நான் நினைக்கிறத உமக்கு இப்ப நல்லதுக்கெண்டதா சொல்லுறன். நீர் அங்க வெளி நாட்டில இருக்கிற உம்முடைய அந்த மகளோட போயிந்தா அங்க பிள்ளைகுட்டியளோட இருந்து பிரச்சனை இல்லாமல் சீவிக்கலாம் தானே? அது உமக்கு நல்லது தானே என்னவும்?"

"ஓம் அது நல்லம்தான்! நல்லதுதான்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பின்ன ஓ.. அது நல்லது தானே…? அப்பிடி சீவியத்தில வெளிநாட்டிலயும் உமக்கும் இருந்ததாய் போகுது….”

“ஓமோம் அப்பிடியாத்தான்! பாப்பம் பார்ப்போம்! பிறகு பாப்பம்!” “என்ன பாப்போம் பாப்போம் எண்டுறீர்! எத்தனை தடைவ முன்னமும் நான் இதை உம்மட்டை சொன்னனான். அப்பிடி நான் சொன்ன நேரத்திலை எல்லாம்… நீர் அப்படி இப்பிடி எண்டு ஒரு கதை சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டே இருக்கிறீர்! எங்க எந்த நாட்டுக்குப் போனாலும் இந்த வானமும் பூமியும் ஒரே மாதிரித்தானே இருக்கும் எண்டுறீர் நீர்! சரி இப்ப நீர் உள்ளதைச் சொல்லும்! உமக்கு வெளிநாடு போக விருப்பமில்லையே ?” ய்யே.. என்னப்பா அந்த வெளிநாடுகள் ஊரை வீட்டை விட்டுப்போட்டு அங்கபோய் என்ன நான் செய்ய? எனக்கெண்டா துண்டா மனமேயில்ல.”

“மனமில்லயோ! அப்ப இங்க நீர் தனியக்கிடக்கேலுமே இனியும்! வயசுக்கேற்ற செயல்பாடெல்லே இருக்க வேணும்! அது சரி உம்மட மகளிண்ட பிள்ளையள் அந்த பேரபிள்ளையள் உம்மோட கதைக்கிறேல்லயோ?”

சங்கிலி கேட்கவும் வேலாயுதம் ஒரு சிரிப்புச்சிரித்து விட்டுத்தான் பிறகு சொன்னார்.

“ஓமோமோம் கதைக்கிறவயள்”

“அவவின்ரை மூத்தணை பெம்புளப்பிள்ளையெண்டீர்”

“ஓ மூத்ததா அவளுக்கு பொம்பளப்பிள்ளைதான்!”

“ஆம்மோ அந்தப் பேரப்பிள்ளைக்கு எத்தினையப்பாவயசு?”

“ஏழு.. ஏழு…! இல்லயில்ல எட்டு எட்டு வயசு அவவுக்கு!”

“எட்டே! ஆய்… எட்டே அவவுக்கு?”

“ஓமோமோம்!”

“அப்ப நல்லா அது உம்மோட கதைக்கும் என்ன?”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பாடா அது அந்த மாதிரி பெரிய கதை எல்லாம் கதைக்கும்"

"தமிழும் கதைக்கத் தெரியமே?"

குரலின் ஏற்றம் களைந்து தண்ணீர்க் குளிர்ச்சி தடவின மாதிரிகேட்டார்.

"ஓ தமிழெண்டா கனக்கத் கதைக்கக் தெரியாது அவவுக்கு! முதல் முதல் அம்மப்பா எண்டு கதையை துவங்கீற்று, பிறகு டாஸ் பூஸ்தான்!"

"அட இங்கிலீசே!"

"ஓம் தாய் தமிழாலதான் அவவோட நெடுகவும் கதைக் கிறவ ஆனா அதுகள் அங்க பள்ளிக்கூடம் போய் அங்க உள்ள பிள்ளையளோட பழகிறதால இங்கிலீசுதான் இங்க வீட்டையும் வந்து அதே கதை கதைக்குதுகள்"

"சரி சரி இப்பிடித்தான் கன இடத்திலயா அங்கின நடக்குது! அது கிடக்க பேரப்பிள்ளை கிட்டடியில உம்மோட கதைச்சதே?"

"ஓம் ரெண்டு மூண்டு நாளுக்கு முதல் தாய் என்னோட கதைச்சு முடிய பேரப்பிள்ளை கதைச்சவ"

"என்னத்தை ஒண்டை உம்மட பேரபிள்ளை கதையில உம்மட்ட ஏதும் கேப்பா கொள்ளுவா... இப்ப மூண்டு நாளுக்கு முதல் என்ன உம்மட்டயாக் கேட்டவ?"

"அவ இப்ப மூண்டு நாளுக்கு முதல் எனக்கு என்ன சொன்னவ எண்டு தெரியுமே? என்ன சொன்னவ எண்டு தெரியுமே?" சொல்லிய கையோடு மகிழ்ச்சியில் அவர் உரக்கச் சிரித்தார்.

"என்ன என்னெண்டு எனக்கும் அதை சொல்லலாம் தானே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயையோ பாரும் எனக்கு நேரம் போச்செல்லே சங்கிலி! காலைச் சாப்பாட்டுக்கு இப்ப பயறு குசினிலபோய் நான் அவிக்க வேண்டியெல்லே கிடக்கு சாப்பிட"

"அடட ஓம் ஓம் சரியா நேரம் எனக்கும்கூட போயிட்டுதான்! சரி நீர் அதைப் பாரும் போய் நீர் அங்க நேரத்துக்கு! அங்க சாப்பாட்டைப்போய் சருக்கட்டும்! அப்ப நானும் போகப் போறன்! இன்னொரு நாளைக்கு நான் இங்க ஆறுதலா வாறனேடா!" என்று சொல்லியவாறு சங்கிலியனும் உடனே வெளிக்கிட தயாராகி விட்டார். அவரை கூட்டிச் சென்று கேற்றைத் திறந்து போக விட்டு விட்டு வேலாயுதம் குசினிக்கு வந்தார். சட்டியில் ஊறிக்கிடந்த பயறுக்கு ஒரு துளி உப்புப் போட்டு விட்டு அடுப்பில் வைத்து காஸ்நெருப்பலையைத் திறந்தர். அடுப்பில் நெருப்பு எரியவும் யோசனையும் அவருக்குப் போனது.

மூன்று நாளைக்கு முன் பேரப்பிள்ளை தன்னிடம் என்னத்தை தன் கதையில் கேட்டாள் என்பதை அவர் இப்போது மீட்டுரு செய்தார். யோசித்துப் பார்த்தபோது பேரப்பிள்ளை தன்னிடம் அன்போடு கேட்டவை அனைத்தும் அவர் மனதுக்கு இப்போது எல்லாமே இனிப்பான சொற்களாகவே இருந்தன. அவரின் மனைவி இறந்த சில மாதத்தில் நெருங்கிய உறவுள்ள ஒருத்தி சொன்னார்.

"என்ன செய்யிறது இனியா நீங்கள் உங்கட மனுசிய நினைச்சுக்கொண்டு அப்பிடியே அவவின்ர நினைப்பிலேயே மிச்ச காலத்தை தள்ளுங்கோ" என்றதாக! இன்னொரு உறவினர் தன் ஆய்வுத் தீர்ப்பு மாதிரி இதை சொன்னார்."

"என்னதானப்பா செய்யலாம் இதுகளுக்கு! வாழ்க்கையில ஒரு ஆள் இருக்க ஓராள் போறது தானே உலகத்தில் நடக்கிற ஒரு சம்பவம்!"

ஆனாலும் இவர்களை விட என்பேரபிள்ளைகுத்தான் என்னில எவ்வளவு அக்கறை! அந்தக்குழந்தை சொல்லுறதக்கேட்டு நடக்கவா விருப்பமில்லை எண்டாலும் என்னர தனிமையின்ரை கொடுமையை அந்தச்சின்னப்பிள்ளையே சரியா உணந்திருக்குதே! அது எவ்வளவு அக்கறையா பாசமா தெரியுது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மப்பா! ஏன் நீங்கள் இப்பவும் இன்னொரு கலியாணத்தை நீங்கள் முடிக்கலாம் தானே அம்மப்பா?"

இந்தச் சின்ன வயசில இந்த அளவு அறிவு முதிர்ச்சியோட அந்தப் பிள்ளை என்னோட கதைக்கிறதுக்கான காரணம் என்ரை பேரப்பிள்ளை, அவள் வெளிநாட்டிலேயே பிறந்து வளந்ததாகவும் இருக்கலாம்! ஆனாலும் அவள் என்னட்ட கேட்ட கதையை வேறு யாரிட்டயும் ஒரு கதைக்காவது இங்கயா நான் சொல்லேலுமோ"?


இப்படி நினைத்ததோடு அவர் பிறகு ஒரு யோசனையிலும் ஊர்ந்தார்.

"மகள் தான் இப்பிடி பிள்ளையிற்றை சொல்லிக் குடுத்தாளோ...?"

"அம்மப்பா விட்ட நீ இப்படியா கேள் பிள்ளை எண்டு"

**செங்கதிர் (தை-பங்குனி-2018)**
**விரகேசரி வார மஞ்சரி(புரட்டாதி 30-2018)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆம்பல்

**கா**லைப்பனிக்குளிரானது விலகி நிறுத்தும் பெறும்வேளை மட்டும் விழித்தெழாமல் அப்படியே படுக்கைப் போர்வைக்குள் முடங்கிக்கிடந்தார் நமச்சிவாயம். போர்வைக்குள் அவர் இறுகிக் கிடந்த வேளை யோசனைகளும் அவருக்கு விதம் விதமான சட்டையுடுத்துக்கொண்டது. இவ்வேளை ஒரு நொடி போல திடீரென ஒரு உறக்கமும் வந்தது. ஆனாலும் முடியாது இது காலைவேளை என்று அவர் நினைத்ததால் பின்பு சோம்பல் நித்திரை முறிந்தும் விட உடனே படுக்கையிலிருந்தும் எழுந்தும் விட்டார்.

பிற்பாடு காலைக் கடன்களையெல்லாம் சரிவரசெய்து முடித்துக் கொண்டு சமையலறைப் பக்கம் போனவர் மனைவி கொடுத்த தேநீரை வாங்கிக்குடித்து விட்டு அங்கிருந்த கதிரையில் இருந்து கொண்டார். இக்கணம் அவரது இதயத்தில் வேரூன்றி நிலைத்த அந்தச் சம்பவம் அவருக்குள் துளைத்தெடுத்ததாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. உடனே சுருட்டை எடுத்து நெருப்புப்பற்ற வைத்து புகை பிடித்தார். அவரின் மனைவி கனகு சமையல் வேலையும் கையுமாக இந்நேரம் இருந்தாலும் அவரையும் இடையிடையே பார்த்துக் கொண்டுவிட்டு, பின்பு கதை பேச்சையும் தொடங்கினாள். அவரின் நினைவிலே மனைவி இப்போது சொல்பவை எல்லாம் கடல் தாண்டிப்போய்க்கொண்டு இருப்பதாக விளங்கியது.

“உங்கட தம்பியும் அவற்றை மனுசியும் கடைசியவள் நீலாவும் நாளைக்கு இங்கயா வருகின மெண்டெல்லே மூண்டு நாளைக்கு முதல் இங்க எங்களுக்குச் சொன்னவயள்?”

“இதைத்தான் நீ எனக்கு எத்தனை தடைவை ஓய் வொழிச்சல் இல்லாம சொல்லிப்போட்டாய் கனகு? எனக்கும் நல்லா தெரிஞ்ச விசயத்தை ஏன் பேந்தும் பேந்தும் சொல்லுறாய் நீ?” சொற்களில் சுடுகின்ற உஷ்ணத்தை வைத்தபடி அவர் கேட்டார். கணவன் அப்படி கடுப்பாய்ச் சொல்ல கனகத்துக்கு விளக்குமாறு ஈர்க்குகுச்சிகளால் தலையை விறாண்டுவது போல இருந்தது. பேன் ஊர்வது போல தலைமயிருக்குள் துடிக்கக் கடிக்கத் தொடங்கி விட்டது. உச்சந்தலை முடிக்குள்ளாலே உடனே இரு விரல்களால் அவள் சொறிந்தாள். கையை கழுவி விட்டு பதற்றமற்ற குரலில் பிறகு அவள் சொன்னாள்.

“ஏன் நீங்கள் பழைய அந்தக்கோலத்திலயே இருக்கிற மாதிரி இப்பயும் இருக்கிறியள்? அவன் தெய்வம் வந்து உங்களுக் கெண்டு இருக்கிற ஒரேயொரு தம்பிதானே? வேற சகோதரங்கள் யாரும் உங்களுக்கு இருக்கே? சகோதரங்கள் எண்டு சொல்லிக் கொள்ள?” “சகோதரம் தான்! அவன் என்ரைய ஒரேயொரு தம்பியும்தான்! அதை யார்தான் இல்லையெண்டது? நானும் அவனில பாசம்தான்! அதையும் யார் இல்லயெண்டது? ஆனாலும் இவன் எங்கட தாய் தேப்பனுக்கு, எங்கட பரம்பரைக்குச் செய்து விட்டிருக்கிறக்கொடுமை எவ்வளவு பெரிய அனியாயப்பட்ட தெண்டு உனக்கு விளங்குதே? அதுகள் அப்பத்தையக்காலத்தில சதுரம் முறியப் பாடுபட்டுக்கட்டின வீடெல்லே அது. என்ன விறைப்பா செழிப்பா இப்பயும் அதுக்க நிக்கிற பலாமரங்கள், மாமரங்கள், தென்னையள், கமுகு மரங்கள் பாக்ககூடியதா பிரயோசனமா நிக்குது. அது எங்கட அப்பரெல்லே கஷ்டப்பட்டு வைச்சு பராமரிச்சு உண்டாக்கிவிட்டவர். அதையெல்லாம் முழு வீச்சில மறந்திட்டு அநியாய விலையிலயும் பிடிச்செல்லே அவன் வித்துப்போட்டான்?”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடித்திரிந்து எடுத்ததுபோல யோசனைக்குள் போகாமல் எடுத்த எடுப்பில் உடனே அவர் சொன்னார். அவர் சொன்ன கதைக்கு வாய் அடங்கிப்போனது மாதிரி இருந்த கனகு சிறிது இடைவெளி நேரம் விட்டு தைரியத்தை அமைத்த நிலையில் கதைக்கத் தொடங்கினாள். "சரி உங்கட அப்பா என்ரை மாமா உயிரோட இருக்கேக்கிள்ள உங்களுக்கும் அவருக்குமெண்டுதானே இருந்த ரெண்டு காணித்துண்டுகளிலுள்ள வீடுகளை உங்களுக்கும் அவருக்குமெண்டதா பங்கு பிரிச்சுக் குடுத்தவர். இந்த எங்கட காணி வீடு மாரித்தான் ஒரு திறந்த வெளியான முற்றமும் உள்ள காணி வீடு அது! நீங்கள் சொன்னமாதிரி நல்ல மரங்களும் அதுக்க நிற்குதுதான். குளுகுளு வெண்டு நல்லதொரு அமைவு! ஏற்ற வசதி யெல்லாம் அமைஞ்சுள்ள எத்தினை அறையுள்ளது அந்தப் பெரிய வீடு, அந்த வீட்டையும் காணியையும் பற்றி நிறையவே இப்படி பேசலாம். ஆனாலும் அவற்றைய சொத்துத்தானே அந்தக் காணி வீடு! அவருக்குள்ள அந்த சொத்தை அவர் தன்ரை இஷ்டத்துக்கு விக்கிறதை நாங்கள் சொல்லிக் கேப்பாரோ? எண்டாலும் அந்தக் காணி வீட்டை அவர் விக்கேக்கிள்ள நீங்கள் ஒரேஒரு தமயன் இருக்கிறியள் எண்டுவந்து உங்களிட்டயும் தானே அதை நீங்கள் எடுங்கோ எண்டு கேட்டவர்... நீங்கள் அதுக்கு எங்களிட்ட எங்க அவ்வளவு காசு கிடக்கு எண்டு உடனே சொல்லிப்போட்டியள். அதோட அவர் கதையை விட்டிட்டார். பிறகு யாருக்கோ வித்தார், போயிட்டார்." கனகு இவ்விதம் சொல்ல அவருக்கு முகம் மாறி விட்டது கண்களை விரிய திறந்து கொண்டு கத்தரிக்காய் நறுக்கி துண்டுவெட்டிக் கொண்டிருந்த அவளை உஷ்ன பார்வையோடு பார்த்தார். "கனகு நீ கதைச்சுக் கதைச்சு வந்ததில உன்ர இந்தக் கடைசிக் கதையத்தான்ரி கேட்கவா இப்பவா மனதிலச் சரியான தொரு எரிச்சல் எனக்கு உடனயா எழும்புதடி! தான் பிழைச்சுத் தன்ர சம்பாத்தியத்தில தன்ரை குடும்பத்துக்குத் தின்னுறத்துக்குச் சோறு போட ஏலாதவன் - அட அந்த பரம்பரையா இருந்த சொத்தையெல்லே இப்ப வித்து நாசமறுத்திப்போட்டு தன்ரை குஷிய இப்ப பாத்துச்சோக்கடிச்சுக் கொண்டு சீவிக்கிறான். சீ ச்சீச்சீச்சீ இதுவும் வந்து ஒரு சீவியமே மானம்கெட்ட சீவியம்" கோபத்தை சுமந்தபடி அவர் சொல்ல, கனகுவிற்கு" நீ பயப் படாமல் பேசு கதை கதை" "என்று அப்பொழுது மனம் சொன்னது. "ஆனாலும் காணிவீட்ட வித்த காசை உங்களிண்ட தம்பி அநியாயமா ஒண்டும் செலவழிச்சுப் போடேல்லத்தானேயுங்கோ. அவர் வித்துப்போட்ட இந்த வீட்டவிட மலையகப்பக்கம் அவர் பெண்ணம்பெரிய வசதியான வீடொண்டு கொஞ்சவிலைக்கு லாபமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கி இருக்கிறாராமுங்கோ அதில மிச்சச்சொச்சக்காசை வட்டி பெறுகிற கணக்கில பாங்கில வைப்புச் செய்திருக்கிறாராம்.. மகள் நீலாவையும் அங்க உள்ள நல்ல ஒரு கல்லூரியில படிக்கவா சேர்த்தாச்சாம்.. அவரும் கூட ஒரு கம்பனியில அங்க வேல செய்யிறாறாம்... அதிலயுங்கோ அதிலயுங்கோ அந்த வங்கியில போட்ட காசிலயாவாற வட்டி மட்டும் தாராளமா அவயின்ற வீட்டுக்கான செலவுகளுக்கெல்லாம் காணுமாம்... அந்தக் காசில செலவு போக மிச்சமும் நல்லா மிஞ்சுதாம். இதெல்லாம் போக மூத்த பொடியனுக்கும் கொழும்பில வேல கிடைச்சிருக்காம்.'' கனகு மிக ஆர்வமாக இதை சொன்னாள் ஆனால் அவள் சொல்வதை கேட்டப்படி இருந்த நமச்சிவாயத்தின் நிலை எப்படியென்றால், கண்விழியை நன்றாக முழித்து பார்க்கும்போது நமச்சிவாயத்தின் முகம் பார்ப்பதற்கு அப்படி சகித்துக் கொள்ளாத அளவிலே தெரிவதாகவே இருக்கும். அந்த நிலையிலே நமச்சிவாயம் கனகுவை இப்போது மிகவும் கோபமாக பார்த்தார். கனகுவுக்கு இது எல்லாம் பழக்கப் பட்டதாயிருந்தாலும் இப்போது அவரது பார்வையைக்கண்டது ஏதோ தாங்கிக்கொள்ளாத அளவிற்கு தன்னை மிரட்சியுற செய்தது போலவே இருந்தது. என்றாலும் உதறி விடுவித்துக் கொண்டது போல தன்னை அவள் நிதானப்படுத்தினாள். நமச்சிவாயத்திற்கோ பேச்சு இப்போது நன்றாக மாற்றமடைந்துவிட்டது. சொற்களெல்லாம் அவரது வாயிலிருந்து புயலில் அடிப்பட்டு எழுந்தது போல வெளி வந்தன.

''தான் பிறந்து வளந்த இந்த ஊரை விட்டு, சொந்தத்தை விட்டு, பரம்பரையா நாங்கள் கும்பிடுற வீட்டுக்குப் பக்கத்தில உள்ள அந்த எங்கட முருகன் கோயில விட்டு, ஊர்பேர் தெரியாத அந்த இடத்தில இருக்கிற அவரை இனி ஆர் எங்கட சொந்தங்கள் மரியாதைவைச்சு மதிக்கும்?''

என்று, வெறும்வெளியை அளப்பது மாதிரி ஏதோ தன் போசனையில் தடுமாறிக்கொண்டு அவர் சொன்னார். அவரின் கதைக்குள்ளே ஒரு திசை ஒன்று தனக்கு திறந்தது மாதிரி இப்போது கனகுவிற்கு இருந்தது.

''என்ன நீங்க இப்பிடி ஏதேதோ சொல்லவேணும் எண்டதுக் காக எரிச்சல் பட கதைக்கிறியள்? இங்க இப்ப எங்கட சனங்கள் எத்தனை பேர் காணியைப் பூமியை வீடுகளை எல்லாம் வித்திட்டு பிள்ளைகள் வெளிநாட்டுக்குப் போய்ச் சேந்தாக்காமெண்டு வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால போக அனுப்பிக் கொண்டிருக்குதுகள்? பரம்பரைச் சொத்துக் களையும் அப்படியா அதுகள் வித்திருக்குதுகள்தானே?''

என்று கனகு சொல்லிவிடவும் "ஆகா நீ அந்தக் கதையள இந்த எங்கட கதைக்கிள கொண்டந்தே இப்ப செருகிவிடப் பாக்கிறாய்?''

என்று அவரின் குரல் இப்போது அதிகாரத்தொனியிலாய் எதிரொலித்தது. என்றாலும் மகள் ரஞ்சிதாவின் நினைவு அவருக்கு வந்து விட "எங்க அவள் பிள்ளை எங்கடை ரஞ்சிதா''?

என்று குரலை அடக்கிக்கொண்டு மெல்லிய சத்தத்தில் கேட்டார். அவர் கேட்டதுமே குசினி உள்வாசலை தன் பார்வையை வைத்த அளவாக நிறுத்தியபடி கனகு கவனித்ததாய் யோசித்தாள். பின்பு," அவள் உள் அறைக்கயா இருந்து படிச்சுக்கொண்டு இருக்கிறாள் போல'' என்றாள். "அப்ப இங்க என்ர கதையை இனிக்கவனி?'' என்று விட்டு பிறகு அவர் சொன்னார்.

"அந்த இந்த ஆக்களிண்ட நடவடிக்கையள் எண்டுறதுகள் எனக்குத் தேவையில்லக் கண்டியோ... ஆரும் தங்கட தங்கட சொத்துக்களை வித்துத்துலைக்கட்டும் ஒண்டுமில்லாம பிறகு காடுகளில மலைவழிய போய் இருக்கட்டும்.... அல்லது பெரிய பணக்காரரா வந்து சீவியத்துக்கு முக மூடி போட்டுக்கொண்டு செருக்குக்குடை பிடிச்சுக் காட்டிக்கொண்டு திரியட்டும் அதை யெல்லாம் ஏன் நான் வந்து கண்டுகொள்ளுறன்....? நான் மானமா, மரியாதையா சீவிக்க, எனக்குப் பத்துப்பரப்புத் தோட்டக் காணி இருக்கு.... அதில நான், தோட்டம் செய்து ராசா மாதிரிச் சீவிப்பன்! அது காணுமடி கனகு எனக்கு....! பிள்ளையள் வெளியால போற தெண்டா, அதுகள் இன்னும் மேல மேலயும் படிச்சுக்கிடிச்சு தங்கட கெட்டித்தனத்திலயா வெளியால போகப் பாக்கட்டும்... அதுதான் என்ர கொள்கை! என்ர சீவியம்! இந்த விசயத்தில நான் என்ரை மனவைராக்கியத்தை விட்டுத் துலைச்சு இருந்து வீரியம் இழந்ததா எப்பவும் போயிடமாட்டன்'' என்று அவர் உறைப்பாகச்சொல்ல, அவர் கதையைக்கேட்டுக்கொண்டு, நெருப்பு அடுப்பில் மீன் குழம்பு பொங்குவதை கண்டு விட்டு உடனே அகப்பையை எடுத்துக் குழம்பை அவள் ஆற்றினாள். அப்படி அவள் ஆற்றவும், சட்டிக்குள் குழம்பு அமைதியாய் அடங்கியது. குழம்பு இப்போது பசி தூண்டும் வாடை அடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டிக்குள் குழம்பின் கொதிப்பு இப்போது அடங்கினாலும் கனகுவின் மனம் முன்னம் பொங்கிய கறிக்குழம்பு போலவே கொதித்துக் கொண்டதாய் இருந்தது. குழம்பின் வாசனை மூக்கில் பிடிபடவும் சுருட்டுக் குறைத்துண்டை குப்பைவாளிக்குள் போட்டு விட்டு "சரி சரி! காலைச்சாப்பாடு என்னவாம் புட்டு என்ன? அதைப் பீங்கானிலபோடு! இந்தா உடனே நான் வாறன்"! என்று சொல்லிய படி நமச்சிவாயம் குனிசி வாசலால் உள் அறைக்கு இப்போது போகின்றதாய் நடந்து போனார்.

அவர் போகவும் அவர் போன வழியை ஒரு முறை பார்த்து விட்டு கனகு தன் பாட்டுக்கு வாய்க்குள் புலம்பினாள்.

"என்ன வகையான மனிசன் இவர்! பழமை புழுத்த மனிசன்! இந்தாளுக்கு ஞானமான புத்தி இருக்கே? தோட்டம் ஒண்டு செய்யிறாராம் தோட்டம்! கண்டறியாத ஒரு தோட்டம்!" வாயில் இந்த வார்த்தையை அவள் வெளிவிட்டதும் தனக்குத்தானே அவள் முகம் சுழித்துக் கொண்டாள். தலையை சற்று கீழே சரித்து பிறகு தன் நெஞ்சை பிறகு பார்த்தாள். "என்ரை எல்லா நகையும் தோட்டம் தோட்டம் எண்டு இவர் செய்யப் போய்த்தானே நட்டத்தில யெல்லாம் அந்த நகைமுழுக்கவுமா தோட்டம் எண்டுறது விழுங்கி னது. இந்தக்கழுத்துத் தூக்க ஏலாததாலிக் கொடியும் ஒழிஞ்சது இந்தக் தோட்டத்தாலதானே?" என்று பின்பு நினைத்ததில் விலகி நின்ற துன்பமெல்லாம் இப்போது ஒன்று சேர்ந்து வந்தது போல அவளின் மனதை வாட்டியது. அப்படி மனதில் அவளுக்கு துன்பம் விளங்க இருந்தாலும் சமையல் வேலையில் எதுவும் பிழைவிடாது அடுப்பை உரிமை கொண்ட அளவிலாய் அதன் பக்கத்திலேயே நின்றபடி எல்லா அலுவல்களையும் சரிவர செய்து கொண்டே இருந்தாள்.

அடுத்த நாள் தணல்கள் சிரித்தது போன்று கடுமையான வெயிலடித்த மதிய நேரம் தெய்வமும், அவர் மனைவி தேவியும், மகள் நீலாவும், சொகுசுவாகனமாக காணப்பட்ட வானில் வந்து நமச்சிவாயத்தினுடைய வீட்டுக்கு முன்னால் இறங்கிக் கொண் டார்கள். அவர்கள் வாகனத்தால் இருந்து கீழே இறங்கிய பொழுதி ருந்து நல்ல வரவேற்பு நமச்சிவாயம் குடும்பத்தினர் எல்லோரிட மிருந்தும் அவர்களுக்கு கிடைத்தது.

"நேற்றுக் காலயிலயெல்லாம் அப்பிடி இப்பிடி எண்டு கதைச்ச மனிசனா இப்பிடியாய் இப்ப இதடியில வந்து நிற்கிறார்.?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கனகு தன் கணவரின் முகத்தையும் உருவத்தையும் அவரின் செய்கைகளையும் பார்த்தவாறு அப்படியே பிரமித்துப் போனாள். அவள் பார்த்து பிரமிக்கும் அளவிலே நமச்சிவாயம் தன் தம்பி தெய்வத்தை பாசமாக கட்டி அணைத்தார். தெய்வத்துக்கும் அப்போது கண் இரண்டும் கலங்கிவிட்டது. நமச்சியவாயமும் தெய்வம் போன்றே அப்படியே விளங்க.

"என்ன கன காலமா நீங்க எல்லாரும் எங்களை மறந்து போயிற்றியள்?"

என்று அவர்கள் எல்லோரையும் அன்பின் அரவணைப்பான நிலையோடே கேட்டார். "வரவேணும் இங்க உங்கள பார்க்க வரவெணுமெண்டுதான் நினைச்சு எப்போதும் வைச்சுக் கொண்டிருந்தது. ஆனாலும் சரியான வேலைப்பளு அண்ணை அதுதான்" என்று தெய்வம் அண்ணனைப் பார்த்துக்கொண்டு பிரயாணப் பையை கையில் தூக்கி எடுக்க" தாங்கோ அதை என்ற கையிலயா சித்தப்பா?" என்று சொல்லியபடி நமச்சிவாயத்தின் மகன் அதை தன்கையில் உடனே வாங்கிக்கொண்டான். "இங்க இவள் நல்லா வெள்ளையா சிவப்பாவடிவா வந்திட்டாள்" சொல்லியவாறு ரஞ்சிதா, நீலாவை கட்டி அணைத்தாள் "அக்கா எப்பிடி நீங்க எல்லாம் இருக்கிறீங்க?" தெய்வத்தின் மனைவி தேவி அப்படி பாசமாய் கேட்க துக்கம் கலையாமல் இந்த கனகுவின் மனதிலே அழுகை இறுகியது. முன்னம்போல் இல்லாமல் இப்போது தெய்வத்தின் மனைவி போட்டிருந்த புதுப்புது பவுண் நகைகளைக் கான அவளுக்கு எரிச்சல் மனதை கவ்வவில்லை. குடிகொள்ளும் பொறாமை எனப்பட்டதும் அவள் மனதைதொடவில்லை. ஆனாலும் அவளது மன உள் வட்டத்துக்குள்ளே தன் குடும்பநிலை பற்றிய கவலையே நீர் இறைத்துவிட்ட கிணற்றின் அடி மண்ணின் உள்ளிருந்து வெளிப்படும் ஊற்றாக தள்ளிக் கொண்டிருந்தது. ஆனாலும் அதைவெளியே வெளிக்காட்டாமல் அவள் மறைத்தபடி "தேவி தெய்வம் தம்பி பிள்ளை எல்லாரும் வாருங்கோ" என்று சொல்லியபடி முக மலர்ச்சியாய் சிரித்தும் கொண்டு அவர்களை யெல்லாம் உபசாரமாய் வரவேற்றாள். வீட்டுக்குள்ளே எல்லோருமாக வந்த பிறகு ஆசைதீர இரு குடும்பத்தில் உள்ளவர்களும் சந்தோசத்துடன் கதைத்தபடியே இருந்தார்கள்.

"இப்படியே நேரம் போற கணக்கிலயும் கதையோட இருந்தால் பிறகு எப்படியாம்மத்தியான சாப்பாட்டைச் சாப்பிடுறது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப நாங்கள் சாப்பிடுவமே பேந்து வடிவா இருந்து கொண்டு இங்க ஆறுதலா நல்லா கதைக்கலாம் தானே?"

என்று நமச்சிவாயம் சொல்ல "ஓ சோறு கறி இரசமெல்லாம் நான் வேளைக்கே அடுப்பில வைச்சு சமைச்செல்லாம் இறக்கீட்டன். இப்பவே சாப்பிடலாம். சாப்பிடலாம்" என்று அவர்கள் எல்லோருக் கும் முன்னால் போய் நின்று கொண்டு கனகு சொன்னாள். அற்புதமான பாடல் ஒன்று அப்போது வானொலியில் போய்க் கொண்டிருந்தது. எல்லோரும் அந்த பாடலை ரசித்தபடியே தங்க ளுக்குரிய சாப்பாடுகளை பீங்கானில் போட்டு சாப்பிட்டுக் கொண் டார்கள். இரவு ஆனதும் சகோதரர்கள் இருவரும் ஒரு அறைக் குளிருந்து தங்களுக்குள் கதைத்துக் கொண்டார்கள். ரஞ்சிதாவும் நீலாவும் ஒரு அறைக்குள் இருந்து இனி எங்களுக்கு கதையில் ஏதும் மிச்சம் வைத்ததாயில்லை என்றாற்போல அலட்டிக் கொண்டி ருந்தார்கள். கனகுவும் தேவியும் தணிந்த குரலில் தங்கள் தங்கள் வாழ்வின் குறை நிறைகளை கதைக்கத் தொடங்கி இருந்தார்கள். நமச்சிவாயத்தின் மகன் ஹாலிலே ரிவி பார்த்துக் கொண்டி ருந்தான். வெளிப்படையான வெறுப்பான கதையிலே கனகு மாத்திரம் இருந்துகொண்டிருந்தாள். அவளுடைய கதையிலே அந்த வீட்டில் அப்போது இருந்தவர்கள் எல்லோரிலும் பார்க்க ஏக்கம் அதிகம் இருந்தது. "நம் வாழ்க்கையை நாம் எல்லாம் சூழ்நிலைக் கேற்ப மாற்றிக் கொண்டால் என்ன அதில் ஏதும் பிழையோ" என்றும் அவள் சிந்தாந்தமும் தேவியோடு கதைத்தாள். தேவிசுகம் கொண்ட தங்கள் இப்போதைய வாழ்க்கை நிலைமையை சொல்லச் சொல்ல தன்னுடைய தாகம் தணிக்கும் ஆசையிலே அவள் சொல்வதை தெல்லாம் கேட்கவுமாக கனகு விற்கு இருந்தது.

"அங்கயெல்லாம் பார்க்க உயிர்த்ததைப்போல சும்ம குளு குளுவெண்டு அப்படியா பூக்களெல்லாம் குளிர்ச்சியாகத் தெரியும் அக்கா"

"அதுதானே அதுதானே அது வந்து குளிர்மையான நல்ல தொரு சுவாத்தியமான தேசம் அப்படித்தானே அங்கயெல்லாம் இருக்கும்... இங்க இந்த வெயிலுக்க என்னவும் ஒரு நல்ல பூக் கன்றுகளை நட்டு வளர்த்தா அதுவளர்ந்து கிளர்ந்து நல்லா வரப் போகுதோ? இங்கயெண்டு பார்த்தால் அரலிமரமும் செம்பரத்தம்பூ மரமும் தான் இந்தபட்டை வெய்யிலுக்கயா தாக்கருப்பிடிச்சு நிக்கும் என்ன?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா குளிருக்குள்ள வந்து ராவில அங்க நல்லா நித்திரையும் போகுமக்கா கடைசிவரையும் வேர்க்கவே வேர்க்காது" என்று தேவி சொல்ல – கனகு அதைக்கேட்டு பற்றற்ற ' ம்......" போட்டாள்.

தேவிக்கு இப்போது தான் போட்டுள்ள நகைகளைப்பற்றி கனகுச்சொல்லவதற்கு ஆசை! கனகுக்கும் அதைபற்றி கேட்க வேண்டும் என்பது விரிந்த ஆசை! ஆனாலும் கதையில் இப்போது முந்திக் கொண்ட தானவள் தேவியேதான். இப்படி இதையெல்லாம் எங்கேயும் யாருக்கும் சொல்ல வேண்டுமென்ற தீவிரம் அவளிடமாகத்தானே மிகவும் இருந்தது.

"இந்தப்புது நகைளெல்லாம் மொத்தம் இருபது பவுணக்கா! அங்க போனாப்பிறகுதான் இதெல்லாம் அவர் செய்து தந்தவர்!" என்று சொல்லும்போது தன்சிரிப்பை செதுக்கிப்பூவின் சிரிப்பாய் சிரித்தாள் தேவி

அவள் இதை சொல்ல சிறகு குவிந்தது போல ஏமாற்றத்தில் மனம் குவிந்தலைப்போன்று ஆனது கனகுவிற்கு. ஆனாலும் தன் முகம் சுருங்காத அளவிற்கு அதையெல்லாம் அவள் வெளிக்காட்டாததாய் இருந்தாள். தெய்வத்தின் குடும்பம் மூன்று நாட்கள் வரை நமச்சிவாயத்தின் வீட்டில் தங்கி இருந்தார்கள் அவர்களுக்கு மூன்று வேளை உணவும் சாப்பிட ருசியாகவும் திருப்பதியாகவும் கனகு மிக அக்கறையெடுத்து சமையல் பண்ணி கொடுத்து பார்த்துக்கொண்டாள். இந்த மூன்று நாளும் கறிபுளிபழம் வாங்க ஊர் சந்தைக்கு ஓடித்திரிவதும் வருவதுமாக பொருட்களை வாங்கிவரும் வேலையில் சுறுசுறுப்பாக இருந்தார் நமச்சிவாயம்.

அண்ணன் வீட்டுக்கு இப்போது வந்திருந்ததற்கு அவர் குடும்பத்திற்கு விசேஷமாக பல பொருட்களை வாங்கிக் கொடுத்து உதவ தெய்வமும் உணர்வோடு இருந்தார். தேவி அவருக்கு ஞாபகப்படுத்தி விட்டதிலே அண்ணன் மகள் ரஞ்சிதாவுக்கு ஒன்றரைப் பவுண் தங்கச்சங்கலி ஒன்று அவர் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார். அண்ணன் அண்ணிக்கும் மறப்பு இல்லாமல் அண்ணன் மகனுக்கும் உடுப்புகளும் அவர் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தார்.

தெய்வத்தின் குடும்பம் நமச்சிவாயத்தின் வீட்டில் வந்து தங்கியிருந்ததில் இப்போது வரை மூன்று நாள் கழிந்துவிட்டது. தன் வேலை அலுவல்களெல்லாம் நினைவில் மோதவும் மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையை அழைத்துக் கொண்டு மூன்றாம் நாளான அன்று காலையில் வீட்டுக்கு போய்ச் சேரவென பிரயாணத்துக்காக தெய்வம் வெளிக்கிட்டு விட்டார். சந்தோசமும் கொஞ்சம் வேதனை களும் கலந்ததாய் இரு குடும்பத்தினர்களினதும் மனங்கள் இருக்க தெய்வத்தின் குடும்பத்தினருக்கும் போய்வரவென்று நிலைமை ஆகிற்று. தெய்வம் குடும்பத்தினர் அங்கிருந்து புறப்பட்டுப் போன பின்பு "நமக்கு ஆக இருப்பது இனி நம் வேலைகள் தான் அவற்றை இனி பார்க்கத் தொடங்குவோம்" என்கிற அளவில் நமச்சிவாயம் குடும்பத்தினர் தமக்குண்டான வேலைகளை பார்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

என்றாலும் தன் வீட்டில் தம்பி தன்னுடன் இந்த மூன்று நாள்கள் தங்கி இருந்து போனதன் பிறகு அந்த பிரிவின் சுமை நமச்சிவாயத்தின் மனதில் பாரமாக அழுத்திக் கொண்டிருந்தது. சவரம் செய்து கொள்ளாததால் முகத்தில்கன்னம் கொள்ளுமள விற்கு அவருக்கு புதுத்தாடிச்சருகுகள் முளைத்ததாய் இருந்தன. இடையறாய் பசி என்று சொல்லி ரசித்து ருசித்து நிறைய சாப்பிட்டவர் இப்போது அரைகுறையாக சாப்பிடுபவராகவே இருந்தார்.

இந்நிலையில் கனகு புத்திக் கூர்மையை பாவித்து தன் கணவரின் செய்கைகளை கவனிக்க ஆரம்பித்தாள். அவரை அளவெடுக்க, அவரின் இப்போதைய மனநிலை என்ன. அவர் என்ன முடிவெடுத்ததாய் இருக்கிறார்.? என்று அறிவதற்கு அவரின் செய்காரியங்கள் ஒவ்வொன்றையும் கவனித்த அளவில் இருந்தாள். தெய்வம் இங்கிருந்து புறப்பட்டுபோய் இப்போது இருகிழமைகள் கடந்துவிட்டது. இன்றைய நாள் தெய்வத்தின் பிள்ளைகள் தங்கள் வேலை படிப்பு என்று அதற்காக வெளியே போய் இருந்தார்கள். நமச்சிவாயம் ஹாலிலே தனியாக இந்நேரம் இருந்தார். இன்று காலையிலே முக சவரம் செய்திருந்ததால் அவர் முகம் தெளிவா கவும் இருந்தது. அந்நிலையில் அவர் இப்போது உருமாறி உயர்ந்த நிலையில் இப்போது இருப்பது போல அவ்விடத்தில் நின்றார். பிற்பாடு தொடர் நடையாக ஹாலில் அவர் நடந்து கொண்டிருந்தபோது கனகு குசினிக்குள்ளாலிருந்து அவ்விடமாக வந்த வேளை அவரை ஊன்றி கவனித்தாள். கணவர் அவ்வேளை தன்னை கண்டு கொள்ளவில்லை என்பது அவ்வேளை அவளுக்குத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவர் யோசனையில் இப்போது நன்றாக இறங்கத் தொடங்கி விட்டாரோ. அப்படியென்ன இப்போது முடிவெடுத்து இருக்கிறார்?" என்று அவ்விதம் அவள் யோசித்துக்கொண்டு நின்ற வேளை திடீரென அவர் தன் நடையை நிறுத்திக்கொண்டு நிமிர்ந்து நின்றார். ஒற்றைக்காலால் நிலத்தில் இறுக உதைத்துகொண்டு உறுதியான நிலைப்பாட்டில் பிறகு உடல் வளைவை நிமிர்த்திக் கொண்டும் நின்றார்.

கனகுவிற்கு அவரின் கால் உதைப்பு கண்ட கணத்திலேயே அவரின் மன உறுதி ஓரளவுக்கு விளங்கிவிட்டது.

"ம் எங்களுக்கு இந்தக்கோலமே நெடுகவும் உள்ளதான சீவியமாச்சுப் போலக்கிடக்கு" என்ற நினைவில், அவள் தன் எதிர்பார்ப்பு தோல்வியடைந்ததாய் விட்டதே என்ற காரணத்தின் தாக்கத்தால் நெடு மூச்செறிந்தாள்.

**வீரகேசரி வார வெளியீடு (ஆடி 21,2019)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுப் பூ



செத்தவீட்டில் முகம் முகமாய் அங்கு உள்ளவர்கள் எவரைப் பார்த்தாலும் அவர்களிடத்தில் விலகி விடாத சோகம் தான் அப்பிக் கிடப்பதாகத் தெரியும். இறந்தவர்களின் நெருங்கிய சொந்தங்கள் என்று உள்ளவர்கள் தூக்கமே இல்லாத நாட்களாக கண்கள் எரிகின்ற தோற்றம் வெளிப்படவும் அங்கு இருப்பார்கள். நித்திரை முழித்து கஷ்டப்பட்டதால், இருட்டில் தீப்பிழம்பாய்த் தெரியும் பூனையின் கண்களைப் போல இவர்களது கண்களும் ஒத்ததாய்க் காணப்படும்.

அவனும் வீட்டுப்பந்தலின் கீழாக நடந்து உள்ளே வரும் போது அங்குள்ள தன் சொந்தங்களை அங்கு கண்டபடி மனதில் இவற்றை அனுபவத்தோடு எண்ணிக்கொண்டான். செத்துப்போனவர் இவனுக்கு மாமன் முறையினன். ஆனாலும் அவருடனான உறவு முறிந்து இவனுக்கு மூன்று வருடங்களாகின்றன. ஆனாலும் உறவு முறையை உருக்கியதாய் சிந்தித்து உடனடியாகவே செத்த வீட்டிற்கு அவன் வந்திருந்தான். திருமண வீட்டுக்குப் போகா விட்டாலும் செத்தவீட்டுக்கு கண்டிப்பாகப் போ என்று சமயங்கள் எல்லாவற்றிலும் ஒரு தீர்ப்பு நிற்கிறதே, அதையும் அவன் சரியான சட்டம் என்று ஏற்றுக்கொண்டவன்தான்! சொந்த உறவு என்றால் இப்படிஒரு சம்பவம் நடக்கும்போது அது மனச்சாட்சிக்குள் பாய்கிற உதிரத் துடிப்பாகவும் ஒருவருக்கு இருக்கவும் செய்திடுமே. அந்த துடிப்பு இவனுக்கும் இயல்பாகவே இருந்து செயல்பட்டதாகவும் இருந்ததும் ஒரு காரணம் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பிரேதம் கிடத்தியிருந்த இடத்தை நோக்கி நடந்து அதன் அருகில் போனான். அவனைக்கண்டதும் பல பெண்கள் அங்கே வீறிட்டு அழத்தொடங்கி விட்டார்கள். கண்கலங்கிக் குள மாக இருக்கும் உறவுப்பெண்களைக் கண்டு இவனுக்கும் அப்போது கண்கள் கலங்கி விட்டன.

இதேதான் தருணமென ஷெல் குத்தும் சத்தத்தைப்போல சில பெண்கள் கைகோர்த்துப் பிணைந்திருந்தும் ஒப்பாரி அழுகை யைத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் சொல்லியழும் ஒப்பாரியில் பழைய சம்பவங்களும் அவன் மனதில் புகுந்து உருவங்களில் உலவ இவனுக்கும் மனதில் தர்ம சங்கடமாகியது. ஒப்பாரி அல றலை ஏந்தியகாற்று இவன் மூச்செடுப்பிலும் சுமையை ஏற்றிற்று.

உறவுகளின் சுழலுக்குள் அவ்விடத்தில் அவன்போய் நின்ற அந்த மூன்று நிமிடங்களிலே அவன் எத்தனை சகாப்தங்களை தாண்டிச் சென்றாற்போல ஆகியும் விட்டான். மாமன் இறந்து விட்டுச் சென்ற அந்த வெற்றிடத்தை இனியாராலும் ஒருவர் அதை பூர்த்தி செய்ய முடியவே முடியாது என்ற நினைப்பில் இப்போது அவன்தசையும் தளர்ந்தது போல உணர்வு பட வைத்தது. மௌன நிலையோடு செத்துக் கிடக்கும் மெலிந்த சருகு உடலை கை கூப்பி வணங்கிவிட்டு அந்தஇடத்தில் இருந்து வெளியேறி பந்தலின் கீழ் உள்ள கதிரையில் அவன் பிறகு போய் இருந்தான்.

அங்கே பந்தலின் கீழே உள்ள கதிரைகளில் உறவுக்கு உரிமை கோரும் ஆண்கள் ஒரு சிலரைத் தவிர வேறு ஆட்கள் சொல்லுமளவிற்கு அதிகம் இருக்கவில்லை.

காலை நேர கணமாயிருந்ததால் செத்தவீட்டுக்கு இன்னும் ஆட்கள் வந்து சேர்ந்ததாய் இருக்கவில்லை. இந்நேரம்தான் அவனின் கண்கள் பிரேதம் கிடத்தியிருந்த அறைக்குள்ளாலே இருந்து ஒருத்தி வெளியே வந்து தான் இருந்த இடத்தருகாக இப்போது நடந்து வந்து கொண்டிருப்பதை கண்டு கொண்டது. வயது போன தோற்றமென்றாலும் அவள் நடந்து வருகிற போது தத்தளிக்காத முதிராத நடை காணப்பட்டது. இவற்றை எல்லாமாக பார்வை கொண்டு விட்டு அவன் வேறு பக்கம் கண் அசைவு கொண்டான். அவன் பார்வை இப்போது அந்த பந்தலின் ஓரமாய் நின்ற பலாமரப்பருத்த இலைகளிலே கடின யோசனையோடு விழுந்ததாய் இருந்தது.

“ஹலோ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குழந்தையின் குரல் கேட்டது. உடனே அவன் திரும்பிப் பார்த்தான். அவள்தான் பேசுகிறாள் கனவின் அதீத ஒளியுடன் அவள் கண்களும் பேசுகின்றன.

“நீங்கள் தானே நீங்கள்தானே”

என்ற அந்த சொற்தொடர்களினோடு அவன் பெயரையும் சொல்லி அவள் கேட்டாள். இதை அவள் கேட்கும் போதே அவள் சிந்திய சிரிப்பு கண்வழியிலும் காணவாய் வெளிப்பட்டது.

“அது சரி நான் உங்களை இங்கே நீங்கள் வரவும்தான் யாரென்று உடனே கண்டுபிடித்து விட்டேன். அதே போல உங்க ளுக்கும் அப்படியாக நான் யார் என்று அறியக் கூடியதாக நினைவு இருக்கிறதா?”

என்று ஒரு கணம் முன்பு கேட்ட கேள்வியோடு மறுகணம் அவள் கேட்ட கேள்வியில் மணலில் உடனே தன்விரல் விட்டு கோடுகள் வரைந்து தன் கண்டுபிடிப்பை தேடவேண்டும் போல உடனே அவனுக்கு இருந்தது. “எனக்குள்ள ஞாபக சக்தி இந்த பெண்ணுக்குள் உள்ள ஞாபகசக்தி போல் இல்லாது சுருங்கிய மரக்கட்டையாகத்தான் போய் விட்டதோ” என்று நினைத்தாலும் தன்னை சுதாரித்தபடி மனதிலுள்ள மறைமுக ஆவலையும் அவளுக்கு மேலோங்கியதாக காட்டாமல் வைத்தபடி,

“என் ஞாபகத்தை விரிவுபடுத்தியும் நீங்கள் யாரென என்னால் கண்டெடுக்க இயலவில்லை. அதற்காக என்னை மன்னித்து விடுங்கோ சொல்லுங்கோ நீங்கள் யாரென்று அறிவதற்கு எனக்கு...?”

அவன் நிலத்தில் பதிந்து கிடக்கும் ஆலம்விழுது போன்ற தோர் நட்புறவோடு அவளைக் கேட்டான். அவன் இவ்வாறு கேட்கவும் தன்னை உணர்ந்து தன்னில் சிரிக்கும் ஒரு சிரிப்பை அவள் உடனே வெளிக் காட்டினாள். “நான், நான்தான் மகா லட்சுமி! பாடசாலையில் நீங்களும் நானும் 8ம் வகுப்பு வரை ஒன்றாக படித்தோமே!” என்று அவள் கேட்கவும்தான் அழுகை யைக் கொண்டிருக்கும் இந்த இடத்தில் அவன் மனதில் உடனே அழகிய இலைகள் துளிர்க்கத் தொடங்கி விட்டது போன்ற ஒரு மகிழ்ச்சி நிறைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ.... ஓ... மகாலட்சுமி! மகாலட்சுமி என்ன! எனக்கு இப்போது ஞாபகமாகிறது! அப்போது கன்னியாஸ்திரிகள் மடத்து போர்டிங்கில் இருந்து நீங்கள் படித்தீர்கள் தானே.?"

"ஓம் ஓம்! நீங்கள் என்னோடு அந்தக் காலம் 3ம் வகுப்பி லிருந்து தொடர்ந்தும் 8ம் வகுப்பு வரை படித்தீர்கள்.... அதற்குப் பிறகு வேறு பள்ளிக்கூடத்துக்கு நீங்கள் இடம்மாறி போய்ச் சேர்ந்து கொண்டீர்கள்" என்று அவள் சொல்வது அவளுக்கென்று ரூபம் கொண்ட அந்த இளமைக் குரலிலேயே இப்போதும் சொல்வதாக அவனுக்கும் கேட்க இருந்தது. என்றாலும் முகத்திலே பழைய அந்த மகாலட்சுமியின் செழிப்பை நினைவில் எடுத்தபோது அவனுக்கு அதுமிக ஏமாற்றமாகவே இருந்தது. எப்போதும் வசீகரிக்கும் அப்போதைய உதடு இப்போது அவளுக்கில்லை என்பதைக்கண்டு மனமும் அவனுக்கு வாடியது.

"அப்பொழுது நீங்கள் நல்ல சொக்கும் ஆளுமா ஒரு பிராமணத்தி பெண்ணைப் போன்ற அழகில் இருந்தீர்கள்" என்று இந்த விஷயத்தை மனம் திறந்த வெளிப்படையாக எடுத்துச் சொல்வது அவனுக்கு இப்போது துணிச்சலாய் இருந்தது. ஆனாலும் அவன். சொன்ன ஞாபகப்படுத்தலின் முக்கியத்தில் அவள் நுழையவில்லை.

"அப்படியா! எனக்குத் தெரியவில்லை"

என்று பிளாஸ்டிக் மாதிரியான ஒரு ஒட்டாத நிலையில் தன்னை அவள் வைத்தபடி இதை சொன்னாள். ஆனாலும் கற்பனையின் பறப்பின் நிலையிலே சிறகுகள் அவளுக்குச் சிதைய வில்லை.

"நீங்கள் வந்து அன்றைய என் நினைவுக்குள் உள்ளபடி சொல்லப்போனால் கபடில்லா உண்மை நிலை கொண்டபிள்ளை.... மற்றப்பெடியன்கள் போல நீங்கள் குளப்படியான ஒரு பிள்ளையும் இல்லை"

என்று வானம் முழுதும் அலைந்த ஒரு சிறகாக தன் யோசனையையும் அப்படி பறக்க விட்டபடி அவள் சொன்னாள். பழைய ஞாபகத்தின் முகமிழக்கா பெண்ணாக அப்படி இருந்தபடி அவள் இதைச்சொல்லவும் அவனுக்கும் மனமானது எழுந்து காற்றாகி விட்டது போல சுகமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கபடில்லா உண்மை நிலைகொண்ட பிள்ளை" என அவள் சொன்னது வாழ்ந்து கொண்டிருக்கும் இப்போதைய மாற்றம் பெற்ற வயதிலிருந்து அவனை பிள்ளைப் பராயத்துக்கு இழுத்துப் போனது. அவள் கதையில் ஆர்வம் காட்டியதாக அவன் தன் கதையை சொல்லத் தொடங்கினான்.

"பாருங்கோ நான் அந்த மூன்றாம் வகுப்பில் படிக்கும் போது.. விதம்விதமாக என் அம்மா திறம் காற்சட்டை,சேட் எல்லாம் போட்டுவிடுவா வெக்கை உண்டு என்று பாதுகாப்பாகத் தலைக்குத் தொப்பி எல்லாம் போட்டுவிடுவா... பள்ளிக் கூடம் போகும் போது எப்போதுமே கால்களில் சப்பாத்து உண்டு என்றதாகத்தான் நான் அங்கே போவேன்... புத்தகப்பையோடு தண்ணீர்ப் போத்தலும் கொடுக்காமல் என் தாய் என்னை பாடசாலைக்கு அனுப்புவது இல்லை... ஆனாலும் அந்நேரம் என்னோடு படித்த பெடியன்க ளுக்கு அவ்வளவானதோர் வசதியே இருக்கிவில்லை.... இதனால் விழுங்க முளைத்த பொறாமை என்பது அவர்களிடம் தீக் கண் திறந்ததாய்த்தான் சதா என்மேலே விழுந்தபடியே இருக்கும்.

நான் பள்ளிகூடம் முடிந்து வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருக்கும் போது அவர்கள் எனக்குப் பின்னால் வந்து வெறுப்பின் துணிவில் என் தலைத் தொப்பியைத் தட்டி அது மேலே பறந்து போய் கீழே விழும் படியாக செய்து விடுவார்கள். எனக்கு அதன் பொருட்டு கோபம் ஏறினாலும் பொறுமையாக அதை அடக்கிக் கொள்வேன். திரும்பவும் தொப்பியை குனிந்தெடுத்து தலையில் போட்டுக்கொள்வேன். ஆனாலும் அவர்கள் திருந்த மாட்டார்கள்! நான் மறுபடியும் என் பாட்டுக்கு நடந்து போக அவர்கள் இருவரும் ஏளனச் சிரிப்பின் நடையோடு என் பின்னால் வந்து திரும்பவும் தொப்பியை ஒரு தட்டுத்தட்டி அதை கீழே விழ செய்வார்கள். நான் திரும்பவும் அதை எடுத்து தலையில் இட்டுக் கொள்வேன். அவர்கள் மறுபடியும் அதை தட்டி விடுவார்கள். ஆனாலும் இவ்வளவு, இடைஞ்சல் அவர்கள் செய்தும் நான் என் பாட்டுக்கு அமைதியாகத்தான் நடந்துபோவேன். என் நிலைமையை கண்டு விட்டு பிறகு அவர்கள் நான் நடுங்கி கலங்கும் அளவிற்கு வந்து என்னை தோளால் இடிப்பார்கள். சில பொழுது என்னை கீழே விழுந்து விடக்கூடச்செய்தும் விடுவார்கள்."

"அப்பாடா ஓம் ஓம்! இப்படியெல்லாம் செய்கிற அவர்கள் இருவரையும் நீங்கள் எனக்கு யாரென்று சொல்லாமல் கூட எனக்கும் அவர்கள் யாரென்றும் சொல்லத் தெரியும். அப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகுப்பிலேயே அவர்கள் இருவரும் தானே சரியான குழப் படிக்காரர்களென்ன.. ஆனால் நீங்கள் தான் பாவம் சரியான அப்பாவிப் பிள்ளை! பாவம் நீங்கள்!'' என்று அவள் மனம் இளகிய நிலையிலே இவ்வார்த்தைகளை மெலிந்த குரலியே சொன்னாள். அப்போதைய பால்ய காலத்துக் கதைகள் வழியாக வெளியேறி இப்போதைய வயதுக் கதைகளை அவனுடன் கதைத்துக் கொள்ள விரும்புவது போன்ற நிலையில் அவள் இருப்பதாக இல்லை என்று அவனுக்கும் அவள் சொல்லி வருகின்ற கதைகளுடாக நன்றாக விளங்கிவிட்டது. ஒருவர் பற்றி ஒருவர் ஏதும் தெரியாத உலகத்தில் வசிப்பது போன்றே நம் இருவர் கதை பேச்சும் எங்களுக்குள் இருந்து கொண்டால் நல்லது என்று அவனுக்கும் மனக்கட்டுபாடு இதன் காரணமாக மனதுக்குள் புகுந்து கொண்டது.

“அந்தச்சின்ன வயசுக்காலம் தான் பசும்பால் போன்ற மாசற்ற மனமுள்ள காலம்... உள்ளொன்று வைத்து புறமொன்றை வெளியில் காட்டும் செய்கைகள் அந்த வயதில் இருப்பதே யில்லையே... எதையுமே வெளிக்காட்டிடும் வஞ்சகம் சூது அறியா அந்த வயதுக்குணம் பின்பு எந்த வயதிலும் இருப்பதில்லையே. அதனால்தான் இயேசு பிரான் தன் களைப்பின் ஓய்வு வேளையிலும் கூட அதை பொருட்படுத்தாது. அந்தக் குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள். கடவுளுடைய ராஜ்ஜியம் அவர்களைப் போன்ற மனமுடைய நிலையில் உள்ளவர்களுக்குத் தான் சொந்தம் என்று சொன்னார். இயேசுவின் சீடர்கள் தங்களில் யார் மிகப் பெரியவன் என்பதைப் பற்றியே சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அவருடைய சில சீடர்கள் மற்றவர்களை விட அதிக முக்கியமான வர்களாக இருக்க விரும்பினார்கள். அப்படி எல்லோரையும் விட பெரியவனாக இருக்க ஆசைப்படுகிறது சரியல்ல என்பதை இயேசு எப்படி அவர்களுக்கு எடுத்துச் சொன்னாரென்றால். ஒரு சிறு பையனை அழைத்து அவர்கள் எல்லோரின் முன்பாகவும் நிறுத் தினார். அப்படி நிறுத்திவிட்டு பின்பு தமது சீஷர்களிடம்.. இதை நீங்கள் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பு கிறேன். நீங்கள் எல்லோரும் சிறு பிள்ளைகளைப் போல மாறினால் தவிர கடவுளுடைய இராட்சியத்துக்குள் ஒருபோதுமே போக மாட்டீர்கள்... இந்தப் பிள்ளைகளைப்போல ஆகிறவனே கடவுளு டைய ராஜ்ஜியத்தில் பெரியவனாக இருப்பான் என்று சொன்னார். அப்படி இதை ஏன் சொன்னார் என்றால் சின்னப் பிள்ளைகள் மற்றவர்களை விட பெரியவர்களாக இருக்கவேண்டும் என்றெல் லாம். ஆசைப்பட மாட்டார்கள்தானே பாரும் நான் ஏன் இதையெல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் இப்பொழுதும் ஞாபகம் வைத்திருக்கிறேன் என்றால். இயேசுவுக்கும் கூட சிறுபிள்ளைகளிடத்தில் தான் மிக மிக அக்கறை இருப்பதாக தெரிய வருகிறது... இதையெல்லாம் அந்த சிறு வயது கால வாழ்க்கையோடு நினைத்துப்பார்க்க எனக்கும் இப்போது கூட சந்தோஷமாகவே இருக்கிறது. அந்தக் காலத்தில் தேவதை மேரி மடத்தில் இருந்து நான் படித்ததால்தான் என்னுடன் அங்கிருந்த சக சகோதரிகள் மூலம் நானும் இந்த சம்பவங்களை அறிந்தேன். எந்த வயதிலும் மனதை நல்ல முறையில் வைத்துக் கொள்ள வைத்தியம் செய்யும் மருந்தாக இந்த வழியினை பின்பற்றி வாழ்வதும் எல்லாருக்குமே நன்மைதானே?"

என்று அவள் சொல்வது அவ்வேளை அவனுக்கு தன் தலை மேல் அவள் தன் கையை வைத்து தன் மனதைத் தணிவு படுத்தி ஆறுதல் அளிப்பது போல நல்விளைவாக இருந்தது. இந்த சந்திப்பின் ஊடாக வெறும் குழிகளாய் இருந்த மனம் அவனுக்கு நிரப்பட்டது போல நிறைவாக இருந்தது.

அவள் பிறகு தான் போவதாக சொல்லிவிட்டு முன்னம் தான் இருந்த இடத்தை நோக்கி போய்விட்டாள்.

இதன் பின்பு பல மணிநேரம் அங்கே கடந்துவிட்டது. மயானத்துக்கு கொண்டு செல்லவென பிரேதப் பெட்டி மூடப்பட்டது அதை நோக்கி சிலர் நாய்களாக மாற்றம் பெற்றது போன்று உடனே பாய்கின்றனர். வீதியிலே பிரேதம் கொண்டு போகும் போது கூட மனிதசாயல் அற்ற மிருகக்குணத்து நிலையிலே பலர் நாய்கள் போன்ற நிலையில் மாறி விடுகின்றனர். நான் நீ என்று பற்றிக்கொண்ட ஆணவத்தில் அவர்களெல்லாம் அங்கே நின்றபடி கடிப்பட்டுக்கொள்வது போன்றும் சண்டை பிடிக்கின்றனர்.

**ஞாயிறு தினக்குரல் (ஆவணி, 18 – 2019)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவந்த கண்



“இந்த ஊரிலுள்ள சில மனிதர்களைப் போலத்தான் இங்கேயுள்ள நாய்களுக்கும் பெரிதாக வாய்கள் இருக்கிறது. கட்டுப்பாடில்லாமல் எல்லா வீட்டிலும் போய் போய்த் தின்று விட்டு வீதிகளில் நின்றபடி கண்ணை மூடிக்கொண்டு குரைக்கிதுகள் இந்த சனியன்கள். ”

அந்த வீதி கடக்குமட்டும் இதே பேச்சை திரும்பத் திரும்ப நினைவில் எடுத்துப் பேசிக்கொண்டே அவருக்குப்போக வேண்டிய நிலைமை இருந்தது. தொண்டைக்குழியில் இருந்து கிழிபடுகிறதாய் வெளியேறும் அந்தக் குரைப்புச் சத்தங்கள் தணியுமட்டும் முளைத் திருக்கும் பயத்திலிருந்து விடுபடுவது அவருக்கு இலகுவானதாக இருக்கவில்லை.

காலை நேரத்திலேயே இப்படி தொந்தரவு என்றால், செய்யும் வேலையின் கடமை நேரம் முடிந்து இரவின் மங்கலான மின் வெளிச்சத்தில் அந்த வீதியாலே நடந்து வீடு போய்ச்சேரும் மட்டும் அவருக்கு எப்படியாக இருக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ எங்கு செல்கிறாயோ அந்த இடம் மட்டும் உன் பின்னாலே நாங்களும் தொடர்ந்து வருவோம்." என்றதான கண் காணிப்போடு அவரை பின் தொடர்ந்தவாறு குரைப்புச் சத்தத்துடன் வந்து அவர் தன் வீட்டுப் படியேறு மட்டுமாய் கஷ்டம் கொடுத்து விட்டுத்தான் பிறகு அந்த நாய்கள் திரும்பிப் போகின்றன.

அந்த வீதி வழியாக கோட்டும் சூட்டுமாக சப்பாத்துக் கால்களின் பயப் பதட்டமில்லாத நடையுடன் அந்த நாய்களுக்குப் பக்கத்தாலே எத்தனையோ பேர் தினமும் போய் வருகிறார்கள். ஆனாலும் அந்த நாய்கள் அவர்களையெல்லாம் கண்டு விட்டு எப்போதுமே எந்த வேளையிலும் குரைப்பதேயில்லை.

அந்த வீதியிலே ஒரு ஒதுக்குபுறமான இடமொன்று உண்டு. அந்த இடம் மனித மூத்திரங்களாலே குளிரூட்டப்பட்டது போன்ற இடம். வீச்சமுள்ள நாற்ற அவஸ்தையான இடமும்தான் அது. அந்த இடத்தைச் சுற்றி பற்றைச் செடிகள் அடைத்தது போல் ஒழிவான இடமாக மறைப்பும் கூட இருந்தது. மூத்திரம் முடுக்கின நிலையில் உள்ள ஆண்கள் சிலர் அந்த இடத்தைப் பாவித்து முனகிக் கொண்டும் அங்கே மூத்திரம் பெய்வார்கள்.

இந்த இடத்துக்குப் பக்கத்திலே அந்த நாய்களினது கூட்டமானது அனேகமாக எந்நேரமும் நிற்கும். ஆனாலும், இந்த இடத்திலே வந்து பதுங்குவது போல அங்குமிங்கும் பார்த்துவிட்டு, அதற்கு உள்ளே போய் நிற்கும் ஆண்கள் எவரையும் பார்த்து அந்த நாய்கள் குரைப்பதேயில்லை. இப்படியான நிலையில் அந்த நாய்களுக்கு ஏன் அவர் மேலே அப்படியொரு தணியாத கோபம்? ஏன் அவைகள் அவரைக் கண்டமாத்திரத்தில், அச்சம் மாத்திரம் கொண்டு குழம்புகின்றன?

கருணை கலந்த பார்வையும் கொண்ட முகமல்லவா அவருக்கு. அமைதி உறைந்து விளங்கும் கோலமான இந்த மனிதர் மேலே அவைகளுக்கு ஏன் இந்த வெறுப்பு? அதற்கு காரணம் தான் என்ன?

அவர் காக்கி நிறத்திலே ஒரு யூனிபோம் போட்டிருக்கிறார் என்பது தான் அவைகளின் வெறுப்புக்கு உள்ளானதானதொரு முதற்காரணம். அவர் போட்டிருக்கும் யூனிபோமில் என்னென்ன டிசைன்கள் உள்ளன என்று பார்த்தால், அவரின் தோளின் மேலே கருடச்சிறகு போன்று இருபங்கங்களிலும் நிறம் கொண்ட பட்டிகள் இருக்கின்றதானது, ஆணவமாய் அவைகளின் கண்களுக்கு அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிகின்றன. அவரின் இடுப்புப் பட்டியிலே முன்னால் உள்ள அகல தரத்திலே, குஞ்சுத் தவளை மாதிரி ஒரு உருவ அமைப்பு உட்கார்ந்து இருப்பதாகவும் அவைகளுக்கு தெரிகின்றன. காலில் அவர் போட்டிருக்கும் சப்பாத்தும் அவைகளுக்கு திகைப்பைக் கொடுக்கின்றன. இவர் ஒரு நிறுவனத்திலேதான் வேலை செய்கிறார். அங்கே இவர் காக்கி உடை அணிந்த காவலாளி. "காக்கி நிற துணியிலே கீறிய பச்சைக் கோடுகள் போன்று வடிவமைக்கப்பட்ட இந்த உடுப்புத்தான் எமது நிறுவன அலுவலக காவலாளிக்கு எடுப்பாகவும் இருக்கும்" என்று இந்த நிறுவனத்தினர் தைக்கப்பட்ட அந்த யூனிபோமை அவருக்கு அணிந்துகொள்ள கொடுத்திருக்கிறார்கள்.

அவருக்குரிய வேலை என்னவென்றால், அந்த நிறுவனத்துக்கு வருகிறவர்களுக்கு அந்தக் கண்ணாடிக் கதவை தன் கைகளால் திறந்து விட்டுத் திறந்து விட்டுக்கொண்டே இருப்பது. அதனால் அந்த பிடி கம்பியில் அவரது கைமீறிய விரல்களின் ரேகையும் மாறி மாறிப் பதிந்து கொண்டே இருக்கும். "முன் எப்போதோ கடந்து போய்விட்ட என் மூதாதையரின் பழி பாவத்தை நான் இப்போது சுமப்பதால்தானா இந்த வேலை எனக்குக் கிடைத்திருக்கிறது" என்றும் அவர் சில பொழுது நினைத்து இதனால் மனமும் வருந்துவார். அவர் திறந்துவிடும் அந்தகதவு விரிவு வழியாக வேகமாக உள்ளே எத்தனையோ விதம் விதமான மனிதர்கள் போகிறார்கள். ஆனாலும் அங்கு சந்திக்கும் மனிதருடன் அவருக்கு ஒரு கதை கூட பேசவே முடியவில்லை. எல்லா பாஷைகள் பேசும் மனிதர்களும் அந்த ஒரே கதவுக்கு உள்ளாக கூட்டமாகவும் நுழைந்து பின்பு படிகள் வழியாக அங்கே ஏறிப் போகின்றனர். இதையெல்லாம் தன் விழிப் பந்தில் ஏந்தியதாய் நின்ற நிலையிலேயே அன்றைய நாளைக் கழித்துச் சலித்துப் போனவர், வேலை முடிந்து வீட்டுக்கும் போகும் போது கூட நடந்து கொண்டு சுதந்திர சுகத்தை அனுபவிக்க முடியாமல் இந்த நாய்களாலே மிக கஷ்டத்தைதான் அனுபவிக்கிறார்.

ஒரு நாய் குரைத்துக் கொண்டு அருகில் வரும்போது அதைப் பார்த்துக் காறித்துப்பினால் பின்பு அது குரைக்காதாம்! மிரட்டாதாம்! கடிக்க நெருங்காதாம்! என்று நிலைத்திருக்கும் அறிவுரையானது இவருக்கும் கூடத்தெரியும். ஆனாலும் அப்படி தனித்த நாய் ஒன்றுக்குத்தானே அவர் இந்தத் தடுப்பை வைத்து அதன் சேட்டையை நிறுத்தலாம். அப்படி இல்லாமல் இங்கே கும்பலாக வந்ததல்லவா அவரை சூழ வந்து நின்று நாய்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரைக்கின்றன. இந்தக் கூட்டுக் குடும்ப குரைப்புகளிலே எந்தெந்த நாயைப் பார்த்து அவருக்கு தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எச்சில் "தூத்....தூத்.. என்று துப்பமுடியும். இந்த சைக்கோ சிகிச்சை ஒரு நாய்க்கு அல்லது இரண்டு நாய்க்கு அடக்குகிற சிகிச்சையாக சிலவேளை பயன்படலாம். ஆனால் கும்பல் நாய்க்கு எச்சில் துப்பப் போய் அது வயிற்று வலியைத் தான் பரீட்சாயத்தில் அவருக்கு முன்னம் ஒரு நாள் கொண்டு வந்ததாயும் இருந்தது. ஓரிரண்டு நாய்க்குத் தான் இந்த விதமான செயலான மனோ சக்தியினதும் கண்ணிலிருந்து வெளிப்படும் காந்த சக்தியினதும் செயல்பாடு சேர்ந்து தாக்கி உடன் கட்டுப்படுத்தலை சித்திக்கப் பண்ணும். எனவே இந்த முறையான செயல்பாடும் அவருக்குப் பலனளிக்காத தினால், விடு மூச்சோடு பயத்தில் வேர்த்துச் செல்லும் நாட்களா கவே கழித்து கொண்டிருக்கும் காலமெல்லாம் இப்போது அவருக்கு போய்க் கொண்டிருக்கிறது.

சுழன்று செல்லும் பூமியிலே வாழும் மனிதனின் செய் கைகள் தலைகீழாப் போய் பெரும் மாற்றம் ஏற்பட்டு விட்டாலும் நாய்கள் தங்கள் பார்வையையும் தங்களுக்குண்டான கடமை உணர்வையும் இன்னும் மாற்றிக் கொள்ளாது நேர்மையை தங்களி டத்தில் காப்பாற்றிய வண்ணமே இருந்து கொண்டிருக்கின்றன. "உலகையே காக்கும் உண்மையான காவலாளிகள் நாங்கள்தான்! என்று தங்கள் கடமையின் ஆணவக் குணத்தையும் அவைகள் காப்பாற்றியே வருகின்றன. தங்கள் காவல்கடமை தங்களுக்கு என்றே உலகில் உரித்தானது என்று அவைகள் உரிமையும் கொண்டாடுகின்றன. "மனிதன் மறைத்து ஒழித்து செய்யும் குற்றச் செயல்களையெல்லாம் கண்டு பிடிக்கும் திறமையும் அதற்கேற்ற தகுதியும் இந்த மனிதர்களை விட எங்கள் இனத்துக்கு மட்டுமே உண்டு" என்று அவை மார்தட்டிய நிலையிலும் இருக்கின்றன. "ஆறறிவு படைத்த மனிதனும் இந்த விஷயத்திலே எங்கள் உதவி யைத்தானே உடனே நாடுகிறான். ஆகவே எங்களுக்குள்ள தனித் துள்ள திறமைச்சக்தி மனிதருக்குக் கூட இல்லை." என்றும் சாம்பல் மேட்டில் படுத்தபடி அவைகள் சிந்திக்கத்தான் செய்கின் றன தெரு நாய்கள். எல்லாவற்றிற்கும் இந்த ஊரையே நாங்கள் காவல் காக்கிறோம் என்ற கொழுப்பு உணர்வு இருக்கிறது.

வீட்டு நாய்கள் தங்கள் மட்டுப்படுத்தப்பட்ட காவல் கடமையை செய்து கொண்டு மிகுதி காவல்கடமை அனைத்தையும் தெருநாய்களிடத்தே தான் "நீங்களே அவற்றை செய்யவேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள்'' என்பதாக கையளித்து விடுகின்றன. இந்த நிலைமையிலே நாய்களை எதிர்த்து போராடுகின்ற நிலைமை இனிமேலும் எனக்கு வேண்டவே வேண்டாம் என்று இவருக்கும் நல்ல யோசனை மூளைக்குள் கதிர்வீசத்தொடங்கிவிட்டது. அந்த நாய்களின் ரகசிய எண்ணங்களையும் மற்றைய மனிதர்களில் அவைகளுக்கு இருக் கும் கணிப்பையும் கண்டு கொண்டு அவர் இப்போது சிந்திக்கத் தொடங்கி விட்டார். நாய்களின் கண்களில் கோழிக் கொண்டை சிவப்புப் போல கொதிக்கின்ற வெறுப்புச் சூடு அணைய வேண்டு மென்றால் நான் என்ன செய்ய வேண்டும்? எப்படிதான் மாற வேண்டும்? என்று இந்த விஷயத்தையும் நன்கு அவர் யோசித்தார். அப்படி யோசித்ததில் தீர்மானமாக இந்தவேலையில் இருந்து விலகிவிட வேண்டுமென்பதுதான் - அவர் இப்போது கடைசியாக எடுத்த முடிவு.

இதற்காக அந்த நிறுவனத்திலுள்ள தன் தொழிலை விட்டு விலகி வேறு தொழிலொன்றை இப்போது அவர் செய்ய தொடங்கி விட்டார். அப்பாடா அவருக்கு இப்போது மேக மூட்டம் வந்து அடித்துக் கொண்டிருந்த உறைப்பான வெய்யில் தணிந்தது போன்று மனசெங்கும் நல்லதொரு மன ஆறுதல். அந்த யூனிபோமை அந்த வேலையோடேயே தொலைத்தாய் விட்டதில் அவருக்குள்ள சந்தோஷம் அளப்பரிதயாக இருந்தது. இப்போது அவர் அணிகின்ற ஆடைகளிலே பழைய யூனிபோமின் எச்சங்கள் சிறிது கூட இல்லை.

அவரை தம் எதிரியாக பார்த்த நாய்களும், இப்போது இது வரை தங்களிடமாக இருந்த செயல் முறையை மாற்றிக் கொண்டு நிசப்தமாகிவிட்டன. அவைகளினது கண்களின் கோபச்சூடு தணிந்து விட்டன. அவரைக் கண்டால் ''ஒரு பிரச்சினையுமில்லை!

''என்பது போல அவைகள் இப்போது முகம் திருப்பு கின்றன. அந்த நாய்களெல்லாம் இப்போது நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு வீணீரை வழிய விட்டப்படி ஆறுதலாகவும் அமைதியுடனும் இருக்கின்றன.

**தினகரன் வார மஞ்சரி (மாசி 9 – 2020)**

**தாயக ஒலி சஞ்சிகை (புரட்டாதி – ஐப்பசி 2019)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரார்ந்த மறைவுகள்

சின்ன காம்புகளையுடைய பூக்களும் நீளத் தண்டுகளையுடைய வெள்ளைப் பூக்களும் தேவாலய பலிபீடத்தை அலங்கரித்திருந்தன. அவ்விடத்திலே ஒளியிலே நிற்கிறேன் என்று பறைசாற்றிக் கொண்டிருக்கும் உயரமான ஒரு மெழுகுவர்த்தி தேவமகனின் உயிர்ப்பின் ஒளியை புனிதத்தன்மையில் உமிழ்ந்து கொண்டிருக்கிறது. பீடத்தின் கீழே கிறாதியின் அருகில் சாவிலிருந்து வல்லமையுடன் உயிர்த்தெழுந்த யேசுவின் திருச்சொரூபத்தின் காட்சி, அளவு காண முடியா தேவவல்லமையின் உயர்வை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

திருச்சொரூபத்தின் கண்களின் ஆழத்திலிருந்து வெளிப்படும் தெய்வீகப் பார்வை விண்ணை நோக்கி மலர்ந்திருப்பதாகவே வெளிப்பட்டதாக இருக்கிறது. உடலில் துளையிட்ட ஐந்து திருக்காயங்களின் காட்சியும் மனித குல ஈடேற்றத்துக்காக பாடுபட்டு மரித்த தேவமகனின் தியாகப் பலியை பறைசாற்றுகின்றன. கையிலே பிடித்தபடி இருக்கும் வெற்றிக் கொடியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சிலுவைக்குறி மனித குலத்துக்கு ஈடேற்றம் கொடுத்த அடையாளப்படுத்தலை ஞாபகப்படுத்துகிறது.

தேவாலயத்திற்கு வெளியே தங்கள் உறவினர்களோடும் நண்பர்களோடும் முக மலர்ச்சியுடன் உரையாடிக் கொண்டு வந்தவர்களெல்லாம் இப்போது உள்ளே தேவாலயத்துக்குள்ளாக வந்ததும் மண்டியிட்டு கை குவித்து மௌனமாக இருக்கிறார்கள்.

திருப்பலிப் பூசை ஆரம்பமாவதற்கு முன்பு தேவாலயத்துக்குள் இருப்பவர்கள் எல்லாம் உயிர்த்த ஆண்டவர் சொரூபத்தைப் பார்த்துக் கொண்டு தங்கள் வாழ்வின் இருண்ட துயரங்களெல்லாம் விலகிப்போய் பொன்னான நல்வாழ்வு அமைய வேண்டும் என்ற வேண்டுதலோடு பக்தியோடு மன்றாடிக் கொண்டிருக்கிறார்கள். சிறு மணிக் கொத்துக்கள் குலுங்கவும், அவை ஒன்றாக சேர்ந்தொலி செய்யும் சத்தத்தோடு குருவானவர் இப்போது பலிப்பூசை ஒப்புக் கொடுப்பதற்காக பீடத்தை நோக்கி வருகிறார். முழந்தாள் மண்டியிட்டபடி இருந்தவர்களை விட இருக்கைகளில் இருந்து கொண்டவர்களும் இப்போது பூசை காணும் வணக்கத்திற்காக தாங்களும் இப்போது முழந்தாள் படியிட்டு திருப்பலிப் பூசையில் பங்கேற்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாராகுகிறார்கள். பலிப் பீடத்தின் அருகே குருவானவர் வந்து விட்டார். பலி ஒப்புக்கொடுத்தலின் முன்பு அவர் அணிய வேண்டிய சம்பிரதாயமான மேலங்கிகள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் ஒழுங்கமைய அணிந்து முக்கிய அங்கியையும் இறுதியாக கையிலெடுத்து முத்தம் கொடுத்து அணிந்து கொண்டு பலி ஒப்புக் கொடுக்கும் ஆராதனைகளை அவர் ஆரம்பிக்கிறார்.

நறுமணப் புகை விடும் தூபம் காட்டுகிற சங்கிலித் தூக்குச் சட்டியின் தகர விளிம்பை நகர்த்தி குமஞ்சான் போடுவதற்காக பூசை உதவுக்காரர் குருவானவரிடத்தில் அதை கொண்டு வருகிறார். குருவானவர் இரண்டு சிமிழ் குமஞ்சான் கலவையை அந்த நெருப்புத் தூக்குச் சட்டியில் இடுகிறார். அதை பெற்றதும் தூபம் காட்டும் சங்கிலித் தூக்குக் கலசத்தை முன்னும் பின்னும் ஆட்டி அவர் அசைக்கிறார். நறுமணப் புகை உடனே அதனிலிருந்து வெளியேறி நாற்புறமும் வாசனையை கமழப் பரப்புகிறது.

பூசை தொடங்க முன்பே தங்களை தயார்படுத்தியதான காத்திருப்பின் காலத்திலிருந்த பாடகர்கள் "தேவஸ்துதி" பாடலை பாடத் தொடங்குகிறார்கள். தேவாலயத்திற்குள் ஆராதனை வணக்கத்திலிருந்த ஒவ்வொருத்தரும் அந்தப் பாடல்களை தாங்களும் காதால் கேட்டுக் கொண்டபடியே ஒத்ததாய் சேர்ந்து பாடிக்கொள்கிறார்கள். பாடலுடன் சேர்ந்து இணைந்து பயணிக்க, மகத்தான பியாணோ இசையும் திறக்கப்பட்டிருக்கிறது.

தேவபக்திப்பாடலும் அதனோடு சேர்ந்த இசையும் தேவாலயத்தை நிறைக்கின்றன. திருப்பலிப் பூசை வழிப்பாட்டிலே குருவானவர் சொல்கிற ஜெபங்களின் சக்திமயமானது உயர்கிறது. அவர் சொல்லிய ஜெபங்களின் தொடர் ஜெபங்களை, வணக்கத்தினர்களும் சொல்லி, "ஆமென்" என இறுதியில் பூரணப்படுத்தி நிறுத்துகிறார்கள்.

ஞாயிற்று கிழமையானது கிறிஸ்தவர்களுக்கெல்லாம், ஒரு ஓய்வு நாளாக உண்டாகி இருப்பதாகவே திருச்சபை அதை நிச்சயப்படுத்தி இருக்கிறது. இந்நாளில் கட்டாயமாக ஆலயத்துக்குச் சென்று பூசை காண வேண்டும் என்பதும் கிறிஸ்தவ மக்களுக்கு வேத சட்டமாக உள்ளது. இந்த ஞாயிறானது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்த ஞாயிறாக கொண்டாடப்படுவதாலும், இந்நாள் எல்லோருக்கும் முக்கிய கடன் திருநாளாகவும் இருந்ததாலும், கட்டாயமாக எல்லா கிறிஸ்தவர்களுமே இந்த ஞாயிறில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசையில் வந்து கலந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் இன்று வழமையை விட கோயில் முழுக்க நிறைந்ததாகவே அங்கே கூடியிருந்தார்கள். இப்படி திருநாள்களுக்கெல்லாமே செல்வம் நிறைந்த இல்லங்களில் இருந்து வருகை தருகிற வசதி யுள்ளவர்கள், எவர் கண்ணையும் கவர்ந்திடும் ஆடை அணிந்த தாகத்தான் வருவார்கள். அவர்களது சின்ன குழந்தைகள், அங்கே சுற்றிப் பறந்திடும் வண்ணத்துப் பூச்சிகள் போன்றும் கோயிலுக்குள் அங்குமிங்கும் ஓடித்திரிந்திடவே செய்வார்கள். தின்றும் தீராமல் வீட்டிலே கிடக்கும் உணவு வகைகளினாலே அவர்களுக்கு சாப்பாடு என்கிற அந்த விஷயத்தைப் பற்றி என்னதான் ஒரு கவலை! அதைப்பற்றியதான ஏதும் ஒரு யோசனை இவர்களுக்கு சொல்லப்போனால் அப்படி இல்லை தானே? ஆனாலும் இவர்களை விட பெருந்தொகையானவர்கள் இங்கே நெஞ்சில் துன்பச் சரித் திரத்தை வைத்துக் கொண்டல்லவோ அதையெல்லாம் மனதால் கடவுளோடு கதைத்திட இங்கே வந்திருக்கிறார்கள்.

“ஏழ்மையே தொற்று நோயாக படர்ந்ததாய் வளர்ந்து கொண்டிருக்கும் எங்கள் நிலையை கடவுளே நீர் மாற்றமடைய செய்திட மாட்டீரோ ” என்கிறதாகத்தான் அவர்களிலும் ஒரு சிலர் மன்றாட்டம் செலுத்துகிறதாக வெளிப்படுகிறது. கோயிலுக்குள்ளே இவ் வேளை அங்கே இருந்து கொண்டிருக்கும் ஏழைப் பிள்ளைக ளுக்கு என்னதான் யோசனை மனதிலிருக்கும்? அவர்களுக் கென்றால் மனசுக்குள் இருந்து, உயர்ந்து வருகிற நினைப்பு சாப்பாடாகத்தானே இருக்கும்.

பழம் சாப்பிடுவதே ஒரு வழக்கமில்லாத ஒரு ஏழை வீட்டுக்கு அருகே வாழும் வசதியான ஒரு பணக்கார கிறிஸ்தவ குடும்பம் விளைந்து பழுத்த ஒரு பெரிய சீப்பு யானை வாழைப் பழத்தையும், பெரிய கேக் துண்டையும் பலகாரங்களையும் பெரு நாளுக்கென்று சந்தோஷமாக அவர்களுக்கு கொடுத்து இருந்ததால் அதனால் என்னதான் நடக்கும்.

அந்த வீட்டுப் பிள்ளைக்கு “நான் எப்போது இந்தப்பூசை முடிந்து வீட்டுக்குப் போவேன்! அங்கே அருமையான கேக் துண்டுகள் எடுத்து சாப்பிடுவேன்! அந்த வாழைப்பழமும் தின்ன ஆகா நல்ல ருசியாக அது இருக்குமே!” என்றதாய் தானே, உள்ள யோசனைகளெல்லாம் அவனுக்கு இன்பமாக இருக்கும். இவ்வகை ஞாபகங்களில் நடமாடிக்கொண்டு பரமானந்தப் பரவசமாக அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெல்லாம் அவனுக்கு இருந்தாலும், வயிற்றிலே அந்தப் பசியானது எழுந்து அவனுக்கு வலிக்கவும் கூட செய்திடுமே.

நேரம் கடந்து நடுப்பூசை அளவுக்கு இப்போது வந்து விட்டது. தேவ அப்பத்தை இறைவன் ஆசிர்வதித்தருள வேண்டு மென்று குருவானவர் விண்ணை நோக்கிய பாவனையிலே அந்த அப்பத்தை கைகளிரண்டிலும் பிடித்தபடி "இதோ ஆண்டவரின் சரீரம்" என்று சொல்லி அதை மேலே உயர்த்துகிறார். ஜெபிக் கிறார். இந்நேரம் எல்லோரும் தலை தாழ்த்தி வணங்கி பக்தியாகி சரணடைகிறார்கள். அது முடிந்து திராட்சை இரசம் உள்ள பாத்திரத்தையும் கைகளிலேந்தியபடி, மேலே அசைந் தியங்காமல் பிடித்தப்படி "இதோ என் இரத்தம்" என்று அவர் பக்தியோடு சொல்ல, எல்லோரும் அப்போது "தேவனுக்கு நன்றி" என்கிறார்கள்.

இந்த வழிபாடு நிறைவுற்றதும் நீரோட்டமாய் ஒலித்திடும் பியானோ இசை பாடகர்களுக்கு பாட்டை தொடங்கி நடத்திட முதலெடுப்புக் கொடுத்துத்துணை புரிகிறது. தேவ அப்பத்தின் மகிமைக்குரிய பாட்டு பாடகர்களின் வாயிலிருந்து இப்போது பிறக்கிறது. தேவ அப்பம் புசிப்பதற்கு தங்களை தயார் படுத்தி இருந்தவர்களெல்லாம் தங்கள் இருக்கைகளை விட்டு எழுந்து நிரையாக ஒழுங்காக கிறாதியண்டைக்கு வர நடந்து வருகிறார்கள்.

குருவானவரும் சற்பிரசாதம் ஒளிக்கதிர் பரப்புகிற பாத்தி ரத்தை கைகளில் எடுத்துக் கொண்டு தேவ அப்பத்தை அங்கே வருகிறவர்களுக்கு பகிர்ந்தளிக்க அவர்களிடமாக வருகிறார். தேவ இரட்சியைப் பெற்று அன்போடு அனைவரிடமும் சேர்ந்து தேவ அன்பிலே வாழ்ந்திட சற்பிரசாதம் குருவானவரால் வழங்கப் படுகிறது. இந்நேரம் சகலரின் உடல் வெப்பமும் பறந்திடும் அளவுக்கு முடியை கலைக்கும் அளவிலே நல்ல காற்றும் தேவாலயப் பெருங்கதவுகளுக்குள்ளாலும் வீசிக் கொண்டிருக் கிறது. வியர்வையில் கரைந்த உடல்களெல்லாம் உள்ளே கடந்து போகும் காற்றால் இவ்வேளை சுகம் பெறுகிறார்கள். எவரின் பொறுமையையும் கலைத்திடாத அளவுக்கு குருவானவர் இப்போது சிறு பிரசங்கம் ஆற்றுவதற்கு ஆரம்பிக்கிறார்.

இயேசுவின் உயிர்த் தொழுதலை ஞாபகப்படுத்தக் கூடிய தான அந்த நிகழ்வை தன்பிரசங்கத்தில் இதமாக அவர் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அருமையான சகோதர சகோதரிகளே, இயேசு இந்த பூமியில் வாழ்ந்த காலம் அனைத்திலும் இரக்க முள்ளவராகவும், தயவுள்ளவராகவும், தாழ்மையானவராகவும் எல்லோருமே அணுகக் கூடியவராகவும் இருந்தார். பலவீனரும், ஒடுக்கப்பட்டவர்களும், எல்லாவிதமான ஜனங்களும், ஆண்கள், பெண்கள், பிள்ளைகள், பணக்காரர், ஏழைகள், வல்லமை வாய்ந்தவர்கள், படுமோசமான பாவிகளும்கூட, அவரோடு கூட இருப்பதில் எவ்வித தயக்கத் தையும் உணரவில்லை.

உண்மையிலேயே இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்று கற்பித்தது மட்டுமல் லாமல், அவர்கள் அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்றும் காண்பித்தார். நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார். அன்பான முன்மாதிரியைத்தான் கிறிஸ்தவர்களாகிய நாங்களும் அந்த வழியைப் பின்பற்றி எவரோடும் அன்பு பூண்டதாய் வாழ்ந்து எம் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும்.

இயேசுவின் மிக மேம்பட்ட வழிகாட்டலிலே கிறிஸ்தவர்க ளாகிய நாங்களும் அவற்றை பின் பற்றி வாழ வேண்டும். இயேசு இம் மனித குடும்பத்தின் பாவங்களைப் போக்கி ஈடேற்றம் பெற செய்வதற்காகவே இப்பூமியில் பிறந்தார். சிலுவை மரத்திலே இரத்தம் சிந்தி சகல பாடுகளையும் பட்டு எமக்காகவே அவர் தம் உயிரை விட்டார். அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டும் என்ற தேவ வாக்கியம் நிறைவேற மரித்து மூன்றாம் நாளிலே ஆத்தும சரீரத்தோடும் கல்லறையில் நின்று அவர் உயிர்த்தெழுந் தார்.

மனிதகுலம் சாவிலிருந்து உயிர்த்தெழ இயேசுவின் சிலுவைப் பலியானது எம்மையும் சாவிலிருந்து மீட்டு உயிர்த்தெழ அருள்பாலித்திருக்கிறது. அன்பானவர்களே அப்போஸ்தலன் யோவான் சொன்னதை இவ்வேளை அதை நாங்களும் ஒரு முறை ஞாபகப்படுத்திக் கொள்வோம். இயேசு இந்த உலகத்தில் செய்த அநேக காரியங்களுமுண்டு என்று சொல்கிற அவர் மேலும் ஒரு விஷயத்தை சுவிசேஷத்திலே பதிவு செய்திருக்கிறார். இயேசுவைப் பற்றி அவர் பதிவு செய்திருக்கிற அந்த வார்த்தைகள்.

"அவர் செய்த வேறு அனேக காரியங்களான அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புத்தகங்கள் உலகம் கொள்ளாததென்று எண்ணுகிறேன். ஆமென்" என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சகோதர்களே எம் வாழ் நாளிலே இயேசு கூறிய அன்பை கடைப்பிடித்து அந்த அன்பிலே கிறிஸ்தவர்களாகிய நாங்கள் எல்லோருடனும் அன்போடு சேர்ந்து வாழுவோம் என்ற பிரதிக்கினையை இந்த பூசைப் பயிலும் நீங்கள் மன்றாட்டமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அன்போடு உங்களிடமாக கூறிக்கொண்டு இந்த பிரசங்கத்தை நிறைவாக்குகிறேன். பிதாவுக் கும் சுதனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் ஸ்தோதிரம் உண்டாகக் கடவது ஆமென்.''

என்று இதமாக கூறி தன் பிரசங்கத்தை நிறைவு செய்து விட்டு மிகுதிப் பூசைச் சடங்குகளை நிறை வேற்ற குருவானவர் பீடத்தடிக்குச் செல்கிறார். ஆறுதலாய் மிகுதிப் பூசைச் சடங்கு களையெல்லாம் அவர் நிறைவேற்றுகிறதான அளவிலே இயேசுவி னுடைய முக்கிய கூற்றாகிய சமாதான செய்தியை சகலரிடத்தில் பகிர்வதற்கு இரண்டு மூன்று வார்த்தைகளை எல்லோருக்கும் அவர் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இதற்காக பீடத்தடியிலே நின்றபடி வணக்கத்தினர்கள் இருந்த பக்கமாக அவர் திரும்புகிறார்.

''இயேசுவின் சமாதானத்தை நாங்களும் ஒருவருக்கு ஒருவர் அறிவித்துக் கொள்வோம்'' என்று அந்த கூற்றும் செயலும் ஒன்றாக கலந்ததாக இருக்கும் அளவுக்கு அவர் இருகைகளையும் ஒன்றாக சேர்த்து கும்பிட்டபடி சமாதானத்தை அறிவிக்க இரு பக்கமாகவும் அவர் திரும்புவதற்கென்று முனைகிறார்.

அவரைப்போலவே வணக்கத்தினர்கள் எல்லோரும் இந் நேர மாக தாங்களும் சமாதான செய்தியை தங்கள் அருகாமை இருக்கைகளில் இருப்பவர்களுக்கு தெரிவிக்க கைகளை முதலில் கும்பிட்டுக் கொள்கிறார்கள்.

இந்த முறையில் தங்களின் இரு பக்கங்களில் உள்ளவர்க ளுக்கும் சமாதான அன்பை அவர்கள் தெரிவித்தாக வேண்டும். இதற்காக ஒரு பக்கம் அவர்களுக்கு திரும்பியாகிவிட்டது. கை கூப்பிய படி சமாதானம் அவர்களுக்கு தெரிவித்தாகிவிட்டது. மறு பக்கமாகவும் கூப்பிய கை மொட்டு சிறிதும் குலையாமல் திரும்பு கிறார்கள்.

இந்நேரம் தான் - " டுமார்ர்ர்..." ஐயகோ இது என்ன கொடுமை அங்கே வீசிக்கொண்டிருந்த காற்றுக்குக்கூட இப்படியாக ஒன்று நடக்கும் என்பதை அறியாத ஒரு பெரும் சத்தம். கோயிலுக் குள் எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்திகள் எல்லாம் அந்த ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொடிக்குள்ளேயே சின்னா பின்னமாகி சிதைத்து தூக்கி எறியப் பட்ட பாதிப்புடன் சேர்ந்த கொடூரமானதான சத்தம். ஒருவரை இதற்குள்ளே எப்படித்தான் தேடினாலும் சதைத் துண்டுகளைக்கூட கண்டு பிடிக்க இயலாத சகதியாகத்தான் கோயில் முழுக்கவாக இரத்தம் இவ்வேளை கரைந்தோடிக்கொண்டிருக்கிறது. அப்படியே கரும்புகை பொத்திப் படர்ந்து உயிர்களைக் காவுக் கொண்ட அதிகாரம் கெக்கலிக்க வானத்துக்கு அப்பாலும் நான் செல்வேன் என்ற விதத்தில் மேலே மேலேயாய் உயர எழுந்து போய்க் கொண்டிருக்கிறது.

**தினகரன் வார மஞ்சரி (2021-1-17)**
**ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை (வைகாசி-2022)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் செலுத்தும் திசை

"காலையில் எழுந்து கடற்கரையிலே போய் நடந்துவிட்டு வந்தால் களைப்பு வியாதி எல்லாமே இருந்த இடம் தெரியாது போய்விடும். மனக் கவலைகளும் போய்விடும். சாப்பாடு அதிக மாகத் தின்றாகிவிட்டது என்றபயமும் இல்லை. இதைவிட வீட்டிலே உயரமான ஜன்னல்கள் கதவுகள் இருந்தாலும் கடல் காற்றிலே காற்றுப்படுகிற உடற்சுகம் வீட்டிற்குள் இருந்தால் கிடைக்குமா? கட்டிலில் இரவு சுருண்டு படுத்துக் கிடந்த பிறகு, எழுந்து இப்படி இங்கே வந்து நடக்கும் போது ஆகா... அதற்குப் பிறகு தானே உடம்பு உளைச்சலும் இல்லைப்போல இருக்கிறது."

இதையெல்லாம் நினைத்தவாறேதான் பத்மநாதன் அந்த கடற்கரை மணல் வெளியில் நடந்து கொண்டிருந்தார். அவருக்கு வீட்டிலிருந்து வெளியே வெளிக்கிட்டால் காதில் கேட்பது எல்லாமே வாகனங்களின் சத்தம் தான்! பஸ்ஸிலே ஏறி இருந்தால் வெப்ப நிலை அறிவிப்பாக உடம்பு கிடந்து கொதிக்கும் "சீச்சீ என்ன இது நரக வாழ்க்கை... இங்கே வந்து காற்றோடு வந்து காதுக்குள் ளாகவும் கடல் உப்பு காற்றுப்புகுந்து அதுவும் ஒரு சுகமாகதானே இருக்கிறது." பத்மநாதனுக்கு எதிராக நடந்து வந்து கொண்டிருந் தவர் அவருக்கு அருகாக வந்ததும் அவரைப் பார்த்தவாறு இலேசாகப் புன்னகை புரிந்து கொண்டுபோகிறார். அவரைப்பார்த் தால் நிறைய ஓய்வாக இப்போது இருக்கும் வயதுக்காரர் போலத் தான் பத்மநாதனுக்கும் இங்கே வந்துப் போகும் நாட்களிலே அறியக்கூடியதாக இருந்தது. அவருடைய புன்னகைக்கு இவரும் பதில் புன்னகையை உதிர்த்தார். கதை இல்லை. அவர் தன் பாட்டிலே விறு விறு வென்றதாய் நடை. இவரும் சுறுக்கான நடை! நடக்கும் போது காற்று உடம்பில் படப்பட நிம்மதியான நிச்சலன மாக அவருக்கு இருக்கிறது. கடற்கரைக்கு வந்து போகிறவர்கள் தான் உடல் ஆரோக்கியத்தை உண்மையிலேயே மதிக்கிறார்கள். ஆரோக்கியமாக வாழும் நோக்கிலே தன்னைத்தானே அக்கறை யுடன் நேசிப்பவர்களாகவும் அவர்கள் இருக்கிறார்கள். தன்னைத் தானே விரும்பினால்தானே ஆரோக்கியமாகவும் பிழைத்திருக்க முடியும்.

காலையில் எழுந்தால் எவ்வளவோ நேரத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாத அளவுக்கு பலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறார்கள். சிலருக்கு விடிந்ததும் தான் அன்றைய பொழுதுக் கான போராட்டம் தொடங்கி விடுகிறது.

ஆனால் கடற்கரைப்பக்கம் காலையில் வந்து போகிறவர் களுக்கு அந்தக் காலைப்பொழுது என்பது சுலபமாகத் தான் கடந்து போகிறது. ஏதோ கடற்கரைப்பக்கமே ஆழமாக நெடுநேரம் கட்டுண்டதாய் கிடக்காமல், தங்கள் தங்கள் தொழில்களைப் போய் பார்க்கவும்தான் இவர்கள் செல்கிறார்கள் தானே. இந்தக் கேள்விக் குப் பதிலையும் பத்மநாதன் தனக்குள் நினைத்துக் கொண்டார்.

“கரைவலை, இன்றும் போட்டிருக்கிறார்கள் போல் இருக்கிறதே?''

நடந்து கொண்டே அலைகளைத் தாண்டி தூரம் மட்டும் தெரியும் வலை மிதப்புக் கட்டைகளைப் பார்த்தவாறே அவர் யோசித்துக்கொண்டார். நேற்று முன்தினம் கரைவலை இழுத்த போது அவ்விடத்தில் அவர் கண்டதான மீன்களின் ஞாபகம் வந்தது. அந்த மீன்கள் மல்லிகைப் போல நல்ல வெள்ளை அழகு. காரல் மீன்கள்தான்! தொகைக் கும்பலாய் சிறு பின்னல் வலைக் குள் அம்பாரமாய் எல்லாமே கட்டுண்டதாய் கிடந்தது. கொண்டாட் டமாக இன்று தங்கள் நாளை ஆக்குவதற்கு பிறநாட்டு உல்லாசப் பிரயாணிகளும் கடற்கரைப் பக்கம் வருகிறார்கள். கடற்கரை மண்ணில், ஆண் பெண் என்ற வித்தியாசமில்லாமல் படுத்துக் கொள்கிறார்கள். வெயில் காய்கிறார்கள். இங்கே உள்ளவர்கள் எல்லோருடைய கவனத்துக்கும் மையமாகிப் போகிறார்கள்.

கடற்கரைப்பக்கம் உலாவந்ததில் பத்மநாதனுக்கும் வெளி நாட்டவர்கள் பலர் அறிமுகமானவர்கள். நம் நாட்டுக்காரர்கள் போன்று இல்லாமல் வெள்ளையர்களிடம் எது விஷயத்தைப் பற்றியும் பேசலாம். எந்த வித கேள்விக்கும் அவர்கள் சரியான பதிலளிப்பார்கள். அவர்கள் வெறுப்பைக் காட்டமாட்டார்கள். முகம் சுழிக்கமாட்டார்கள். என்ற நினைப்பை வைத்துக் கொண்டு கடற் கரையில் பழக்கமாகிய ஒருவரிடம் பத்மநாதன் இந்தக் கேள்வியை கேட்டார்.

அதிரகசியத்துக்குள் சீவிப்பவரிடமிருந்து இந்த தகவலை அறியவேண்டுமென்பதில் இவர் அவா!

“நீங்கள் ஹிரோயின் போதை விருப்புடையவரா? அதைப்பா விக்கும் வழக்கமுண்டா?'' என்று அவர்கேட்ட கேள்விக்கு அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைக்காரர் எப்பொழுதும் தயாராக வைத்திருக்கும் "இல்லை" என்ற பதிலை உடனே அவர் சொல்லவில்லை. அதற்கு மாறாக தன் பிறவியில் ஏதோ தவற விட்டதாகத்தான் அவர் எதையோ யோசித்தார்.

"ம் அங்கே வசதி உள்ளவர்கள் அவற்றை அனுபவிக் கிறார்கள் நமக்கு அது கிட்டவில்லை" என்று அவர் சொன்ன அந்தப் பதிலோடு அவரைப் பார்க்க மலர்கள் இல்லாத மரம் ஏழ்மையானதாய் இருப்பதைப் போல பத்மநாதனுக்கு அவரைப் பார்க்கவும் அப்படி தெரிந்தது.

தீய போதை வஸ்துப்பாவனை உலகளாவிய விதத்தில் எந்த அளவுக்கு மக்களிடம் ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை அறியவே பத்மநாதன் அந்தவெள்ளைக்காரரிடம் இந்த கேள்வியை கேட்டார்.

மிக அமைதியான இரவில் முழுநிலவின் ஒளி வெள்ளத்தில் கடல் பக்கத்தின் அழகை வெகு தூரம் போலவுள்ள அளவுக்கு பார்த்து ரசிக்க பத்மநாதனுக்கும் ஆசையுண்டு ஆனாலும் அந்த நேரத்தில் கடல் பக்கத்தின் அதிகாரத்தை மது போதைக் கும்பல்கள் தான் வைத்திருக்கும் என்ற பயத்தில் இவருக்கும் இங்கே வருகை தருவது ஆபத்தான செயல் என்பதால் சௌகரியப் படாததாகவே இருந்தது.

காலையில் கடற்கரைக்கு வந்து விட்டால், மனிதர்கள் சிறப்பான சூழலில்தான் பிறகு இருப்பார்கள், என்பதை பத்மநாதன் அங்கு உள்ளவர்களை பார்த்து நன்றாக உணர்ந்து கொண்டவர்.

அவர் அப்படி யோசிப்பதை "சரிதான்" என்று அவர் மனமும் நிச்சயித்து விடுகிறது. பழக்கத்தில் இவருக்கு தியானம் செய்வது என்பதும் ஒரு அடிப்படைத் தேவையாகி விட்டது. இந்த இடம் அவ்வளவு வசதியாக இல்லை. ஆகவே "முடியாது முடியாது" என்றாலும் மனம் ஏனோ அதைக் கேட்பதாக இல்லை. சுகமான கடல் காற்றை பயன்படுத்தி "இங்கேயே இது தேவை" என்று மனமும் விரும்பிச் சொல்ல ஒரு தாளை மரத்தின் கீழே போய் அங்கே பதுமாசனமிட்டு அவருக்கு அமர்ந்து கொள்ள வேண்டிய தாகி விட்டது. அப்படியே தியானத்தில் இருந்த வேளை நானும் ஒரு புத்தனாகி விட்டேன் என்பது போல அவருக்கு தோன்றியது. தியானநிலையில் அப்படியே வேறு உலகத்துக்கு அவர் போய் விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் கால் விரலடிக்கு கிட்டவாக அவருக்கு ஈரம் தடவுவது போல இருந்தது. உணர்ச்சிகள் கூர் தீட்டி நின்று மூளைக்கு அதை அறிவித்தன. அந்த ஈரம் கூடுதலில் இன்பம் கூடிக்கொண்டு போவதாக அவருக்கு இருந்தது. தியான நிலைதான் இப்போதும் அவருக்கு இருந்தது. என்றாலும் கண் திறக்க போராட தேவையில்லை என்கிற நிலையில் கண் விழித்தார். காலடியிலே பார்த்தார். கறுத்த கட்டை உயர நாய்தான் இந்த வேலை செய்தது என்பதாக தெரிந்தது. நாய் அவரைப் பார்த்து வாலை ஆட்டியபடி சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த நாய்க்குப் பக்கத்திலே அதனுடைய எசமான் நின்றார். வெள்ளைக்காரர் தான்! பத்மநாதனுடைய இன்னொரு நண்பர்.

"நான் உங்களுடன் நண்பனாகியது போல என்னுடைய நாயும் இப்போது உங்களிடம் நண்பராகிக் கொண்டது" என்று விட்டு அவர் சிரித்தார். பதிலுக்கு பத்மநாதனும் அவரைப் பார்த்து விட்டு புன்னகைத்தப்படி நாயை தடவிக் கொடுத்தார். "நான் எவ்வளவோ உடற் பயிற்சிகளை செய்யக் கூடியவன்... ஆனாலும் உங்களைப் போல இப்படி காலைமடித்து இருப்பதுதான் எனக்கு இயலாதிருக்கின்றது" என்று, இந்த விஷயத்திலே, தான் ஏழையா னது போல அவர்சொன்னார்."அப்படியேன்சொல்கிறீர்கள்! அமைதி யாகப் பொறுத்துக் கொண்டு முயற்சித்தால் எல்லாமே சரிவந்து விடும்தானே? "

"உண்மைதான் முயற்சித்தால் எனக்கும் இப்படியான பயிற்சிகள் கூடும்தான்! தியானம் பண்ணினால் மன ஆறுதலாக இருக்கலாம்! நிம்மதியாக இருக்கலாம்! இரவிலும் தாலாட்டாகிப் போய் இந்தப்பயிற்சியின் விளைவு நன்றாக நிம்மதியாக உறங்க வும் வைத்துவிடும்! இந்தியா இலங்கை போன்ற நாடுகள் ஆன்மீக நாடுகள்! இங்கே வந்தால் இவற்றையெல்லாம் நாங்கள் நன்றாக அறிந்து கொண்டு விட்டுத்தானே நாங்கள் எங்களது நாடுகளுக்கு திரும்பிப் போகிறோம்! எனக்கு (TACHI) ராய்சீ உடற்பயிற்சி தெரியும். நாளாந்தம் அந்த அப்பியாசங்கள் சிலவற்றை நான் பயிற்ச்சி செய்கிறேன். தாவூட் உடல் அப்பியாசங்களும் எனக்கு தெரியும். இவற்றையெல்லாம் சீனா தேசத்துக்கு சென்றுதான் நான் கற்றேன். அங்கே இவற்றை பயிற்றுவிக்கும் பயிற்சி நிலையத்திலே நான் இவற்றை பழகினேன். ராய்ச்சி என்பவர் 5000 ஆண்டுகளுக்கு முன்னதாக இதை அறிமுகப்படுத்தினார் என்று சொல்கிறார்கள். இந்த ராய்ச்சி பற்றி ANGUS CLARK எழுதிய நூல் என்னிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. அவற்றை உங்களுக்கு நான் இங்கு வரும் போது தருகிறேன். நான் யோகம் தியானம் பற்றி விரிவாக கூறும் நூல்களையும் ஆங்கில மொழியில் படித்திருக்கிறேன். அப்படி இவற்றையெல்லாம் ஆராயும்போது இவற்றுக்கெல்லாமே அடிப்படை புரதான இந்திய தேசத்திலே தான் தோன்றியதாக தெரிகிறது. அதை மொடலைட் பண்ணிதான் இந்த ராய்சி தாவூட் பயிற்சிகள் வந்தன என்றும் நான் நினைக்கிறேன்.''

என்று அந்த வெள்ளையர் நேர்மையான உண்மையை சொல்வது போல அழகாக சொன்னார். அவர் சொன்னதை எல்லாம் கேட்டு பத்மநாதனும் ருசித்தார்.

''நீங்கள் சொல்வதிலே முழுதும் உண்மை இருக்கிறது. தியான யோகத்திலே நீங்கள் பெரிதாக மதிப்புக் கற்பிக்கிறீர்கள். அது உண்மைதான்! மனம் கட்டுப்பட்ட நிலையில் தான் உடற் பயிற்சிகளும் சரியாக சித்திக்கும்! ஆனாலும் தியானம் என்பது மட்டுமே மனதின் அமைதிக்கு விசாலமான இடம் தருகிறது. தியானம் ஒழுங்காக கைகூடி அதன் இன்பத்தை அனுபவிக்க தொடங்கிவிட்டால் பிறகு வேறு எந்த பயிற்சிகளையும் செய்வதை விட தியானம் செய்வதிலேயே மனம் விருப்புக் கொண்டதாக மாறிவிடும்''

''உண்மைதான் நீங்கள் சொல்வது! சாதாரணமாக நான் கதிரையில் இருந்து கொண்டு கண்களை மூடி மெய்மறப்பு செய்கையிலே சுடர் எங்கோ எழுந்து வளையம் போடவாகக் கண்டு மகிழ்ச்சிக்கிறேன்... இந்த ஆனந்தம் போல தொடர்ந்து வந்து ஆரோக்கியமும் எனக்கு கிடைக்கிறது. என் மனம் மகிழ்ச்சியாக இருந்தால்தானே என்னைச் சூழ உள்ளவர்களையும் நான் மகிழ்ச்சியாக வைத்திருக்க முடியும். இதற்கு தியானம் செய்வது என்பது எவ்வளவு துணையாக இருக்கிறது. என்றாலும் இந்த தியான யோகம் சீராக சித்திப்பது என்பது ஒருவருக்கு பிறப்பிலே ஒருவரம் என்பதாகத்தான் நான் நூல்களைப் படித்து அறிந்திருக் கிறேன். இன்று என்னவோ உங்களை இங்கே இந்த விதமாக கண்டதன் பின்பு, நானும் தியானம் தினம் தினம் கட்டாயம் செய்ய வேண்டும் என்பதாகவே என் மனம் சொல்கிறது... இதையே என் மனதில் உச்சரித்துக் கொண்டே நான் இன்று எனது இல்லம் போய் சேர இருக்கிறேன்.'' அவர் இப்படி சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு பத்மநாதனிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு நடக்க தொடங்கி விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இனியும் நான் தியானத்தில் இறங்கிவிட்டால் நேரம் மறைந்ததாய் சென்று விடும். நடக்கும் தூரத்தையும் ஒழுங்காக பூர்த்தி செய்ய முடியாது போய் விடும்" என்ற யோசனையிலே வெயிலில் ஜொலிக்கும் கடலைப் பார்த்தபடி மீண்டும் மணல் தரையில் நடக்க தொடங்கி விட்டார் பத்மநாதன்.

கொஞ்ச தூரம் அப்படியாக நடக்க, நரகத்தை உருவாக்கி விட்டது போன்ற அந்த இடம் அவருக்கு அண்மிக்கிறது. அந்த இடத்தில் கடலானது அலைகளை கரையில் வீசி எறிந்து கொண்டிருக்கிறது. அந்த இடம் கரைக்கடலில் அதிக ஆழமுள்ள இடம்.

ஒரு நாள் அவர் கண்டது இது. இரண்டு வாலிபர்களின் சடலங்களை இந்த இடத்து மணலிலே கிடத்தி விட்டிருந்தார்கள். இரண்டு சவங்களும் மரக்கட்டையாக மணல் மீது கிடக்கிறது.

"என்ன நடந்தது?" என்று அவர் அங்கு நின்றவர்களை அப்போது விசாரித்தார். "இரண்டு பேருக்குமே நீச்சல் தெரியும். ஆழம் வரை நீந்தும் நோக்கில் போயிருக்கிறார்கள். ஆனாலும் கடல் அவர்களை ஏமாற்றி மூழ்கடித்து விட்டது. அப்படியே மறைந்து விட்டார்கள். அதற்குப் பிறகு தேடுதலை முடுக்கி விட வேண்டியிருந்தது. கடற் படையினர்தான் பிரேதத்தை கண்டுபிடித்து இங்கே கொண்டு வந்து கிடத்தினார்கள்." அந்த நிகழ்வை இப்பொழுதும் நினைத்துக் கொண்டபடி அந்த இளைஞர்கள் மேல் பரிதாபப்பட்டுக் கொண்டு பத்மநாதன் அந்த இடத்தை விட்டு அப்பாலே மீண்டும் இப்போது நடக்க தொடங்கியிருந்தார்.

"கடல்மீது இந்த மனிதர்கள் அகங்காரம் கொள்ளலாமா... கடலின் அமைப்பை மதித்து நினைத்து மனம் தாழ்ந்ததாக இருந்து கொள்ள அவன் ஏன் தன்னை பக்குவபடுத்திக் கொள்ளாதவனாக இருக்கிறான்" மனக்கசப்பில் இவற்றை நினைத்தபடி எஞ்சியுள்ள தூரத்தை நடந்து முடிக்க அவர் ஆரம்பித்தார். சிறிது தூரம் அவர் செல்லவும்தான் தனிமையிலே தான் ஒருத்தராகவே ஒரு விளையாட்டை விளையாடியபடி மனம் சந்தோஷிக்கிற செயலதனை செய்கின்ற ஒருவரை அவர் பார்த்தார். நாலைந்து ஒல்லித் தேங்காய்களை தன் பக்கத்தில் வைத்தபடி இந்த விளையாட்டை உடற்பயிற்சியாக இவர் செய்கிறார். குண்டு எறியும் விளையாட்டுப் போல அந்த ஒல்லித் தேங்காய்களை அவர் எறிகிறார். ஒவ்வொன்றாக அவைகளை அடுத்தடுத்து எறிகிறார். எறிந்த தூரத்தை விட்டு மற்றையது அதைத் தாண்டியதாய் முன்னாலே போய் விழுந்தால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கைகளை தட்டி பெரிதாக ...ஆ... என்று மகிழ்ச்சியாக குர லெழுப்பி ஆர்ப்பரிக்கிறார். எறிந்து விட்டவைகளை திரும்பவும் எடுத்துவந்து திரும்பவும் இதே விளையாட்டு அவரிடம் தொடர் கிறது.

" ம் தனிமைதான் மனிதர்களது வாழ்க்கை.... உலகத்தின் சனத்தொகை மணல் துகள்கள் கணக்கில் பெருகிவிட்டது.. ஆனாலும் இன்னொரு மனிதனுடன் உறவாடுவதை சேர்ந்து நடப்பதை மனித மனங்கள் அநேகமாக வெறுத்தே வருகிறது... உறவினருடன் சேராது அவர்களின் முகங்களை அநேகமானவர்கள் மறந்து கொண்டிருக்கிறார்கள்... சகோதரர்களின் முகங்களை ஏன் தாய் தந்தையரின் முகங்களை கூட பலர் இன்று முகம் மறந்த தாகவே இருந்தபடி வாழ்கிறார்கள்... இது தானே இன்றைய நாகரிக உலகத்தில் பொதுவாக மனிதர்களினதும் வாழ்க்கை"

கரையில் மோதி மோதிப்பின் திரும்பித் திரும்பியும் தன் சக்தியை கடல் அலைகள் காட்டிக்கொண்டிருந்தன. சூரிய ஒளி பிரகாசமாகிவிட்டது. உடலளவில் அவருக்கு, அந்த வெயில் வெப்பம் காட்டியது. அவர் நடக்கின்ற தூரத்தின் எல்லையிலே ஒரு கற்பாறை உண்டு. அந்த இடத்துக்கு போய் விட்டால், நடந்து போகவேண்டிய தூரம் நிறைவடையும். கற்பாறையின் அருகே வந்து விட்டால், பிறகு திரும்பி நடப்பது என்பதானது வீட்டுக்குப் போகின்ற நடைதான். ஆனாலும் திரும்பி நடக்க போவதற்கு முதல் அந்த கற் பாறையின் மேலே கையை வைத்து மனதுக்கொரு சாதனை செய்த ஆறுதலை பெற்றுக்கொள்ள வேண்டும்.

அவர் கற்பாறையின் அருகே வந்தார். கல்லை கையால் தொட்டார். பாறையின் சூடு உடனே அவரது விரலை பிடித்துக் கொள்கிறது.

" அடடா இன்று இவ்வளவு நேரமாகி விட்டதே? "

(2021)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபச்சுடர்

காலை வெயில் முற்றத்தில் விழவும் அன்னபூரணிக்கு மனதில் ஒரு நினைப்பு வந்தது. அதே நினைவுடன் பின்பு தேநீர் குடிப்பதற்காக அடுப்பில் நெருப்பு மூட்டியபோது அந்தக் கணகணப்பு அவள் கண்களிலே ஒளி வீசித்தெறித்தது. வீட்டு வளவுக் கறுத்தக் கொழும்பான் மாமரத்தை இன்றும் காலையிலே ஒரு முறை போய் பார்த்திட வேண்டும் என்ற ஆசையிலே அவளது இருண்ட கரு வளையம் போட்ட கண்களிலும் ஒரு பளபளப்பு இப்போது காணப் பட்டது.

தண்ணீர் அடுப்பில் கொதிக்கக் கண்டதும் கோப்பைகளை தண்ணீரில் அலம்பிக் கழுவி தன் இரு பிள்ளைகளுக்கும் தேநீர் தயாரித்துக் கொடுத்துத் தானும் குடித்துவிட்டு குடிசைக்கு வெளியே அவள் வந்தாள்.

ஷெல் பட்டுக் காயம் பட்ட அந்தக் காலத்திலிருந்து அவளுக்கு வலது காலில் கட்டை போல விறைப்புத் தன்மை இருந்தது. அந்தக் கால் இப்பொழுதும் நடப்பதற்கு மெதுவாக இழுத்து நிறுத்தி குனிந்து கைகளால் அவள் உருவினாள். கால் நோவு உடனே அவளுக்கு சுள்ளென்று இழுத்தது. என்றாலும் அதை சமாளித்துக்கொண்டு இனிமையான அந்தக் காட்சியை காணவேண்டும் என்ற ஆவலுடன் அந்த மாமரம் நின்ற இடத்தை நோக்கி நடந்து போனாள். மாமரம் பச்சையான அமைப்புடைய அழகானதாகத்தான் பார்ப்பதற்கு அவளுக்கு தெரிகிறது. மரத்தில் இருக்கும் இலைகளோடே உள்ள நிறை காய்களையும் அவள் கவனித்தாள். அவைகள் இப்பொழுதும் பச்சையாக இருந்தன. நிறைய காய்கள் இருக்கின்றன என்ற மனக் கணிப்பில் அவற்றை யெல்லாம் எண்ணிக்கையில் கணக்கெடுத்தாள். அந்தக் கணக் கெடுப்பில் மனம் மிக ஆனந்தமாக இருந்தது.

“ஆ... நிறையக் காய்கள் இருக்கு” என்று தன் வாயாலும் வெளியே சொல்லிக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமோம் எல்லாமே முற்றி விட்டதாலே நிச்சயம் எட்டுப் பத்து நாளைக்குள்ள நிறத்துப்பழுத்தாய் விடும்" என்று பின்பும் மனதுக்குள் இதை நினைத்ததும் கடவுளுக்கும் அவள் உடனே நன்றி சொன்னாள். இந்த மனத்திருப்தியிலே சிறிதே மகிழ்ச்சி பெற்றாலும் இன்னும் அவளுக்குள்ள வேறொரு கவலை மனக் கஷ்டத்தை ஏற்படுத்தியது.

"உயரமாய்ப் பெரிசா வளர்ந்து கடினமாப் பார்வைக்குக் காணப்பட்ட எத்தினை பனை மரங்கள் இந்தக் காணிக்கிள்ளயாய் இருந்தது. அதில இருந்து விழுகிற பனம் பழங்களெல்லாமே நிகரில்லா சுவையான நல்ல பழங்கள்.. அந்தப் பனம் பழங்க ளெல்லாம் பழச்சதை அதிகமாயிருக்கிற பழங்கள்.. அந்த மரத்துக் களிண்ட நுங்கு கூட கண் தோண்டேக்கிள பெருவிரல் நீளத்துக்கும் உள்ளே போகும்! அவ்வளவுக்கு அந்த நுங்குகளில சதையும் சுவைத் தண்ணீரும் நிறைய இருக்கும் அப்படியான முற்றிக் கடினப் பட்ட அந்த பனை மரங்களே ஷெல் அடியில வெட்டிக் கிழிச்சதும் முறிஞ்சதும் எரிஞ்சதுமாய்ப் போச்சே அநியாயம்! அநியாயம்!" என்று நினைத்ததிலேதான் மனமும் அவளுக்கு மேலும் கவலை யாக இருந்தது. இந்தக் கவலைகளிலே இயங்கி வந்த அவள் தன் குடும்பத்தின் இன்றைய நிலையை இப்போது யோசித்தாள்.

"காணியும் வீடும் வாசலும் உடைஞ்சும் சிதைஞ்சும் அழிஞ்சு போனது ஒரு பக்கம் போகட்டும்... அதையேன் நான் இப்ப பெரிசா நினைக்கிறன்... ஏதோ காணியைப் பார்த்தா மரத்தைப்பார்த்தா எனக்கு அப்படி ஒரு யோசனை பெரிசா அப்போதைக்கு வந்திருது... ஆனா இதை எல்லாத்தையும் விட என்ரையும் என்ரை பிள்ளையளிண்ட நிலையும் இப்போதையதாய் உள்ளதாயிருக்கிறது கடவுளே எங்களுக்கு இதுவெல்லாம் எவ்வளவு சரியானதொரு கஷ்டம்... பாழ்பட்ட இந்தச் சண்டைக் கிள்ள அவரும் காயப்பட்டுச் செத்துப்போக என்ர மூத்த பொம்பிளப் பிள்ளைக்கு மெல்லே ஷெல் துண்டு அடிச்சுக் கால் பிளந்து காயம் வந்து பிறகு கால் ஒண்டை எடுக்கவேண்டியதாப் போச்சு... அடுத்தவள் இளையவள்... ஐயோ என்ர முருகா அவளுக்கு மெல்லே கண்ணில காயம் பட்டு ஒரு கண்பார்வையே இல்லாம போனதும் கையும் ஒண்டு முறிஞ்சும் உடைஞ்சும் கட்டை யாய்ப் போய் இப்ப அது விழங்காமக் கிடக்கு... என்ர முருகா இந்த குமர்கள் இரண்டையும் இந்தக் கோலத்திலயா நானும் வெச்சுக் கொண்டு எத்தனை நாளுக்குத்தான் இதுகளுக்கு நெடுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பாய் இருப்பன்.'' என்று நினைக்கவும் அழுத்தமான விம்மல் வந்து கண்களும் அவளுக்கு ஜலம் கரைந்தது. மூக்கைப் பிடித்துக் கொண்டு பிறகு சளியும் சீறிக் கொட்டினாள்.

“இந்த வானத்துக்குக் கீழவாக இப்ப எவ்வளவு கொடுமைகள் நாங்கள் இப்ப பார்க்கவா நடக்குது... இப்பிடி ஒரு யுத்தம் வரும் அப்படி வந்து எல்லாரிண்ட சீவியத்தையும் போட்டு பிறகு ஒரு இறுக்கு இறுக்கும் எண்டு ஆருக்குத்தான் தெரியும்... பெரிய பெரிய இந்தக் கஷ்டத்துக்கிளையும் என்றுமுள்ள கடவுளிண்ட கையில எல்லாப் பாரத்தையுமாப்போட்டுத்தான் நாங்களும் இந்தச் சனங்களுமா எல்லாரும் கிடந்து இங்கினையா சீவிச்சம்... ஓ! ஒரு சமாதானம் எப்படியும் நடக்கும்! நடக்கும்! எண்டுதானே அந்த நம்பிக்கையோட நாங்களும் ஓடி ஓடித்திரிஞ்சம். சவக் குழிக்குள்ள போகாம தப்பிக் கிளம்பினதாத்தான் ஒவ்வொரு நாளும் எங்களுக்கெல்லாமே அப்பிடி காலம் கடந்து போனது... இந்தச் சண்டைக்கிள்ள எவ்வளவு கொடுமையளக் கண்டு களிக்கவேணுமோ அவ்வளவையும் கண்டு நாள்களைக் கழிச்சதாத்தானே எங்களுக்கு அப்பிடி அந்தக் காலமெல்லாம் போனது.

நாடோடி மாதிரி என்ன நீ அங்கயும் இங்கயுமா நெடுக அலைஞ்சு திரியிறாய்...? ஒரு இடத்திலயாய் உங்களுக்கு இருந்துகிருந்து நல்லப்படியா சீவிக்க ஏலாதே எண்டு முன்னம் எங்கடை ஆக்கள் அப்படியான ஒருவருக்குப் பார்த்து அறிவுரை சொல்லுவினம்... ஆனா பிறகு இங்க உள்ள எங்கடை ஆக்களுக்கெல்லாம் அப்படியா சொல்லக் கூடியதா என்ன நிலைமை ஒண்டு இங்கினையா வந்தது எண்டுறன்...? இந்த யுத்தம் எண்டுறது தொடங்கினாப்பிறகு எல்லாரும் தங்கட வீடு வாசல்களை விட்டு நாடோடிகளாகத்தானே அங்கயும் இங்கயுமா பிறகு அலைஞ்சு திரிய வேண்டியதாப் போச்சு... அங்க ஆமிவாறான் இங்க ஆமி வாறான் எண்டு கதை வந்தவுடன வேடுவர் காட்டுமிருகங்களை துரத்திக் கொண்டு ஓடுறமாதிரியான வேகத்திலதானே நாங்களும் அப்பிடி ஒரு ஓட்டம் எங்கயும் போய்த்தப்புறத்துக்கு ஓடினோம்! இப்பிடியா அங்கின இங்கினையா ஓடிப் போய் கொஞ்சநாள் தங்கி ஆறுதலாயிருப்போம் எண்டுபாத்தா... அப்பிடிப்போன இடத்திலும் கொஞ்சமெண்டாலும் நாங்கள் நிம்மதியாயிருக்க ஏலுமாயிருந்ததே...? நித்திரை ஒரு இரவிலயெண்டாலும் நிம்மதியாய் எங்களுக்கு வந்ததே...? ஆட்லறி ஷெல் வந்து விழுந்தால் அந்தச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தம் வந்து மார்புப் பிரதேசத்தையே அப்பிடியே எங்களுக்கு உலுக்கி எடுக்கிறமாதிரி இருக்கும்.

ஏதோ தலைமாட்டுக்குக் கிட்டவந்து அந்தச் ஷெல் விழுகிற மாதிரத்தான் சத்தம்! அப்பிடி மோசமானதா கேக்கிறதுக்கு இருக்கும்... தருமம் படைச்ச இந்தப்பூமியிலே இந்தச் ஷெல் விழ அடிப்பட்டு அந்த அதிர்வும் நடுக்கமுமாய் உடனே இந்த மண்ணே கிடந்து அதிரேக்கிள்ள திடமில்லாமப் போய் இருக்கிற எங்கட நெஞ்சு பயத்தில என்ன நடுக்கம் நடுங்கும்? சரி இதெல்லாமே ஒருபக்கம் கிடக்கட்டும்! இப்படியெல்லாம் அலைஞ்சு திரியிறதால ஆருக்கு என்ன தொழிலைத்தான் செய்து சீவியம் நடத்த ஏலுமா இருந்தது. வரும்படியுமில்லாம தொழிலுமில்லாம, பசிக்கு வாய் வைத்துக்கு என்ன சாமானைத் தான் வாங்கி சமைச்சு மூட்டி எடுத்துச் சாப்பிடுறது. பல லட்சங்களுக்கும் வாரிசு மாதிரி உள்ள, வசதியான அப்பிடியான ஆக்களே நாங்கள்...? எங்களுக்கெண்டு இருந்த தங்கமெண்டு பளபளத்துக்கிடந்த அப்பிடிக் கொஞ்சம் நகைகளையும் கொஞ்சம் கொஞ்சமா வித்து வித்துத் திண்டு துலைச்சு வெறுமையா பிறகு மூழியாத்தான் நாங்கள் போயிற்றம்...

இப்படியெல்லாம் வந்து துலைச்ச கஷ்டத்தில பிறகு எங்களுக்கு பைத்தியம்தான் வந்து பிடிக்காத ஒரு குறை...! எங்களுக்கு எண்டு உள்ளது இந்த இரண்டும் வந்து பெம்பிளப் பிள்ளையளெல்லே...! எங்கயும் இடம் பெயர்ந்து போய் இருக்கிற அந்த இடத்தில இதுகளையும் விட்டுட்டு, நான் வந்து அங்க இங்கயெண்டு ஒரு பக்கமும் அசும்பவே ஏலாது! அவரும் எங்களை விட்டிட்டு செத்துப் போயிட்டதால இப்ப எல்லாப் பாரமும் என்ரை தலையிலதானே வந்து விழுந்திட்டுது.. கையில மடியில இப்ப எங்களுக்கு ஒண்டுமில்லையெண்டாலும் ஆரிட்டயும் போய் இரந்து கேட்டு வாங்கி அதில சீவியத்தை நாங்கள் போக்காட்டேலுமே...?

எங்கட தமிழ்ச்சாதி எண்டுறதுகள் மானமுள்ளதுகளெல்லே...! மானமுள்ள இந்தச் சனங்கள் போய் மற்றச் சாதி சனம் மாதிரி கஷ்டப்பட்டிட்டம், உதவி செய்யுங்கோ, எண்டு பஸ்வழியையும் வீடு வழியையும் திரிஞ்சு பிச்சை எடுத்து அதில சாப்பிட்டுக் கொண்டே திரியுதுகள்...? இந்தச் சண்டைக்கிள்ள கை கால் இல்லாம போனதுகளே பிச்சை எடுக்காம ஏதோ தங்களுக்கு ஏலுமான வேலை வில்லட்டிகளச்செய்து கிய்து சீவிக்குதுகள்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கேயுள்ள எங்கட தமிழ்ச் சனங்கள, நாங்கள் எங்கட நெஞ்சில கையால இடிச்சுச் சொல்லுவம். நாங்கள் உண்மையில மானமுள்ள தழிழர்கள் தானெண்டு...! என்னதான் எங்களுக்கு இப்படியா கஷ்டங்கள் எண்டது வந்தாலும், சொத்துப்பத்து கொள்ளையில போனதாப் போனாலும்... நாங்களெண்டால் கஷ்டப் பட்டு பாடுப்பட்டு கிடந்து உழைச்சுத்தான் அந்த உழைப்பில வாறதில நாங்கள் எங்கட பசிக்கு சோறு தின்னுவம்...!

இப்படியாத்தான் எங்கட ஆக்களிண்ட கொள்கையும் சீவியமும்...! இந்த மண்ணில பிறந்த நாங்கள் இப்படித்தானே எப்பயும் இந்த உசிர் இருக்கு மட்டும் மானமா சீவிப்பம்...! அல்லாட்டி ஏன் இந்த உலகத்தில ஒரு மனிச ரெண்டு இருந்து சீவியமெண்டதா நாங்களும் சீவிப்பான்?" என்று இவ்வளவற்றையும் அவ்விடத்தில் அவள் அசையமாட்டாமல் நின்றபடி யோசித்துவிட்டு தன் கண்களைத் திருப்பி படலைப்பக்கம் பார்த்தாள்.

"அட விறகுக் காரரெல்லே சயிக்கிளிலயா விறகைக் கொண்டு இப்ப றோட்டால போகப் போறாங்கள்... அதை வாங்கி கொட்டிலில அடுக்கி பிறகு வாறவைகளுக்கு விக்காம பிறகு எப்பிடி எங்கட சீவியமெண்டுறது போகும்...? எனக்கெல்லாம் இப்படியா யோசனையள் வந்தா இப்பிடித்தான் சுத்தமா உள்ள நேரமெல்லாம் அநியாயமா போகுது... ஏதோ நூற்றாண்டு கணக் காக நடந்ததுகளையெல்லாம் இந்த என்ரை யோசனைகள் கொண்டு வருகுது... இதெல்லாத்தையும் இந்த மூளைக்கால இருந்து இனிமேல முற்றாப் பிடுங்கி எறிஞ்சிட வேணும் எண்டு எப்பவும் நினைச்சாலும் அது நடக்கக்கூடியதாயிருக்குதே?" என்று நினைத்து விட்டு இன்னும் அந்த இடத்திலே கொஞ்ச நேரமும் பிறகு நின்று காத்திராமல் படலையடிப்பக்கம் உடனே நடந்து போனாள் அன்னபூரணி. அந்த இடத்தில் இருந்து பிறகு வீதியிலே இறங்கிய பிறகு பார்வையை நேராக தூரவாய் வைத்து விறகுக்காரர்கள் யாராவது அந்த வீதிவழியாக இப்போது வந்து கொண்டிருக்கிறார்களோ என அறிய தேடினாள்.

இந்நேரம் அவளுக்கு நல்ல நேரமாக அமைந்தது போல மனச் சந்தோஷமாக இருந்தது. விறகேற்றியதாய் இருக்கும் நான்கு சயிக்கிள்காரர்கள் அந்த வீதியாலே இப்போது வந்து கொண்டிருப் பது அவள் கண்களுக்குத் தெரிந்தது. அந்தக் காட்சி அவளுக்கு மகிழ்ச்சி சுரக்கச் செய்யும் காட்சியாய் இருந்தது. விறகு கொண்டு வந்தவர்களெல்லாம் வாடிக்கையாக அவளுக்கு விறகுவிற்பவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்தான். இன்றும் தங்கள் சயிக்கிள்களில் அகன்ற தங்கள் முதுகுப் பரப்புக்கு மேலே கரியற்றில் உயரவாக அவர்கள் கொத்து விறகு கட்டிக்கொண்டு வந்திருந்தார்கள்.

அன்னபூரணி நின்ற அந்த இடத்திலே வந்ததும் அவர்களெல்லாம் சயிக்கிளால் இறங்கிக் கொண்டார்கள். "பூரணி அக்காவின்ர வீட்டக் கடந்து நாங்கள் அங்கால போக எப்பயும் ஏலுமே?" விறகுக்காரன் சின்னையன் சிரிப்போடு அவளைப்பார்த்து சொன்னான். "ஒவ்வொரு நாளும் இதையேதான் நீ எனக்கு சொல்லுறாய் தம்பி" என்று அவள் உடனே பதில் சொல்ல அடுத்ததான விறகுக்காரன் குட்டி,

"சின்னையன் சொல்லுற அந்தக் கதையிலயாய் எனக்கும் கூட உடன்பாடுதானே அக்கா... அங்கால நாங்கள் இந்த விறகைக் கொண்டுபோய் ஐந்து பத்து ரூபாய் கூடவைச்சு விற்கிறதவிட, உங்களுக்குத்தாறதில எங்களுக்கு ஒரு மனச் சந்தோஷம், மனச் சமாதானம் இருக்கேல்ல அக்கா!" என்று இதை சொல்ல, அவனது இந்தகதை அன்னப்பூரணிக்கு மனதில் இருந்த துன்பத்தையெல்லாம் துடைத்து விட்டது மாதிரியாக இருந்தது.

உடனே அவள், அந்த விறகுக்காரர்களை ஒருவர் மாற்றி ஒருவராய்ப் பார்த்துவிட்டு, "உங்கடை ஒரு சகோதரி மாதிரி என்னையும் நினைச்சு இப்படியெல்லாம் அன்பா நீங்கள் எல்லாரும் எனக்கு உதவி செய்யிறீங்கள்...!" என்று சொல்லியவாறு வலக் கையால் அவள் இடது கண்ணை துடைத்துக் கொண்டாள். அன்னபூரணிக்குள்ள கஷ்டத்தை இவ்வேளை நினைத்தப்படி சின்னையன் அவளை சாந்தமாய் பார்த்தான்.

சூரிய வெயில் இவ்வேளை சூடாய் விழுந்து கொண்டிருந்தது. ஆடிக்காற்று அவர்களது சயிக்கிள்களையே விறகுப் பாரத்தோடு பறித்தெடுத்துக் கொண்டுபோகுமாப் போல அடித்துக் கொண்டிருந்தது. "விசமம் பிடிச்ச காத்து இந்த இழுவை போட்டு சயிக்கிளையும் ஆளையும் இழுத்துப் போகுது... நீங்க படலையை கொஞ்சம் அகல திறவுங்கோ அக்கா சயிக்கிளை உள்ளே விடுவம்" என்று சொல்லியபடி குட்டி அவசரப்பட்டான். அவன் சொன்னவுடனே பாதி திறந்திருந்த வேலிப் படலையடிக்குப் போய் அதை விரிய திறந்துவிட்டாள் அன்னபூரணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களெல்லோரும் படலைக்குள்ளாலே பிறகு சயிக் கிளை விட்டார்கள். விறகுக் கொட்டிலிலே அன்னபூரணி அவர்கள் கொண்டுவந்திருந்த விறகுகள் எல்லாவற்றையுமாக ஆறுதலாக பிறகு நின்று நிறுத்து எடை போட்டாள். கணக்குப்படி அவர்க ளுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தையெல்லாம் சரிவர அவள் கொடுத்தாள்.

காசை கையிலே வாங்கியதும், அவர்களெல்லாம் ஒருவர் பின் ஒருவராக " அக்கா வாறமக்கா... அக்கா வாறம் அக்கா..." என்று சொல்லியபடி சயிக்கிளை உருட்டிக்கொண்டு அந்த இடத்தி லிருந்து வெளிக்கிட்டு விட்டார்கள். அவர்களுக்கு சுமந்து வந்த சுமையும் போய் காசும் இப்போது கிடைத்ததொரு சந்தோஷம் இருந்தது.

அன்னபூரணி அவர்கள் போன கையோடு தன் வேலையைப் போய் பார்ப்போம் என்ற யோசனையில், வீட்டுப்பக்கமாய் போவ தற்கு நடக்க ஆரம்பித்தாள். "அக்கா..." என்று படலையடிப் பக்கமாக இருந்து ஒரு குரல் அவ்வேளை அவளுக்குக் கேட்டது. அவள் உடனே நடையை நிறுத்திவிட்டு திரும்பிப்பார்த்தாள்.

"அக்கா நான் மாங்காய் வியாபாரி... உங்கட வளவு மரத்தைப் பார்த்தன்... அதுதான் என்னமாதிரியெண்டு காய்களை விற்பீங்களோ எண்டு கேக்கலாம் எண்டு வாறன்.."

" ஆ அப்பிடியே! நீங்க எங்கியிருந்து வாறீங்கள்? "

" நான் புதுக்குடியிருப்பு அக்கா! "

" ஆ... சரி சரி...! அப்பிடியெண்டா நீங்கள் காய்களை மரத்தோட தீர்த்து முழுக்கவா எடுப்பீங்களோ? "

" ஓ அப்பிடித்தானக்கா தீர்த்து முழுக்கவும் எடுப்பம்! "

" மரத்தில நல்லா மாங்காய் முத்தீட்டுது! "

" ஓ... றோட்டிலே இருந்து பாக்கேக்கிளயே வெயிலில அதெல்லாம் நல்லா பளிச்செண்டு தெரிஞ்சது! "

"அப்ப தம்பி நீங்க மரத்தடியில போய் நிண்டு வடிவா எல்லாம் பாத்திட்டு என்ன மாதிரியெண்டு உங்கட கணிப்ப எனக்குச் சொல்லுங்களன்?" என்று அவள் சொல்லவும் அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் நன்றாக மரத்தைக் கவனித்துப் பார்த்துவிட்டு வந்தான். “அக்கா மரத்தைப் பார்த்துக் காய்களையும் கவனிச்சு ஒரு தீர்வு திட்டத்தோட பேசலாமெண்டு உங்களிட்டயா இப்ப வந்திருக் கிறன்.”

“அப்படியெண்டா என்னமாதிரி உங்கட கணிப்பு? ”

“அக்கா! முதல் கதையிலேயே உங்களுக்கும் நட்டமில் லாமல் எனக்கும் நட்டமில்லாமல் நீதியாக ஒரு கணக்கைச் சொல்லுறன்! ஒரு பதினையாயிரம் ரூபா தாறன்!” “அடட அவ்வளவே! பெரிய கறுத்த கொழும்பான் மாங்காய்யெல்லே…! மரத்துக் கிளைக் கரையோரமெல்லாம் குலைகுலையா நிறையக் காயிருக்கெல்லே தம்பி! ”

“அதெல்லாம் மரத்தைச்சுற்றி வந்து வடிவாப் பாத்து கணக்கு வைச்சுத்தானக்கா இந்த கதையை சொன்னன்!” என்று அவன் சொல்லவும், அன்ன பூரணிக்கும் இப்போது மனம் திருப்தி யாக இருந்தது. அவளின் அனேக கனவுகளுக்கும் பின்னணியாக இருந்து கொண்டு மனம் “நீ காசைக் கையில வாங்கு வாங்கு” என்றதாய் அவ்வேளை உற்சாகமூட்டியது. “ சரி!” என்று சொல்லி அவன் கணக்குக்கு அவள் ஒப்புக் கொண்டாள்.

அவன் உடனே காசை எண்ணி கொடுத்துவிட்டு, “அக்கா மூன்று நாளைக்கிள்ள நாங்கள் மரத்துக்காய்களெல்லாம் வந்து ஆயுறமக்கா!” என்று சொல்லி விட்டு போய்விட்டான். அவன் போனதன் பிறகு அவள் கையிலே வாங்கிய காசை கொண்டுபோய் தன் இரு பிள்ளைகளுக்கும் காசை காட்டினாள். அந்தக் காசை கண்டதும் பிள்ளைகளுக்கும் முகத்திலே படர்ந்திருந்த ஆனந் தத்தை அவளுக்குக் காணக்கூடிய இன்பமாகவும் இருந்தது. புதுப்பலம் கிடைத்ததுபோல அவளுக்கும் பிள்ளைகளுக்கும் இருந்தது.

அடுத்தநாள் காலை விடிந்தபோது தெம்புடன் மூன்று பேரும் வேளைக்கே எழுந்து விட்டார்கள். மனத்திருப்தியான இன்ப மான நினைவுகளுடனே செய்கிற வேலைகளை எல்லாம் சுறு சுறுப்பாக மூன்று பேரும் செய்து கொள்ள ஆரம்பித்தார்கள். வாங் கிய காசை செலவாகாமல் சேமிப்பாக வைத்திருக்க என்னென்ன விஷயங்களை எல்லாம் செய்ய வேண்டும் என்ற திட்டங்களை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்து கொண்டிருந்த அந்த நேரத்திலே அன்னபூரணி தன் யோசனையிலே வைத்துக் கொண்டிருந்தாள்.

காலையில் விறகு வாங்கவென்று வந்தவர்களுக்கு விறகு நிறுத்துக் கொடுத்துக்காசை வாங்கும் போதும் வேறு ஒன்றுமே தேவையற்றதாய் கதைக்காமல் மாங்காய் விற்று வாங்கிய பணத்தை நினைத்தபடியே அவள் மௌனமாக இருந்தாள். இன்று அவளது மூத்தமகளும் காத்தவராயன் கூத்தில் ஆரியமாலா தன் சேடியரோடு சேர்ந்து படிக்கிற கூத்துப்பாட்டை இனிமையான குரலில் குசினிவேலைகளிலே உரக்கப்பாடிக் கொண்டிருந்தாள். அவளது தங்கை அரைக் கண் மூடியபடி அவள் படிப்பதை கேட்டு ரசித்துக் கொண்டிருந்தாள்.

இந்நேரம் வேகமாக வீதியிலே வந்து கொண்டிருந்த தட்டி வான் ஒன்று அன்னபூரணியின் வேலிப் படலையின் முன்னாலே நின்றது. வானிலே இருந்து இரண்டு பேர் கீழே இறங்குவதை கொட்டிலியில் நின்று கொண்டிருந்த அன்னப்பூரணியும் பார்த்தாள். அவர்களைக் கண்டதும் அன்னப்பூரணியினது கண்கள் அகலத் திறந்தன. அப்படியே ஒரு மகிழ்ச்சியான சிரிப்புடன் "தங்கச்சி சுகிர்தமும் மகன் பெடியுமெல்லே இங்கனயா வருகினம்" என்று தனக்குத்தானே ஒருமுறை உடனே சொல்லிக் கொண்டாள். படலையைத் திறந்து கொண்டு உள்ளே முற்றத்தடியால் நடந்து வந்ததும் அன்னப்பூரணி அவளைப் போய் கட்டி அணைத்தபடி "என்னடி ஆத்தே தங்கச்சி இங்கயா நீ கனநாள் எங்களை எட்டிப் பார்க்கவெண்டு கூட வராமலா விட்டிட்டாய்" என்று நேசிக்கும் சிரிப் போடு அவளைக் கேட்டாள். அந்தக் கதையோடு "வாடா மகனே!" என்று சொல்லி சுகிர்தத்தின் மகனின் தலையையும் அவள் பாசத்தோடு கையால் தடவிவிட்டாள்.

சுகிர்தமும் அவள் மகனும் குடிசைக்குள்ளே வந்ததும், அன்பை வெளியிடும் பேச்சிலே அன்னபூரணியின் இரு பிள்ளை களும் உணர்ச்சி சார்ந்த வேகமாய் இருந்தார்கள். இரவு சாப் பாட்டுக்குப் பின்பு, மறுபடியும் மறுபடியும் தேநீர் போட்டுக் குடித்து சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களின் வாழ்க்கை நிலைபரத்தில் இந்த சந்தோஷமான பேச்சுக்கள் எவ்வளவு நேரம்தான் நின்று நிலைக்கும். இன்றைய சீவியப் போக்கை கதைக்க அவர்கள் தொடங்கியபோது, நிலவு தேய்ந்து சுருங்கிக் கொண்டு வருவது போல தான் மகிழ்ச்சி அவர்களிடமாக தேய்ந்ததாக சுருங்கிக் கொண்டு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா இவனுக்கு நெஞ்சு சரியா வலிக்குதெண்டு பல நாளா எனக்குச் சொல்ல, நான் பிறகு இவனை கவர்மெந்து ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டு போய் அங்க டொக்டரிட்டக் காட்டினன் அவர் இவனை சோதிச்செல்லாம் பார்த்திட்டு சத்தான உணவுகள் இவருக்கு குடுக்க வேணும்! அப்பிடி இல்லாம விட்டா பிறகு இந்த பிள்ளைக்கு கண்ணும் பாதிக்கும்..! படிக்கிற பிள்ளை. நீங்கள் கவனமாக இவரை பார்க்க வேணுமெண்டிட்டார்...! நாங்கள் எப்படியக்கா மிக குறுகிய எங்களிண்ட வருமானத்தில சத்தான உணவுகள் வாங்கி சமைச்சுக் குடுக்கிறது... அவருக்கும் கால் ஏலாம கிடக்கிறது தெரியும்தானே...! கூலி வேலைக் கெண்டுபோய் கொஞ்சநேரம் வேலை செய்தாலும் அவருக்குத் தலைச் சுத்து வந்திடும்... பிறகு கொஞ்சம் அப்படியே ஒரு பக்கம் போய் படுத்து, சரிஞ்சு கிடந்தாப் பிறகுதான் திரும்பவும் அவர் எழும்பி வேலை செய்வார். எங்களுக்குள்ள இருக்கிற இந்தக் கஸ்டத்துக்கிள்ள இவனும் இப்பவா நான் தூரவா நடந்து பள்ளிக்கூடம் அங்கினையா போறன்! அதால எனக்கு ஒரு சயிக்கிள் வாங்கித் தாங்கம்மா தாங்கம்மா எண்டு அடம் பிடிக்கிறான்...! இதுக்கெல்லாம் வீட்டில, பத்துக்கோழிகளை வைச்சு வளத்துக்கொண்டு நானும் என்ன வரும்படி வருகுதெண்டு காசு மிச்சப்படுத்தி ஏதும் ஒண்டைச் செய்யிறது...? "

என்று இதையெல்லாம் அவள் சொல்லிக் கொண்டிருக்க அவளது கண்கள் அவளது கட்டுப்பாட்டுக் குள்ளாக இருக்க வில்லை. அப்படியாக அவளுக்கு மன உறுதி குலைந்து கண்க ளாலே கண்ணீர் பொல பொலவென கொட்டிற்று. கன்னத்தின் ஈர வழிவை தன் கையாலே அவள் துடைத்தெறிந்தாள்.

அன்னபூரணிக்கு தன் தங்கையினது சோகக் கதையை கேட்டதில் மனமானது கதறி அழத் தொடங்கியதாய்விட்டது. அவளது பிள்ளைகளுக்கும் சின்னம்மாவின் கவலையான தற் போதைய நிலைமையை அறிந்ததும்... முன்னம் அவர்களை கண்டு கதைத்ததில் இருந்த மகிழ்வெல்லாம் ஒரு கல்லெறிந்தால் அது மணலில் போய்விழுந்து சப்தமற்று அமிழ்ந்து விடுவது போல மறைந்துவிட்டது.

இந்த நிலைமையில் அவர்கள் எல்லோருக்கும் சில நிமிடங்கள் ஒரு ஸப்தமும் இல்லாததாக கடந்தது. கவலையிலே அன்னபூரணியின் தங்கை சரியும் சுவர் போல மண் சுவரிலே தன் முதுகுப் புறத்தை சாய்ந்து இருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னபூரணி இவ்வேளை தன் தங்கையின் முகத்தை கூர்ந்து பார்த்தாள். பிறகு எதிர்பாராத அலைபோல இருந்த இடத்தில் நின்று எழுந்து நின்றாள். உடனே போய் தான் பணம் வைத்திருந்த பானையின் மூடியை திறந்து முழுப்பணத்தையும் கையிலெடுத்துக் கொண்டு வந்தாள். பெரிதாக தான் கையிலே வைத்திருக்கும் காசைப்பற்றி தங்கையிடம் ஒன்றும் அப்போது அவள் கதைக்கவேயில்லை.

“தங்கச்சி இதை நீ அப்பிடியே வைச்சுக் கொள்... இவனுக்கு இதில முதலில நல்ல சயிக்கிள் ஒண்டை வாங்கிக் குடு... காசு மிஞ்சிறதில நல்ல சாப்பாடுகளும் வாங்கி எல்லாரும் வடிவா சாப்பிடுங்கோ...”

“அக்கா... அக்கா... என்னக்கா இது! ஏனக்கா உன்ரை கஷ்டத்துக்குள்ள இப்பிடியெல்லாம் நீ செய்யிறாய்...?” என்று சொல்லியவாறே தமக்கையின் முகத்தை அவள் பார்த்தாள். தமக்கை கொடுத்த பணத்தை வாங்க அவளுக்கு உடனே கை நீட்ட முடியவில்லை. அதற்காக அவளுக்கு கை எடுபடவுமில்லை.

ஆனாலும் “இதைப்பிடியடி வாங்கடி நீ” என்று அன்னபூரணி சிரித்தபடி சொன்னாள்.

பிறகும் அவள் “இங்கபார்... எங்களுக்கு இங்க விறகு வியாபாரமெண்டாலும் நடக்குது... அவ்வளவா எங்களுக்கு சாப்பாடுக்கெண்டு கஷ்டமுமில்ல. இங்க எங்கட வீட்டுவளவு மா மரத்து காய்களை வித்த காசுதான் இது... அடுத்த போகம் மா மரம் காய்ச்சால் இதே காசு திரும்ப எங்களுக்கு வரும்தானே” என்று சொல்லியபடி அன்னபூரணி தங்கையின் கையை தன் கைகளால் பற்றியபடி, காசு அவ்வளவற்றையும் அவள் கைகளுக்குள் பொத்தினாள். காசைத் தன்கையிலே அக்காள் வைத்ததும், அவளுக்கு அது எவ்வளவோ சந்தோஷமாக இருந்தது. அவளது மகனும் திறந்த கண்களுடன் அம்மாவின் கைகளில் இப்போது இருக்கும் பணத்தைப் பார்த்தபடி சந்தோசமாக சிரித்துக் கொண்டான். இரவுப் பூச்சிகள் இவ்வேளை கத்திக் கொண்டிருந்தன.

அவர்கள் தங்களுக்குள் சந்தோஷமாக கதைக்கின்ற குரல்களும் வலுத்த படியான அளவிலே கேட்டன. அன்னபூரணியின் தங்கை மறுநாள் காலையிலேயே எழுந்து தமக்கை பிள்ளைகளிடம் போவதாக கூறி விடை பெற்றுக்கொண்டு, அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் வருகிற தட்டிவானை தவற விடாமல் அதிலே மகனையும் ஏற வைத்து கூட்டிக்கொண்டு போய் விட்டாள்.

இதற்கு பிறகு இரண்டு நாள் கழிந்து மாங்காய் பிடுங்கிற வனும் யூரியாப் பைகளுடன் வந்து மாங்காய்களை பிடுங்கி வானில் அவற்றை ஏற்றிக் கொண்டு போய்விட்டான்.

அன்றைய நாள் கடந்து அடுத்த நாள் காலையிலும் தனக்குள்ள பழக்கத்திலே அன்னபூரணி விடியவும் எழும்பினாள். இன்று அவளுடைய கால்கள் வலியில்லாமல் சிறப்பாக செயல் படுவது போல இருந்தது. மனதிலும் அவளுக்கு நிம்மதியான நிலை இருந்தது. குடிசைக்கு வெளியே வந்து வானத்தை நிமிர்ந்து பார்த்தாள். அந்த வானம் கூட தன்னாலே தொட்டு விடக்கூடிய உயரம் போன்றதாகவே அவளுக்கு அப்போது தெரிந்தது.

இந்த யோசனையோடு மாமரத்தை ஒருக்கால் போய் பார்க்க வேண்டுமென்ற அந்த ஆவலும் அவளுக்கு இசைந்து துடிக்க ஆரம்பித்துவிட்டது.

உடனே மாமரம் நின்ற பக்கம் நடந்து போய் மரத்தை அவள் பார்த்தாள். மரம் முழுக்கவாக இப்போது அவளுக்கு இலைகளே தனித்துக் காணக்கூடியதாக தெரிந்தன. மரம் காய்க ளற்று மூழியாக அவளுக்கு காணப்பட்டாலும் மனம் என்னவோ அவளுக்கு நல்ல நிம்மதியாகவே இவ்வேளை இருந்தது.

**மெட்றோ நியூஸ் (சித்திரை16-2021)**
**ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை (2021)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது ஒரு பேய்க்கதை

"இரவானாலும் இந்தப் பங்குனி மாதத்தின் புழுக்கம் இருக்கிறதே – கொடி, இலை கூட ஆடாத காற்றில்லாததொரு புழுக்கம்தான் என்ன?"
விமலன் ரகுவிற்குக் கூறி அலுத்துக் கொண்டான்.

"இங்கே வீட்டு முற்றித்திலாகபாயைக் கொண்டுவந்து போட்டு விட்டு இருந்தாலும் காற்றில்லாத இந்த வேளை இருவருக்கும் வேர்த்துக் கொட்டத்தானே செய்கிறது இல்லையா நண்பா"

என்று ரகுவும் அவன் கதைக்குத்தோதாக இப்படி சொன்னான்

இந்தக்காலத்தில் வியர்க்கின்ற வேர்வையை வேறு மாதங்களில் கண்டதில்லைத்தானே? என்ன வியர்வை இது இப்படி உகுத்துக் கொட்டுகிற வியர்வை! சீச் சீ..."

மீண்டும் விமலன் சொன்னான்.

"இந்த வேர்வையை தாங்கிக் கொள்கின்றதான இந்த கொடுமைக்குப் பதிலாக அங்கே பார் அந்த வானத்து நட்சத்திரங் களையே பிரித்துக் கொண்டு அதற்குள் நாங்கள் உள் சென்று விடலாம் போல் இருக்கிறது... என்ன நண்பா?"

ரகு இப்போது தன் கவிதை சொல்கிற அந்த ரசனை வழியிலும் இறங்கிவிட்டான். அவன் சொன்னதற்கு விமலன் பதிலுக்கு தான் என்ன ஒன்றை சொல்லி அவனை அசத்திடலாம் என்று ஒரு கணம் யோசித்தான். அவன் யோசித்த விஷயத்துக்கு இப்போது பல் முளைத்தது போல வந்து விட்டது.

"எங்கள் வீட்டுக்குக் கொஞ்ச தூரம் தள்ளிதாய் உள்ள அந்த வெட்ட வெளியிலே இப்போது இரவு வேளைதனில் பேய்கள் ஆவிகள் நடமாடுகிறதாம் நண்பா" பல்லிளித்துக் கொண்டதாய் விமலன் சொன்னான். பேய் என்ற கதையை தொடங்கினால் அக் கதை ரகுவின் மனத்தைப்பிரித்தும் பிராண்டும் என்பது விமலனுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத் தெரியும்.'' பேய் உள்ளது என்று கேள்விப்பட்ட இடங்களிலே நான் கண்களை மூடிக்கொண்டு அந்த இடத்தை கடந்ததாய் இரவு வேளைகளில் ஓடி வந்து விடுவேன்.'' என்று ரகு முன்னம் சொன்னதை விமலனும் கேட்டு வைத்திருந்தான். ஆதலினால் வேண்டுமென்றே அவனை குழப்பிப் பார்த்து ரசிக்க ஒரு சிரிப்புச்சிரித்து அவனுக்குக் காட்டி விட்டு விமலன் இந்த கதையை அவனுக்குச் சொன்னான்.

ரகுவுக்கு எப்போவுமே பாம்பையும் பேயையும் பற்றி எவரும் கதை சொன்னாலே பயம். அவன் விமலன் சொன்ன பேய் உலா கதையை கேட்டுவிட்டு (சாரம்) சாரத்துக்கு வெளியே விட்டதாய் வைத்திருந்த இருகால்களையும் உள்வாங்கியதாய் மறைத்துக் கொண்டான். ஆனாலும் பயத்தை வெளிக்காட்டாது "பேயோ அன்றி ஆவியோ ஒரு மனிதனுக்குள் ஊடுருவ முடியாது தானே! மனம் என்பது திடமாயிருந்தால் புலன்களின் பொத்தல்களெல்லாம் அடைபட பேய்களால் ஆவிகளால் கூட அதற்குள் உள்நுழைய முடியாது போகும் என்ன நண்பா?''

பயம் இருந்தாலும் வீராப்புப்பேசினான். ரகு "ஆசைவற்றிப் போகாத மனிதர்கள் மாண்டால் புதையுண்ட அவர்களது தசை நாறி உருகி அழிந்தாலும் எலும்பு மீண்டும் தசை பூண்டெழுந்து மயானங்களில் அலைந்து திரிவார்களாம் என்கிறார்கள்! பேய்க் கனல் காற்றிலும் குளிரான ஆவி உடலிலாய் அவர்கள் உருமாறி அலைவார்கள் என்றும் அப்படி கதை சொல்கிறார்கள்''

என்றான் அவன் குரல் கலைந்ததாய் விமலன் இவற்றைச் சொன்ன விதம் ரகுவின் மனத்தில் மேலும் பயச் சுமையை ஏற்றிற்று. வெள்ளம் போல் வந்து மனதில் விழுந்த விமலனின் பேய்க் கதைகளாலே உடலுக்குள் உளக் குளிர் பெருகி இந்த புழுக்கத்திலும் அவன் நடுங்கினான். இக்கணம் அவன் கண்களிலே வெளிப்பட்ட பயத்தின் திரட்சியை விமலன் கண்டுவிட்டு "இன்றும் இதை அவனில் பெருக்கெடுக்க ஒரு கதை மேலும் சொல்லுவோம்'' என்ற நிலையில் உற்சாகமாகினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதிலே பார் ரகு எங்கள் ஊரிலே நடக்குமொரு கதையும் இங்குள்ள சனங்களின் வாய்களிலே இரவு வேளைகளிலே அவர்களுக்குள் இப்போது அதிகமாய்ப் பேசப்படுகிறது"

என்று அவன் இதை சொல்ல, விமலனிலிருந்து ஒரு நிழல் இப்போது நிமிர்ந்து எழுவதாய் ரகு இவ்வேளை கற்பனை செய்தவாறு அவனை அரைக் கண் திறந்ததாய் பார்த்தான். ஆனாலும் அரித்து அரித்துக் கொண்டிருக்கும் பயத்திலும் அவனால் கேள்வி கேட்காமல் இருக்க முடியவில்லை.

"வாயைத்திறந்து அப்படி என்ன அவர்கள் ஒரு புழுத்தல் கதைகள் தேவையில்லாமல் கதைக்கிறார்கள்?"

"அதைத்தான் இப்போது உனக்கு நான் சொல்லுகிறேன் நண்பா! விஞ்ஞான யுகத்தில் இன்றைய மனிதர்கள் எல்லோரும் வாழ்ந்தாலும் அவர்களது வாழ்க்கையை தார் போட்டு குத்தியதாக வைத்தபடி அதற்கும் மேலே நின்று கொண்டிருக்கிறது இந்தப் பேய்ப் பயம்! வெளிச்சமான இடங்களில் கூட இடுக்கு வழி உள்ள இருளைக் கண்டு பயப்படும் மனிதன் இப்போதும் இருக்கத்தானே செய்கிறான்! வீண் மனப் பயம் தான் என்ற அந்த உண்மையை எப்படியோ அவன் மனம் அதைக்கண்டு பயப்படத்தானே செய்கிறது." என்று தன் கதைக்ககுள்ளே ரகுவின் மனப்பயமானது ஆறி சிந்திக்கவும் விமலன் அறிவுத் திறனான உண்மை ஒன்றையும் சொன்னான். ஆனாலும் ரகுவின் மன நிழலில் பேய் எலும்புகளாக உள்ளவை எல்லாம் தசை பூண்டதாய் இப்போதும் எழுந்தவையாகவே இருந்தன. அந்நிலையில் தான் கேள்விப்பட்ட ஒரு கதையை விமலனுக்கு ரகு சொன்னான்.

"நண்பா இப்படியும் ஒரு சிலர் இந்தக் கதையைச் சொல்லி இதை உண்மை என்கிறார்கள். பழமையான காலத்தையது நாங்கள் வாழ்கிற எங்கள் வீடு என்று சொல்லி மார்தட்டி சொல்லுகின்ற கிழடுகட்டைகள் இறந்து போனால் அந்த ஆவி வேறு எங்கும் போயிடாது அந்த சுவருக்குள்ளேயே இருந்து கொண்டு அவைகளெல்லாம் அந்த வீட்டிலே வாழும் தங்கள் பூட்டன், பூட்டி, கொப்பாட்டன், பேந்துரு, பூந்துருவைப் பார்த்துக் கொண்டு தங்கள் பாட்டுக்கு அதற்குள்ளே இருந்து கொண்டிருக்குமாம். இப்படியான சிலரது வீட்டிலே இப்போது அங்கே யாருமே இல்லாத நிலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது உண்டு தானே, வெளிநாடு என்று அந்த வீட்டில் உள்ளவர்கள் எல்லோருமே பூராக அப்படி பிறநாடு போய்ச் சேர்ந்து விட்டதால் வாடகைக் குடியிருப்புக்குக்கூட அதை வேறு யாருக் குமே கொடுக்கமால் அந்த வீட்டையும் பூட்டி வைத்தாய் இப்போது வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனாலே அப்படியான ஒரு சிலரது பழைமை காலமான அந்த வீடுகளிலே இரவு வேளைக ளிலே, ஓய்ந்து நிற்காத சமையல் குசினியில் ஆகிக் கொண்டிருப் பதான சத்தங்கள் கேட்டுகிறதாம். குளியல் அறையில் யாரோ குளிப்பதும் உடுப்புகள் தோய்ப்பதும் பிழிவதுமான சத்தம் தொலை தூரம் வரை கேட்கும் அளவுக்கும் சத்தமாய்க் கேட்கிறதாம். இதையெல்லாம் கேள்விப்படும்போது அவர்களது சொல்லாடல்கள் முளைக்குள் தீப்பிடித்து நின்றே எரியும் தீண்டுதலாக எனக்குள்ளே இருக்கிறது.... இந்த நிலையை என்னில் இருந்து மாற்றிட அவற்றையெல்லாம் விலகி நீறாகு என்றிட வாய்ச் செய்திட எனக்கு ஒரு வழி நீ காட்டேன் நண்பா" என்று விடிவு தேடும் ஆவலுடன் ரகு விமலனைக் கேட்டான். அவன் அவ்வாறு கேட்கவும் ரகுவின் மனம்தான் இப்போது நேரடியாக வெளியே என்னோடு வாய் புலம்புகிறது என்றதாக விமலன் தன்னில் கண்டுணர்ந்தான். ரகுவை இந்த பயப்பெருக்கத்திலிருந்து மீட்க என்ன ஒரு வழியை இதற் கென எடுத்தாள்வது என்ற யோசனையில் ஆமையை முன்னால் நகரவிட்டு அது ஊர்ந்த கோடுகளிலாய்த்தன் சிந்தனையை வைத்தது போன்று பிறகு செயல்பட்டான்.

கடல் சேறு வீசும் காற்றின் வாடை இந்தப் புழுக்க நேரதத்திலும் சேர்ந்ததாய் அடித்துக் கொண்டிருந்தது. பச்சை பசுமை உலகமே மூழ்கியதான நிலைமையாகவேதான் சருகுகளாய் மாறியது போன்ற மன நிலையில் இருவரும் இருந்தார்கள் ஆனாலும் துயில் கொள்ளும் ஆசையும் கண் இமைகள் வரை அவர்களிடத்தில் பரவியிருந்தது. தூக்கம் வரும் நேரத்தில் மூளை பிரகாசிக்காமல் இருப்பது என்பது வழக்கம்தானே. என்றாலும் நெருங்கி நெருங்கி வரும் யோசனையில் வந்துதித்த புதிய வழியினை இப்போது ரகுவினிடத்திலாய் செயல்படுத்தி அதைப் பரீட்சித்துப் பார்க்க விமலன் தயாராகினான்.

இந்த யோசனையை உடனடி செயலாக்க "நண்பா இதற்கெல்லாம் நீ நிறைவானதொரு பரிகாரம்தேட ஒரு வழி என்னிடத்திலுண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வழியை நான் சொன்னால் நீ கேட்பாயா? என்று அவன் கேட்டான் அவனது கண்களில் தெரியும் நோக்கத்தையும் கண்டு கொண்டு ரகு உடனே "என்னில் படர்ந்து கொண்டிருக்கும் பயத்தை ஸ்ரீ நீ மாற்றினால் எனக்கு அதனால் பெரிய நன்மை உண்டு உனக்கும் அதனால் நான் நன்றியும் சொல்வேன் என்று அன்பாக பேசினான்.

"நண்பா தேகமெங்கும் மனதிலெழுந்ததாய் விரிகோலம் போட்டி ருக்கும் பயத்தை உன்னிடமிருந்து நான் ஐந்து நிமிடங்களில் கண்டிப்பாக மாற்றிக் காட்டுகிறேன்! அதற்காக நான் சொல்லும் இந்த சிறிய விஷயத்தை நீ செய்தாக வேண்டும். அப்படி நீ செய் வாயா?" அழுகி வடியும் இரவின் வெளிசத்துக்குள்ளளும் விமலன் இவ்விதம் கேட்டது ரகுவின் மனதில் வெளிசம் ஏற்படுத்தி யதாக இருந்தது. உடனே அவன் என்ன கேள்வியிது? ஏன் நீ இப்பயாக கதையில் நூல் பின்னுவது போல பின்னுகிறாய்? எனக்கு எப்போதும் பயமின்றி மூச்சுவிடும் நிலைவேண்டும். நீ என்ன செய்யச் சொல்கிறாயோ அதை உடனே நான் செய்கிறேன்" என்று மனதில் ஆர்வமான நிலையோடு கவனமெடுத்து சொற்களை சொன்னான் "நீ நினைப்பது போல இந்த சிகிச்சைவழி உனக்கு கஷ்டமே இல்லை ரகு ஐந்தே ஐந்து நிமிடங்கள் நீ கண்களை மூடியபடி நுனி நாசியில் உன் பார்வையை ஊன்றியதாய் வைத் தப்படி சிந்தனையாக அதை நீ செய்தால் உன்னில் தொட்டுள்ள பயம் தேயும் நிலையை உடனே நீ காண்பாய்! இதை ஒவ்வொரு நாள் காலையிலும் நீ செய்து வரவேண்டும். எதற்கும் ஆரம்ப பயிற்சியாக இப்போது நீ உன் கண்களை மூடி சொன்னது போல செய்து பார்! பாழ்சுவரில் மறைந்திருப்பது போல இருக்கும் இந்தப் பயப் பூச்சிகள் இந்தப் பயிற்சி முறையால் இப்போதிருந்தே உனக்கு அழியத் தொடங்கும் உன் மனம் நிம்மதிப் பட்டதாயி ருந்து சுகித்திருக்க இதை விட வேறு வழியே இல்லை நண்பா" என்று விமலன் சொல்லியவாறு தன் கதைக்கு நிறுத்தம் வைத்த தான். பேய்ப் பயத்தை மனதிலிருந்து தடுக்கும் முயற்சிக்கான பயிற்சி - இவ்வளவு எளிமை பெற்றதாய் இருக்கிறதே என்று ரகு நினைத்து உடனே சந்தோஷித்தான்.

:நண்பா நீ சொல்லியது போல ஐந்து நிமிடங்களிலேயே எனக்கு அதனால் விடிவு ஏற்படுகிறது என்றால் இதைவிட மிக இலகுவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி முறை எனக்கு வேறொன்றுமில்லைத்தானே? சரி சரி இப்போதிருந்தே நீ சொல்லியவாறு செய்திட நான் கண்களை மூடி சிந்தனையை இழுத்து வைத்து மூக்கின் நுனி நோக்கி பார்க்கிற தாய் இருந்திருக்கிறேன்... இந்தச் செயல் முறையிலே எனக்கு நன்மை ஏற்படின் நூறு கோடி புண்ணியம் உனக்கு உண்டு" என்று சொல்லிவிட்டு அவன் கண்களை முடியபடி இருட்டு ஆரங்க ளுக்குள் ஊடுருவினான். ஆனாலும் கடல் காற்றின் அழுகிய வாசனை சுவாத்தில் அவனுக்கு ஆவேசமாய் அதிர்ந்து கொண்டி ருந்தது. மூக்கின் நுனி போகாமல் உள் நினைப்பு அழுகிய நாற்றத் தால் முறித்ததாய் இருந்தது. இந்நிலையில் ஐந்து நிமிட காலம் அவனுக்கு இறுகினதாய்த்தான் கடந்தது. இவ்வேளை வேக விசையில் கண்களை அவன் திறந்து பார்வையை சரியாக முன்னே நிறுத்தினான். அவன் கண்முன்னே அவன் பார்வைபட்ட இடம் அப்போது மௌனமாகக்கிடந்தது. விமலனை அங்கே காணாத பயமானது அவனை எதிரியாகத் துரத்துவதாக இருந்தது. உடனே அவன் தலையை திருப்பி வீட்டுப்பக்கமாகப் பார்த்தான். படுக்கை அறை ஒன்றில் மாத்திரம் அங்கே வெளிச்சம் அவனுக்கு தெரிவ தாய் இருந்தது.

அவனில் ஏதோ ஏறி உட்கார்ந்தது போன்ற உணர்வு விர்ரென்ற தாய் ஏற்பட்டிட உடனே துடித்துப் பதைத்ததாய் பதறி எழுந்து வீட்டுப்பக்கம் நோக்கி அவன் ஓடத்தொடங்கினான். உடலையே உடைத்தெறியும் அந்த ஓட்டத்துக்குள்ளும் அவன் காலடி ஓசை போன்றே திரும்பக் கொணரும் ஓசைத் தெறிப்புகள் அவனை நடுங்கக்கதற ஓடவாய்த் துரத்திக் கொண்டதாகவே இருந்தன.

**மெட்றோ நியூஸ் (ஐப்பசி 15-2021)**
**ஜீவநதி (2020)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர் மறை



பாம்பின் உடல் அசைவுகளைக் பார்த்தாலே வெறுப்பாக இருக்கிறது. இந்த பாம்பை எப்படி இந்த மனிதர்களெல்லாம் சாப்பிடுகிறார்கள். பாம்புக்கறி, தவளைக்கறி, ஆமை இறைச்சிக் கறி, நத்தைக்கறி, கடல் அட்டைக்கறி, பூச்சிகளது கறிகளின் பொரியல், புழுக்கறி என்று இவற்றை சாப்பிடுபவர்களை வேடிக்கை பார்க்கலாம். ஆனாலும் கையில் அந்தக்கறியை முதன் முதலாக எடுத்து எப்படி என்னைப்போன்ற ஒருவன் தின்பது. சுகந்தன் இவ்வாறு ரிஷி சொன்னதை மனதில் வைத்துக் கொண்டு மேலும் யோசித்துப் பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரிஷி சாப்பாட்டு விஷயத்திலே சொல்லப்போனால் நீ மிக அதிரகசியத்துக்குள் ஜீவிப்பவன் மாதிரித்தான் உன்னைப் பற்றிய தாக எனக்குத் தெரிந்திருக்கிறது. நீ முன்னமும் எனக்கு பாம்பு, ஆமை, தவளை, கடலட்டை என்று ஏதேதோ வெல்லாமோ சொன்னாய்... ஆனாலும் ஏதோபொய்த் தோற்றத்தை நீ உருவாக் கிக் கதைக்கிறாய் போலும்... என்றளவிலேதான் நான் அதிலே அதிக கவனம் வைக்கவில்லை. ஆனாலும் இப்போது இந்த விஷயத்தை திரும்பவும் உன் வாயாலே எனக்குக் கேட்க வேண்டும் போல எனக்கு இருக்கிறது. அது சரி ரிஷி, நீ மற்றைய யெல்லாவற்றையும் விட இந்த பாம்புக் கறியைச் சாப்பிட்டிருப்ப தாக சொன்னாய், இது எப்படி உனக்குப் பழக்கம்... உன் வீட்டிலேயும் இப்படி கடல் ஆமை, கடல் அட்டை, கறி என்று சாப்பிடுவார்களா? "

" நோ நோ அங்கே வீட்டில் அதற்கு அப்படி சாத்தியமே இல்லை சுகந்தன்.. வீட்டிலே அம்மா, தங்கைகள், தம்பிமார் என்று உள்ளவர்கள் எல்லோருமே, மச்சம் மாமிசம் தின்னும் ஆசைகளை அநேககாலம் துறந்து விட்டவர்களாகத்தான் சொல்லப்போனால் இருக்கிறார்கள்.. அம்மா, நாட்கள் தினங்கள் பார்த்து அந்தநாளில் குளத்தைப்போல சட்டியிலே சாம்பார் வைப்பார், அதோடு சில மரக்கறி உணவும் சமைத்து எல்லோரும் மூன்று நேரமும் ஆனந்த மாக சாப்பிடுவார்கள்."

" அப்போ உன் பாடு? "

" நான் தனியே என்ன செய்வது. எங்கே எங்கேயோ உள்ள கோயில்களெல்லாம் திருவிழாவுக்கென்று கொடியேறிவிட்டால் வீட்டில் உள்ள எல்லோரையுமே சாப்பாட்டினால் புனிதனாராக்கி விடுவாள் எங்கள் அம்மா... அவளுடைய விரதம், சுத்த போசனத் தைப் பார்த்து, அந்த தேவர்களே போற்றுவார்கள், அந்தளவுக்கு கட்டுப்பாடு... ஆனால் எனக்கெல்லாம் வீட்டில் உள்ளவர்கள் எடுத்துக் கொள்கிற உபவாசப் பொறுமையைக் கடைப்பிடிப்ப தற்கான மனம் இல்லை... நான் இப்படி உள்ள தளைகளை வெட்டி விட்டு, கள்ளமாக சாப்பாட்டு கடைக்குப் போய் என் வயிறு என்னை ஆசிர்வதிக்குமளவிற்கு விருப்பப்பட்டது அனைத்தும் சாப்பிடுவேன் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அதெல்லாம் சரி! அது ஒரு பக்கம் இருக்கட்டும்! நான் கேட்பது எனது மனதுக்கு இணைவு இல்லாத உன்னுடையதான இந்த உணவுப் பழக்கம்? "

" அதைக் கேட்கிறாயா! நெல் வயலிலே காவல் குடில் என்று ஏன் போட்டதாயிருக்கிறது தெரியுமா...? வயல் காவலுக் கென்று அங்கே போய் இரவும் பகலும் மிருகங்கள் வயலை நாசமாக்காமல் காவல் காப்பதற்குத்தான் குடில் போடப் பட்டிருக் கிறது என்று நீ நினைப்பாய் அப்படித்தானே? "

"ஓமோம்... வெற்றிலையைப் போட்டு மெல்லுவதும் துப்புவதும், பீடி சுருட்டு பத்துவதும், றொட்டி போட்டு தின்பதுமாகத் தான் காவலுக்கு போனவர்களது பாடு இருக்கும் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். "

"ஆ...! நீ, அப்படி கேள்விப்பட்டது மாத்திரம் தான் உண்டு... ஆனால் உன் குடும்பத்தைப் போலல்லாது எங்கள் குடும்பமானது விவசாய தொழில் குடும்பமல்லவா? அதனால் இந்த காவல் கொட்டிலிலுள்ள பிரம்புப்பறன் என்பது எனக்கும் படுக்கை அறையாகவும் வயல் நெல் விளைவிக்கும் காலத்திலாக இருக் கிறது. அந்தப் பறனில் பகலிலும் எப்படி படுத்து நான் நெடுநேரம் கிடப்பது? அதனால் பக்கத்து வயல் காவல் கொட்டில்களுக்கும் நான் போவேன். அங்கே வேறு வேறு வயல்களின் காவல் குடிலி லுள்ளவர்களும் எனக்கும் அங்கே போய் இருந்த வேளையிலே தான் நண்பர்களானார்கள். "

"அவர்கள் உன் அளவு வயதுக்காரர்களா? இல்லை யில்லை! அவர்கள் பழம் நசித்துத்தின்ற வயது கடந்து கொட்டைப் போடப் போகிறதான நல்ல வயது.... ஆனாலும் துண்டு துண்டாக உடல் உடைந்து போகாத எடுப்பான தோற்றம் அவர்களுக்கு! வயல் வேலையில் பாடுபட்டு உழைப்பவர்கள் அல்லவா அவர்கள்!"

"அப்போ அவர்களோடு சேர்ந்த பிறகுதான் நீ இவற்றை யெல்லாம் பிறகு சாப்பிடுவதற்கு பழகினாயா? "

"ம்... அவர்களிலே ஒரு நடுத்தர வயதுள்ள மனிதர்தான் இப்படியான உணவுகளை எனக்கு முதலில் தான் சமைக்கும் போது எனக்கும் இதை ருசித்துப் பார் என்று கொடுத்தார்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி அப்படி எல்லாம் உனக்கு அவர் கொடுத்து விட்டார்... நீ அதை, இது என்ன ஒரு சாப்பாடு என்று ஒன்றுமே கேட்காமல் சாப்பிட்டாயா?"

"இல்லை! அவர் முதலில் என் மனதை தெளிவாக்க பல விஷயங்களை எடுத்து சொன்னார். மனம் என்ற ஒன்றை கொண்டவன்தான் மனிதன் என்று அவர் முதலில் சொன்னார்.. சாப்பாட்டு விஷயத்திலே உடலும் மனமும் ஒத்துழைத்தால் எதையும் நாங்கள் சாப்பிடலாம்தானே என்றும் அவர் சொன்னார்... நாங்கள் கடல் உணவுகளிலேயே இறால் சாப்பிடுகிறோம்... நண்டு சாப்பிடுகிறோம்... கணவாய் சாப்பிடுகிறோம்.. விலாங்கு மீன் சாப்பிடுகிறோம். அவை போன்றவை தானே இவையும்... சிகப்பு இந்தியர்கள் குரங்கை நெருப்பில் வாட்டி ருசித்துத் தின்கிறார்கள். சீனர்கள் இப்படி எதையெல்லாமோ சாப்பிடுகிறார்கள்... நாங்களும் விரும்பினால் இவை எல்லாவற்றையும் சாப்பிடலாம்தானே? இந்த உணவுகளை ஒரு முறை சுவைத்துவிட்டால் எல்லா அஞ்ஞானமும் உடனே மறைந்துப் போகும் என்றும் அவர் சொன்னார். அதன் பிறகு இதை ருசித்துப்பார் என்று ஒரு துண்டுக்கறியை சட்டி மூடியைத் திறந்து பிறகு எடுத்து எனக்கு தந்தார்"

"அது என்ன உது ஒன்று! என்று நீ ஒன்றும் அவரிடம் அப்போது கேட்க வில்லையா? "

" ம் கூம் கேட்கவில்லை!"

"அவரும் ஒன்றும் அப்போது அது பற்றி உனக்கு சொல்லவில்லை!"

"விளக்கமாக முன்னே அவர் இதையெல்லாம் எனக்கு சொல்லியிருந்தாரே "

"அப்போ உடனே நீ அதை சாப்பிட்டாயா? மணம் குணம் அதிலே ஏதாவது பிடிப்பட்டதா?"

" மச்ச வாசனை மல்லிகை மணம் மாதிரியாக இருக்குமா?"

"சரி அதை அப்படியே நீ ஒரு கடி கடித்தாய்!" சொல்லியதோடு சுகந்தன் எச்சிலை விழுங்கினான். " அது அது உனக்கு வாயில் வைத்து சாப்பிடுகையில் எப்படி இருந்தது? " என்று பிறகு அவனை கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஏதோ முரல் மீன் கறித்துண்டு மாதிரி இருந்தது!"

" ஆக்... என்ன அது? "

"தெரியவில்லை "

"அதன் ருசி? "

"ம்..ம்...ம்.."

"பிறகு என்ன அது என்று அவர் சொன்னார் "

"பாம்பு ..... பாம்..பாம்.! "

"நான் நினைச்சன் அதுதானெண்டு...! சரி உனக்கு அவர் விஷயம் போட்டுடைத்ததும் வெறுப்பு வரவில்லையா.? நீ அப்போ உன் கையிலிருந்த முழுத்துண்டையும் பிறகு சாப்பிட்டு விட்டாயா?

" அவரின் முகத்தை நான் பார்த்தப்படியே எல்லாவற்றையும் முழுதாக சாப்பிட்டுவிட்டேன்."

" அடப்பாவி! உனக்கு அது நன்றாக இருந்ததா? "

" ம்.. ம்ம்..!"

"சும்மா சொல்லப்பிடாது நீ ஒரு ராட்சதப் பிறவிதான்...! சரி நீ இப்படி சாப்பாட்டிலே வென்றெடுத்த மற்றைய விசயங்கள்...! ஆமை தவளை போன்றவை எல்லாம்?"

நெஞ்சை அசைத்துவிடும் யோசனைகள் ஊசலாட சுகந்தன் கேட்டான். அவன் கேட்டதற்கு ரிஷி சுதந்திரமாக ஒளிவு மறைவில் லாமல் எல்லாவற்றையும் சொல்லத் தயாரானான்.

"சுகந்தன் எல்லாவற்றையும் வெறுப்பு இல்லாமல் தின்ன லாம் என்ற மன நிலை வந்தால் எவற்றையுமே சாப்பிடலாம். இதுவும் ஒரு ஞானம் அடைவதற்கான வழிதானே.. இந்த உலகிலே சாப்பாட்டிற்கான சில உண்மைகளை மாத்திரம் வைத்துக் கொண்டு அதுதான் மனிதன் சாப்பிடக் கூடியதான முழுவதுமான உணவு என்று மச்சம் மாமிசம் சாப்பிடுவார்கள் இதை சொல்ல முடியுமா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதென்ன கதை நீ சொல்வது! அதற்காக நீ சொன்ன வற்றையெல்லாம் எல்லோரும்தான் தின்ன முடியும் என்று நீ சொல்ல முடியுமா என்ன? "

"இல்லை இல்லை! அப்படி நான் சொல்லவில்லை இவற்றை தின்பது தின்னாதது அவர் அவர் இஷ்டம்... ஆனாலும் இதை சாப்பிடுபவர்களை வெறுக்க முடியாது தானே.? அகோரிகள் எனப்பட்டவர்கள் செத்த பிணம் எரிகிற போது கறி என்று அந்தப் பிணத்திலுள்ள சில உறுப்புக்களை ஒரு ஆயுதத்தால் கிண்டி எடுத்து சாப்பிடுகிறார்கள்.. இரண்டாம் உலகப் போரில் அகப்பட்ட ரஷ்சிய நாட்டு மக்கள், போரின் போது சாப்பாடில்லாத பட்டினி கிடப்பில் செத்த பிணங்களைக் கூட சாப்பிட்டிருக்கிறார்கள்... இடி அமீன் என்பவனும் மனித மாமிசம் தின்றானாம்... செத்த பிணத் தைதின்பவர்கள் இன்னமும் தான் இருக்கிறார்கள்... உயிருள்ளவர் களையே கொலை செய்து வெட்டி தின்பது மாதிரி ஆங்கிலப் படங்கள் எவ்வளவோ திரையிடப்பட்டு வந்திருக்கிறது... சீன எழுத்தாளர் லூசூன் என்பவர் சீன தேசத்திலே அந்நாளில் மனித மாமிசம் தின்றார்கள் என்பதை சரித்திர ஆதாரமாக வைத்துக் கொண்டு ஒரு நீண்டகதையை எழுதியிருக்கிறார்... எங்களது பழம் இலக்கியங்களிலும் ராட்சதர்கள் மனிதர்களை உயிரோடேயே விழுங்கி விடுவதான கதாப்பாத்திரங்கள் விலாவாரியாக இருக் கின்றனவே... ஆனாலும் மனித நாகரிகம் மேம்பட்ட இன்றைய வாழ்விலே இதையெல்லாம் வெளிப்படையாக பேசுவதே வெறுப்புத் தானே. இந்த விஷயத்தையெல்லாம் அதனால் என் விஷயத்திற்கு தோதாய் நான் இப்போது கதைப்பது தேவையற்றது அதனாலே நான் என் சாப்பாட்டு விஷயத்தை மாத்திரம் உன்னோடு இனி கதைக்கிறேனே? "

"ஓ அது சரி! அது தான் நியாயமான கதை! அந்தக் கதைகளெல்லாமே உன் விஷயத்தோடு ஒட்டியதாக கதைக்க வேண்டாத தொன்றுதான்... அதனாலே உன் விஷயத்துக்கு நான் இப்போது வருகிறேனே.. சேற்றிலே அழகாகப் பூக்கிறது தாமரை.. அதன் அழகு நெஞ்சை நிறைக்கிறது. ஆனாலும் அந்த தாமரைப் பூவை நாங்கள் பார்க்கும் போது அது அந்த சேற்றிலே கிடந்து வளர்ந்துதான் இப்படி பூத்திருக்கிறது என்று அந்த சேற்றை எப்போதாவது நினைக்கிறோமா.. அதே போன்று உன் சாப்பாட்டு விஷயத்தையும் நான் நினைக்கிறேன். நான் சேற்றைப் போல உன் சாப்பாட்டு விஷயத்தை நினைக்கிறேன்.. ஆனாலும் நீ அந்தச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேற்றிலே இருந்து வந்த நிலைமாற்றமான தாமரைபோல உன் சாப்பாட்டு விஷயத்திலும் அது நன்றென தெரிந்ததாக அனுபவிக் கிறாய்... இந்த சாப்பாட்டு விஷயங்கள் மனிதனையே இரு கூறாக வகிர்ந்து விடுகிறது என்று நான் இப்பொழுது யோசிக்கிறேன்.. மரக்கறி உணவு சாப்பிடுபவர்கள் மச்ச உணவு சாப்பிடுபவர்கள் என்று என்ன இதெல்லாம் மனிதர்களை பிரித்து வைக்கிற ஒரு கதை... எதைச் சாப்பிட்டாலும் என்ன... இந்த மனிதன் மற்றைய மனிதர்களுடன் சேர்ந்து அன்பாக வாழ வேண்டும், அதுதானே பெரிது...? இப்படியாக என்ன இது எவ்வளவோ நான் இப்போது கதைத்துப் போகிறேன்.. உன் விஷயத்தை, மேலும் நீ சொல்லி அதை நான் கேட்காமல் விட்டு விட்டு... அது சரி அந்த காவல் குடில் மனிதரோடு உனக்கு பழக்கம் என்றாயே அவர்தான் இப்படி உள்ள உணவுகளையெல்லாம் சமைத்து உனக்குத்தந்தாரா? ”

“ ம் எதுவும் விடாமல் அவர்தான் சமையல் செய்யும் போது என்னையும் தன் காவல் கொட்டிலுக்கு கூட்டிச்சென்று அங்கு தான் சமைத்து வைத்திருந்த கறிகளை சாப்பிடவென்று கொடுத்தார் ”

“ அப்போ நீ சாப்பிட்ட எல்லா கறிகளும் ஒரே மாதிரியான ருசியாகத்தான் இருந்ததா? ”

“ ஒரு ருசியை அறியும் போது முன்பு சாப்பிட்ட அந்த ருசி விடுபட்டு போகும்.. ஒரு ருசியின் சுயத்தை நாவு அறியும் போது வித்தியாசம் தெரியும் தானே? ”

“நீ விவேகமாகத்தான் கதைக்கிறாய்... சரி இந்த சாப்பாடு விஷயத்திலே உனக்கும் அவருக்குமாக எவ்வளவு காலமாக ஒரு தொடர்பு இருந்தது? ”

“ அங்கே வயல் நெல் அறுவடை முடிந்து சூடடித்து நெல்லும் வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டால் காவல் குடிலில் பிறகு என்ன காவல் வேலை. அதோடு அவரின் தொடர்பும் எனக்கு விடுபட்டுப்போய் விடும் அதன் பிறகு வீட்டுக்கு வந்ததோடு அந்த உணவுகளுக்கான விருப்பப் பசியும் தொலைந்து போய்விட்டது.. தனத்து காட்டில் இருக்கும் போதுதான் அந்தக் காட்டிலே வீசுகிற காற்றை சுவாசிக்கும்போது இந்த ஆசையும் வரும் அதுவும் ஒரு காரணம்! ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சரிதான்! இப்படி நீ சொல்கிறதை பார்த்தால் அடுத்த நெல் விதைப்பின் காலத்திலே இதை நீ தொடருவாய் போன்று இருக்கிறதே? "

" ம் அப்படித்தான் நடக்கும்! "

" அப்போ அந்த மனிதரும் வருவார்! "

" ம்..! அவருக்கும் அங்கே வயல் காணியில் போகத்திற்கு வயல் விதைப்பு இருக்கிறது தானே! "

"அப்போ! அங்கே பேக்கரி மணம் வந்தது மாதிரி உனக்கும் அவரது சமையல் மணம் பலமான சாப்பாட்டு ஆசைகளை கிளப்பி விடும்! "

" ம் நக்கலடிக்காதே! "

" ம் உனக்குள் இருப்பதைத்தானே நான் சொன்னேனப்பா... நீ அதற்காக என்னிலே கோபம் கொள்ளாதே? நான் வருகிறேன்! நேரமாகிறது எனக்கு! நான் இனி வீட்டுக்குப்போக இருக்கிறேன்! " என்று சொல்லிவிட்டு சுகந்தன் உடனே வீட்டுக்கு போக கிளம்பியதாய் விட்டான். அங்கு போனதன் பின்பு மதியம் அவன் சாப்பிடுவதற்கான நேரம் வந்தது. அவனது அம்மா தட்டில் சோறு போட்டு அதன் மேலே மரக்கறி உணவுகளை போட்டு கொண்டு வந்து அவனுக்கு சாப்பிடவென்று கொடுத்தாள். அவனுக்கு அதை சாப்பிடும் வேளையிலே ரிஷியினுடைய உணவுப்பழக்கம் நிற்கா மல் தொடர்ந்ததாய் ஞாபகத்தில் வந்தது. ஒரு தவளை தன் சோற்றின் மேலே பாய்ந்திருந்து பிற்பாடு அது கறியாகிக்கிடப் பதான பிரமை அவனுக்கு சாப்பிட்டுக் கொண்டிருக்கையிலே ஏற்பட்டது. "என்ன இது குருட்டுத்தனமான நினைப்பு" என்று தன்னையே மனதுக்குள் திட்டிக்கொண்டு சோற்றைக் கொண்டு போய் நாய்க்கு கொட்டாமல் மூச்சில் தம்பிடித்தாற் போல இருந்தவாறு தட்டில் உள்ள உணவு முழுக்கவும் ஒருவாறு அவன் பிறகு சாப்பிட்டு முடித்தான். ஆறு மாதமாக தொடர்ந்து சைவ உணவு சாப்பிட்டு வந்த அவனுக்கு இந்த நினைவுகளெல்லாம் இப்போது மனதுக்கு அருவருப்பாகத்தான் இருந்தது.

சாப்பிட்டு முடிந்ததும் சுகந்தன் ஹாலிலே வந்து சோபாவில் இருந்தான். அங்கே ரீப்போவிலே தாத்தாவின் வெற்றிலை தட்டம் இருப்பதை பார்த்தான். அவனுக்கு அதை பார்த்ததும் இன்றைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம்பூலம் தரித்தால் நல்லம் என்றதாக இருந்து. உடனே வெற்றிலையில் பாதி கிழித்து சற்று சுண்ணாம்பு தடவி பச்சை பாக்கும் களிபாக்கும் சேர்த்து வாயில் போட்டு மென்றான்.

தாம்பூல ருசியில் இப்போது பாதி யோசனை போனாலும் மிகுதி யோசனை ரிஷியினுடைய உணவுப் பழக்கமான சாப்பாடு களை பற்றியதாக போனது. " பாம்பு சாப்பிடலாமோ " என்ற கேள்வியை தனக்குள்ளாக அவன் கேட்டுப் பார்த்தான்.

" ம் சாப்பிடலாம்தானே!... அதை யாரும் சாப்பிட்டால் தான் என்ன! "

என்று அவன் மனதுக்குள்ளாக ஒரு கோட்பாடு பதில் என்று அவனுக்கு இதை சொன்னது.

" இல்லையில்லை! சாப்பிடவே கூடாது! " என்று இன்னும் ஒரு திறந்து வெளியேறிய ஒரு பதில் மனத்திலிருந்து அவனுக்கு எழுந்தது.

" இல்லை சாப்பிடலாம்! "
" இல்லையில்லை சாப்பிடவே கூடாது! "
" சாப்பி....ட..லாம்! "
" இல்லை....லை சாப்பிடக்கூடாது! "
" இல்லை சாப்பிடலாம்! "
" கூடாது! "
" சாப்பிடலாம்! "
" *சீச்சீசீ* "

இப்போ வெற்றிலை பழக்கமில்லாததில் அவனுக்கு வானேறுகிறபட்டம் சடாரென கீழ் இறங்கி சுழன்றடிப்பது போல தலை அப்படியே கிர்ர்.. என்று சுற்றியது. அவன் பக்கத்தில் இப்போது அவனுடைய தாத்தா வந்து சார்மனைக் கதிரையிலே இருந்தார்.

" என்ன உன் வாய் சிவந்திருக்கு? " என்று அவனைக் கேட்டார்.

" வெற்றிலை போட்டேன் தாத்தா! "

என்று அவன் தலை வணங்கியது போன்ற நிலையில் தாத்தாவை பார்த்துச் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" உனக்கு இது பழக்கமில்லையே?"

என்று அவர் பொக்கு வாயை சப்புக் கொட்டியபடி சொன்னார்.

" அது தான் தலை சுத்துது தாத்தா! "

என்று வேர்வையில் மூழ்கிய நிலையில் அவன் சொன்னான்.

"அடடட போய் முகம் கழுவி தண்ணீரைக்குடி தண்ணீரைக் குடி!" என்று தாத்தா நோயின் அடையாளம் பார்த்ததுபோல சொல்ல சுகந்தன் கால் தடுமாற நடுக்கமுற நடந்து சமையலறைக்கு உடனே போய்க்கொண்டிருந்தான்.

**மெட்றோ நியூஸ் (தை 21 – 2022)**
**ஜீவநதி சஞ்சிகை (ஆனி 2021)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசந்து செல்லும் நாட்கள்



கண் நிறைய தூக்கத்தோடு பனை ஓலைப் பாயில் படுத்துக் கிடந்தபடி முகட்டு ஓலையை பார்த்துக் கொண்டிருந்தாள் செல்லம்மா. தன் வாழ்க்கையின் வறுமையோடு மிகக் குறுகிய காலமளவிற்குள் எனக்குச் சாவும் வந்து விடுமோ; என்று நினைவில் சண்டையிட்டுக் கொண்டிருக்கிற நிலைமையும் அவளுக்கு இப்போது இருந்தது.

கடைசி யுத்தத்தில் ஷெல் அடியிலும் குண்டு வீச்சிலும் மனிதர்களோடு சேர்ந்து நிலமும் எரிந்து கொண்டிருப்பதைப் போல, அவளுக்கு இவ்வேளை மனமும் கவலையில் எரிந்து கொண்டிருந்தது.

இப்படியான தருணங்களில் உணர்ச்சி வேகம் கூடும்போதும் சத்தம் போட்டு அழுவதை அடக்குவதற்கு அவள் எவ்வளவு பிரயாசைப் பட்டிருக்கிறாள். தன் பேரப்பிள்ளையை இறுதி யுத்தத்தில் வட்டுவாகல் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டதாய் பறி கொடுத்த பின்பு எத்தனை நாட்கள் வருடங்கள் என்று காலையில் நித்திரை விட்டு எழும்பிய உடனேயே அவள் ஒப்பாரி வைத்து அழுதிருக்கிறாள். ஆனாலும் பழைய அழுகுரல் என்பது அவளிடம் இப்போது இல்லை. அதிகமாக கத்தி அழுது பாதித்ததில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டைக் குரலும் கழித்து ஒதுக்கப்பட்ட அடைப்பாக அவளுக்கு இப்போது போய் விட்டது.

இரவிலே படுத்தால் எங்கே நித்திரை முழுமையாக அவளுக்கு வருகிறது. அரைத்தூக்கத்திலும் பேரனைப் பற்றிய கனவுகளே அவளுக்கு வருகின்றன. அந்தக் கனவிலே அவந்தை யான நிலையிலும் தன் பேரன் ஒரு புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருப்பதுபோல அவளுக்கு ஒரு காட்சி தெரியும்.

இன்னொரு தடவை கனவிலே, அவன் வாழ்நாளெல்லாம் எழுதிக் கொண்டிருப்பது போலவும் காட்சி காண்பாள். சில நாள் கனவுகளில் அவளுக்கு தான் கண்டு பழக்கமில்லாத இளம் பிள்ளைகள் அவளது கனவிலே தெரியப்படுவார்கள். அவர்களில் ஒரு சிலர் இரவின் நடுச்சாமத்தில், விரல் நகங்கள் தொட்டு உரிக்கும் காட்சிகள் அவளுக்கு தென்படும். அந்த விரல்களிலே பிசுப்பிசுப்பான சதைகள் அவளுக்கு தென்படும். வெள்ளைப் பூண்டின் மணம் போல இரத்தம் தனக்கு மணப்பதாகவும் அந்தக் கனவில் அவள் உணர்வாள்.

அதனோடு குளறிக்கொண்டு திடுக்கிட்டு கண் விழித்த தோடு, அவள் எழுந்து பிறகு பாயினிலே நித்தரையில்லாமல் இருந்தபடி விடியுமட்டும் அவள் விழித்திருப்பாள். அப்படி கண்ட கனவிற்குப் பிற்பாடு அவளுக்கு மூச்சுத் திணறல் இருக்கும். ஆனா லும் அப்படி இரவு கண்ட கனவு எதையும் விடியவும் யாருக்கும் சரியாகச் சொல்ல முடியாமல் மறந்து விடுவாள். அப்படியாக காணுகிற கனவுகளை கூட சரியாக ஞாபகப்படுத்திக் கொள்ள இப்போதெல்லாம் முடியாத தொன்றாகவே அவளுக்கு இருக்கிறது.

செல்லம்மாளின் மகள் திலகத்துக்கும் அவள் கணவன் சபாபதிக்கும் பிறந்தவள்தான் இவன் துமிலன். இவன் அவர்களுக் கென்று உள்ள ஒரேயொரு பிள்ளை. தன் அம்மாவைப்போல இவனுக்கும் கறுப்புத் தீட்டலான நிறம். அவன் வளரவளரவும் மகிழ்ச்சியான முகம் சிறுவயதுக் காலத்திலிருந்தது போல அப்படியே பிற்பாடும் இருந்தது. சருமத்தின் மேற்பரப்பிலும் அவன் வளர்ந்தாற் பிறகு இப்போதும் கூட குழந்தையைப் போன்ற அந்த ஜொலிப்புத்தான்! இந்தப் பதினாறு வயதிலும் அவன் நிலைமை இப்படி.

துமிலனுக்கு பள்ளிப் படிப்பு ஒன்றுதான் உலகமாயிருந்தது. வேறு ஒன்றையுமே ஞாபகம் கொள்ள விரும்பாத படிப்பு. பாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையிலும் வெறுப்பை வெளியிடுகிற மொழி எதையும் அவன் எவருடனும் பேசுவதேயில்லை. அதனால் அவனை நல்ல பிள்ளை என்றதாக ஊரிலுள்ள எல்லாரினதும் கதை.

“ உனக்கென்றதாய் வந்துவிட்ட பிறவி உரிமை யுத்தமாக வந்து இப்போது வாய்த்து விட்டதே... நீ பிறந்ததிலிருந்து உனக்கு ஆனந்தமில்லாத வாழ்க்கையாகியும் விட்டதே” என்று துமிலனின் தாய் தன் மகன் துமிலனுக்கு சில வேளைகளில் சொல்லி ஆதங்கப்படுவார். ஆனால் அவனுக்கு சிறு வயதிலிருந்தே ஓரிடத்தில் தங்காமல் ஓடி ஓடித் திரிந்தாய் வாழ்வதற்கு பழகிக் கொண்டதில் அதுவே உடலுக்குச் சுவாசம் போன்றதான அனுபவத்தில் மிகச் சாதாரணமாக எல்லாம் போய்விட்டது. போர்க்கால வருடங்களெல்லாம் வீணாக வருடங்கள் என்றதாய் அவன் நினைத்துப்பார்ப்பதற்கும் அதனால் முடியாததொன்றாக இருந்தது.

மிக வயதான உறவினர் ஒருவர் சபாபதியின் வீட்டிற்கு சில பொழுதுகளில் வந்து போவார். அவர் மகான்களை தரிசித்தது போன்ற ஒரு பார்வையை தன்னிடத்தில் வைத்துக் கொண்டு தன் சிறு வயது கால சாந்தி வாழ்வினைப்பற்றி சபாபதியின் பிள்ளை துமிலனுக்கு கதை சொல்வார்.

“ துயரமும் துன்பமும் இல்லாத வாழ்க்கை எங்கள் சிறு வயதுக்கால வாழ்க்கை. மகனே! பனம் பூ பூத்தமாதிரி சந்தோஷமான வாழ்க்கை எங்கட அப்போதைய வாழ்க்கை... பனம் பழம் பிள்ளை உச்சி மரத்தில் இருந்து கீழ விழுந்தாலும் அது குலுங்கிச் சிதையாமல் இருக்க அதின்ர நார்ப்பொருள் உதவும்.. பனம் பழத்துக்கு எண்டு உள்ளது அவ்வளவு பலம். அதுகள சாப்பிட்டுச் சாப்பிட்டுத்தானே நாங்கள் அந்த நாளில வளர்ந்தம். இப்ப இந்த இடத்தில நெட்டு வசமாய் நிண்ட பனையெல்லாம் மனிசரோடயும் தான் சேர்ந்து அழியுது. அந்த ஆகாயத்தையே திருகிக் கொண்டு வாற மாதிரி வருகிற செல் அடிபட்டு எல்லாமேதான் தொலையுது”

நெஞ்சில் பதித்த கவலையை, இப்படியாகத்தான் துமிலனிடம் சேர அவர் தன் கதைகளில் கொட்டி விட்டுப்போவார். அவரினது இந்த கதைகளெல்லாம் மனம் பிளந்த வெடிப்பாலிருந்து துயரமாக வெளி வந்ததுதான்! இதையெல்லாம் கேட்கவும் துமிலனுக்கு முகம் வேறு ரூபமடைந்து விடும்.

“ ஆனாலும் போகாதே போகாதே, எங்களை விட்டு நீ எங்கும் போகாதே!” என்று சொல்லி அழுதே விடுவது போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் தாய் தகப்பனின் முகத்தை மனதில் நினைத்து அவன் இந்த நினைவை உடனே வெளி இறக்கியதாக வைத்து விடுவான்.

போர் நடக்கும் இடத்திலே சாவின் தொடு கோடுகள் யாரைத்தான் அணுகாது விட்டது. இலைகள் காற்றில் ஆடும் போது ஒளி கடந்து வருகிறது போன்று தானே திடுமென இந்த செல்களும் வந்து சனக்குடியிருப்புக்குள் விழுகிறது. அன்று காலைசெல் மூச்சு ஸ் ஸ்... என்று கேட்டதாக அவர்கள் வாழும் பகுதியிலும் சீறிக் கொண்டு பறந்து வந்து விழுந்து வெடித்தது. அந்நேரம் பூமியின் பொந்துக்குள்ளே மறைந்து கொள்ள ஒடுவது போல அங்குள்ள பலர் பங்கர்களுக்குள்ளே ஓடிப்போய் இருந்தபடி தங்கள் பாதுகாப்பை தேடிக் கொண்டார்கள். இந்நேரத்தில் துமிலனும் இவன் பாட்டி செல்லம்மாளும் வீட்டில் இருக்கவில்லை. அவர்கள் இருவரும் அப்போது வெளியே சென்றிருந்தார்கள். அவ்வேளை தொடர்ந்து செல் வந்து விழுந்து கொண்டிருந்தன. செல் வெடிக்கவும் நிலம் புரண்டது மாதிரியும் நடுக்கம்.

இந் நிலைமையில் தொலை தூரமாக இருந்து யார் யாரோ அழுகையிட்டு அழைக்கும் குரல்கள் சபாபதிக்கு சத்தம் குறைவாக கேட்டது. திலகம் வைத்த அரிசி, உலைப் பானை அவ்வேளை அடுப்பில் இருந்தது. சபாபதி இந்த செல்லடி வீச்சுக்குள்ளே குசினி வாசலில் வந்து உள்ளே எட்டிப் பார்த்தார். திலகம் மரக்கறி போட்டுவைத்த ஓலை பெட்டி கடகத்திலிருந்து வெங்காயம் தெரிந் தெடுத்துக் கொண்டிருந்தாள்.

“ஊரெல்லாம் இப்ப பங்கருக்குள்ளதான் போய் குடியேறின மாதிரி இருந்து கொண்டிருக்கும் ஆனா நீ என்ன கண்டறியாத சமையலெண்டு குசினிக்கிள்ள இருந்து செய்து கொண்ருக்கிறாய் கெதி கெதியா பங்கருக்கு போக வா வா ”

சபாபதி குழப்பமான மன நிலையோடு செல்லம்மாவின் கையைப் பிடித்து இழுத்த படி நேரே பங்கர் இருந்த பக்கம் போக ஓடினார்.

பக்கத்து வளவில் அப்போது செல் விழுந்த இடியோசை கேட்டது. சிதறிய எரி தழல், சுடரோடு சேர்ந்து அந்த வீட்டு வளவு மதில் சுவரே உடைந்து சுக்கு நூறானது. செல் வெடிப்பில் திறவு கொள்ளும் வெட்டிரும்பு துண்டுகளெல்லாம் எங்குமே இப்போது சிதறிப் பறந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடிவிரிப்பில் வீசி அடித்த வெட்டுத்துண்டுகள் சபாபதியின தும் செல்லம்மாவினதும் உடலைச் சிதிலமாக்கி சிதறடித்தன. தகதகவென அடுத்த வளவுக்குள் உள்ள குசினியும் நெருப்பில் எரிந்து கொண்டிருந்தது.

சபாபதியும் திலகமும் இந்தக் கொடூரமான நிகழ்விலே சாவிலே நித்திரைப் பட்டு விட்டார்கள். அந்த குசினியிலிருந்து மெல்ல ஊர்ந்து மேலேறி நடு வீட்டின் கூரையிலும் இப்போது வீசி எரிகிறது பெருந்தீ. செல் வீச்சு ஓயவும் அயலட்டையில் உள்ளவர் களெல்லாம் தெரு வழியே ஓடி வந்து இந்த இரண்டு வளவுகளின் வீடுகளுக்கு முன்னாலும் குவிந்து விட்டார்கள். வந்தி ருந்த பாதிப்பேர் மின்னலாய்ப் பரவி எரிந்து கொண்டிருக்கும் வீட்டின் தீயை தண்ணீர் எடுத்து ஊற்றி அணைக்கின்ற வேலையில் படு பாடு பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்தப்பக்கமாக பெருங்குரலாக பல பேர்கள் கூடிக் கத்தி அழுவது அங்கு நின்ற இன்னும் பல பேர்களது உதடுகளை கவலையில் துடிக்க வைத்ததாக இருந்து கொண்டிருந்தது. இந் நேரம் இந்த சம்பவத்தை கேள்விபட்டு சந்தைக்கு கறிவாங்கப் போயிருந்த செல்லம்மாளும் அவள் பேரன் துமிலனும் தங்கள் வீட்டுக்கு உடனே வந்து சேர கிட்டடி பாதை வழி பிடித்து வேலிப் பூவரசு, கிளிசிறியா மர இடையாலெல்லாம் புகுந்து தலை தெறிக்க ஓடியதாய் வீட்டு வளவடிக்கு வந்தார்கள்.

அங்கே வந்ததும் இந்த கொடுங்காட்சியை கண்ணால் பார்த்த செல்லம்மாள் மார்பில் பறை ஓசை கேட்கும் அளவுக்காய் கைகளால சத்தமாய் அடித்து பெருங்குரலெழுப்பி அழுதாள். துமிலனும் தாய் தகப்பனின் சீதிலமான உடல்களைக் கண்டு விசும்பிச் சீறியதாய் பெரிதாக அழுதான்.

இந்தத் தீங்கெல்லாம் முடிந்து போரில் அங்குள்ள மனித உயிர்கள் எல்லாம் உதிர்ந்து கொண்டிருக்கும் காலத்திலே செல்லம்மாள் தன் பேரன் துமிலனை மிகவும் பாடு பட்ட அளவிலே தான் காப்பாற்றியதாக அவனை வைத்து பாதுகாத்துக் கொண்டி ருந்தாள்.

இக்காலத்தில்தான் இறுதியுத்தம் கேடுகாலமாய் வந்து அங்குள்ளவர்களிலே ஊடுருவியது. உயிர்களை தொலைத்துத் தொலைத்து இல்லாமலாக்கிற அந்த கொடிய யுத்தம் அங்கிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவர்களையெல்லாம் தன் பசிக்கு விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருந்தது.

தங்களின் உயிர்களை காப்பாற்ற ஒரு இடத்தில் கூடி சேர்ந்த மனிதர்களிலே தாறுமாறாய் விழுந்த குண்டுகளினாலே இறப்பின் அவல ஒலி அங்கே கேட்கத் தொடங்கியது. விழுந்த குண்டுகளிலே வயிற்றுப் பசியுடன் கிடந்து பல நாள் வாடிய சின்னஞ்சிறு குழந்தைகளும் சிவப்பு நிற பூக்கள் சிதைந்தது போல உடல் சிதைவுற்று செத்தார்கள்.

இந்தப் போரை யார்தான் நிறுத்தக் கூடும் என்று தங்கள் உயிர்ப்பாதுகாப்பையிட்டு பயத்திலும் கவலையிலும் கண்கலங்கி அழுகுரலுடனிருந்த அதிக தொகையினர் இவ்வேளை படு பரிதாப மான முறையிலே செத்தார்கள். தலைமாறி உடல்மாறி சேர்ந்த பிணங்களாய் செத்தப்படி இந்த அப்பாவி மக்களின் உடல்கள், அங்கே அந்த மண் முழுக்க மனித இரத்தமும் பிசுபிசுத்ததாகவே மறையாததாய் இருந்தது.

இந்த சூழ் நிலையில்,

" நீங்கள் எல்லோரும் எங்களிடத்தில் பாதுகாப்பாக இருக்க ஏற்றுக் கொள்ளப்படும் " என்ற அறிவிப்பு உயிர்தப்பி அந்த இடம் வந்திருந்த மக்களிடமாய் கேட்க சேர்க்கப்பட்டது.

கழுத்தில் கயிறு சுருக்கிட்டு தொண்டைக்குழியை இறுக்குவது போன்ற அவதியுடன்தான் செல்லம்மாள் தன் பேரன் துமிலனை கண்களில் கண்ணீருடன் அவர்களிடம் கையளித்தார்.

பேரனை அவர்கள் வசம் கையளிக்கும்போது, அவள் அடிவயிறு, நெருப்புக் குடித்த கணக்கில் வெப்பம் திரண்டது. அவளின் கைகால்களிலே பயத்தில் நடுங்கும் துடிப்பானது ஆட்டமிட வைத்தது. அவர்கள் மிருதுவான வார்த்தைகளிலேதான் செல்லம்மாள் போன்ற பலருடன் கதைத்தார்கள். சுருட்டிச் செல்லும் தங்கள் கள்ளப்பார்வையை மறைத்து, அவற்றிலே அன்பு ஒளியை அவர்கள் வெளிக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

" நாங்கள் இவர்களை சிறையெடுக்கவில்லை... இவர்கள் எங்களிடம் பாதுகாப்பாய் இருப்பார்கள். சுதந்திரமாகவும் இருப் பார்கள். அப்படியே இவர்களை பின்பு உங்களின் கைகளில் பாதுகாப்பாக நாங்கள் ஒப்படைப்போம்" என்று தங்கள் விரல்களில் கூட அன்பை அபிநயிக்கும் அளவுக்கு அவர்களுக்கு காட்டியதாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை தங்கள் வாகனங்களில் ஏறச் செய்து மறைத்துக் கொண்டார்கள். இதன் பின்பு முன்பு உள்ள சர்ப மூச்சு அவர்களுக்கு சாதாரணமாக நடக்கத் தொடங்கிவிட்டது.

இது நடந்து செல்லம்மாளுக்கு எத்தனை பகல் பொழுதுகள் கடந்து விட்டன. எத்தனை நாள் சாமங்கள் கடந்து விட்டன. வருடங்களும் அவள் கணக்கில் பூவாய் உதிர்ந்து போய் கொண்டிருந்தது. தன் பேரன் தன்னிடத்தில் வந்து சேருவான் சேருவான் என நினைத்து தனிமையில் அந்த குடிலுக்குள் கிடந்து மனம் வேதனையில் கரைவதை விட அவளாலும் ஒன்றும் செய்ய முடியாத நிலையிலேயே காலம் அவளுக்குப் போய்க் கொண்டிருந்தது.

வேம்பின் உதிர்ந்த பூக்களின் கசந்த காற்றுத்தான் இன்றைய வாழ்வின் சுவாசம் என்றதாய் அவளது நிலைமை இப்போது ஆகிவிட்டது. கவலை மிக மனத்தில் எரிந்தால், பிடி மண்ணை அள்ளி திட்டி வீசுகிறதும் விரக்தியின் நிலைமையிலேயே சில வேளை அவளுக்கு செய்து கொள்ளவும் வந்து விடும்.

மெலிவான உடலும் பலமில்லாமல் நடக்கும் போது அவளுக்கு ஆட்டம் காணவும் இப்போது தொடங்கிவிட்டது. ஆனாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்கு நீதி கோரி இடம் பெற்று வரும் தொடர் போராட்டங்களிலே இவளும் போய் அதிலே பங்கெடுத்துக்கொள்ளாமல் எப்பொழுதுமே அதை பின்தள்ளியதாக இருக்கவே இல்லை.

சுருளச்சுருளும் வெய்யிலிலும், அங்குள்ள தன்னைப் போன்ற மற்றையவர்களோடு அந்தத் தகரக் கொட்டிலிலே, உடலின் நரம்பு நாளங்கள் இழுத்த வலியோடு கிடந்து இவள் போராட்டத்திலே கலந்திருக்கிறாள். இவளுக்கோ வாழ்வின் உதிர் காலம் ஆன வயதின் நிலை. ஆனாலும் மூத்தோர் வயதுக்கூட்டம் என்று மட்டும் அங்கில்லாது, தங்கள் கணவன் மாரை இவ்விதம் பறிகொடுத்த தங்களுக்கு, சாபம் விழுந்தது போல துடித்த கணக்கிலாய் விசும்பி இளம் பெண்களும் அங்கு இருந்தப்படி அழுகிறார்கள்.

முகம் சூனிய பிரதேசம் போன்று ஆகி கூந்தலும் அவர்களுக்கு குடியழிந்து போனதாக ஆகி அரைக் கண் மூடிய சோகத்துடன் இருக்கும் இவர்களின் நிலை எவ்வளவு கொடிய பரிதாபம் என்று செல்லம்மாளும் நினைத்து மனம் கவலைப் பட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வந்திருப்பவர்கள் அனைவருக்கும், வயிற்றுக்கு பசியாற சாப்பிடவாய் வசதியில்லாததொரு வாழ்வுதான் இப்போது. ஆனாலும் போனவர் திரும்பி வருவார் என்ற நம்பிக்கையில், அவர்களின் சத்தமற்ற காலடிகளே இவர்களது நினைவுகளில் சுழன்று கொண்டிருக்கின்றன.

அங்கிருந்த எல்லோரும், தங்களிலிருந்து பிரிந்தவராக தங்களோடு அங்கிருந்த எவரொருவரையும் அவ்வாறாக நினைக்க வில்லை. தங்களின் உடன் பிறந்த உறவுகளாகவே ஒருவர் மற்றவர்மேல் மிகவும் அன்பு செலுத்தினார்கள்.

வெளியே உள்ளவர்கள் எத்தனையோ பேர்களது நம்பிக் கையற்ற கதைகள் இவர்களது காதுகளில் கேட்க விழுந்தாலும் அந்த விஷ விதைகள் அனைத்தையும் மனத்தில் வளரவிடாது பொசுக்கி விட்டு, தங்களுக்குண்டான மன நம்பிக்கையிலேயே இந்தப் போராட்டத்தை தொடர்ந்து இவர்கள் முன்னெடுத்ததாய் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இன்றைய போராட்டத்திற்காக, அந்த தகரக்கொட்டையிலே போய் இருந்து திரும்பி வீட்டுக்கு வந்ததன் பிறகு, தன் உடலில் என்றுமே இல்லாததான ஒரு சோர்வு, தன்னாலும் கண்டு பிடித்துக் கொள்ள முடியாத தொன்றாக இருப்பதாக செல்லம்மாள் உணர்ந்தாள்.

ஆனாலும் அதை மீறியதாக அவளின் மனத்தூண்டல்கள், இதையெல்லாம் கவனத்தில் நான் எடுக்காமல் நாளைக்கும் நான் அந்த போராட்டத்தில் போய் சேரவேண்டும் சேர வேண்டும் என சொல்லியவாறே இருந்தது.


அந்த மனத்தோடு அவள் இணக்கமாக இருந்தபடி இரவு சாப்பிடவும் மனம் இல்லாமல் ஒரு தேநீர் மட்டும் தயாரித்துக் குடித்து விட்டு, பாயை விரித்துப்படுத்தாள். ஆனாலும் அவளுக்கு நித்திரை வரவில்லை. நிறையத் தடவை வரும் அதே நினைவுகள் இப்போதும் அவளுக்கு வந்து கொண்டிருந்தன. அவள் யோசித் தாள்: "நாளையும் அந்த போராட்டத்திலே நானும் போய் பங்கு கொடுக்க வேண்டும்" என்ற அந்த நினைவிலேயே அவளுக்கு நெடுகவும் கண் திறந்தபடியே இருந்தது. அவளை உறுத்திக் தொடர்ந்து கொண்டிருக்கும் அந்த துயரம் நெஞ்சுக்குள்ளே முழுமையாக அவ்வேளை உட்புகுத்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்தத் திக்கில் தப்பித்து என்னைக் காப்பது" என்பதாய் இந்நேரம் அவள் இருதயத்தோடும் மரணப் போராட்டம் ஆரம்பித்து விட்டது. ஆனாலும் இனி எதையுமே நினைக்கவேண்டிய தேவையே இல்லை! என்ற நிலமையில் அவளுக்கு இப்போது தன் அந்திமம் கடைசியாக நன்றாகவே இவ்வேளை விளங்கிவிட்டது. முன்பு அவளது எண்ணங்கள் வேறு, தொல்லைகள் வேறு, என்றுள்ள எல்லாவற்றையும் உதறித்தள்ளி விட்டு இப்போது அந்தப் போராட் டத் தகரக்கொட்டிலிலேயே தான் போய் நிலையாக நிற்பதுபோல அதற்குள்ளே அவள் ஒன்றி விட்டாள். ஆனாலும் பின்பு அவள் திறந்த வெளிக்கு இட்டுச்செல்லும் பாதை வழியேதான் மூச்சுக் காற்று நின்றும் நினைவில் அந்த இடம் நோக்கியதாக சூனியத்துக்குள் அப்படியே போய்க் கொண்டே இருந்தாள்.

**ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை (வைகாசி 2021)**
**மெட்றோ நியூஸ் (மார்கழி 17-20**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வீ**ட்டுப்படியிறங்கி வெளியே வந்து வீதியில் கால்வைத்து நடக்கத் தொடங்கிவிட்டால் அடுத்த கணம் என்ன நடக்கும் என்பது யாருக்குத்தான் தெரியும். சிந்தனையை அது போக்கிலேயே விட்டு விட்டு கவனமில்லாமல் வீதியில் நடந்தால்,

"கடவுளே! இப்படி ஒடுக்கமான வீதியிலே கண் மண் தெரியாமலாக ஓடி வரும் வாகனங்களல்லவா மோதி ஆளையே பிறகு குளோஸ் பண்ணியதாக்கி விடும்" இந்த கவன விழிப்பு, அவனுக்கு வீதியிலே நடக்கும்போது எப்போதும் இருக்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல இப்போது கூட இருந்தது. இந்த வீதி வழியாக அவன் எப்போதுமே போகும் போதும் பக்கத்தாலே அவனைத்தாண்டி வாகனம் போகின்ற போது அவனுக்கு அதிர்ச்சியாக இருக்கும்.

வாகனங்களை ஓட்டி வருகிறவர்கள் பாதசாரிகளுக்கு ஒரு பாடம் புகட்டி விடுவது போலத்தானே பக்கத்தாலே இடிப்பது போல வீச்சாக போகின்றார்கள். "ஏழு குதிரைகள் பூட்டிய தேர்களில் பயணிக்கும் அரசர்கள் போலத்தான் சில வாகன ஓட்டுனர்களது எசமான் நினைப்பு!" என்கிற இதைப்பற்றியதான சிந்தனையே ஒரு பாதுகாப்பான நடை பாதையில் அவன் போய்ச் சேர மட்டும் அவனுக்கு அக்கறையாக தொடர்ந்து இருந்தது.

மிக மோசமாக சுட்டெரித்துவிடும் இந்த நடுப்பகல் வெயி லியே தார்ச் சாலைகளில் நடப்பதென்னவோ இவனுக்கு கஷ்டம் தான். இந்த வெயில் சூட்டை உடலிலே ஏற்று " நீ ஜெயிக்கிறாயா? இல்லை தோற்கிறாயா?" என்ற நிலைமையிலே அவனுக்கும் இது ஒரு போராட்டமே தான்! இப்படியெல்லாம் நடந்து போகும் போது தட்டுத்தடுமாறி வேர்த்து விறுவிறுத்தாய் மற்றவர்கள் கண்பார் வைக்கு தன்னை வெளிக்காட்டிக் கொள்வதற்கும் அவனுக்கு விருப்பமில்லை.

" எந்தப் பிரச்சனையும் எனக்குள்ளேதான் இருக்க வேண்டும் அதை எவருக்கும் தெரிய நான் வெளிக்காட்டி கொள்ளக்கூடாது " என்ற குணம் அவனுக்கு சீவியத்திலேயே பிரித்திருக்காததொன்று. தனக்குள் இப்படியொரு சுவர் போன்றதையும் அவன் எழுப்பி வைத்திருப்பதாகத்தான் அவனும் இருந்து கொண்டிருக்கிறான்.

இப்படி மனத்தினுள் எதிர்த்த திசையில் வளர்ந்து கொண்டி ருக்கும் எண்ணங்களுடனான அதன் பழக்கங்கள் அவனுக்கு எந்த செயல்காரியங்களிலும் அவனை விட்டு போவதே இல்லை. பிரதான வீதியை கடந்து நிம்மதியாக இப்போது நடந்து போகக்கூடிய நடைபாதைக்கு அவன் வந்து சேர்ந்து விட்டான். நடக்கும்போது நடைபாதை அருகே பக்கவாட்டில் உள்ள கோயிலை அவன் பார்த்தான். அந்த கோயில் வாசல் பூராகவும் மலராடை பூண்டிருந் ததில் மிக அழகாக அவனுக்கு தெரிந்தது. அதை பார்க்கவும் சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் சந்தோஷம் போன்று இவனுக்கும் ஏற்பட்டது.

" இனிமேல் உள்ளது பாதுகாப்பான இடம், என்ற எண்ணம் மனதில் ஏற்பட்டதும் சிறுபிள்ளைத் தனமான விளையாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையாக நடை இப்போது அவனுக்கு மாறிவிட்டது. குதிரையை தட்டி விட்டு ஓடிக்கொண்டிருப்பது போல நடையும் வீச்சாக அவனுக்கு ஆரம்பித்ததாய் விட்டது. அந்த நடைபாதையில் நடப்பவர்களது நடைவீச்சைவிட தன் நடை வீச்சு அயன்மைப் பட்டது என்பதாக மனதுக்குள்ளே இப்போது அவனுக்கு பெருமிதம்.

நாளாந்தம் காலையில் எழுந்து உடற்பயிற்சி செய்து வருகிற படியினாலே இப்போதைய இந்த சுதந்திரமான நடையிலே கையை வீசி நடக்கும்போது தோள்கள் இரண்டுமே அவனுக்கு இரும்பு போல இறுக்கமாக இருந்தது. சுகமான இந்த இறுக்கத்தில் இருந்து விடுபடுவது அவனுக்கு கஷ்டம். அதனாலே எதிராக நடந்து வந்து கொண்டிருப்பவர்களில் தான் முட்டி மோதிவிடக் கூடாது என்ற எச்சரிக்கையில் அவன் கரையொதுங்கியது மாதிரி யாகத்தான் அவதானமாக நடந்து கொண்டிருந்தான். இந்த உணர்வோடு அவன் இருக்கும்போது தனக்கு நவீன உடற் பயிற்சி களை கற்றுக் கொடுத்த ஆசானினது உபதேசம் ஞாபகத்துக்குள் வந்தது.

“உன் உடலை நல்ல முறையில் எப்படிக் கவனிக்க வேண்டுமோ அப்படியெல்லாம் நீ கவனித்துக் கொள்ள வேண்டும்..! எங்கள் உடல் ஒரு அழகான கருவி..! இது கடவுள் எங்களுக்குத் தந்திருக்கிற அருமையான கொடை! எனவே எங்கள் உடலை நாங்கள் வாழும் வீடு என்பதாக தெரிந்து கொள்ளவேண்டும். அதனாலே வீட்டை கவனித்திருப்பதைப் போல நாங்கள் வாழும் இந்த உடலையும் நன்றாக கவனித்ததாய் வைத்திருந்து வாழப் பழகவேண்டும்... உடல் பலமுள்ளவர்களாக நாங்கள் இருக்க லாம்.. ஆனாலும் இந்த பலத்தை மற்றவர்களிலே மோதிப் பார்த்து சந்தோஷப்படுவது தவிர்க்கப்பட வேண்டியது” என்று அதையெல் லாம் அவன் இப்போது நினைத்தாலும் நடையில் உள்ள கவனத்தை விட்டு மனம் தானாக ஓடிக் கொண்டிருக்கிறதே என்ற எண்ணமும் அவனுக்கு உடனே தோன்றியது.

இந்நேரம் திடீரென்று ஒரு நிகழ்வு..

பசுமையான செழிப்பாக நல்ல ஆடைகள் உடுத்தியிருந்த மனிதர் அவர்! நடையில் மனம் சலித்து நடக்காத அளவிற்கு, நல்ல சப்பாத்தும் கால்களில் அவர் போட்டிருந்தார். அவர் எதையோ ஒரு யோசனையை மனதில் திணித்து வைத்தப்படி எங்கேயோ பாராக்கும் பார்த்துக் கொண்டு வந்தார். அப்படியாக வந்தவர் இவனிலே வந்து தானே வலிந்ததாக மோதிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மோதுதலோடு அவரால் நிலைத்து நின்று கொள்ள முடியாது போய் விட்டது.

ஆளுக்கு வயது போன பலவீனமான உடல்நிலை என்பதாலே, அந்த இடித்தலை ஏற்று, சமாளித்து நின்று கொள்வது கஷ்டமாக அவருக்கு ஆகிவிட்டது. இடிபட்ட மறு கணம் அவர் அப்படியே சுழன்றார், அந்த நிலையில் ஓவென்று திறந்த வாயுடன் மல்லாக் காக அவர் கீழே பிற்பாடு விழுந்தார். அப்படி விழுந்த இடத்தில் அவர் பிடரிப்பாகம் தலை மோதிய பக்கம் அங்கிருந்த கடையினது ஏறுபடியாக இருந்தது.

அவரது தலை அந்தபடியிலே அடிபட்டதோடு 'தக்' என்றதாய் ஒரு சத்தம் வந்தது. அதை பார்த்துத் துடிக்கும் பயத்தில் அவன் சில கணம் உறைந்து அப்படியே நின்றான்.அப்படி விழுந்தவரை போய் உடனே தூக்கி உதவி செய்வதற்குக் கூட அப்போது அவனது கை கால்கள் ஏவவில்லை. அப்படி ஒரு மன அதிர்ச்சி அவனுக்கு அவ்வேளையில் ஏற்பட்டிருந்துது.

அப்படி கிலி பிடித்து அவன் நிற்கும்போது அடிபட்டு விழுந்தவருக்கு பக்கத்தாலே நடந்து வந்தவர் உடனே விழுந்து கிடந்தவரை பிடித்து தூக்கி நிற்க செய்தார். அடிபட்டவருக்கு பிடரிக் காயத்திலிருந்து அப்போது உதிரச் சொட்டுக்கள் விழுந்து கொண்டிருந்தன. காயப்பட்டவர் அதிர்ச்சிலேதான் உறைந்து போயிருந்தார். இந்நேரம் அந்த இடத்தாலே நடந்து போய்க் கொண்டிருந்த பலர் அவ்விடத்தைச் சுற்றி அவருக்கு பக்கத்திலே வந்து நின்று கொண்டனர்.

காயப்பட்டவரை எழச்செய்து, அவரின் கையைப் பிடித்த படி தாக்குப் பிடித்துக் கொண்டவர், தனது கைக்குட்டையை எடுத்துக் காயத்தாலிருந்து வழிந்த அவரது இரத்தத்தைத் துடைத் தார். "ஐயா இப்படியே நாங்கள் ஆஸ்பத்திரிக்கு போவோமய்யா" என்று அவரைப் பார்த்து, அவரை தாங்கலாய் பிடித்துக் கொண்டி ருந்தவர் கேட்டார். அவருக்கு பக்கத்தில் நின்ற இன்னொருவர் இந்நேரம், "ஆட்டோ ஆட்டோ" என்று அருகில் நிறுத்தியதாய் இருந்த ஆட்டோவின் சாரதிக்கு சைகையும் காட்டி வரும்படி கூப்பிட்டார். உதவி செய்ய சிறந்தவர்களாக பலர் இப்போது அவ்விடத்தில் காயப்பட்டவருக்கு உதவிட மூச்சாக செயல் பட்டார்கள். அவரை ஆட்டோவில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்குமட்டுமாக அந்த எல்லோரினதும் உதவி செய் பங்களிப் பானது இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவற்றையும் அந்த இடத்தில் நின்றபடி கவலைக் குற்றத்தோடு பார்த்தப்படி இருந்த அவனுக்கு, இனி இந்தப் பிரச்சினை தன்னை விட்டு விடுதலையாகிப் போய்விட்டது என்ற தான எண்ணம் மனதில் ஏற்படவில்லை. வெறுப்பை விதைப்பது போல அங்கே நின்றவர்கள் அப்போது அவனை பார்க்காமல் இருந்தாலும், அவனுக்கு மனதில் ஏதோ விதத்தில் தன்னுடைய தவறான செயலின் குற்ற உணர்வு இருந்தது. அதனால் அவனுக்கு இன்னமும் கவலைச் சுனைப் பெருக்கு முகம் முழுக்கவும் பரவிப் பாய்ந்தப்படிதான் இருந்தது.

அவனின் இந்த நிலைமையை புரிந்து கொண்ட ஒருவர் மனம் இளகிப் போன அளவில் அவனருகில் அவ்வேளை வந்தார். "தேங்கிப்போன குளம்போல கவலைகள் உங்கள் முகம் முழுக்க வாய் இருக்கிறதே"என்று முதலில் சொல்லிவிட்டு, அவரும் பிறகு அவனுடன் கதையை தொடங்கினார்.

" இல்லை இப்படி ஒரு கெடுதி அவருக்கு என்னால் நடந்து விட்டதே என்று நினைக்கையில்தான் என் மனம் பழைய நிலைமைக்கு உயிர்க்கவே முடியாத மாதிரித்தான் இருக்கு. இதன் காரணமாக எனக்கு மிகவும் தான் பெரிய கவலை" என்று அவருக்கு தன் நிலைமையை அவன் சொன்னான்.

"நீங்கள் வந்து எந்தத் துன்பக் கீறலையும் மனதில் போட்டுக் கொள்ளாதீர்கள். அவர் உங்கள் மீது மோதியதையும் கீழே விழுந்தமையும் நானும்தான் கண்டேன். இப்படி நடக்குமென்று அவரும் எதிர் பார்த்திருக்கமாட்டார். நீங்களும் இதை அப்படித்தான் எதிர்பார்க்கவில்லை. அதுதானே நடந்தது." "என்றாலும் எனக்கு ஒன்றும் இல்லாமல் அவருக்கு அப்படி நடந்து. விட்டதே என்று நினைக்கும் போதுதான் மனவருத்தமாக இருக்கிறது" என்று அவன் சொல்லவும், அவனது கதைக்குறிப்பை அறிந்த அளவில் அவர் ஒரு கேள்வி அவனைக் கேட்டார்.

" நீங்கள் கிறிஸ்தவரா? "

" ம்...."

" ஆ... நானும் கிறிஸ்தவன்தான்...! அதனால்தான் மனம் கலங்கி நீங்களும் இரங்கியிருக்கிறீர்கள், என்றதுமாதிரியாகத்தான் எனக்குள்ளாக ஒரு நினைப்பு! நான் ஒன்று உங்களுக்கு சொல் கிறேன்... நீங்கள் காயப்பட்டவரை வேணுமென்றால் ஆஸ்பத்திரி யிலும் போய் அவரை சந்தித்து ஆறுதல் வார்த்தைகள் கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைத்து கொள்ளலாம்.. அப்படி இல்லாமல் அவருக்காக நீங்கள் கடவுளிடமும் மன்றாடலாம். ஆனதினாலே உங்கள் மனதை தேற்றிக்கொண்டு இனி நீங்கள் அப்படியென்றும் கவலைப்படாமல் இருங்கள் சகோதரர்'' என்று பழைய மனக் கட்டமைப்புக்குள் அவனைத் திரும்பிப் போய் விடக்கூடிய அளவுக்கு அவனுக்குச் சொல்லிவிட்டு அவர் நடையைக் கட்டிவிட்டார். அவர் அப்படி சொன்னதை தானும் பின்பற்றுவதாக மனதில் எடுத்துக் கொண்டு, பழைய நிலைமைக்கு பிறப்பெடுத்தது போல அவனும் மனம் ஆறி பிறகு நடையைத் தொடங்கினான்.

இந்நிலைமையில் வீட்டுக்கு வாங்கி போகவேண்டிய பொருட்களது பட்டியல் அவனுக்கு ஞாபகம் வந்தது. முன்னம் முன்னம் பூரித்ததாக காணப்படும் நல்ல புழுங்கல் அரிசி பார்த்து வாங்க வேண்டும் என்பது அவனுக்கு முக்கிய தேவையாக இருந்தது. அதற்காக நடை பாதையில் செல்லுகையிலேயே அவன் அதை எங்கு அது உள்ளது என்று பார்த்தப்படி அதை தேடிச் செல்லலாம். இந்நிலைமையிலே சிரமமில்லாமல் ஒரு கடையின் வாசல் புறத்து அரிசி மூடையில் இப்போது அவன் தேடியவாறு வந்த அந்த அரிசி காணப்பட்டது.

அப்படியாக வாய்திறந்திருந்த அந்த அரிசி மூடையிலே சிறிதளவு அரிசி கையில் அள்ளிப்பார்த்தால் மனம் திருப்திப் படுமே என்பதாகவும் அவனுக்கு உணர்வாக இருந்தது. திறந்தி ருந்த அரிசி மூடையிலே வாய் பக்கத்தில் குமியலாக தெரிந்த அரிசியை பார்த்தபடி அவன் அதன் அருகே பிறகு போனான். அந்த இடத்தில் அவன் கால் வைத்ததும் தன் வலது காலில் ஏதோ தளுக்கென்று மிதிப்பட்டது போல இருந்தது. அந்த உணர்விலே உடனே தன்னை அவனுக்கு நிலைநிறுத்திக்கொண்டு நிற்க முடியாததாய் சம நிலை பாதிக்கப்பட்டு விட்டது. உடனே தன்னை சுதாரித்துக்கொண்டு கீழே பார்த்தான்.

அப்படி அங்கே அவன் காலால் மிதித்தது, அதிலே படுத்திக்கிடந்த நாயிலேதான் என்பதாக அவனுக்கு இப்போது தெரிந்தது. அவன் அறியாத அளவிலேதான் இப்படியெல்லாமே நடந்தது. ஆனாலும் நாயை காலால் மிதித்தவேளை அந்த நாய் நோவிலே தலையை தூக்கி அவனைப் பார்த்து “ வாஆவ் ” என கத்தியது. அந்தத்தருணம் வேறு நாய் ஒன்று அதிலே படுத்திருந்து அப்படி அவன் காலாலே மிதித்த வேளை, அது அவனை கடித்தே விட்டிருக்கும். ஆனாலும் அது போல இந்த நாய் அவனை அப்படி ஒன்றும் செய்யவில்லை. அதற்கு மாறாக அந்த நாய் அவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளை, அவனின் முகத்தை தன் நோவோடு பரிதாபமாக பார்த்து விட்டு, பழையபடி தலையை சரித்து அப்படியே கண்களை மூடியபடி படுத்து விட்டது.

அதைப்பார்த்ததும் பிறகு அவனது மனதின் அடியாழத்தில், அந்த நாயின் செய்கை மிகவும் உணர்வாக புரையோடியது. அது எட்டிக் கடிக்காமல் அமைதிப்பட்ட சாந்தி நிலையை நினைத்து அவன் மிகவும் அப்போது ஆச்சரியப்பட்டும் போனான். வெகு நேரம் அவன் அந்த இடத்திலே எல்லாவற்றையும் மறந்தபடி, அந்த நாயின் சகிப்புத்தன்மையையே திரும்ப திரும்ப மனதிற்குள்ளே அசைப்போட்டப்படியாகவே நின்றபடியிருந்தான்.

**ஜீவநதி கலை இலக்கிய சஞ்சிகை (ஐப்பசி 2020)**

**மெட்றோ நியூஸ் (தை 8 – 2021)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது வாழ்க்கை

சவக்காலைக்கல்லறைத் தோட்டங்களில் பிரேதம் புதைப்பதற்கான குழிகளை இன்பராசா பார்த்திருக்கிறார். குழிக்குள் பிரேதப் பெட்டியை வைத்தால் பிரார்த்தனைகளோடு பின்பு புதைகுழி மூடப்பட்டு விடும். அப்படியான குழியின் அமைவைப் பார்த்த பின்பு புத்திக்குள் அவருக்கு மீண்டும் பிறகு அவைகளெல்லாம் ஞாபகத்தில் புகுவதாக இருப்பதில்லை. வாழும் காலத்தில் ஒவ்வொரு மூச்சிலும் இனிய வாழ்வை யோசிப்பது தானே மனித மனங்களினது இயல்பு. திரும்ப அப்படி ஒரு சந்தர்ப்பம் வராது அதையே பார்க்க வேண்டியதாக நேர்ந்தாலும் பிறகும் அது கடல் அலையின் நுரை மறைவது போல விரைவில் ஞாபகத்திலிருந்து மறைந்தும் போய்விடத்தானே செய்யும்.

ஆனாலும் இன்பராசாவிற்கு இன்றைய வாழ்க்கையினது நிலைவரம் தான் என்ன? இந்த பூமியில் பிரேதம் புதைக்கும் புதைகுழி போன்ற அமைப்புடைய இடத்தினில்தானே அவருடைய வாழ்க்கையின் அநேகமான மணித்தியாலங்கள் கடந்து போகின்றனவாய் இருக்கின்றன. பளபளக்கும் சுவர்களும் பெரிய மரக் கதவுகளும் அழகின் முழுக்காட்சியையுமே காணக்கூடியதான ஹோலும் படுக்கை அறைகளும் என்றதாய் அப்பப்பா இப்படியான இந்தக்காட்சி போன்று தொடர்ந்து வர்ணித்துச் சொல்லக்கூடிய வீடல்லவா இவரது வீடு.

அப்படியாக உள்ள அந்த சொகுசான வீட்டை விட்டு இந்த மண் குழி பங்கருக்குள் ஏன் அவர் வந்து இப்போது குடியேறியது போல இருக்கிறார். "உன்னைப் பாதுகாப்பாக வைத்திருக்க என்னால் மட்டும்தான் முடியும்" என்று இந்தப்பங்கர்குழி சொல்வதாகத்தான் அவருக்கு இப்போது தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

இன்பராசாவுக்கு மட்டுமே இந்தவிதமான ஒரு நிலைமை என்றில்லை, அவருடைய குடும்பமும் சேர்ந்துதான் இந்தக் கஷ்டங்களை இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறது. மனைவியும் ஒரேயொரு பிள்ளையும் உடைய அவருடைய குடும்பத்திலே முன்னம் எப்போதுமிருந்த மகிழ்ச்சியான வாழ்வு இப்போது தொலைந்ததாகிவிட்டது. ஊருக்குள் இருக்கும் சனத்தைப் போல தினப்படி வாழ்க்கையில் அதிகபட்சநேரம் இன்பராசாவின் இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். யுத்தத்தின் கோரமான நெருக்கடியிலே ஷெல் விழுவது அதிகரிக்க

அதிகரிக்க பங்கருக்குள் வாழும் காலமும் இவரின் குடும்பத்தினருக்கு நீண்டு கொண்டே இருக்கிறது. இன்பராசாவின் மகன் ஜெயத்துக்கு நான்கு வயது தான் இருக்கும்! அவனுக்கு ஓடித்திரிந்து தன் வயதுப் பிள்ளைகளோடு விளையாட வேண்டிய வயது. ஆனாலும் தன் பிள்ளைப்பருவத்திலேயே அனுபவிக்க வேண்டிய அந்த இன்பமான வாழ்வை இவன் இழந்து விட்டிருக்கிறான். இருளைப் புதைத்தது போல உள்ள அந்தக் கிடங்குக்குள்ளே, மூழ்கிப்போவது போல இருந்து கொள்ளும் போது "சுத்தமாக பளபளக்கும் சுவர்களுடைய வீட்டைவிட்டு ஏன் இந்த கிடங்குக்குள் என் அப்பாவும் அம்மாவும் என்னைக் கொண்டு வந்து சிறைவைக்கிறார்கள்?" என்ற நினைப்பும் அவனுக்கு வரத்தான் செய்கிறது. அழகிய உலகின் எல்லா காட்சிகளையும் கண்களுக்கு தெரியாமல் மறைத்து வைத்திருக்கும் இந்த கிடங்குக்குள் நேரம் எல்லாமே அவனுக்கு பூட்டும் சங்கிலியுமான தடுப்பு முறையாகத்தான் மனதில் வெறுப்பை வளர்க்கிறது. ஷெல் வந்து விழும் நேரங்களில் சில பொழுது இன்பராசாவின் மனைவி ஞானமலர் சமையலறையில் வேலையாக இருப்பாள். நெருப்பு அடுப்பிலுள்ள தோசைக் கல்லின் மீது அப்போது றொட்டி கிடந்து வேகிக் கொண்டிருக்கும்.

ஷெல் ஊருக்குள் வந்து விழுவதின் சத்தம் கேட்டால் அவள் சமையலறைக்குள் நிற்கமாட்டாள். திடீரென இவ்வேளை தன் பிள்ளையின் நினைவு வந்து விடுவதால், "ஐயோ என்ரை பிள்ளை" என்று கூவிக் கொண்டு முன்னால் உடனே எடுத்து வைத்த காலும்

அவளுக்கு இடறி விழுந்து எழும்பி ஓடிப்போய் தன் பிள்ளையைக் கண்டு அவனையும் கட்டி அணைத்துத் தூக்கி எடுத்துக் கொண்டு உடனே பங்கரை நோக்கி அவள் ஓடிப் போவாள். அங்கே பங்கருக்குள் அவள் பிள்ளையோடு இருக்கும் போது வெளியே போய் இருக்கும் தன் கணவரின் யோசனையும் அவளுக்கு வந்து கவலையானது மனதைப்பிழியும். அந்த பங்கருக்குள் ஒரு கறுத்த முற்றிய கொழுத்தபீவண்டு கலவை உருண்டை ஒன்றை உருட்டிக் கொண்டு போகிறது. அதன் செய்கையை அவள் கண்களின் பார்வை தொட்டுக்கொண்டதாருக்க, ஊருக்குள் அப்போது எத்தனையோ ஷெல்கள் வந்து விழுந்து வெடிக்கின்றன. அவள் விரல் ஒன்றிலிருந்து எல்லா விரல்களும் அந்த சத்தங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கேட்டு நிலம்நடுங்குவதோடு நடுக்க முறு கின்றன. ஷெல் சத்தங்கள் இப்போது ஓய்ந்து விட்டன. பங்கருக்குள் இருக்கும் போது அவளுக்கு இந்த நேரத்தில் தான் மண்ணின் வாடை அடிக்கிறது. இந்த மண் வாடையின் நினைவோடுதான் கல்லில் வேகவைத்த றொட்டியின் நினைவும் அவளுக்கு வருகிறது.

அந்த நினைவு வந்ததும் "தச்" என்கிறாள் "தோசைக் கல்லிலே றொட்டி தணலாகிக்கரியாகி விட்டிருக்கும்". இதை நினைக்கும் போதே அவளது மனம் மௌன அழுகைக்கு வாய் திறந்து கொள்கிறது. என்றாலும் மனதை ஆற்றிக் கொண்டு பிள்ளையை தன் கையைப் பிடித்ததாய் நடத்திக் கூட்டிக் கொண்டு அவள் பங்கருக்குள்ளாலிருந்து வெளியேறி வருகிறாள். வெளி மண் மிதிக்கவும் குதிரை வேகம் கொண்டதாய் கணவரின் நினைவு அவளுக்கு வருகிறது. இப்போது கடவுளிடம் வேண்டுவதெல்லாம். "தேவனே அவருக்கு ஒரு பிரச்சினையுமில்லாமல் பாதுகாப்பாய் வீட்டயாய் அவர் வந்து சேர்ந்திட வேணும்! சேர்ந்திட வேணும்!" என்பது தான்.

இந்த நினைவை அடுத்து அவளுக்குத் தனக்குத்தானே பேச இயலுமான ஒரு வேண்டுதலொன்றும் இருந்தது, "கடவுளே இண்டைக்கு பொழுதில இனியொரு முறை திரும்பவும் இந்த பங்கருக்குள்ள போறநிலைமையொண்டு இல்லாம இருந்தாத்தானே

ஒழுங்கா ஒரு சோறு கறி வைச்சு எடுத்துச் சாப்பிடலாம்... இந்தச் சின்னத்துக்கும் ஏதும் பசிக்குச் சமைச்சு நான் குடுக்க வேணுமே..." என்ற யோசனையோடு மிகச் சுலபமாக ஆகிவிடும் சமையலை சுறுக்காக அவள் செய்யத் தொடங்கி விட்டாள். நேரம் போவதை நினைத்துக் கொண்டு விறகுப்புகையைச் சபித்துக் கொண்டு குசினுக்குள் அவள் படும்பாடோ பெரியபாடு....

"இந்த வாழ்வின் துயருக்கு மாற்றம் வரும் மாற்றம் வரும் என்று எதிர்பார்த்திருந்ததெல்லாமே ஏமாற்றம் தான்" என்ற முடிவுறாததான யோசனையோடு இன்பராசா மனமும் உடலும் சோர்ந்ததான நிலையோடு வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டார். அன்றைய இரவு படுக்கைக்குப் போவதற்கு முன்பு கடவுளை நோக்கி பிராத்தனைகளிலே அதிக நேரத்தை செலவழித்தார். இரவு படுக்கையில் பிறகு படுத்தும், நித்திரைப் பாதையில் ஒழுங்காக அவருக்கு தூக்கம் போகவில்லை தூங்கும் போது துர்சொப்ப னங்கள் அவருக்கு வந்து கொண்டிருந்தன. வாய் அலட்டல்க ளையும் இவ்வேளை வெளிப்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் விழித்த பின்பு முகம் கை கால் கழுவிக் கொண்டு துவாய்த் துண்டால் ஈரம் துடைத்து விட்டு கண்ணாடிக்கு முன்னால் போய் மௌனமாக அசையாமல் நின்றபடி தன் உருவத்தை அதனில் பார்த்தார். இரவு நித்திரை கொள்ளாத சூட்டுக் கணகணப்பு தன் கண்ணிலே ஒளி வீசித் தெறிப்பதைப் பார்க்க குழப்பமான மாதிரியாக அவருக்கு இருந்தது. தன் முகம் இப்போது பவுடர் பூசிய சவமுகம் போலல்லவா இருக்கிறது என்றும் நினைத்து அவர் மனதுக்குள் கவலைப்பட்டார். இந்த நிலையி லிருந்து என்னை நான் காப்பாற்றிவிட வேண்டுமே என்றும் அவருக்கு மனவருத்தமாக இருந்தது. தன் முகத்தை நினைவில் வைத்துக்கொண்டு ஊரிலுள்ள தனக்குத் தெரிந்த அறிந்த முகங்க ளையும் நினைவில் கொண்டு வந்து அவர்கள் முகங்களையும் தன் முகத்தோடு இப்போது ஒப்பீடு செய்து பார்த்தார். அப்படி பார்த்த போது அவர்களினது எல்லா முகங்களும் தன் முகம் போலவே ஒன்றாகவே பிறந்தோம் - என்றது போலவே அவருக்குக் காட்சி கொடுத்ததானது சிறிதே அவருக்கு மன நிம்மதியாக இருந்தது. கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்ப்பதை விலக்கி பிறகு வீட்டு ஹாலின் சுவர்களை அவர் நோட்டம் விட்டார். முன்னம் போல வெளிச்சமான அழகிய சுவர்களாக அவைகள் அவருக்கு காணப் படவில்லை. மிகத்திறமான வண்ணத் தீந்தைகளையெல்லாம் அப்போது அவர் பெரும் விலைக்கு வாங்கி இந்தச்சுவர்களிலே பூச்சு பூசியிருந்தார். யாரும் அவரின் வீட்டுக்கு வந்தால் திறந்த கண்களுடன் இந்த வண்ணநிறங்களை பார்த்து ரசித்து இவரையும் வெகுவாக பாராட்டி விட்டிருந்தார்கள்.

ஆனாலும் ஒரு நாள் இடிமுழக்கம் கேட்கும் அந்தவித சத்தத்தோடு

உலங்குவானூர்தியிலிருந்து எத்தனை துப்பாகிக் குண்டு கள் இவரது வீட்டை நோக்கியும் சுடப்பட்டன. அந்தத் தானியங்கித் துப்பாக்கியின் குண்டுகள் வந்து துளைத்ததிலே சுவர்களிலே எத்தனை ஓட்டைக் கண்கள் பதிந்தும் விட்டன. இதன் பிறகு மகிழ்ச்சியான ரோஜா போன்ற அந்த அழகிய சுவர்காளான்கள் போன்று கறுத்தான அசிங்கமாகி விட்டது. இந்தச் சுவரில் ஓட்டை விழுந்த நேரம் ஞானமலரும் தன் பிள்ளையோடு பங்களுக்குள்

இருந்தாள். ஹெலி தூரப்பறந்து போய் அதன் சத்தம் ஓய்ந்தபிறகு “வீட்டுக்குள் போய் என்ன ஏது நடந்ததென்று பார்ப்போம்” என்ற பதற்றத்தில் வேகமாக அவள் ஓடி வந்தாள். அப்படி ஓடி வரும் போதே வீட்டிற்குள் என்ன நடந்திருக்குமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொம்ம சீக்கிரமே தன் யூகத்தில் அவளுக்கு எல்லாமே புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. ஞானமலர் தன் கறுப்புத் தலை முடியை ரொம்பவுமே நேசித்தவள். தன் தலை மயிரின் வளர்த்தி யையும் அதன் அழகையும் பற்றி அவளுக்கு மிக தெளிவாகத் தெரியும். தனக்கிருக்கும் இந்த அழகு பற்றி தனக்குத்தானே அவள் பெருமைப் பட்டும் கொள்வாள். வேறு பெண்களுக்கிடையே தன் கூந்தல் அடையாளம் பற்றி உயர்ந்தபடி வைத்து அவள் கதைப்பாள்.

இந்த வித நினைப்பு கொண்டவள் அங்கே வந்து தனது வீட்டுச் சுவர்ச் சேதத்தை அப்போது பார்த்தபோது இதுவரை இருந்த அந்த மனத்தின் நினைவையெல்லாம் வெட்டிக்கொண்டு போவது போல அப்போது செய்து விட்டிருந்தது. உடனே தன் கொத்தான முடியை இரு கைகளாலும் இறுக்கிப் பிடித்துக் கொண்டு "ஐயோ அநியாயமாப் போச்சு அநியாயமாப் போச்சு" என்றாள்.

துப்பாக்கி உமிழும் சூட்டுச் சத்தங்களையும் உச்சி பிளக்கும் அதிர்வான ஷெல்சத்தங்களையும் தொடர்ந்து கேட்டுப் பயப்பட்டுக் கொண்டு எத்தனை நாட்கள்தான் இந்த வீட்டிலே இனிமேலும் நிம்மதியாக இருந்து வாழலாம்? என்ற நினைப்பில் இன்பராசா இனியும் சாதமாக ஒரு நல்ல நிலையை எவ்வளவு காலம்தான் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருப்பார்.

"இன்றிருக்கும் நிலையிலே பங்கரிலே ஓடிப் போய் ஒரு நாளிலே அரைவாசிப் பொழுது இருந்து கொள்வதாய்த்தானே இப்போது எங்களுக்கு சீவியம் போகிறது" என்று துக்கத்தோடு இந்தக் கதையை அவரிடம் ஞான மலரும் பின்பு வளர்த்திருந்தது இன்பராசாவிற்கு அதுவும் மனதை விறைக்கச் செய்திருந்தது. இந்த நினைவுகளினாலே "வீட்டைத் திருத்தி எடுப்போம்" என்ற யோசனை அவருக்கு மனதிலே இருந்து இறந்ததாகப் போய் விட்டது.

"இன்றைய நாள் எங்கள் வாழ்க்கைக்கு மிகவும் அவசிய மாக உதவுவதாயிருப்பது இந்த வீட்டை விட பங்கர்தான்" என்ற நம்பிக்கை அவருக்கு தரிசனம் காட்டத்தொடங்க, "அந்தபங்கரை எப்படி வாழும் வாழ்க்கைக்கேற்ப வசதியாக சரி செய்வது?" என்று நன்றாக யோசித்து இருட்டுப் பரவிக்கிடந்த பங்கரை வெளிச்ச மாக்கி புதுப்பிக்கும் வேலையை உடனே அவர் செய்ய திட்டம் தீட்டினார். சரி இந்த வேலையை செய்து முடிப்பது என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு மனதுக்குள் தீர்மானமாகிவிட்டது. ஆனாலும் இந்த வேலையை செய்து முடிக்க ஒரு நல்ல மேசன் (கொத்தனார்) வேலையாள் தேவையே".... இந்த போர்க்கால சூழலிலே இந்த ஊருக்குள் அந்த வேலை தெரிந்த ஆள் இடம் பெயர்ந்து வேற ஊர் வழிய இப்பவா போய் இருப்பாரோ இந்த யோசனையில் இருந்தவர் அடுத்த நாள் காலையில் வெளிக்கிட்டுப் போய் அந்த ஊர் முழுக்கவும் அந்த மேசனை விசாரித்தப்படி தேடித்திரிய ஆரம்பித்திருந்தார்.

**(2021)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானவில்

சில நிகழ்வுகளை ஞாபகங்களிலிருந்தும் பிரித்துவிடக் கூடியதாக இருக்கிறது. ஆனாலும் சில நினைவுகளை அப்படியாக நினைவில் இருந்து பிரித்து விட முடியாததாகத்தானே உள்ளன. வாழ்க்கையிலே எங்கெல்லாமோ மனத் திருப்தியைக் கண்டு கொள்ளத் திரிகிறோம்.

பார்க்கையிலே, சுவைக்கையிலே, இனிமை உணர்வினை அனுபவிக்கிறோம். ஆனாலும் சந்தோஷத்தோடும், கோபத்தோடும், சோகத்தோடும், துன்பத்தோடும் சிறு வயதிலிருந்து வாலிப வயது வரை வாழ்ந்த அந்த வாழ்வின் நினைவு ஞாபகத்தில் தவறவிட்டுக் கொண்டு போக முடியாத அளவுதானே எப்போதுமே இருந்து கொண்டிருக்கும்.

அந்தவிதமான மன திருப்தி எல்லாவற்றையும் கொண்ட தாய் வாழ்ந்த அந்த வாழ்வின் காலம், சிறு வயதிலிருந்து வாலிப வயது வரை வாழ்ந்த அந்த காலம்தானே! அப்படியான அந்த வாழ்விலே சம்பந்தப்பட்டதாய் எப்போதுமே ஞாபகத்தில் வருவது ஒருவருக்கு தான் பிறந்த அந்த வீடுதானே. அதுதானே ஞாபகத்தில் எப்போதுமே ஒரு தரிசனமாக அவருக்கு ஆகிடமுடியும். அதே போன்றுதான் கவிக்கும் தான் வாழ்ந்த வீட்டைப் பற்றிய நினைவு வரும்போது தான் ஒரு புதிய உடலைப் பெற்றதாக ஆகிவிடுவான். தும்மலை ஒருவருக்கு பாதியில் நிறுத்த முடியுமா? அதேபோன்று தான் அந்த வீட்டோடு சேர்ந்து பழைய நினைவுகள் எல்லாமே அவனுக்கு அப்போது ஒரேயடியாக ஞாபகத்தில் வந்து விடும்.

அந்நேரமாக இப்போதைய அவன் வயதின் பருவமானது ஞாபகத்திலிருந்து உடனே இறந்துவிடும். அவ்வேளை தன் குழந்தைப்பருவம் அவனுக்கு நினைவில் வரும். அதனோடு சேர்ந்து இளமைப் பருவமும் அவனுக்கு நினைவில் சேர்ந்ததாய் வந்து விடும்.

இவ்வேளை நினைவு அலையானது எப்படியாக அவனுக்கு ஒரே இடத்தில் நிலையாக என்றதாய் நிற்கும். அது அசைவுடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்துடனும் பல சம்பவங்களை அவனுக்கு அப்போது ஞாபகத்தில் கொண்டு வந்து விடுகிறதே.

" கல் வீட்டுக்காரத் தம்பி !"

இந்தப் பெயர் கவிக்கு அந்நேரம் இளமைக்காலத்திலே இருந்தது. ஏனென்றால் அந்த கிராமத்திலே முதன் முதலாக கட்டப்பட்ட கல் வீடல்லவா அது. அந்தக்காலம் சொல்லப்போனால் சனங்களுக்கு இந்த வெறுப்பு என்பதே இல்லாத காலம்! பொறா மையும் மனதில் இல்லாத காலம்! நிலவைப்பார்ப்பது போல அன்பாகத்தான் பார்த்துக் கொண்டு இவ்விதமாகத்தான் அவனை அவர்களெல்லாம் அழைப்பார்கள்.

அந்த ஊரிலே கவியின் தந்தையாருக்கு பல காணிகள் சொத்துக்களாக இருந்தன. அந்தக் காணிகளிலே பல வீடுகளை கட்டி அவற்றை அவர் வாடகைக் குடியிருப்புக்கென்றும் விட்டி ருந்தார்.

இந்த வீடுகளுக்கு மாதம் முடியவும் போய் கவிதான் வாடகைப்பணம் கேட்டு வாங்கி வருவான். அந்த வீடுகளிலே போய் அங்கு குடியிருப்பவர்களிடம் இப்படியாகத்தான் நீ வாடகைப் பணம் தருமாறு கேட்க வேண்டுமென்று கவியின் தாய் செல்லக் கிளியும் அறிவான கதை சொல்லித்தான் அவனையும் அங்கெல்லாம் அனுப்புவாள்.

"வாள் வீசிக்கொண்டு போகிறமாதிரி நீ அந்த இடங்க ளுக்குப் போகாமல் இரண்டு கொம்பு உனக்கு முளைச்சிருக்கிற மாதிரியும் அவயளுக்கு காட்டாமல்.... விரல் நகங்களில் மருதோன்றி வைச்சமாதிரி அப்பிடி குளிர்ச்சியா அவயளோட பேச வேணும் மகன்!"

"இதைத்தானே நீங்கள் எனக்கு ஒவ்வொரு மாதமும் அங்க நான் போக முதல் சொல்லி அனுப்பறியளம்மா" திறவு கொண்ட நல்ல சிரிப்போடு அவன் சொல்லுவான். "இதை மறக்காமல் எப்பவும் மனதில் வைச்சு இருக்க வேணும் எண்டதுக்குத்தான் சொல்லுறன் மகன் "அவளும் அன்போடு சொல்லுவாள்." எனக் கொண்டா... நீங்க சொல்லுறது இப்பவும் போல எப்பவும் ஞாபகத் தில் இருக்கிதுதானே அம்மா... தயவு செய்து மாத வீட்டு வாடகையை தாருங்கோ எண்டு அவயளுக்கு முதன் முதல் சொல்லி வீட்டு வாடகைக்காசை அப்போதைக்கு அவயள் தங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிட்டயா வைச்சிருந்து, அதை கொண்டுவந்து உனக்கு தந்தால் நன்றி எண்டும் அவயளுக்கு நீ சொல்லி காசை வாங்கிக் கொண்டு வர வேணும் எண்டு தானே எனக்கு நீங்கள் சொல்லுறனீங்கள்....?"

"ஓமோம்! அப்படித்தான் மகன்...! ஆனாலும் அப்போதைக்கு அவயளிட்ட காசில்லாமல் வாடகை தராட்டிலும் "

" அதுவும் கூட எனக்கு நீங்கள் சொல்லுறனீங்கள் தானே... அப்பிடி இது மாதிரி அவயள் சொன்னாலும் ஒண்டும் அவயளோட கோவிச்சுக் கீவிச்சு ஒண்டுமா நீ கதைக்கமால் அப்ப நான் இன்னொரு நாளைக்கு வந்து உங்களிட்ட காசை வாங்கிற னுங்கோ.. எண்டு தன்மையாவும் சொல்லிப்போட்டு வர வேணு மெண்டு... அப்பிடித்தானே நீங்கள் சொல்லி இருக்கிறீங்கள்?"

என்று இப்படிதான் கவி தன் தாய் தனக்குச் சொல்லி வைத்துள்ள இந்த வித ஒழுங்கைக் கடைப்பிடித்து வீட்டு வாடகை வசூலிக்கவென்று போவான். அழகாககதைத்து மற்றவர் மனம் சலித்துப்போகாத அளவில் நடப்பதென்பது அவனுக்குத் தாயின் செய் காரியங்களிலும் பார்த்து அப்படியாக நடக்க நன்றே உதவி புரிவதுமாகவும் இருந்தது.

கவிக்கு அவன் பிறந்து வளர்ந்த மிகச்சிறந்த அந்த கல்வீட்டிலே அதனுடைய வீட்டு வாசல் படிகள்தான் விட்டுப் போகாத ஞபாக வளர்ச்சியாய் இன்றும் இருந்து கொண்டிருந்தது.

திருப்தியோடு ஆனந்தமாக இருந்து கொண்டு நேரத்தை கழிக்கக் கூடிய இடமல்லவா அவனுக்கு அந்த வீட்டுமுகப்பு வாசல் படிகள்! அவனது நான்கு சகோதரிகளுடன் அவனும் அந்த வாசல்படிகளில் இருந்து கதைக்கும் போது – றவுண்ட் றேஸ் - அடிக்கப் போகிற பின்னேரத்து விளையாட்டைக் கூட அவன் ஒரு பக்கம் ஓரம் கட்டி வைத்ததாய் விட்டு விடுவானே! அந்த கதைக்கெல்லாம் சந்தோஷமாக இருக்க வன்னிக்கச்சான் கடலை வைத்து எல்லோரும் அவ்வேளை சாப்பிடுவது சகோதரிகளுக்கும் அவனுக்கும் சுவை இன்பமான எல்லையை தொடவல்லவோ உதவி செய்து கொண்டிருக்கும்.

அந்த வாசல் படிகளின் கலைத்துவம் உள்ள வடிவமைப்பு என்பது பார்த்தால், ஆஹா எந்த அளவு மனதை ஈர்க்கும்! அந்தப் படிகளின் அமைப்பின் தோற்றம் எத்தனை அளவான ஒரு அழகு பொருந்தியது. இலை வடிவிலே இருபக்கங்களும் விரிய வளைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியிருந்த அந்தப்படிகளுக்கு அழகு மிகவாய் சேர்த்திருந்தார், அதை நிர்மாணித்த மேசன். கனிந்த திராட்சைக் குலைகள் அவற்றில் ஓவியமாகவும் படிப்பக்கத்து இருக்கைக் குந்தியிலே அவர் அழகாக வரைந்துமிருந்தார்.

வாசல்ப்படிகளின் நினைவிலிருந்து வாகனத்திலுள்ள கியர் (Gear) மாற்றுவது போல நினைவைக் கொண்டு போகும் போது இந்த படிக் குந்தில் இருந்து கொண்டுதான் கவியின் அம்மா குசினிச் சமையல் முடித்து ஆறுதலாக இருக்கும் நேரம் வெற்றிலைத் தட்டத்தை ஒரு பக்கம் வைத்தபடி தாம்பூலம் எடுத்து வாய்க்கும் போடுவாள்.

மாதம் ஒரு முறை பொழுதுபடவாய் நடக்கும் சீட்டுக் கூறு கையும், இந்த இடத்தில்தானே விளக்கு வைத்து அந்த வெளிச் சத்தினூடே அவளால் நடக்கும். இந்த வீட்டுக்கு பிச்சைக் காரர்கள் வந்தால் கூட அவர்களுக்கு சாப்பாடு கொடுத்து சாப்பிட வென்று இருக்க வைக்கின்ற இடமும், இந்த வாசல் படிக் குந்துதானே!

இந்த வாசலே அந்த வானவில் வடிவான அந்தளவு அழகென்றால், விரிசலடைந்த பெரிய அந்த கல்வீடு எவ்வளவு பூர்ணமான அழகாக இருக்கும்! வீட்டின் அறைகளுக்கெல்லாம் வேப்பமர பலகையால் செய்யப்பட்ட கதவுகளை பார்க்கவும் எத்தனை சிறப்பாக இப்போது தெரிகிறது வாணிஸ் போட்ட அந்த கதவுகளின் அருகே நெருக்கமாய் நின்றால் முகம் பார்க்கலாம் மல்லவா! அத்தனை பளிங்கு வெளிப்பு அல்லவா அந்தக் கதவுகள்! வீட்டின் நிலத்துக்கெல்லாம் பார்க்கப்போனால் அங்கெல் லாம் பூக்கள் போன்ற வரைவு பதித்த அபூர்வ அழகுவடிவம்! உயர எழுப்பிய சுவரிலே பொருந்திய முகட்டின்மேலேயெல்லாம் ஆழ்ந்த வலிமை பொருந்திய பவுண் மார்க் ஓடுகள்! கடும் திறம் அதிரப் பாய்ந்ததான பனையினதான தீராந்திகள், சிலாகைகள், பித்தளைக் கம்பி பொருந்திய உறுதியான ஜன்னல்கள், இருளே விழாத ஒளிப் பரவலான வீட்டமைப்பு. கவிக்கு இப்போது அம்மாவும் உயிருட னில்லை. அப்பாவும் இறந்து விட்டார். அவனது காலத்தை அளந் தால், இன்றைய காலம் வயது போன நிலைமாற்றமாகிவிட்டது. தகப்பனுக்கிருந்த அந்தச் சொத்துக்களெல்லாம் என்ன வாகி விட்டது என்று பார்த்தால் எல்லா சொத்துக்களுமே அவனது நான்கு சகோதரிகளுக்குமாக சீதனமாக போய்ச் சேர்ந்துவிட்டது. அவனது செல்லமான வளர்ப்பு முறையில் சொத்துக்களை தனக்குத்தேட வேண்டும் என்ற முயற்சியை இதனால் அவனுக்கு தொடர முடியாது போய்விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் அவனுக்கு இப்போது ஆதரவற்ற காய்ந்து போன தாகிவிட்டது. தொலை இடத்திலே வாடகை வீட்டிலே இப்பொழுது வாழ்க்கை. சாம்பலோடி வாடிக்கிடப்பது போலவே இன்றைக்கு அவனின் நிலைபரம்.

ஆனாலும் தான் வாழ்ந்த அந்த வீட்டைப் பற்றி இன்று காலையில் அவன் நினைத்தபோது அவனுக்கு அதிக ஆரோக்கிய மாகி உடல் நிலையும் நல்லதாகி விட்டது போல தெரிந்தது.

" இன்றே ஊருக்கு வெளிக்கிட்டுப்போய், அந்த வீட்டை ஒருக்கால் என் ஆசைக்கு பார்த்துக் கொண்டு வந்தாலென்ன" என்ற இந்த யோசனை இன்றைய பொழுதில் அவன் உடல் நலத்தின் மூலம் வந்தும் சேர்ந்திட, வானத்தில் உயரப்பறப்பது போன்ற சந்தோஷம் அவனுக்கு வந்து விட்டது.

உடனே அவன் ஊருக்குப் போவோம் என்ற தீர்மானத்தோடு பிரயாணத்தைத் தொடங்கி விட்டான். அந்த வீட்டைப் பாரக்கப் போகின்ற அதே நினைவிலே இப்போ பிரயாணம் பண்ணுகிற போது கூட பஸ்ஸிற்குள் இருந்தவாறு காணும் காட்சிகளெல்லாம் அவனுக்கு வெகு அருமை அழகினதாக தெரிந்தது.

மிக மிக தூரமான பிரயாணக் களைப்புத்தான்! என்றாலும் உட்சாகமான நிலையோடு அவன் தன் ஊருக்கு வந்து சேர்ந்தான். அங்கே வந்ததும் தன் வீடு உள்ள அந்தக் கிராமப் புறத்தடிக்கு சென்றால் அந்தக்கிராமமே இப்பொழுது முற்று முழுதாக வேறேயது போல மாறி விட்டிருப்பது அவனுக்கு பார்க்கையிலே தெரிந்தது.

முன்னம் போல, அந்த அந்தப்படியே இப்பொழுதும் இருப்ப தாக அவன் கண்களுக்கு அவைகளொன்றும் காணப்பட வில்லை. அதனால் நினைவில் அவனுக்கு வேர் விட்டு நின்றதெல்லாமே இப்போது விடுபட்டதாகிவிட்டது.

வீட்டு வளவு அருகே வந்து சேர்ந்தான். அந்த வெளி வீதியில் அவன் நின்றவாறு வீட்டுப் பக்கம் பார்த்தான். இப்போது அங்கேயுள்ள பெரிய வெளிக்கேற் அவனைக் கவனிப்பது போல அவனுக்குத் தெரிந்தது. தன் வீட்டைப்பற்றிய கனவுகளை நிஜ மென்று நம்பிருந்த அவனுக்கு அந்த கேற் எதையோ அறிவிப்பது போல அவனுக்கு தெரிந்தது.

கேற்றை கையால் சத்தம் வரத்தட்டினான். அவனது மூத்த சகோதரிதான் வந்து உடனே கேற்றைத் திறந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காவைப் பார்த்ததும் அவனுக்கு ஞானம் சித்தித்தது போல இருந்தது. அன்பின் சிரிப்போடு உடனே " அக்கா " என்று அழைத்தான்.

அவளும் அன்பை நிறையச் சேர்த்து " தம்பி" என்றாள் பாசமாக யுக யுகமாகக் கதைக்க கூடிய அத்தனை சகோதர பாசமான கதைகளையும் அந்த வீட்டு முற்றத்தில் நின்ற படியே அவள் தன் தம்பியின் மீது அள்ளித் தெளித்தாற் போல தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருந்தாள்.

அவன் அக்காவினது அந்தக் கதைகளையெல்லாம் அகலப் புன்னகை விரியும் முகத்தோடு கேட்டுக் கொண்டு அந்த வீட்டின் வெளி வாசல் படிகளைத்தான் ஆர்வம் கொண்டே பார்வைக் குவிப்பில் பார்த்தான்.

ஆனாலும் அவனுக்கு தன் கண்களையே அழித்தது போல உடனே ஏமாற்றம் வந்து விட்டது. "பெரியக்கா எங்கே இந்த வீட்டினது அந்த வாசல் படிகளை இப்போ காணோம்" என்று தம்பி கேட்க அவளுக்கும் அந்தக் கேள்வி ஓர் அதிர்வலையாகி விட்டது. அவனது தேடுதல் வேட்கையை அவளும் உணர்ந்து கொண்டாலும், இப்போது உள்ள வீட்டின் இருக்கையின் அழகு பற்றி தம்பிக்கு சொல்லுவோம் என்ற ஆர்வத்தில் அவளும் கதையைத் தொடங்கினாள்.

" என்னடா தம்பி! நீ இந்த வீட்டின் வாசல்படிகளையே மட்டும், அங்க உன்ரை இடத்தில் இருந்தபடி யோசிச்சுக் கொண்டு இருந்திருப்பாய் போல கிடக்கு, என்னடா தம்பி?" "பின்னே என்னக்கா அப்பத்தைய கால விஷயங்கள் இப்பவும் மாறமுடியாத மாதிரி மனசில பதிஞ்சதாய்த்தானே போய்க் கிடக்கு?" "உண்மை தான் தம்பி! அந்த நினைவுகள் எனக்குக் கூட மனதில விட்டே விலகாத நினைவுகள் தான்! எங்கட குடும்பத்தில நான் தான் எல்லாருக்கும் மூத்த பொம்பிளப் பிள்ள அவயளுக்கு எண்டு போட்டு அப்பாவும் அம்மாவும் எனக்குதானே இந்த வீட்ட சீதணமா எழுதித் தந்திச்சினம் என்னடா தம்பி? "

" அதுதானே அக்கா சரி! நீங்கள் தானே எல்லாரைவிடவும் எங்களுக்கு எண்டு உள்ள மூத்த அக்கா எண்டுறன்" "அதவிடவும் தம்பி! நான் ஐந்தாம் வகுப்புப்படிக்கேக்கிள தம்பி என்னையேப் படிச்ச ரீச்சர் என்னைய நீ வடிவா படிக்கிறாயில்ல! சரியான முழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொக்கு மொக்கு எண்டு சொல்லி நல்லா பிரம்பால அடிப்பா! அதால எனக்கு பள்ளிக்கூடம் போக வெறுப்பு வந்திட்டு! அதால அம்மாவிட்ட அழுதுகுளறி நான் பள்ளிக்கூடம் போக மாட்டனெண்டு நீண்டதா அடம்பிடிச்சன்... அம்மாவிட்ட நான் வீட்ட நான் இருந்து எல்லாருக்கும் சமைச்சி குசினி வேலையெல்லாம் செய்து தாறேனம்மா எண்டு சொல்லி ஒரே அழுகை மணியமாக் கிடந்து அழுதன். அதனால போல அம்மாவும் என்னைய பாவம் எண்டு இரங்கி கவலையா பாத்திட்டு பெருமூச்சு விட்டுப்போட்டு நீ வீட்ட இரு எண்டு பிறகு சொல்லிட்டா... இதுக்கு பிறகுதான் நான் பாவம் படிப்பும் கூட இல்ல எண்டிட்டு கலியாணம் நான் முடிக்ககேக்கிள இந்த வீட்ட எனக்கு அவயளும் சீதனமா எழுதித்தந்தவயள் அதாலதான் இந்தச் சொத்து இப்ப எனக்கு..."

"உங்களுக்கு இந்த வீட்டச் சீதனமாகத் தந்ததில உங்களுக்கு சகோதரங்கள் எண்டு இருக்கிற நாங்கள் எல்லாருக்கும் நல்ல மனச் சந்தோஷம் தானே அக்கா?" என்று அக்காவின் மேல் உள்ள தன் பாச உணர்வோடு அவன் சொன்னான்? தம்பி இப்படிச் சொல்ல மலர்களைப் பார்க்கின்ற மனச் சந்தோஷத்தோடு அவள் அவனின் முகத்தைப் பார்த்தாள்.

" தம்பி! என்னடா தம்பி! இப்பிடி வீட்டுக்கு வெளியாலயே நெடுக நிண்டபடியே எங்கட கதை நெடுகவா இப்ப போகுது- வா வா வா வீட்டுக்குள்ள இனி வடிவா ஆறுதலா போயிருந்து கதைப்பம் "

என்று சொல்லி அவனின் பிரயாணப்பையை தன் கையில் வாங்கிக் கொண்டு அவள் முன்னால் போக நடந்தாள். அக்கா விற்கு பின்னாலே அவனும் போனான். வீட்டிற்குள்ளே போனால், உள்ளே பார்க்க எல்லாமே முன்னையைப் போல அப்படியே மாறாததாக எல்லாமே இருப்பதாக அவனுக்குத் தெரிந்தது. முதுமையின் வெடிப்பு ஒன்றும் அவைகளிலே அவனுக்குக் காணப் படவில்லை. கதவுக்கெல்லாம் அந்தப்பழைய பூட்டும் திறப்புகளும் அப்படியே இப்பொழுதும் பிழைபடாமல் செயல்பட்டுக் கொண்டி ருப்பதையும் அவன் கண்டான். இவை போன்று உள்ள எல்லாவற் றையும் அந்தக் கல் வீடு முழுக்கவும் தேடிப் பார்த்து கண்டதிலே அவன் தன் இளமைக் கால வாழ்வையெல்லாம் அவைகளில் அறிந்து கொண்ட மகிழ்விலே உணர்ந்தான். அன்று இரவு அக்கா சமைத்துப் போட்ட சாப்பாட்டினை ரசித்து சாப்பிட்டு முடித்ததன் பிறகு " அக்கா அந்த வாசல் படிகள்" என்று மனதில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதீத ஆசையின் உந்துதலோடு அவன் அக்காளிடம் கேட்டான். "அதில தம்பி அந்த வாசல் படிகள் முன்னம் இருக்கும் படியா இப்பவும் கூட அப்பிடியே இருக்க எனக்கும் கூட விருப்பம் தான் ... ஆனா பழைய மாதிரியா இப்ப எங்கட ஊர் இருக்கு தம்பி? இந்த வீட்டுக்கு முன்னால உள்ள வீதி முன்னம் மண் வீதியாகத்தானே இருந்தது...

இப்பாவா அந்த வீதியை நீ பாக்கிறாய்தானே? முன்னம் இருந்ததை விட அது இப்ப எவ்வளவு உயரமா மேடாக இருக்கு தெண்டு உனக்கு அது தெரிஞ்சுதுதானே... முன்னம் எங்கட வீடு இருந்தது எண்டுறது அப்பவா சொல்லப்போனா எவ்வளவு அளவு நல்ல உயரமா இருக்கிறமாதிரி தெரிஞ்சுது... ஆனா இப்ப அதுக்கு நடந்தது என்னவெண்டா உள்ள மண் எல்லாம் இதுக்குள்ள மழை பெய்யேக்கிற அடிச்சு ஒதுக்கி வந்து வாசல்படியிலே அரைவாசி அளவு மண் அப்படியே உயரமா மேடாகி மூடிப்போச்சு... இந்தவீடு பலமான கட்டிடம் தான்! ஆனா அந்த படிக்குந்துகளெல்லாம் வெடிச்சுப் போச்சு... பின்னயா நான் என்ன செய்தன் எண்டா, அதுகளை எல்லாம் இடிச்சுப் போட்டு இப்ப இந்த வாசல் படிகளை அமைச்சதுதான்! அதுதான் இப்ப செய்திருக்கிறதா நடந்தது! ஆனா உனக்கு கெண்டா இப்பயும் அந்த நினைவோடதான் நெடுகவா இருக்கிறாயாக்கும் என்னடா தம்பி? "

" பின்ன என்னக்கா! முன்னம் நாங்கள் இந்த ஊரில் வாழ்ந்த இந்த சீவியத்திண்ட நினைவு எப்பயும் இருக்கும் தானே அக்கா...? அப்பிடித்தானே அக்கா நாங்கள் எல்லாரும் அப்பவா சீவிச்சம்? "

" அது என்னவோ சரி! அது நீ சொல்லுறது உண்மைதான் தம்பி.... அதாலதான் நான் தம்பி இனி அதுக்கெல்லாமா என்ன ஒண்டு செய்யப் போறனெண்டா இந்த வீடு கட்டின நூறு ஆண்டு நினைவு தினத்தை எங்கட அப்பா அம்மாவின்ரை நினைவோட பெரிய கொண்டாட்டமா வைச்சுதான் கொண்டாடப் போறன் தம்பி " என்று அக்கா சொல்ல,

அக்காவை அவன் உடனே ஆச்சரியத்துடன் பார்த்தான். அவனது உடல் நிலைமையில் ஒருவருடம் கடக்கலாம், இன்னொரு வருடம் கடக்கலாம், என்ற நிலைமை இருந்தது. ஆனால் அக்காவிற்கு தன் சொந்த வீட்டிலே வாழ்ந்த நிம்மதியிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியத்திலும் இப்படியாக மனதில் எதையும் சாதிக்கக் கூடிய துணிவு இருப்பதாக அவன் நினைத்துக் கொண்டான்.

" இன்னும் நீங்கசொல்லுற அந்த கொண்டாட்டம் எண்டுறது, அது நடக்க இன்னும் பத்து வருடமாகும் போல கிடக்கு என்னக்கா? "

என்றான் அவன் யோசனையோடு " ஓம் அப்படிதான் தம்பி"

சொல்லிவிட்டு அவள் இந்த உலகத்தையே முழுக்க தான் வென்றெடுத்தமாதிரி ஒரு சிரிப்பு சிரித்தாள்.

" நீ கட்டாயமப்பு அதுக்கு வந்திட வேணும் என்னடா தம்பி?" என்று சொன்னாள் பிற்பாடு அதைமிகமிக சாதாரணமாக! " பெண்களின் இது போன்ற மனத்துணிச்சலான சக்தியே பெரிய சக்திதான் " என்று உடனே அவன் தன் மனதுக்குள் நினைத்துக் கொண்டு "சரி" என்று கூட வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்லாது.

"ம்" என்று மாத்திரம் அவன் அவ்வேளை தலையாட்டினான். அந்த வீட்டில் அவன் அக்காவுடன் தங்கி இருந்து, மற்றைய சகோதரிகளினதும் வீட்டிற்குப் போய் இரண்டு நாட்கள் சாப்பிட்டு குடித்துச் சந்தோஷமாக கழித்தான். மூன்றாம் நாள் காலையில் மூத்த அக்காவிடம் தான் இனி புறப்படுவதாக கூறி அவ்விடம் விடை பெற்றுக்கொண்டு பழைய நினைப்புடன் அந்த வீட்டு வாசல் படிகளாலே தரைக்கு இறங்க கால்வைத்தான். ஆனால் இரண்டு படிகள் அவன் காலவைத்து கீழே இறங்கும் அளவிலேயே அவன் கால் தரையைத் தொட்டது. " ஓர் அலை இறக்கிறது ஓர் அலை எழுகிறது, இதுதானே வாழ்க்கையின் உள்ளதான நிகழ்வு" என்ற நினைவின் விழிப்போடு தரையில் கிடந்த செருப்பிலே அவன் தன் கால்களை கொழுவிக்கொண்டு இப்போதுள்ள வீட்டின் நிலைபரத்தை மனதில் ஏற்றுக் கொண்டபடி மன நிம்மதியோடு அவன் பிறகு நடையை தொடர்ந்தான்.

**தினக்குரல் வாரமஞ்சரி (ஜனவரி 31–2021)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைமாற்றம்

கதிரவனின் ஒளியை நிறையக் கண்டு கொள்ளக்கூடிய இடம் இந்திய தேசம்தான்! என்பது போலத்தான் கண்ணனுக்கு அவ்வேளை நினைக்கவும் இருந்தது. இலங்கையிலிருந்து ஒரு பட்டாளம் கணக்கான சனத்தோடுதான் இந்தியாவிலுள்ள பல இடங்களையும் சென்று பார்க்கவென்று அவனும் இங்கே வந்திருந் தான். இங்கே சில இடங்களை சுற்றிப்பார்க்க வென்று அவன் போகும் போது, உஷ்ணம் அவனை மிகவும் தாக்கியது. இதனால் உடலிலே அந்த உஷ்ணத்தைத் தாங்கி அதை தன் வசத்துக்குக் கொண்டு வருவது அவனுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது.

ஆனாலும் சரித்திர விஷயம் பலதும் தெரிந்த சிலர் அவன் பிரயாணம் பண்ணும் குழுவிலே இருந்ததால் ஒவ்வொரு விஷயத் தைப் பற்றியும் அவனோடு தம் கருத்துகளை மேலேற்றிப் பேசிக் கொண்டிருக்க உடல் அலுப்பெல்லாம் அவனுக்கு இல்லாததாகி விட்டது. பல சரித்திர விஷயங்களைப் பற்றி நிறையத் தெரிய, மூளைக்குள்ளும் அவனுக்கு யோசனைச் சலசலப்பாயிருந்தது.

தமிழ் நாட்டில் உள்ள ஆலயங்களையெல்லாம் சென்று தரிசித்ததில் அங்கே உள்ள புல்லிலிருந்து சூரியன் வரைக்கும் எல்லாமே தெய்வீகம் தான் என்பது போன்றே அவன் உணர்ந்தான். மௌனத்துக்கு நேரமில்லாது எல்லோருடனுமான கலகலப்பான உரையாடல்கள், இந்தச் சுற்றுலா காலத்திலே கண்ணனை செழிப் பாக்கி வைத்துக் கொண்டிருந்தது.

இந்த சுற்றுலாக் குழுவில் உள்ளவர்களில் ஒருவராக வாழ்வில் கடைசியாக களைத்துப் போய் விட்ட அளவு வயதாயுள்ள ஒரு பாட்டியும் வந்திருந்தாள்.

கண்ணனோடு கதை தொடுத்து பேசுவதென்பது அந்தப் பாட்டிக்கு ஏதோ அதிவிருப்பமாக இருந்தது. அவள் அங்கே சுற்றுலா போகிற நேரம் காணும் நகரங்களையும், நாட்டுப் புறங்களையும், பள்ளத்தாக்குகளையும், மலைச்சிகரங்களையும், கோயில்களையும், மாளிகைகளையும், பற்றி கண்ணுக்கு விலா வாரியாக விபரம் சொல்லிக்கொண்டே போனாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பாட்டி உங்களுக்கு எத்தனை வயது” கண்ணன் அவரைப் பார்த்து தனக்குப்பக்கத்திலே அந்தப் பாட்டி இருந்தவாறு பிரயாணம் பண்ணுகிற வேளையில் கேட்டான். “எனக்கென்ன மகனே இந்தவருடம் எண்பத்தி எட்டு வயதாகிறது அது தான் ஆனந்தம்” சொல்லி விட்டு அவள் சிரித்தாள்.

“அப்போ இந்த வயதிலும் இப்படியெல்லாம் சுற்றுலா பிரயாணம் பண்ண உங்களுக்கு, சலிப்பு, உடல்சோர்வு வருவதில்லையா?” கண்ணன் கேட்டான். “மகனே நீ கேட்ட கேள்விக்கு ஒரு வித்தியாசமான பதில் என்னிடம் இருக்கிறது.. அது என்னவென்று நீ அறிய விளக்கம் உனக்குச் சொல்லுகிறேன்.. இன்றைய இளவயது காரர்கள் எல்லாம் அவர்களது வாலிப வயதிலேயே மகிழச்சியான வாழ்வை வாழ்வதைவிட்டு ஏதேதோ தீய வழிகளில் நடந்து அவர்களது மனம் செத்துப்போவது தெரியாமல் செத்துப் போகிறார்கள்..... நிலவைக்காட்டி தங்கள் பிள்ளைகளக்கு சோறு ஊட்டுகிற தாய்மார்கள் எங்கள் காலங்களில் இருந்தார்கள். சின்ன வயதிலிருந்து அந்த மகிழ்ச்சியான மனதை எங்களுக்குள் வைத்துக்கொண்டு இயற்கையோடே ஒன்றியதாய் நாங்களும் வளர்ந்தோம்! அதனாலேயே இந்த வயதிலும் கூட எனக்கும் மனச் சலிப்பே வருவதேயில்லை! இயற்கை எனக்கும் சொந்தம் போல் இருப்பதால் தனிமை என்னைவாட்டுவதுமில்லை! இப்படி சுற்றுலா வந்து இங்குள்ள இயற்கை அழகெல்லாம் பார்த்து ரசிக்கும்போது மனம் எனக்கு இறக்கைகள் முளைத்து வானத்தில் பறப்பதுபோன்ற அவ்வளவாகிய சுக இன்பமாக இருக்கிறது. என் மகிழ்ச்சிக்கு வேராகிப்போய் விட்டிருக்கிறது இந்த மாதிரியான நிகழ்வுகள்தான்! அதுவேதான் இந்த அளவு வயது வரைக்கும் என்னை வளர்த்தி ருக்கிறது.” என்று தன்மகிழ்வான வாழ்வு ரகசியத்தை கிழவி பிட்டுப்பிட்டு வைத்தாள். கண்ணனுக்கு அந்தப்பாட்டி அப்படி சொன்னபிறகு, அவ்விடமெங்கும் பிரயாணம் பண்ணும் போதெல் லாம் “ அவளின் செய்கை ஒவ்வொன்றையும் நீ பார் பார் எல்லாவற் றையும் அறிந்ததாக பிறகு அவைகளை எல்லாம் உன் நெஞ்சில் பதியவைத்துக்கொள்! என்றதாக மனமும் அவனுக்குக் சொல்லிக் கொண்டிருந்தது. ”

இந்த நிலையிலே அந்தப்பாட்டியை அப்படி பார்த்ததான அளவில் அவன் கண்டு கொண்டது அவனுக்கு வியப்பையும் அவரிலே மதிப்பையும் கூட்டியதாகத்தான் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பிரயாணத்திலே, "வயிறு குழப்பமாகி சாப்பிட ஒழுங்காக முடியவில்லையே? சாப்பிடுவதும் ஒழுங்காக சீரணமாக வில்லையே?" என்று பலர் அவனுக்கு உணவை மறுக்கும் வார்த்தைகளை வெளிவிட்டார்கள். அவனுக்கு ஜோக்குகள் சொல்லி மகிழ வைத்தவர்கள் சிலர் "தலையிடி ஒரு மாதிரியான காய்ச்சல் குணமும்!" என்று சொல்லி துயரமாகவும் சோகமாகவும் இன்னும் அந்த பிரயாணத்தின்போது சலிப்பாகவும் இருந்தார்கள். இன்னும் சிலர் ருசியை அனுபவிக்ககூடிய இனிப்புக்கள் பலதை சாப்பிடாமல் ஒறுத்தலிலும் நிலைத்திருந்தார்கள். இடமும் சூழலும் பிரயாணக் களைப்பும் என்பதாலே சொகுசு பஸ்ஸிலிற்குள்ளும் பலருக்கு ஒரேடியாக தூக்கத்தலைச் சரிவும் இருந்தது.

ஆனால் அந்தப்பாட்டிக்கு அங்குள்ள எல்லோரையும் போல இல்லாது ஒரு சக்திதான் நிரந்தர வெற்றி தரவாக இருக்கிறது என்பதை அவளை அவன் பார்க்கும் நேரமெல்லாம் தெளிவாக உணர்ந்தான். "வெகுவான ஆற்றலுடைய சக்தி தான் அவருக்கு" என்றதாக அவர் செய்கை எல்லாவற்றையும் பார்த்து அவன் உண்மையிலேயே பிற்பாடு அதிசயித்தும் கொண்டான்.

அந்தப் பாட்டி ஆசை கழிந்தது மாதிரி சாப்பாட்டு விஷயத்தில் ஒன்றும் கட்டுப்பாடாக இருக்கவில்லை. எவரோடும் பேசிக் கொண்டிருக்கும் போதும் சிலநேரங்களில் அவள் எதையோ வைத்துச் சாப்பிட்டுக் கொண்டபடி சோக்காக இருக்கத்தான் செய்தாள்.

தன்னோடு மாத்திரம் வைத்து சாப்பிடுவதாக இல்லாது தான் சாப்பிடுகின்றதை, மற்றவர்களுக்கும் அவள் கைகளில் எடுத்து கொடுக்கவென்று நீட்டுவாள்.

" ம் எடுங்கோ எடுங்கோ "

என்று அவள் சொன்னாலும் அவள் கேட்ட நபருக்கு உடனே கை நீளாது. அவள் கேட்ட நபர் ஆசையை தியாகம் பண்ணுகிற நோயாளியாக இருப்பவர். அவள் கையில் வைத்தப்படி நீட்டுவதை எப்படி ஒன்றென்றாலும் சாப்பிட வென்றதாய் எடுப்பார்?

கண்ணனுக்கு பாட்டியின் இந்த செயல்களை கண்டதிலே தன்பாட்டுக்கு இருந்து கொண்டு சிரித்திடவும் கூடவாய் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச்சுற்றுலாக்குழுவிலுள்ள அநேகமானவர்கள் ஆலயங்களுக்கு போகும் போது எவ்வளவு அளவு, தெய்வங்களிடம் வேண்டுதல் செய்யமுடியுமோ அந்த அளவுக்கு உள்ள வேண்டுதல்களை யெல்லாம் அங்கு செய்து கொண்டிருந்தார்கள். சாம்பிராணி ஊது பத்தி வாசம் அவ்விடங்களில் வீசினால் ஏகமாக கனத்த மூச்செடுத்து அதை உள்வாங்கி பரவசமாய் அவர்கள் கண்களை மூடுவார்கள். அதன் பிறகுதான் சுருக்கி களைப்புற்ற தன்மை அவர்களுக்கு நீங்கும்.

ஆனால் அந்தப் பாட்டியானவள் கோயிலில் கும்பிடுவதில் கூட மற்றவர்களைப் போல பெரிதான விருப்பத்தை காட்டுகிறதாக இருக்கவில்லை. மிக அற்புதமாக அமைந்திருக்கும் தெய்வச் சிலைகளிலே என்ன சிறப்பு நுணுக்கம் அமைந்திருக்கிறது என்பதைதான் அவள் எங்கும் போகிற இடங்களில் ஆராய்ந்து கொண்டிருப்பாள். கோயிலுக்குப் பக்கமாக இருக்கும் பெரிய மரங்களின் கீழ் போய் அந்த நிழலின் கீழே மனத் திருப்தியாக இருந்து கொண்டு சாந்தமான நிலையிலேதான் அவள் நேரத்தைக் கழிப்பாள்.

வட இந்தியாவிலே சில இடங்களைப் போய் பார்க்கிற பயணம் இந்தச் சுற்றுலா குழுவினருக்கு ஒரு நீண்ட பயணமாக இருந்தது. நகரங்களின் வரிசையிலே பெரிய நடுப்புள்ளியா யிருக்கிற நியூ டெல்லியிலிருந்து, பழகிப் போகாத பாஷைகள் பேசுகிற பல இடங்களுக்கும் சென்று அங்கு உள்ள புதினங்கள் எல்லாம் பார்கின்றதில் எல்லோருக்கும் பிரமாதமான சந்தோஷம் இருந்து கொண்டிருந்தது.

ஆயினும் வறுமை ஒழியாத இடங்களிலே “குருஜி குருஜி” என்றவாறு நீளும் கரம்நீட்டி பிச்சை கேட்டுகின்றவர்களுக்கெல்லாம் சுற்றுலா வந்த இவர்கள் எல்லோரும் ஒறுத்தலில்லாமல் தாராள மாகப் பணமும் கொடுத்தார்கள். இந்த விஷயத்திலே பாட்டி எல்லோரையும் விட கவர்ச்சியானவராகத்தான் இருந்தாள். அவர்களின் நிலைமையைப் பார்த்து அவர்களுக்கேற்றாற் போல அவள் தருமம் செய்தாள்.

பிச்சைகாரர்களிலும் எத்தனை வித்தியாசமான நிலையில் அநேகர் வாழ்கிறார்கள். வாழ்க்கையில் அவர்கள் எவ்வளவு உயரத்தில் இருந்து விழுந்ததாக இருந்தார்களோ அவ்வளவு ஆழத்தின் துன்பத்தை அவர்கள் அனுபவித்ததாகத்தான் வாழ்ந்து கொண்டு இருப்பார்கள். பிச்சைக்காரர்களில் பலர் இந்தத் தொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லில் பிறரை ஏய்த்துப் பிழைக்க வழி வகைகளையும் கண்டுபிடித்துக் கொண்டு இருப்பார்கள். அத்தனை தந்திரங்களையும் இந்தத் தொழிலிலே இப்படியானவர்கள் வைத்துக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் பாட்டிக்கு உள்ள குணம், அவள் இதை யெல்லாமே பெரிதாக கண்டு கொள்வதில்லை. எவர் வந்து பிச்சை என்று கை நீட்டினாலும் அவள் தருமம் கொடுப்பாள். அந்த அளவு அவளுக்கு மன இரக்கம் இருந்தது.

மன நோயாளியாக உள்ள பிச்சைக்காரர்களைக் கண்டா லும் பாட்டிக்கு மிகவும் மன இரக்கம் கூடுதலாகிவிடும். இப்படித் தான் அவள் போன இடத்திலே ஒரு காட்சியை கண்ணால் கண்டதில் அவ்வாறேதான் மனம் இளகிப்போய் விட்டாள். அந்த அளவுக்கு அந்த இளைஞனின் செய்கைகள் அவர் மனதை பாதித்தது. சாக்கடையில் எல்லா குப்பை கூளங்களையும் தனக்கு அருகாக பொறுக்கித் திரட்டி வைத்துக் கொண்டு இருக்கிற நிலையில் அவன் இருந்தான். நாயோடு கிடந்து உளறிக் கொட்டிக் கொண்டிருக்கும் அந்த வாலிபனைப் பார்த்து, அவள் அப்படியே மனம் நெகிழ்ந்து அழுதே விட்டாள்.

ஆத்ம அன்பு இருக்கும் பார்வையோடு அவள் பிறகு அவனை பார்த்துக் கொண்டே நின்றாள். பஸ்ஸில் வந்தவர்க ளெல்லாம் அவளது இந்த நிலைமையைப் பார்த்து விட்டு, " ஏன் இப்படி அந்த வாலிபனில் அதிகப் பற்று வைத்ததாக மனம் நெகிழ்கிறீர்கள்? " என்று கேள்வி கேட்டார்கள்.

"என் மகனைப் போன்றே அச்சாக அவன் சாயல் இருக்கிறது. என் மகனுக்கும் இவனுக்குமாய் வித்தியாசமமே தெரியாத உருவமும் வயதும்! அதனால் தான் என் மனதிலிருந்து நேராகத் திறந்த கண்களுடன் இவனைக் கவலையாய்ப் பார்த்து நான் மனம் வாடுகிறேன் "

என்று அவர்களுக்குச் சொல்ல அவ்வேளை கிழவியின் மனக்கவலையை கதை கேட்டவர்கள் எவருமே பெரிதாக எடுக்க வில்லை. ஆனால் கண்ணனுக்கு மாத்திரம் அந்தப் பாட்டியின் மேலே அப்போதிருந்து வரவர பாசம் மனதில் வளர்ந்து கொண்டி ருந்தது.

இன்னமும் இந்த பஸ் பிரயாணம் தொடர்ந்து நடந்தபோது ஒரு இடத்திலே அந்த பஸ் போய் சற்று நேரம் நிறுத்த வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் இருந்தது. சொகுசு பஸ்ஸிற்குள் இருந்தவர்கள் உள்ளே இருந்தபடி அவ்வேளை ஜன்னல் கண்ணாடிகள் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களது பார்வைக்கு நீள வரிசைகளில் கடைகள் தெரிந்தன. அங்கே அவர்கள் பார்வை இலகுவாக விழும் இடத்தில் இனிப்புப் பலகாரம் விற்கிற கடையும் இருந்தது. எல்லா இனிப்பு பலகாரங்களும் கண்ணாடி அடைப் பில்லாத அளவில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. நல்ல உயரத்துக்கு தேன் குழல் இனிப்புப் பலகாரமும் ஒவ்வொன்றுக்கு மேலாக அடுக்கிய அளவில் நிறைய தெரிந்தது. ஆனால் அந்தப் பலகாரங்களில் எல்லாம் நிறைய சிகப்பு நிற குழவிகள் வந்து மொய்த்தபடி இருந்தன.

“ சீ என்ன இது சுத்தமின்றி உள்ளதான இனிப்புகள்” என்று பஸ்ஸிற்குள் உள்ளவர்களெல்லாம் அந்த கடையைப் பார்த்து சபித்துக் கொட்டினார்கள். ஆனால் அந்த பஸ்ஸில் பிரயாணம் பண்ணுகிற ஒருவர் இவ்விடமெல்லாம் பல தடவைகள் சுற்றுலா வென்று வந்து நல்ல அனுபவம் பெற்றவர். அவர் சொன்னார்.

“ இப்படி குழவிகள் வந்து இந்த இனிப்பு பண்டத்தில் மொய்த்தபடியாக இருந்தால்தான் அந்த இனிப்புப்பலகாரம் சுவையானதானது, சிறந்தது! என்று விரும்பி இங்குள்ளவர்கள் எல்லாமே இவைகளை வாங்கி சாப்பிடுவார்கள்”

என்று எல்லோருக்கும் அவர் அந்தவிஷயத்தை முழுமையில் அறிந்துக்கொள்ளக் கூடியதாக விளக்கம் சொல்ல, அங்கிருந்த ஒருவர் உடனே “ஆனாலும் எனக்கு இவற்றை பார்க்கவே வயிற்றை பிரட்டி சத்தி வருகிறது” என்றார்.

பஸ் பிரயாணம், மீண்டும் தொடர்ந்து இன்னொரு இடத்தில் போய் அங்கே தரித்து நின்றது. அங்கும் எவரும் பஸ்ஸிலிருந்து கீழே இறங்கவில்லை. எல்லோரும் உள்ளே இருந்தபடி ஜன்னல் கண்ணாடிகள் வழியாகத்தான் வெளியே உள்ள காட்சிகளை பார்த்தார்கள்.

அங்கே அவர்கள் இருந்த அந்த பஸ்ஸிற்குப் பக்கமாக உள்ள வெளியான இடத்தில் ஒரு காட்சி அவ்வேளை அவர்கள் கவனத்தை ஈர்த்தது. அங்கே ஒரு இளம் பெண் நிலத்தின் மேலே உள்ள துண்டு விரிப்பில் இருந்தபடி ஏதேதோ சினிமாப் பாடல்களை பாடிக் கொண்டிருந்தாள். அப்படி கீழே இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் அவள் மடி மீது ஒரு குழந்தையும் படுத்துக் கிடந்ததாகத்தான் தெரிந்ததது.

"அந்தக் குழந்தைக்கு ஏழெட்டு மாதம் தான் இருக்கும் போல"

என்று தன் வாய்திறந்து எல்லோரும் கேட்கும் படியாக அந்த பஸ்ஸில் பிரயாணம் செய்யும் ஒருவர் சொன்னார். அவர் சொன்னதை அடுத்து அங்கிருந்த பெண் ஒருத்தி சொன்னாள்.

"ஐயோ என்ன பாவமப்பா இது அந்தப் பிள்ளைக்கு ஒரு 13 வயசு தான் இருக்கும் போல தெரியுது! இந்த வயசிலேயே இப்படி ஒரு கொடுமையா கடவுளே இந்தப் பிள்ளைக்கு!" என்று சொல்லியபடி மன வருத்தக் கடலில் அவள் மனம் மூழ்கினாள்.

" மடியிலே உள்ள குழந்தையோடு தனக்கு முன்னால் ஒரு மேளத்தை வைத்து அடித்துக் கொண்டு சிணுங்கல்கள் போன்று தினுசில இந்தச் சின்னஞ் சிறிய பெண்... பாவம் இவள் பிச்சைக்கென்று சினிமாப்பாடல்களையும் பாடுகிறாள் "

என்று கவலை தன்னிலிருந்து மெல்லக் கரைந்து வெளியேறுகிற அளவிற்கு அங்கிருந்த இன்னொரு பெண்ணும் இந்தக் கதையை தன் சுவாசம் இடற சொன்னாள். இந்த பிரயாணத்தின் போது அவள் அங்குள்ள யாருடனும் அதிகமாக் கதைப்பதேயில்லை. ஆனாலும் இந்த காட்சியை கண்ட பின்பு மிக பிரயாசையுடன்தான் இந்தக் கதைகளையெல்லாம் மிக அமைதியாக இருந்தபடி சொன்னாள்.

இந்நேரம் அந்தப் பக்கமாக உள்ள ஒரு கடை கட்டடத்தில் பொருத்தப்பட்டிருந்த உலோக குழாயை பிடித்துக்கொண்டு குபு குபு என்ற கணக்கில் பல குரங்குகள் சேர்ந்ததாய் இறங்கி தரைக்கு வந்தன. அங்கே தெருவோரம் கழிவு உணவுகள் சிறிது அளவு நிலத்தில் சிதறிக் கிடந்தன. எல்லாக் குரங்குகளும் அவ்வேளை பாய்ந்து ஓடியதாக அந்த உணவுச்சிதறல்கள் இழந்த இடம் நோக்கித்தான் சென்றன.

அங்கே வந்ததும் தான் எல்லாக் குரங்குகளும் இறுக்கி நெருக்கி இருந்தபடி உணவுத் துகள்களை கையால் எடுத்து வாயில் வைத்துச் சாப்பிடத் தொடங்கிவிட்டன. சிறிதே கீழே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டுப்பட்டு கிடக்கும் அந்த உணவுப் பருக்கைகளை சாப்பிட அங்கே எத்தனை அளவு தொகையான குரங்குகள்.

அதைப் பார்ப்பதற்கு பஸ்ஸிற்குள் இருந்தவர்களெல்லாம் கண்ணாடி ஜன்னல் பக்கம் வந்து விட்டார்கள். "இந்தச் சீவன்களின்ட பாடு இப்படி கேவலப்பட்டுப் போச்சே "

என்று அப்போது அந்த குரங்குகளின் நிலைமையை கவனித்து விட்டு அங்குள்ளதை விளக்க ஒருவர் இதை சொன்னார். "பாவங்கள் இதுகளைப் பார்க்க மனத்திலே எனக்கு மிக கவலைப் பாரமாக இருக்கிறதப்பா" என்று அதற்குப் பிறகு இன்னொருவர் சொன்னார். "பாருங்கள் ஒரு குரங்கு முழங்கால் போட்டு

நிற்கின்றமாதிரியும் நின்றபடி சாப்பிடுது... சரியான பசிகள் எல்லாத்துக்கும் போல "

" பாவம் தான்! ஏதாவது அந்தச்சாப்பாட்டு கடையில போய் எதையாச்சும் வாங்கி இதுகளுக்கு போட வேணும் போல கிடக்கு" என்று இப்படி எல்லாருமே அங்கு உள்ள அந்த குரங்குகளின் நிலைமையை பார்த்து விட்டு இரக்கத்தில் கடும் பிரயாசை எடுத்ததாய் பல கதைகள் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால் அந்தப் பாட்டியோவென்றால் அவர்களின் இரக்க மதிப்புக் கதைகளில் தானும் சேர்ந்ததாய் பங்கேற்கவேயில்லை. அவள் அங்கு உள்ளவர்களெல்லாம் சொன்ன கதைகளை அடித்து விரட்டுகிறது போன்று தன்னுடைய கருத்தை சொன்னாள்.

" நீங்கள் எல்லோருமே இந்த சுற்றுலா பயணத்திலே இந்த உலகம் முழுக்க உள்ள சங்கதிகளை எல்லாமே பார்த்து வருகிறீர்கள். இங்கே நீங்கள் கண்டு கொண்ட அந்த கஷ்டப்பட்ட ஏழைசனங்களது வாழ்க்கை, அலங்கரிப்பான நிலையிலேயா உங்களுக்கு எல்லாமே கனவாய் தெரிந்தது. இங்கே பிச்சை கேட்டு நிற்பவர்களினது துயரமான குரல்களை காதால் கேட்க முடியவில்லை. அவ்வளவு கவலையாக இருக்கிறது.

ஆனால் அந்த மனிதர்களுக்கு இரங்குவதை விட்டு நீங்கள் இப்படியான பிராணிகளுக்குத்தான் உண்மையில் மன இரக்கம் காட்டுகிறீர்கள். இந்த மிருகங்களை பார்த்துத்தான் நீங்கள் எல்லாம் உங்கள் மனதை வருத்திக் கொள்கிறீர்கள். மிருகங்க ளிலே இரங்குவது நேசம் வைப்பது வேறொரு காரியம். அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருமே வேண்டாம் என்று சொல்லேவேயில்லை. ஆனால் இந்த விஷயங்களையெல்லாம் கடந்ததுமனிதன் மனிதனை மனிதன் நேசிப்பது இரங்குவது உதவி செய்து வாழ்வது என்பது மனிதனுக் குரிய மகத்தான மனிதத்தன்மை அல்லவா மிருகங்களுக்கு இரக்கம் காட்டி மனிதனை துன்புறுத்தலாமா. நாய்க்கு பஞ்சுப் படுக்கை மனிதனுக்கு மாட்டுக்கொட்டிலா..? இது என்ன நியாயம்...? சமயங்கள் கூறும் உண்மையான நெறி எல்லாம் இறந்து விட்டதா'' என்று அவர்களைச் சுற்றிப் படர்ந்திருக்கும் சுவர்களிலிருந்து அவர்களை திறந்த வெளிக்கு இட்டுச் செல்லும் பாதைக்கு கூட்டிச் செல்வது போன்று பாட்டி அறிவான கதை சொன்னார்.

அவளது கதை முடிவிலே பஸ்சும் அந்த இடத்திலிருந்து புறப்பட தொடங்கிவிட்டது. ‘‘இந்தக் கிழவி என்ன கோபுரம் ஏறிக் கரடி கத்துகிற கணக்கில எங்களுக்கெலலாம் பெரிசா சத்தமா ஒரு நியாயம் சொல்லுது. எந்த நேரமும் அகங்காரம் பிடிச்ச கதையளை எங்கள் எல்லோருக்கும் சொல்லிக் சொல்லிக் கொண்டிருக்கிது இந்த கிழவி '' என்று பஸ்ஸிற்குள்ளே உள்ள நடுத்தர வயது பெண்ணொருத்தி தன் பக்கத்து இருக்கையில் இருந்த பெண்ணுக்கு மெதுவாக முணுமுணுத்தாள் போல சொன்னாள்.

இந்நேரம் போய்க் கொண்டிருந்த பஸ், சாலையின் திருப்பத் தில் ஒரு பிறேக் போட்டது. அந்தத் தடையாலே இருக்கையில் சாதாரணமாக இருந்துகொண்டிருந்தவர்கள் ஒரு முறை அடித்து விழுத்துமாப் போல தூக்கிப் போடப்பட்டார்கள். ஆனால் பாட்டி மாத்திரம் அந்நேரம் கம் மென்றதாய் சீற்றில் தன்னை நிலைக்க வைத்ததாய் இருந்து கொண்டிருந்தாள்.

(2021)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அசலாகாது

வீட்டு முற்றதடியிலே நின்று அங்குள்ள பூங்கன்றுகளில் மலர்ந்திருக்கும் பூக்களைப் பார்த்தான் யோசவ். மனத்தில் அவனுக்கு துயரம் ஏற்பட்டிருந்ததால் வழமையாக பூக்களை அங்கு அவன் பார்க்க வருகையிலே ஏற்படும் இன்பம் இன்று அவனுக்கு ஏற்படவில்லை. இன்று அந்த அழகின் தரிசனம் மறைந்து அவனது அம்மாவின் இழப்பு நினைவுதான் மனதில் துயரத்தை ஏற்படுத்தி யிருந்தது.

அவனது வாலிப வயதிலேதான் அம்மா இறந்து போனாள். ஆனாலும் சின்ன வயசுக்காலத்திலே தந்தை இறந்து போன அந்த இழப்பைவிட தாயை இழந்ததுதான் அவனுக்கு வாழ்வின் அனைத்துப் பொக்கிஷங்களையும் இழந்து விட்டது போல கவலை கொடுத்திருந்தது.

யோசேப்புக்கு சகோதரங்கள் என்று யாருமே இருக்க வில்லை. தனக்கு ஒரு துணைதேவையென்று அவன் திருமணமும் செய்து கொள்ளவில்லை. உலகத்திலிருந்து விலகியதாக இருந்து கொண்டு பற்றற்றதான நிலையில்தான் அவன் வாழ்ந்து கொண்டி ருந்தான். என்றாலும் ஆன்மீக வழியில் வாழ்வை ஏற்றுக் கொள்ளவும் அவன் விரும்பவில்லை.

"என்னைப்பற்றி யாருக்கு என்ன கவலை?" என்ற நினைப்பு யோசேப்புக்கு எப்போதுமே இருந்து கொண்டிருந்தது. அதை மறக்க சில பொழுதுகளிலே பிரமாதமாக மதுவையும் அருந்தி வெறிச் சுகத்தையும் அவன் அனுபவித்தான்.

சில பொழுதுகளில் பொழுதுபோக்காக அவன் கவிதை களையும் எழுதுவான். அவைகளை பத்திரிகைகளுக்கும் அவன் அனுப்புவான். அவைகள் வெளிவந்த பின்பு வாசகர்களிடமிருந்து பாராட்டுக்களும் அவனுக்கு கிடைக்கும். சிலர் மதிப்பும் மரியாதை யுமாக அவன் எழுதிய கவிதைகளைப் பற்றி அவனோடு பேசுவார்கள். அவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டு அவனுக்கு மனத்திருப்தியாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று அம்மாவின் இறந்த ஞாபகார்த்த நாள் என்ற படியால் தோட்டத்திலே பூக்களை நிறைய பிடுங்கி எடுத்துக் கொண்டு அவன் சவக்காலைக்குப் போனான். காலில் இருந்த செருப்பை கழற்றி அகற்றி விட்டு காலையிலே காலைப்புல்லும் கால் பாதத்தில் குறு குறுக்க நடந்து தாயின் கல்லறை அருகே போனான். பெருமூச்சு விட்டபடி தாயின் கல்லறையைப் பார்த்தான்.

" அன்பை உனக்கு மீண்டும் தருகிறேன்... மகனே இங்கே வா.." என்று தன் தாய் அப்போது சொல்வதாக தனக்குள்ளே அவன் நினைத்தான். ஆனாலும் அம்மா இப்போது உண்மையி லேயே கல்லறைக்குள் இருந்து பின்பு தன்னுடன் பேசுவது போல அவனுக்கு ஒரு பிரமை ஏற்பட்டது.

" மகனே உன்னை நீயே விரும்பாத அளவிற்கு உன் வாழ்வை ஏன் நீ குழப்புகிறாய்? சின்ன வயதிலே உன் நடையின் துள்ளல் கண்டு நான் பரவசம் அடைந்தேன். அப்படியான முல்லைப் பூக்களது குவியலான மகிழ்வுக்கு மனதில் ஏன் நீ எனக்கு முள்ளைப் போடுகிறாய். கொதிக்கும் மணல் சூடு கூட உன் கால்களை உறிஞ்சிடாமல் உன்னை செல்லமாக அனேக பொழுது இடுப்பிலேயே தூக்கி வளர்த்தவள் நான்... ஆனாலும் நடுவழியில் உன்னை விட்டு நான் பிரிந்ததற்கு உன்னை நீ வற்ற வைத்துக் கொண்டு நீ வாழலாமா? செல்ல மகனே...எனக்கு பதில் சொல்! சொல்! " நல்ல வாழ்வை தனக்கு திருப்பி கொடுக்கும் ஆதரவோடு அம்மா செல்வதாக அவனுக்கு இவ்வேளை இருந்தது.

இதயம் முணுமுணுத்து தடிக்க கண்கள் அவனுக்கு கண்ணீரை பரப்பி விட்டது. அங்கு நின்ற வாறே தொடு வானத்தைப் பார்த்துக் கொண்டு அவன் அழுதான். ஆனாலும் அழுகைக்கு அவன் பிறகும் அடிமையாக வில்லை. அவனது பார்வை இப்போது கல்லறைக்கட்டடத்தின் மேல் கவனமாக விழுந்தது. அந்தக் கட்டடம் சிறிதும் சிதையவில்லை என்பதை இவ்வேளை சரிப் பார்த்துக்கொண்டான். கையில் கொண்டு வந்த பூச்செண்டுக் குள்ளே தன் மனதை குவித்து அதை அப்படியே அம்மாவினது கல்லறையின் மேல் வைத்தான்.

இந்நேரம் அந்தச் சவக்காலைச் சூழலிலுள்ள மரங்களின் குருவிக் கூக்குரல்கள் எல்லாமே அவனுக்கு சத்தமின்றி அடங்கிப் போய்விட்டவையாக தோன்றிற்று அப்படியே மரணத்தில் வேர் பதிந்த மனித வாழ்க்கைப் பற்றிய நினைவுகளோடு அந்த சவக் காலையிலிருந்து வெளியேறி பின்பு வீட்டுக்கு அவன் வந்து சேர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று தன் கவலையை மறக்கக் கூடிய வழி போதையை நாடுவதுதான், என்ற எண்ணம் வழமையைப்போல இன்று அவனுக்கு வரவில்லை. மிக கரிசனமாக தன் அம்மா சொன்ன வார்த்தைகளில் ஒரு தொடர்பை மனம் கொண்டிருப்பதாக அவனுக்கு இப்போது இருந்தது.

அந்த யோசனையோடு அம்மாவின் புகைப்படத்தை தன் படுக்கை அறையிலே சென்று இப்போது பார்க்க வேண்டுமாப்போல மனம் அவனுக்கு ஏவிற்று. உடனே அந்த அறைக்குள் அவன் போனான். புகைப்படத்தில் அம்மாவின் முகத்தைப் பார்த்தான். தாயின் முகம் அவனுக்கு பௌர்ணமி நிலவு போல தெரிந்தது.

புகைப்படத்திலுள்ள அம்மாவின் முகத்தோடு அவள் உயிரோடு இருந்த காலத்து முகத்தை தனக்குள் நினைவில் கொண்டதாய் ஞாபகப் பிடிக்குள் எடுக்க முயற்சித்தான். ஆனாலும் இந்த முயற்சி ஆரம்பத்திலே அவனுக்கு இயலாததாய் இருந்தது. மீண்டும் ஞாபகப்படுத்தி அம்மாவின் அப்போதைய முகத்தை உயிரானதாக ஆக்கி எடுக்க முயற்சித்தான். ஆனாலும் அந்த தேடல் வழியாக உள்ளே போகப்போக அவன் ஞாபகத்திலிருந்து அசலான அந்த உருவம் அவனுக்கு உணர்வில் சரியானதாய் கிடைக்காது நழுவி நழுவிப் போவதாகவே இருந்து கொண்டிருந்தது.

"சின்னப் பிள்ளையிலே தனக்கிருந்த தன்னுடைய உருவம், முகம், இன்னமும் தனக்கு உடனே ஜிவ்வென்றதாய் ஞாபகத்திலே வந்து விட, தினமும் ஞாபகத்தில் வருகிற அம்மாவின் நினைவு மட்டும் ஏன் உயிரான அவள் உருவத்தை மட்டும் சரியாக காட்சிப் படுத்தவில்லை. அது எப்படி?" என்று அவன் தனக்குள்ளும் மனதிலே ஒரு கேள்வியை கேட்டுக்கொண்டான். அந்தக்கேள்வியை மூளையும் "எப்படி?" என்று பல தடவைகள் யோசனையில் கேட்டுக் கொண்டே இருந்தது. அதனோடு அவன் மூளையும் பதிவாய் வைத்திருந்த ஒரு பதிவையும் அவன் ஞாபகத்தில் கொண்டு வந்ததாய் உறுத்திற்கு.

"கவலைகளை எப்படியும் காலமானது போகப்போக ஆற்றும். ஆமாம் இது இயற்கை மனிதனுக்கு அளித்த ஈடேற்றம்." தன் அனுபவத்திலே இப்போது ஏற்பட்டதை வாய்திறந்து அவன் சொல்லிக்கொண்டான். அவனது நெஞ்சமும் இந்த அவனது அனுபவத்தோடு உண்மையாகவே சேர்ந்ததாக இசைந்திருந்தது.

**தமிழ்த்தந்தி (15 பங்குனி 2020)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறும் வெளி

அன்புவும் தமிழும் பெரிதான அன்யோன்யமான நண்பர்கள் என்று சொல்கின்ற அளவிற்கு இல்லை. ஆனாலும் சாதாரணமாக பேசிக்கொள்கிற பழக்கமானது நாளடைவில் அவர்கள் இருவரையும் ஒருங்கிணைந்தவர்கள் ஆக்கியிருந்தது. இருவரும் இளைஞர்கள், வேறு வேறு தனியார் கம்பனிகளில் வேலை பார்த்து கொண்டிருந்தார்கள்.

இருவருக்கும் வாழ்வைச் சுவைத்து வாழ வேண்டும் என்பதிலே நிறையவே ஆசை. அதற்குண்டான வழி பற்றி அவர்கள் பேசிக்கொள்வார்கள். இந்த உரையாடலில் ஆசையின் அசலான முகத்தை ஒருவர் மற்றவரை பார்த்து விளங்கிக் கொள்வார்கள்.

அன்புவிற்கு குதிரை றேஸ் கிளப்புக்கு சென்று அந்தச் சூது ஆடுகிற பழக்கம் இருந்தது. அந்த சூதாட்டத்திலே தினம் தனக்கு வருகிற தோல்வியை போகவிட்டு விட்டு அடுத்தநாள் ஜெயிக்கும் ஆனந்தத்தோடு திரும்பவும் அந்த இடத்திற்கு போகின்றவன்தான் அவன்.

தமிழ் என்பவனைப்பற்றி சொல்லபோனால் இந்த விதமான எந்த தீயப்பழக்கமும் அவனிடம் கிடையாது. இப்படியான அன்புவினது பழக்க வழக்கத்திற்கு தமிழ் சொல்லப்போனால் நேர் எதிர்மறையானவன். நேர் எதிர்த் துருவம் போன்றவன். ஒரு நாள் தமிழ் அன்புவிடம் பேசும் போது “ இந்த முட்டாள் தனத்தை ஏன் நீர் திரும்பச் திரும்பச் செய்கிறீர்” என்று கேட்டான். அன்பு அவன் சொன்னதுக்கு சிரித்தான். பிறகுசொன்னான் “பணத்தின் மேலுள்ள ஆசையில் நான் என் மனத்தை வெகு தூரத்துக்கு அலைய விடுவதில்லை. பணம் என் மனத்தின் மேல் அதிகாரம் செய்வதையும் நான் விரும்புவதில்லை. இந்த விதத்தில் என் ஆசைகளை ஓடுகின்ற ரேஸ் குதிரைகளின் மேலே சுமத்தி விடுகின்றேன். நான் அமைதியாக இருக்க குதிரைகள்தான் என் ஆசைகளை சுமந்துக் கொண்டு ஓடும். ஆந்த குதிரையின் வெற்றி தோல்வியை பிறகு நான் ஏற்றுக் கொள்வேன் ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அன்பு சொன்ன வியாக்கியானம் தமிழின் சிந்தனைக்கு ஒட்டிப்போகிற மாதிரி இருக்கவில்லை. " நீர் இந்த பழக்கத்தால் பலவீனமாகிக் கொண்டு வருவதை மறைப்பதற்காக ஏதோ காரணம் கூறுகிறீர். எமது அன்றைய கால தமிழ் இலக்கியங்களில் பாதி இந்த சூதின் கொடுமையைப் பற்றித்தான் கதை கதையாக சொல்லி இருக்கிறது. சூதாட்டம் என்பது ஒரு வகையில் என்ன செய்கிறோம் என்று தெரியாத அளவிற்கு ஒரு கண நேரத்திலேயே எதைஎதையோ கொடுமைகள் எல்லாவற்றையும் செய்து முடித்து விடும்.. இழப்புகளுக்குப் பிறகு துயரென்னும் நதிதான் "

" இல்லை தமிழ்! நீர் சொல்வது எல்லாமே முன்னைய பழைய காலத்துக் கதை. தருமர் பகடை ஆட்டத்தில் மனைவி திரௌபதியை பணயமாக வைத்து சூதாடியது போல இப்போதெல்லாம் பணத்திற்கு பதிலாக மனைவியை குதிரை றேசில் பணயமாக கட்டி ஆடமுடியாது... இப்போது ஒரு கதை உமக்கு சொல்கிறேன். ஒரு முறை ராமகிருஷ்ணரிடம் ஒருவன் வந்தான். நிறைய தங்க காசுகளை அவரின் காலடியில் கொட்டி விட்டு நின்றான். ராம கிருஷ்ணர் மகிழ்ச்சியடையவில்லை. உடனே அவனை பார்த்து அவர் - என்ன நீ மற்றவர் உன்னைப் பார்த்துப் புகழ வேண்டும் என்று கொட்டுகிறாயா.. மேடையில் நடிப்பது போல உன் செய்கை இருக்கிறதே.. நீ மூட்டைக்குள் திரும்ப இதை போடு.. கங்கைக்குப் போ.. அந்த கங்கைக்குள்ளே இதை கொட்டி விட்டு வா எனக்கு தந்தை நான் கங்கைக்கு தந்து விட்டேன் என்று அவர் சொன்னார். இந்த அவரது செய்கையிலிருந்து நான் உமக்கு என்னத்தை சொல்வதற்கு இருக்கிறேன் என்றால்

" என்ன அதற்கும் இதற்கும் பொருந்த கூடியதாய் ஒரு முடிச்சுப் போடப் பாக்கிறீரோ நீர்? "

" கொஞ்சம் நீர் அமைதியாக இரும் தமிழ். புத்திசாலி போல இருந்து... என்னுடைய சொந்த கருத்தை நான் சொல்லுகின்றேன் கேளும். எனக்கு பசியில்லை பிணியில்லை அதனாலே நான் பணத்துக்கு மரியாதை அளிப்பதில்லை... என் செலவுக்கு போக மிஞ்சுகிற பணத்தை நான் குதிரை றேஸ்சில் செல விடுகிறேன்.. இந்தப் பணம் எல்லாமே என் சொந்தப் பணம். என் பணத்தில் நான் என்ஜோய் பண்ணுகிறேன் அவ்வளவுதான்.! "

" அப்படி என்றால் இது உமக்கு ஒரு பொழுது போக்கு என்கிறீர்? " அன்பு சொன்னதற்கு தமிழ் ஒரு நெருக்கமான கேள்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டான். உடனே இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு அவனை இழுத்துக்கொண்டு வந்து காட்டுவதுபோல அன்பு பதில் விளக்கம் சொன்னான். " மன்னர் காலத்திலிருந்து பொழுது போக்குக்காகத் தானே இந்த சூதாடியதாக இருக்கிறார்கள்.. நானும் அது போல இன்றைய காலத்திலுள்ள குதிரை ரேசிலே பணத்தைக் கட்டுகிறேன். இந்த குதிரை ரேசிலே ஒவ்வொரு நாளும் ஒரு புதிய சுவை எனக்கு இருக்கும். இந்தா இந்தா பார், இன்று என் குதிரை மற்றக் குதிரைகளை விட முந்தப் போகிறது, என்று எனக்கு ஒரு சுறு சுறுப்பு இருக்கும்"

"அப்போ நீர் காசு கட்டிய அந்த குதிரை ஓட முடியாமல் தோற்றுப் போனால் பிறகு என்ன செய்வீர்?"

"அங்கே வென்ற குதிரையை தவறாகப் புரிந்து கொண்டு அதற்கு காசு கட்டாமல் நான் விட்டு விட்டேனே என்று உடனே நான் நினைப்பேன்.. பிறகு அந்தக் குதிரையை அடுத்து வரும் தினங்களில் ஓடவரும் போது மிகவும் மரியாதையாக அதை மனதில் வைத்துக்கொண்டு பணம் அதற்கு கட்டுவேன்.."

" சரி அந்தக் குதிரையும் இப்போது தோற்றால்? "

"இதென்ன கதை? இன்பத்திலிருந்தும் வலியிலிருந்தும் விடுபட்டவன்தான் உண்மையிலேயே ஒரு சூதாட்ட நாயகன்! நானும் அப்படித்தான்! "

"அப்போ ஆசைகளையெல்லாம் ஆவியாகிவிட்ட ஒரு நிலையில்தான்.. உமது பொழுது போக்கான இந்த குதிரை ரேசையும் நீர் ஆடுகிறீர் என்றீர் அப்படித்தானே!" " உண்மைதான் தமிழ்! இதற்கு ஒரு காரணம் நான் உமக்கு சொல்லுகிறேன். சாந்தம் நிலவும் உலகத்துக்குள் சென்று விட வேண்டும் என்று சிலர் நினைத்துக் கொண்டு தியானப் பயிற்சிக்கு செல்கிறார்கள். அவர்கள் தங்கள் பொக்கிசங்களை அங்கெல்லாம் மனத்தால் கூட தொலைக்க மாட்டார்கள். ஆனால் நான் என்மட்டிலே உள்ள பணத்தை குதிரை ரேசில் கொண்டு போய் தொலைக்கிறேன். ஆனாலும் கவனம் கூர்ந்த தீர்மானமாக என் மனதை நான் நிம்மதியாகத்தான் வைத்திருக்கிறேன். கொண்டாட்டமாக என் வாழ்க்கையையும் நான் வாழ்கிறேன்."

" நீர் சொல்வதைப் பார்த்தால் எனக்கு என்னடா இப்படி ஒரு மனிதரான ஆள் இவர்? என்று சொல்லத்தான் ஒரு வேகம் வருகிறது. இந்த உலகத்துக்கு எதிரான பேச்சாக உமது கதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு தெரிகிறது.. உமது குதிரை ரேஸ் சூதாட்ட உலகம் எப்படி இருக்கும் என்று நானும் அறிந்துக் கொள்ள ஒரு நாள் உம்மோடு அவ்விடம் வந்து எல்லாவற்றையும் ஒரு முறை பார்க்க வேண்டும். என்று எனக்கு இப்போது ஆவலாகத்தான் இருக்கிறது''

" ஆமாம் கட்டாயமாக நீர் ஒரு நாள் என்னுடன் அங்கு வந்து பாரும்... நான் உம்மை நாளைய தினமே கூட்டிக் கொண்டு போகிறேனே. அங்கே நீர் வந்து பார்த்தால்தான் ஒரு ஆயிரம் ரூபாய்த் தாள் வெறும் காகிதம் தவிர வேறில்லை என்பதை நேரில் நீர் கண்டு உணர்வீர்.. முதல் முதலாக முதல் முதலாக இதையெல்லாம் நீர் தெரிந்து கொள்ள வரும் போது பணம் தன்னை தலையாக்கி வைத்திருக்கிற மதிப்பு அங்கே உடைந்து சிதறுகிறதை நீர் உமது கண்களூடாக நேரில் காண்பீர். "

"நீர் சொல்வதையெல்லாம் என் கண்ணாலே நேரில் கண்டு அறிய எனக்கு இப்போது ஆவலுண்டு... அந்த சூதாட்ட வட்டத்துக் குள் இருந்து அரை இரவுப் பொழுதைக் கழிப்பவர்களை ஒரு முறை நானும் அங்கு வந்து கண்டு கொள்கிறேனே'' "கண்டிப்பாக! நாளைய நாள் அந்தக் காட்சிகளை காண நான் உமக்கு உதவுவேன்... அப்போ நாளையதினம் இந்த பொழுது படும் நேரத்திலே இந்த இடம் வந்து விடும் இந்த ஏற்பாடு உமக்கு சரிதானே? "

"ஆமாம் நாளைய நாளை தவற விட்டு திரும்பி ஒரு மறுப்பு செய்தி உமக்கு சொல்லாத அளவிலே கட்டாயமாக நான் வருவேன் அன்பு! வருவேன்!'' என்று சொல்லியவாறு புத்தியில் புத்தம் புது யோசனைகளையும் வைத்தப்படி தமிழ் அன்புவிட மிருந்து விடைப்பெற்றவாறே கிளம்பினான்.

அடுத்த நாள் பிரமாதமான ரி.சேட் அணிந்து கொண்டு அன்புவை கண்டுக் கொள்ள தமிழ் வந்திருந்தான். தமிழ் வந்ததும் அன்பு அவனிடம். " அந்த ஹோட்டலில் போய் முதன் முதலில் பால் அப்பம் சாபிட்டு தேநீர் குடிப்போம் " என்று கேட்டான். அவன் கேட்டதற்கு தமிழும் " சரி'' என்று விருப்பம் தெரிவித்தான். இருவரும் பிறகு அந்த ஹோட்டலுக்குப் போய் அப்பம் சாப்பிட்டு தேநீரும் குடித்தார்கள். அதற்கான பணத்தை அன்புதான் முந்திக் கொண்டு கொடுத்தான். இதன் பிறகு அன்பு அவனை குதிரை ரேஸ் சூதாட்ட கிளபுக்கு கூட்டிக் கொண்டு போனான். அங்கே அந்த இடத்தை சென்றடைய மாடிப்படி ஏறி செல்லும் போது பாறைக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கு இடையே செல்லும் சிக்கல்கள் போல தமிழுக்கு இருந்தது. மேலே சென்றதும் அந்த அறையின் கதவை ஒருவன் திறந்து அவர்களை உள்ளே போகவிட்டான்.

உள்ளே போனதும் முதன் முதலாக தமிழ் அந்த நீள அறையை பார்த்தான். எத்தனை நவீன ரி.வி.க்கள் அங்கே சுவரில் பொருத்தப்பட்டிருக்கின்றன. என்பதையும் அவன் அவதானித்தான். அங்கே பாலைவனத்தில் உள்ள சோலையை பார்ப்பது போன்ற சந்தோஷத்தோடு எல்லோருமே அங்கேயுள்ள ரி.வி.க்களை பார்த்த படி இருந்தார்கள்.

ரி.வி.நேரடி அலையில், சக்தி அனைத்தையும் கொண்டு குதிரைகள் றேஸ் ஓடிக் கொண்டிருக்கின்றன. அந்த குதிரைகள் ஓடத்தொடங்கு முன்னே அதற்கு பணம் கட்டியவர்களெல்லாம் பிச்சைப் பாத்திரம் ஏந்திய பிச்சைக்காரர்கள் போல, தமிழுக்கும் அவர்களை பார்க்கும் போது தெரிகிறாற் போல இருந்தது.

குதிரை ஓடி வென்றதிலே பணம் பெறுவதற்கு ஒருவர் கவுண்டர் அண்டைக்கு கதிரையிலிருந்து எழுந்து போகிறார். பணம் பெறச் சொல்லுகின்ற அவர் ஆறு கண்டங்களையும் ஆளும் அரசன் போன்றுதான் நெஞ்சையும் நிமிர்த்தியபடி நடந்தவாறு பணக் கொடுப்பணவு இடத்தை நோக்கி செல்கிறார். அன்புவை அங்கே வரக் கண்டதும் அவனை வரவேற்கும் அவனது சக சூதாட்ட ஆக்களிடமாக என்ன ஒரு கொண்டாட்டம். ஓர் ஆனந்தத்தோடு அவர்களெல்லாம் அன்புவை வறவேற்பதை பார்க்க தமிழுக்கு தன்னோடு இருந்த முன்னைய மனத்தோடான சூதாட்ட வெறுப்பு அஉாநஅடையாளத்தை எடுத்து வெளியே எறிந்துவிட்டது போலத்தான் அப்போது இருந்தது.

அங்கே நீண்ட மேசைகள் இருந்தன. அதற்கருகிலே நிரையாக கதிரைகளும் இருந்தன. தமிழை அங்கு ஒரு கதிரையில் இருக்க விட்டு அன்புவும் அவனருகில் இருந்தான். தமிழ் கதிரையில் இருந்தவாறு அங்குள்ளவர்களை நோட்டம் விட்டான். அங்கிருந்த சிலரின் மேசையிலே மது நிரப்பப்பட்ட கிளாஸ்களும் இருந்தன. அதிலே ஒரு ஸிப் அடித்து, பிற்பாடு வென்று விடத் தகுந்த குதிரைக்கு அவர்கள் பணம் எழுதிக் கொண்டிருந்தார்கள். அங்குள்ள எல்லோரிடமும் பணம் ஒளிந்திருக்கும் பேராசைதான் உண்டு, என்பதாக தமிழும் அவர்களின் முகங்களை பார்த்த அளவில் தன் மனதிலே கணித்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு திக்கு முக்காட்டமாக இருக்கிறது. அவ்வளவாக அதற்குள்ளே சிகரெட்டுப்புகை, தேங்கிப்போன குளம் மாதிரி புகை தங்கிப் போய் ஒரே நாற்றம். நல்ல காற்றையே அனுபவிக்க முடியாததாய் இது என்ன கஷ்டம்? என்றதாய் அவனும் அவதிப் பட்டான். என்றாலும் ரி.வி.யில் குதிரைகள், நான் முந்திய தாய் நீ முந்தியதாய் என்று படு வேகமாக ரேஸ் ஓடுவதை அவனுக்கும் அது ருசித்துப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அந்த ரேஸ் ஓட்டத்தைப் போல நாய்களின் ஓட்டமும் பணப் பந்தயம் கட்டும் சூது விளையாட்டாகத்தான் நடந்து கொண்டிருந்தது. குதிரை ஓட்டத்தை பார்த்துக் கொண்டிருக்கும் ருசியை சிறிது நேரத்துக்கு அந்த நாய்களின் ஓட்டமும் முறித்து விடுவது போலத்தான் தமிழுக்கு இருந்தது. " நாய்களின் ஓட்டத்தைப் பார்த்தீரா தமிழ்... குதிரைகளின் ஓட்டத்தை விட இந்த நாய்களை பாரும் என்ன அட்டகாசமான பாய்ச்சலில் ஓடுகிறது "

"ஆமாம் எனக்கும் இந்த நாய்களது ரேஸ் ஓட்டத்தைப் பார்க்க மனம் உற்சாகமாகத்தான் இருக்கிறது... அது சரி இந்த நாய் ரேஸ்களின் சூதுக்கும் நீர் பணம் கட்டுவீரோ? " "பின்னே என்ன, நான் அவைகளை வெறுப்பேனோ.. திடங்கொண்ட அந்த குதிரைகள் போல வயிறு ஒடுங்கிய மெலிந்த இந்த கருத்த நாய்களும் ஓட்டச் சூதிலே வென்று பணத்தை வாரி வாரி வென்றவர்களுக்கெல்லாம் இறைத்து கொட்டியிருக்கிறது தமிழ்" என்று புயங்கள் பருக்கும் அளவிலே தோள்களை அசைத்தவாறு அன்பு சொன்னான். இதை சொல்லியதோடு, "தமிழ் நான் கவுண்டரில் பணம் கட்டி ரேஸ் எழுத தயாராகி வந்து விடுகிறேன். நீர் இப்படியே அமர்ந்துக் கொள்ளும்... நான் இதோ உடன் வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டு கவுண்டர் அண்டைக்கு கதிரையாலிருந்து அவன் எழுந்து போனான். அவன் எழுந்து போனதும் தனிமையில் தமிழுக்கு ஒரு யோசனை போனது. ஒரு வீட்டையே கேவலமாய் வீழ்ந்திட செய்யும் இந்த சூதின் கொடுமையை அவன் தன் யோசனையிலே உள் வாங்கினான். "இந்த சூதுப் பிரிவுகளால் நட்டத்தைத் தவிர எவன்தான் ஏதும் நன்மைதனை பெற்றான்?" இந்த நினைவு அவனுக்கு இருக்கையில் அன்புவும் அவனுக்குப் பக்கத்தில் வந்து கதிரையில் இருந்து கொண்டான். அவனுடைய கையிலே இப்போது சிறு துண்டு கடதாசிகள் இருப்பதை தமிழ் கண்டான். ஆனாலும் அவன் கைகளிலிருந்ததை தமிழ் அக்கறையாக ஒன்றும் பார்க்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" உமக்கு விஸ்கி " அன்பு அவனைக் கேட்டான்.

" நோ நோ "

" அப்போ கஜீ நட்ஸ் என்றாலும் சாப்பிடும் "

ஓடர் பண்ணினான். உடனே எல்லாமே மேசைக்கு வந்தது. விஸ்கி அன்பு ஒரு சிப் அடித்தான். " ம் கஜீ சாப்பிடும் " அவன் சொல்ல தமிழ் இரண்டு " கஜீ" எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். குதிரைகள் ஓடத் தொடங்கும் முன்னமே அன்பு தனக்கு வெல்லக் கூடிய குதிரைக்கு பணம் எழுதினான். றேஸ் ஆரம்பிக்கவும் கவுன்டரில் அதைக் கொண்டு போய்க் கொடுத்தான். ஓட்டத்தில் அவன் குதிரை முதலாவதாய் வந்தது. அந்தக் குதிரை வென்றதும் சந்தோஷத்திலே மேசையின் மேல் அன்பு தன் கையால் ஒரு பெரிய தட்டு தட்டினான். அவனுக்கு ஒரே மகிழ்ச்சி. உடனே எழுந்து அவன் கவுன்டர் அண்டைப்போனான். அவன் திரும்பி வரும்போது ஒரு கட்டு ரூபாய் நோட்டுக்கள் கையிலி ருந்தது.

அங்குள்ள எல்லோருமே இப்போது அவனைத்தான் கவனித் தார்கள். அவன் கையிலிருந்த பணத்தை கவனித்தார்கள். எல்லோரின் பார்வைக்கும் அவன் ஒளியைப் போல காணப்பட்டான். தன் இருக்கையில் அன்பு வந்து இவ்வேளை இருந்தான். அவன் மூச்சு விடும் காற்று தமிழுக்கு இப்போது தன் சுவாசத்தில் இருக்கும் தன்மையிலாக இருந்தது. "ஒரே ஒரு நிமிடத்துக் குள்ளால் ஒரு சிறு தொகை கட்டி பெறும் குவியல் பணமா?" தமிழுக்கு ஆச்சரியத்தில் முதலில் மூச்சுப்போனது. இரண்டாவது எண்ணமாக "அடுத்தும் றேஸ் எழுதி இப்படி சம்பாதித்துக் கொள்வானா?" என்றும் அவன் யோசித்தான்.

அன்புவிற்கு தன் கையில் இப்போது உள்ள பணம் தன்னுடையது அல்ல என்பதான மனப்போக்கு இருந்தது. அதனால் கையிலிருந்த பணத்தொகையில் ஒரு பங்கை நாய் றேசிக்கு இப்போது அவன் போட்டான். மற்றைய அரைவாசியை குதிரைக்கும் கட்டினான்.

அவன் கட்டிய குதிரை கால்கள் தரையில் பாவாதது போல பறந்த மாதிரி ஓடியது. அவன் றேஸ் கட்டிய கறுப்பு நாயும் ஒட்டு மொத்த வேகமெடுத்து ஓடோடு, ஓடு! என்ற கணக்கில் ஓடியது. முடிவு, இரண்டிலும் அன்பு வென்று கொண்டான். அவன் பிறகு தன் கையிலே வாங்கி வந்த கட்டுக் கட்டான பணத்தைப் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளப்பில் இருந்த எல்லாருக்குமே தலை சுழன்றது. பாம்பின் நகர்வுபோல இவ்வளவு நேரமும் அவ்விடத்தில் வேகமாக செயல்பட்டவர்களெல்லாம் இப்போது வேகம் குன்றி சோம்பலாக இருந்தார்கள்.

அன்பு கிளாசிலிருந்த விஸ்கியை எடுத்து வாயில் பொருத்தி வைத்தப்படி " ர்" என்று வீரியமாக ஒரு இழுவை உள்ளே உறிஞ்சி எடுத்தான். " ம் கஜீ சாப்பிடும் " என்று தமிழைப் பார்த்து பின்பு அவனுக்கும் சொன்னான். அதன் பிறகு பல் தெரியா புன்னகையோடு ரி.வி.யை பார்த்தான். ஒரு நிமிடம் பேசாமல் இருந்து விட்டு பிறகு முழுப்பணத்தையும் கொண்டு போய் கட்டி சீட்டு வாங்கி வந்தான்.

" இன்றைய நாளில் தொடரும் என்னுடைய சூதாட்ட வெற்றியானது நிச்சயம் என்னோடேயாகத்தான் கூடவாக இன்னும் வந்துகொண்டிருக்கப்போகிறது. அதனால் இன்றைய லக்கு எனக்கு எப்படியும் பிடுங்கப்படாது" என்று அன்பு முழுமையாக நம்பினான். அவன் பார்வையில் இப்போது அவனுக்கு காணப்பட்ட நம்பிக்கைக்குப் பாத்திரமான குதிரையானது இந்த ரேசிலே உலகையும் தாண்டியும் ஓடும் என்று அன்பு கணக்கு போட்டான்.

அந்த யோசனையோடு சரியான விழிப்புடன் அந்த குதிரையின்மேல் முழுத்தொகைப் பணத்தையும் எழுதி அதை கவுண்டரில் கொண்டுபோய் கொடுத்தான் அந்தக்கணமே குதிரை ரேஸ் தொடங்கிவிட்டது. அவன் பணம் கட்டிய குதிரை தன் சக்தியெல்லாம்

சேர்த்து வீணாக்கிய அளவுக்குத்தான் வேகமாக ஓடுகிறது. அதன் ஓட்டம் அருமை! வெகு அருமை! குதிரை ஓட்டுனரும் குதிரையின் மூர்க்கத்தனத்துக்கு ஒத்துழைப்பு கொடுத்து கொண்டிருந்தான். ஆனாலும் கடைசி செகண்ட் அந்த குதிரையின் தோல்வியை ஒப்புக் கொண்ட கணக்காக பிந்திப் போனதாகிவிட்டது. ஆனாலும் அன்பு அந்தக் குதிரையின் தோல்வியை தழுவிப் பிற்பாடும் பரபரக்காமல் தான் இருந்தான். "எல்லா பணமும் வீணாகிப் போச்சே" என்ற தாய் ஒரு வார்த்தையேனும் தமிழோடு அவன் கதைக்க வேயில்லை. "தோல்விக்கு தயாராகிக் கொள்ளக் கூடிய மனம் உடையவன்தான் சூதாட்ட விளையாட் டுக்கு போக வேண்டும்" அவன் தமிழை பார்த்து இதை சொல்லிவிட்டு சிரித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழ்! சூதாட்டத்திலே, மேதைத்தனமும் இல்லை, முட்டாள் தனமும் இல்லை. சரியாக சொன்னால் இன்னும் முயற்சி செய்து கொண்டிருப்பதுதான் இந்த சூதாட்ட விளையாட்டுக்கான பாதை... சரி இனி இந்த இடத்தை விட்டு நாங்கள் வெளியேறி விடுவோமே "

அன்பு இதை சொல்லிவிட்டு கதிரையிலிருந்து எழுந்தான். அவன் எழ தமிழும் இருக்கையிலிருந்து எழுந்தான். இப்போது கிளப்பை விட்டு வெளியே வந்த அவர்கள் இருவரும் அந்த வீதி வழியாக நடந்து கொண்டிருந்தார்கள். இந்நேரம் அன்பு தமிழைப் பார்த்து " ஒரு கதை நான் இப்போது உமக்கு சொல்லப்போகிறேன் தமிழ் அது என்னவென்றால் கடவுள் இருக்கிறாரல்லவா கடவுள் "

" ம்...ம்..."

" அந்தக் கடவுள் பாரும் தமிழ் வந்து எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பவர்களைதான் நேசிக்கிறாராம்! அவருக்கு அப்படி ஏன் ஒரு குணம் இருக்கிறது என்றால் அவருக்கு.. அவருக்கு துயரமான முகங்களை பார்க்கப் பிடிக்காதாம்" என்று சொல்லி விட்டு தயார் நிலையில் இருந்த பெரிய சிரிப்பை அவன் சிரித்தான்.

அவன் சிரிப்பதை பார்த்து தமிழ் அவனுடன் அதை பகிர்ந்துக் கொண்ட அளவிலே தானும் சிரிக்கவில்லை. அவன் தன் யோசனையிலேயே யாத்திரையாகி இப்போது போகிற நிலையிலே இருந்தான். அவனுக்கு மனதிலே இப்போது ஓர் இமாலயச் சுமை பாரமாக அழுத்திக் கொண்டிருந்தது. " சீ... பெற்ற வெற்றியோடு கையிலுள்ள மொத்த பணத்துடன் அந்த நேரமே அந்த இடத்தை விட்டு அன்பு வெளியேறியிருந்தால், அந்தப் பணத்தை இவன் சிறப்பாக அனுபவித்திருக்கலாமே? அப்படி சரியான பாதையில் போகாமல் விட்டு விட்டு தேவையில் லாத இவரின் பேச்சுகள் என்ன ஒரு பேச்சு! வெறுமனே பேசுவதற்காக பேசும் பேச்சு "

இப்படி யோசித்தாலும் தமிழ் வாய்த்திறந்து அவனுடன் அதைப்பற்றியதாய் ஒன்றுமே மறுபடி பேசவே இல்லை.

**ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை (பங்குனி 2022)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைக்கு மேல்



இருக்கைகள் நிறைந்த பேருந்திலே பின்னால் உள்ள ஆசனத்தில் இருந்தவாறு அவன் பிரயாணம் பண்ணிக் கொண்டிருந்தான். அந்தப் பேருந்து பல்லாயிரம் சக்கரங்களை உடையதாக இருந்து உருண்டு ஓடுவது போல அவனுக்குள் ஒரு நினைவு இருந்து. அதைப்போல பெரும் வேகமெடுத்து அவன் யோசனையும் ஓடிக் கொண்டிருந்தது. இவ்வளவு காலமாக அவன் வாழ்ந்த சிறை வாழ்க் கையிலே அவன் நிம்மதியாக வானத்தைப் பார்த்தானா, இரவிலே புதிது புதிதாய்த் தோன்றும் நட்சத்திரங்களைப் பார்த்தானா, அழகிய பூக்களை எல்லாம் ரசித்துப்பார்த்தானா, கைகளைக்கால்களை ஒழுங்காக கழுவிக் கொண்டானா, என்று உள்ள இப்படியான செயல்முறைகள் ஒன்றுமில்லையே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மனிதருக்குமே பசித்தால் தின்ன உணவு வேண்டும். அதற்காக எந்தவித உணவைச் சாப்பிட்டாலும் பசி அடங்கும். ஆனால் நித்திரைக்குப் போனால் நீட்டி நிமிர்ந்தும் திரும்பி உருண்டும் நிம்மதியாகப்படுக்க வேண்டுமே? ஆனாலும் சிறை வாழ்விலே அவனுக்கு நித்திரை என்பது எவ்வளவு கேவலமானதாக ஆகியிருந்தது. எத்தனை வருடத்து இரவுகள் இப்படி அவனுக்கு சபிக்கப்பட்ட நித்திரையாக இருந்தது. கால்களை நீட்டி படுக்க முடியாமல் சுருண்டு கிடக்கும் பாம்பினைப் போலல்லவா தன் தொடைகளும் கசகசக்க வேதனையோடு அவன் படுத்து வந்தான்.

உடலோடு உடல் ஒட்டியதாய் அவனோடு அங்கே படுத்தி ருந்தவர்கள் எல்லாமே கொலை எனும் படுபாதகமான செயலை செய்யத் தெரிந்ததான மனிதர்கள். மனிதர்களைக் கொலை செய்வது எனக்கு தொழில் என்றும் சொல்லக் கூடியதாகவும் ஒருவன் அவனுக்கும் இதை சொல்லியும் இருந்தான்.

கொலை செய்தவர்களின் முகச்சாயலில் அவர்கள் செய்த அந்த கொடூரமான குற்றத்தின் காட்சி விதைத்தபடியே எந்நேரமும் இருந்து கொண்டிருக்கிறது. என்னத்தை ஒன்றைக் கதைத்தாலும் அவர்களுடைய அந்த சொற்களின் உச்சரிப்பிலே அவர்கள் செய்த அந்த கொடூர செயலின் ஆணவமும் சேர்ந்து நடந்து வருகிறது. கொடிய சாத்தான் புணர்ந்து பிறந்த மனிதர்கள் போலத்தான் அனேகம் பேர் இப்படி ஆகி விடுகிறார்கள்.

மற்றைய கொலைக்காரர்களெல்லாம் வழமையாக இந்த குற்றம் செய்து சிறைக்கு வருபவர்களை விசாரித்து அறிந்து கொள்வது போல இவன் செய்த கொலையைப் பற்றியும் அறிய எல்லா விதமான கேள்விகளையும் இவனிடத்தில் கேட்டார்கள்.

சின்னப்புல் இவனை குத்தியது போலத்தான் தெரியாத நோவில் முதன் முதலில் கேட்வனின் கேள்வி இவனை நோக்கிய தாக இருந்தது.

பிற்பாடு கல்லாய் அம்பாய், வெடி விழுந்த மாதிரியும் பல கேள்விகள் உறைப்பானவர்களிடமிருந்தும் கேட்கப்பட்டது. இந்த அனுபவ அறிவுகளை கேட்கவும் ஒரு சிலர் அவனுக்கு அருகில் இருந்த கொலைகாரர்களை மதித்து அவர்களுக்கு பின்னாலே தாங்களும் இருந்து கொண்டிருந்தார்கள். கொலைக்கார கும்பலிலே விழி சிவந்த ஒருவன் கேட்ட முதல் கேள்வி: "யாரை நீ கொலை செய்தாய்?" என்பதாக இருந்தது. அவன் கேட்ட கேள்விக்கு அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தரப்பில் அருகில் இருந்த எல்லோருமே கட்டுப்பட்டு விட்டார்கள். "இந்தக் கேள்விக்கு என்ன பதில் அவன் சொல்லப் போகிறான்?" என எதிர்பார்த்து வேட்டைக் குறி பார்ப்பது போல அவனையே பார்க்கிறார்கள்.

அவன் கேட்ட கேள்வியிலே இவனுக்கு உடனே உடலில் இரத்த ஓட்டம் நிறுத்தப்பட்டு உறைகிறமாதிரியான உணர்வாக இருக்கிறது. அந்தக்கொடூரமான காட்சி முழுமையாக அவனுக்குள் தெரிகிறது. சுவாசத்துவாரங்கள் வழியாக சுடு மூச்சு அவனுக்கு வெளியேறகிறது. "என்ன பதிலைக் காணோம் காதுகளற்ற செவிடனா நீ..? உடனே பதில் சொல்?" என்கிறான் சிவப்பு கொம்புகள் முளைத்தது மாதிரி கோபத்தில் கொதித்த ஒருவன். அவனது சிவந்த மூக்கையும் கண்டுவிட்டு, மெல்ல நடந்து போகும் ஒரு பூனையைப் போல இவன் ஆகிவிட்டான்.

இதற்கு காரணம் தான் என்ன வென்றால்! கதையை வெளியே சொல்லப்போனால், அவனது அனேக வாழ்வின் காலத்தின் இருப்பு இந்த சிறைக்குள்தானே இனிமேலாக இருந்து கடத்திக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அப்படியான இந்த வாழ்விலே இவர்களுடன் இங்கே பகைத்தால் நண்டுக் கொடுக்கைப்போல இவர்களெல்லாம் கவ்வி இழுத்துக் துன்பம் செய்வார்கள். மனிதர்களை கொலை செய்வதிலே மனம் சமாதானம் கொள்ளும் மனிதர்கள் இவர்கள். என்றதாகவெல்லாம் தனக்குள் அவன் யோசித்து விட்டு, "கட்டிய மனைவியைத்தான் நான் கொலை செய்தேன்" என்றான்.

அவன் மனைவியைக் கொன்றேன் என்று சொன்னதிலே மற்றைய கொலைகாரர்களுக்கெல்லாம் அவனைத் தங்களது தகுதியிலே இணைத்துப் பார்ப்பதற்கு விருப்பில்லாதிருக்கிறது. "வீரம் மிக்க ஒரு ஆண் மகனை சந்திப்போம் என்று பார்த்தால்.. இப்படி இவன் ஒரு புல் போல அற்பமாக இருக்கிறானே!" என்று அவர்கள் யோசித்தார்கள். என்றாலும், அவர்களுக்குள்ளே ஒருவன், அவன் அப்படி சொன்னவுடனே மிகச் சாதாரணமான வெறுமை நிலையுடன்.

"ஏன் நீ அவளைக் கொலை செய்தாய்?" என்ற ஒரு கேள்வியை எறிந்தான். இவனுக்கு உடனே அந்தக் கேள்விக்கு பதில் சொல்லக்கூடியதான இலகுவாக இருந்தது. "அவளுக்கு இன்னொருவனுடன் தொடர்பு உண்டு" "அப்படியென்றால் நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணால் அதைக்கண்டாயா?""இல்லை ஆனாலும் இந்த அவளது கள்ளம் குள்ளம் எனக்கு நிச்சயமாக வெளிச்சமாகத் தெரியும்"

" சந்தேகம்...ம்..."

" இல்லை இது பிரகாசமான வெளிச்சமான உண்மை.....! நிச்சயமாக சொல்லக்கூடிய மகா துரோகம் "

" சரி சரி உன் நிலைமை எனக்கு விளங்குகிறது.... இந்த சந்தேத்தில் நீ என் நேரமும் கோபத்தில் ஒரு குருவியின் பதற்றச் சிறகடிப்புடனான நிலைமையில் இருந்திருக்கிறாய் என்ன? "

" ம்.... ம்..."

"சரி சரி இனி மிகுதி சிலவற்றை நீ சொல்லத் தேவையில்லை.. இந்த உனது சந்தேகத்தின் மூலம் நீ அளவுக்கு அதிகமாகவும் மதுவை குடிக்க ஆரம்பித்திருப்பாய்? "

" ம்...."

" ஆ அப்படியாக நெருப்பைப்போல் சுவாலிக்கும் கோபக் கண்களோடு வெறியில் என்ன பேசுவது என்று ஒன்றும் அறியாமல் அவளை நீ பேசி ஏசியிருப்பாய் "

" ம்...."

" உதைத்தும் அடித்தும் ஆக்கினையும் செய்திருப்பாய்? "

" ம்...."

" அதற்குப் பிறகு உனக்கு சந்தேக நஞ்சு தலைக்கு மேலே உச்சிப்பகுதியில் மிகையாக ஏறி ஐந்து தலைகள் முளைத்தது போல ஆகி அவையெல்லாம் தனித்தனியாக அசைந்திருக்கும்... இதனோடு உனக்கு அவளை கொலை செய்து பழி தீர்க்கும் எண்ணம் உன் இரத்த ஓட்டத்திலேயே நிச்சயமாகிவிட்டது. அப்படியாக இப்போது நீ அவளை கொலை செய்ய திட்டமிட்டும் விட்டாய் "

என்று அவன் இப்படியெல்லாம் கேட்டவுடனே இவன் சிதறத் தவித்து இப்போது உடைபடும் சத்தத்தில் " ம்" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ சரி சரி நீ ம் போட்டதிலேயே இங்கே உனக்கருகில் இருக்கும். எங்கள் எல்லோருக்கும் இப்போது எல்லாமே விளங்கி விட்டது. இந்த கொலை என்று சொல்லப்படுவதிலே விதம் விதமான கொலை செய்முறைகள் இருக்கின்றன... உறக்கத்திலே வைத்து கொலை செய்கிற கொலைகாரர்கள் இருக்கிறார்கள்.... கொல்லத் துரத்தியும் கொலை செய்கிறவர்களும் இருக்கிறார்கள். காலைப்பிடித்து என்னைக் கொலை செய்யாதே என்று கெஞ்சும் போதும் அவர்களை கொலை செய்பவர்களும் இருக்கிறார்கள். இப்படியாக செய்யும் கொலைகளது தன்மையிலே உன் நுட்பம் என்ன அதைச் சொல்லு? ” என்று அவன் கேட்டவுடனே சுவாசக் காற்றை சுவாசப்பைகளிலே அவன் நன்றாக மூச்சிழுத்து நிரப்பினான். வன்மம் தெறிக்கும் ஆத்திரமான முகபாவம் அவனிலே இப்போது வெளிப்பட்டது. அவன் தனக்குச் சார்பான அந்த நிகழ்வை சொல்லத் தொடங்கினான்.

“ அந்த நேரம் அவள் அம்மிக்குப் பக்கத்திலே சேலையை இழுத்து ஒதுக்கியதாய் வைத்தபடி இருந்து கொண்டிருந்தாள். ஒரு காலை நீட்டி மறு காலை மடக்கியபடி, பலகையில் இருந்தபடி நெருக்கியதாக வைத்த மிளகாயை அப்போது அரைத்தபடி இருந்தாள். அம்மியிலே குழவி இழுபடும் சத்தம் சீராக கேட்டுக் கொண்டிருந்தது. நான் அவளுக்குப் பின்னாலே கோடாலியால் ஓங்கி அவள் தலையிலே ஒரு கொத்து கொத்தினேன். அவள் தலையை அந்த வெட்டு அறுப்பாக்கி பிளந்தது. ஈனமான குரல் ஒன்றுதான்! அவள் உதடுகளில் இருந்து அப்போது வெளிவந்தது. அந்த நாசக்காறி உடல் துடிப்போடு அப்படியே செத்துப்போனாள்.”

சொல்லிவிட்டு ஒரு பைத்தியக்காரனைப் போல அவன் சிரித்தான். பிறகு கண்களை மூடினான். கட்டிலுக்குக் கீழே புகுந்து மறைவதைப்போல இன்னும் ஒரு செயலை தான் அவர்களிடம் சொல்லாமல் மறைத்தது அவனுக்கு நலம் என்றதாகவே அப்போது எச்சரிக்கையாக அது விளங்கியது. தலையில் அவளுக்குப் போட்ட கோடாலி வெட்டோடு இன்னும் கோபத்தில் வெறியாக மாறி, மல்லாந்து விழுந்து கிடந்தவளின் பிறப்புறுப்பையும் அவன் கோடலியாலே அவன் ஓங்கி கொத்தியிருந்தான்.

இரத்தம் குடிக்கும் காட்டேறியாக மாறி இரத்தத்தையும் அவன் குடித்தும் இருந்தான். ஆனாலும் இந்த இறுதி வரிகளை தன் வாயால் வெளிவிட்டால் தன்னை அவர்கள் காணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதெல்லாம் நினைவிலே அவர்களுக்கு இந்த நிகழ்வே உடன் வந்து அது ஈன்று கொண்டே இருக்கும்.

என்ற யோசனையிலே தான் அதை அறுத்து விட்டு அவர்களுக்கு மறைத்து முகம் காட்டாததாக அளவில் அதை சொல்லாது வைத்திருந்தான்.

அவனது இந்த கதை எல்லாவற்றையும் கேட்டபின்பு அங்கிருந்தவர்களெல்லாம்.

"உன்னிடம் எதுவுமே இல்லை" என்று சொல்லியபடி வேட்டை முடிந்து ஒன்றும் அகப்படாததில் திரும்புகிறதான ஒரு வித சோர்வோடு அந்த இடத்தை விட்டு அகன்று விட்டார்கள். அவர்கள் போனபின்பு அவனுக்கு தன் அன்றைய கால செயல்களை நினைத்ததில் தன் தலைமுடி எண்ணிக்கை அளவினதாய்த்துன்பம் விஷம் ஏறியதாய் மனத்திலிருந்து மேலே ஏறிக் கொண்டிருந்தது. இவ்விதத்திலேதான் துன்பம் ஒழுகுவதுபோல ஆயுள் சிறைத் தண்டனையில் காலம் அவனுக்கு என்பதும் கசிந்தவாறாக கடந்து முடிவுற்றது.

சிறை உலக வாழ்கையில் இருந்து அவன் இப்பொழுது விடுதலையாகி விட்டான். இதோ இப்பொழுது இந்த பேருந்திலே அவன் பிரயாணம் பண்ணுகிறவனாக இருந்து கொண்டிருக்கிறான்.

அவன் மனதுக்குள்ளே எங்கோ ஒரு மூலையில் ரோஜாக்கள் பூத்திருப்பது போன்ற மகிழ்வு இருக்கிறது. ஐந்து வயதிலே தன் மகளை தனியே பரிதவிக்கவிட்டு சிறைக்கு வந்ததன் பின்பு அவளை இவன் இவ்வளவு காலமும் கண்ணால் கண்டதில்லை. தன் நினைவிலே பத்திரப்படுத்தி வைத்திருக்கும் அந்தப் பிஞ்சு முகம் இன்று என்ன மாற்றத்தில் இருக்கும்?

இந்தப்பாசம் நினைவில் தூக்கிச் செல்ல, ஆயிரம் சொட்டுக்கள் போல அவன் கண்களிலிருந்து கண்ணீர் வடிகிறது.

எல்லாக் கண்ணீரையும் அகற்ற இமைகள் திறந்து திறந்து மூடிக்கொண்டிருக்கின்றன. தான் செய்த தவறுகளையெல்லாம் ஒவ்வொன்றாய் மனத்திரையில் எடுத்து அவன் மனம், ஐயோ வென்று அழுகிறது. அந்தத் துக்கத்தில் அலை சுருண்டது போல வயது போய்விட்ட அவன் உடலும் இன்னுமாக சுருள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை தூக்கிச் செல்வதாய் இப்போது வந்து கொண்டிருந்த பேருந்து அவன் வரவேண்டிய இடத்துக்கு இப்போது வந்து சேர்ந்து விட்டது. பல வருடங்களை கவ்விச் சென்றது போல கடந்து போய் விட்ட அந்த இடம் பார்ப்பதற்கு அவனுக்கு இப்போது புதிய தோற்றம் பெற்றதாக தெரிகிறது. பஸ்ஸை விட்டு இறங்கி பலரிடம் கஷ்டப்பட்டு விசாரித்துத் தெரிந்து கொண்டு தன் மகள் இருக்கும் வீட்டுக்கு அவன் போனான்.

எந்த மாற்றத்திற்கும் நகராதது போல – அன்றிருந்த அந்த இரண்டு மரங்களும் அவனது வீட்டுக்கு முன்னே முற்றத்தில் இன்னமும் இருக்கின்றன. உயர்த்திய கிளைகளையுடைய அந்த மரத்தை அவன் பார்த்தான். காற்றிலே அந்த மரத்தின் இலைகள் சல சலத்துக்கொண்டிருந்தன. அதைக் காணவும் அவனது ஆன்மாவானது நிறைவு ஏற்பட்டதுபோல ஒரு வித நிம்மதியை அடைந்தது.

இவ்வளவு காலமும் காணாமல் இருந்த தன் மகளை இப்போது இவன் அந்த வீட்டிலே கண்டான். தகப்பனைக் காணவும் மகளிடமிருந்து ஒரு விசும்பல் உடனே வந்தது.

“அப்பா” என்று கூறிய பாசமான குரல், துக்கமான குரலில் அவன் மனதைத் தொட்டது.

ஆனால் பெற்ற தகப்பன் என்கிற முழுமையின் உரிமையில் வேறு எதையுமே அவள் அவனுடன் கதைக்கவில்லை. தன்னைக் கண்டதும் அப்பாவின் கண்களில் கண்ணீர், மழை போல ஒழுகுகிறதை அவள் காண்கிறாள்.

ஒரு துயரக் குரலில் எதை எதையோவெல்லாம் சொல்லி தகப்பன் தேம்புவதையும் அவள் பார்க்கிறாள்.

ஆனாலும் ஒரு வாள் போல வெட்டும் கோபக்கதைகள் எதையுமே அவள் கதைக்கவில்லை.

என்றாலும் தன்னைப்பற்றிய கதையை இப்போழுது அவள் கூறிகிறாள்.

“நிராதரவாக எல்லோராலும் கைவிடப்பட்ட எனக்கு இந்தக் கழுசடைத் தொழில் தான் சோறு போட்டு வளர்ந்திக்கிறது அப்பா! அருவருக்கும் பழக்கமுடைய விரியன்கள் தான் என்னை இப்பொழுது வாழ வைத்து வருகிறார்கள் ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அவள் அப்படி சொல்லச் சொல்ல எரியும் உலோகம் அவன் நெஞ்சுக்குள் கொதித்து உருகி வழிகிறது போல இருக்கிறது.

உடல் திடமில்லாத இன்றைய முதுமையிலே அவன் கைகள் நடுங்குகின்றன.

"அப்பா உங்களுக்கு பசியாக இருக்கும் முதலில் சாப்பிடுங்கள் அப்பா "

வரண்ட அவன் முகம் பார்த்து அவள் சொல்கிறாள். அவன் மகள் கேட்டதற்கு ஒரு பதிலும் சொல்லவில்லை. சாறுகள் பிழி பட்டது போன்றுதான் சக்கையின் கிடப்பில் அவன் இருந்தான்.

சோகை பிடித்தது போல காணப்பட்ட அவனை அவள் கையில் பிடித்தாய் கூட்டிக் கொண்டு சமையல் அறைக்குள் போனாள். அங்கே பாய்போட்டு அவனை அதிலே அவள் இருக்கச் செய்தாள்.

மடித்து நன்றாய் இருக்க முடியாத கால்களை மிகச் சிரமப்பட்டு உழத்தியே பிறகு அவன் ஒருவாறு அதில் இருந்தான்.

அங்கே அவனுக்கு முன்னாலே வைக்கப்படட்ட உணவு, அன்றைய அந்த காலத்திலிருந்து நேற்று வரை மட்டும் அவனுக்கு சாப்பிட கிடைக்காததான உணவு வகைகளாக இருந்தது.

அவற்றை சாப்பிடும் போது அவனுக்கு வாய்க்கு எவ்வளவோ இனிமை இருந்தாலும் மனசுக்குள் ஏனோ அவனுக்கு எரிந்தது. நாவறண்டது. தொண்டை சுருங்கியது. நீண்ட குவளையிலே அவனுக்கு தண்ணீர் குடிக்க வேண்டும் போல உடனே அவனுக்கு அடங்காததாகமாய் இருந்தது. அவன் நசிந்த குரலில் " தண்ணீரம் மாதந்த... தண்ணீர் தண்ணீர் " என்றான்.

அப்பா இப்படி கிடந்து தண்ணீரென்று தவிக்கிறாரே என்று உடனே வீச்சில் தண்ணீர்க் கோப்பையை எடுத்து அவன் கையில் அவள் கொடுத்தாள். வாயிலே உடனே அவன் தண்ணீர்க் கோப்பையை கை நடுக்கத்தோடு வைத்தபடி தண்ணீர் குடிக்க முயற்சித்தான். ஆனால் கை நடுக்குற்று கோப்பையிலுள்ள தண்ணீர் அப்போது இருபக்கமாகவும் கீழே வீசி கொட்டியது. உடனே அவள் தன் ஒரு கையால் தகப்பனை பிடித்தபடியும் மறுகையால் கோப்பையை பிடித்தடியும் அவனுக்கு உதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தாள். மிக சிரமப்பட்டு இரண்டு மிடறு அவன் வாய்க்குள் தண்ணீர் ஏற்று விழுங்கும் வரை அவளுக்கு தகப்பன் மேலே அப்பொழுது கவனமான கண் விழிப்பு இருந்தது.

ஆனாலும் குடித்த இரண்டு மிடறு தண்ணீரோடு எதுவுமே பேச முடியாது அவன் மடங்கினான். அப்படியே பாயிலே படுப்பது போல அவன் பிறகு உடலை சரித்தான்.

அனல் கொண்ட உடல் முழுக்கவுமாக அவ்வேளை அவனுக்கு குளிர்ந்து விட்டது.

"அப்பா அப்பா" என்று அவள் கூப்பிடுவதெல்லாம் எங்கேயோ தொலைவிலிருந்து கேட்பது போல அவனுக்கு இப்போது கேட்காத அளவிலே புதையுண்டதாய் ஆகிக் கொண்டிருந்தது.

**ஜீவநதி சஞ்சிகை (பங்குனி 2022)**
**மெட்றோ நியூஸ் (2022)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்பொழுதும் உயர்ந்தவர்...

அமுதன் தன் வாழ்நாளில் பெரிய பெரிய மனிதர்களையெல்லாம் சந்தித்திருக்கின்றான். அவர்களுடன் நன்றாக சேர்ந்து இவன் பழகியிருக்கிறான். அவர்களெல்லாம் கட்டுக் கட்டாகப் புத்தகங் களை வைத்துப் படித்த மிகப்பெரிய அறிவாளிகள். இந்த வித தகுதியிலே அவர்களின் மதிப்பை அளவிட்டுச் சொல்ல முடியாது.

அவர்கள் பேச தொடங்கி விட்டால் அறிவின் ஆரவாரம் அடங்கிப் போகிற அளவிற்கு இருக்காது. தெளிவாகத்தான் அப்படி யாக சோராமல் அவர்கள் பேசுவார்கள். ஆனாலும் ஆணவ உணர்வு அவர்களது பேச்சில் அடங்கிப் போகாததாகவே வெளிப் பட்டுக் கொண்டிருக்கும். பரபரப்பான இப்படியானவர்களின் பேச்சுக்களை காதில் கேட்டு இவர்களெல்லாம் ஒன்றே என்பது போலத்தான் முகுந்தனுக்கு இப்போது வெறுப்பு தட்டிவிட்டது. இதன் பின்புதான் மௌனம், சாந்தம் போன்ற நற்குணங்கள் யாரிடமும் அப்படி தான் பழகியவர்களிடம் உள்ளது என்று தன் யோசனையிலே அவன் ஆராய பிறகு வெளிக்கிட்டான்.

இவற்றையெல்லாம் யோசித்துப்பார்க்க, சிந்திக்க சிந்திக்க, அப்படி மதிக்கதக்க ஒருவரை தான் பழகியவர்களிடமிருந்து அவனால் கண்டுகொள்ளவே முடியவில்லை. ஆனாலும் யோசனை யில் மேல் தளத்திற்கு அவன் போன போது அங்கே ஒருவரை அழகாக கண்டடைந்து கொண்டதில் அவன் மனம் ஒரு மலரைப் போல சந்தோஷத்தில் விரிந்தது.

ஒரு மனிதன் "சூப்பர்" மனிதனாக கணிக்கப்பட வேண்டிய தகுதியை பெறவேண்டும் என்றால் அவன் பொறுமை என்ற நற்குணத்தை உடையவராகவே இருக்க வேண்டும். மனிதருக்கே உரித்தான குணங்களில் மிக முக்கியமானது பொறுமைதான். அதற்கு பரிபூரணமான தகுதி உடையவரைத்தான் தன் நினைவிலே இப்போது அவன் கண்டுபிடித்ததில் நிச்சயித்தான்.

தன் கண்ணாலே பார்க்க வாழ்க்கை முழுவதிலும் பொறுமையை கடைபிடித்து நடந்தவர் தன்னை பெற்ற தகப்பன் தான் என்பதிலே அதற்கு அத்தாட்சியான காட்சிகள் அவனுக்கு ஞாபகத்திலே வெளிப்படத் தொடங்கி விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனுக்கு அருமையான அனுபவங்கள் தந்த வருடங்களென்றால் அது அவனுடைய இளமைக்காலம் தான். வாழ்வில் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடியுமோ அவ்வளவு அருமையாக அந்த சந்தோசத்தை அனுபவிக்க கூடிய வயது இளமைக்காலம் தானே?

ஆனாலும் முகுந்தனுக்கு அந்த வயதிலும்கூட தன்னுடைய தகப்பனை எப்பொழுதும் பார்க்கும் போதும் அவர் மகிழ்ச்சியுடன் முகம் வாடாமல் சிரித்தப்படியே இருக்கிறாரே என்பதில் தான் ஆச்சரியமாக இருந்தது.

"கடவுளால் ஆசீர் வதிக்கப்பட்டவர்கள் அவர்களின் வாழ்நாள் முழுக்க மன மகிழ்ச்சியாகவே வாழ்வார்களாம்". இந்த வசனத்தை ஒரு புத்தகத்திலே அவன் படிந்திருந்தான். அப்படி எழுதப்பட்ட வசனத்திலே என்ன அப்படி ஒரு பிழை சொல்லவென்று உள்ளது. பொறுமையோடும் ஏக்கத்தோடும் புழுங்கிக்கொண்டு சில பொழுது சீறியாடும் பாம்புகள் போன்றும் வாழ்பவரை காண்கயிலே தன்னுடைய தந்தை அவர்களிடமிருந்து வேறொருவராக எவ்வளவு ஒரு மேம்பட்ட இடத்தில் இருக்கிறார் என்பதை நினைக்க அவனுக்கு அது பெரிய ஆச்சரியமானதாகவும் இருந்தது.

சிறு குழந்தைகள் கூட சில பொழுதுகளில் சலிப்பு ஏற்பட்டதான செய்கைகளை செய்வார்கள். ஆனாலும் முகுந்தனுக்கு தந்தையுடன் அவன் பழகுகின்ற நேரமெல்லாம் சலிப்பையே காணாத மனோநிலையை எப்போதும் அவர் கொண்டிருப்பதாகவே அவரின் ஒவ்வொரு செயல்பாட்டிலுமிருந்து அவன் அறிந்து கொண்டதாக இருந்தான். "இந்தவித இணைப்பு எந்நேரமும் இவருக்கு எப்படி சாத்தியம்?" என்பதும் அவனுக்கு ஆராய்தலாகவே இருந்து கொண்டிருந்தது.

முகுந்தன் தகப்பனை இப்படியான ஒரு கணிப்பீடுகளிலே வைத்துக் கொண்டிருந்தாலும் தன்னுடைய தாயையும் ஒரு பக்கம் தன்நினைவிலே போட்டுக்கொண்டு அவர் பற்றியும் சிந்திக்காததாய் விட்டு விடவில்லை.

அவனுக்கு எப்போதும் அம்மாவின் பக்கத்திலிருக்கும் போது முட்செடியின் மேல் அமர்ந்திருப்பதை போலத்தான் வெறுப்பாக இருக்கும். " இப்படி என்னைப்போல் ஒரு வயது வந்த வாலிபனை வேறு வீடுகளில் உள்ள அம்மாமார் எந்த சின்ன விசயத்திற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டபடி இப்படி பேசி ஏசுவார்களா? " என்றும் அவன் மனத்திலே வெறுப்புடன் நினைப்பான்.

"எந்த ஒரு சிறு விஷயத்திற்கும் ஏதாவது ஒரு குறையை தேடிப்பிடித்துக் கொண்டு சலங்கை ஓசை சிலுங்கலைப் போல ஏன் இந்த அம்மா புறு புறுக்கிறா?" என்றும் அவனுக்கு மனதில் வெறுப்புத்தட்டுவதுண்டு.

முகுந்தனுக்கு நான்கு சகோதரிகள், அவர்கள் தங்களுக்குள்ளே தனித்தனி இருந்தலில்லாத தனிமையைத் தராமல் ஒண்டிக் கொண்டே இருப்பவர்கள் போல சேர்ந்து கொண்டு சந்தோஷமாக பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு முன்னாலும் கூர் தீட்டிய பார்வையுடன் வந்து நின்று 'அடால்ப் ஹிட்லர்' போன்று ஒரு விரலை காண்பித்தவாறே அவர்களை பேசிக்கலைப்பதை முகுந்தனும் கண்டுதான் இவற்றையெல்லாம் தன் நினைவில் மறக்காது இருந்தான்.

"பொறுமை எனும் குணத்தை தன்னிலே ஒழுங்காக கடைப் பிடித்து அதை ஜீவனுக்குள்ளேயும் செலுத்தி விட்டால் மகோன்னத சக்தி கிடைகிறது" என்று தந்தையின் நிலையை பார்த்து அறிந்ததில் முகுந்தனுக்கும் அது நன்றாக பிறகு புரிய தொடங்கி விட்டது. இது விதையாக அவனுக்குள் விழ அவனும் அந்த பழக்கத்திலே சிறிது சிறிதாக வளரத் தொடங்கிவிட்டான். இந்தச் செடியை வாழ்வின் ஆயிரத்தொரு அபாயங்களுக்கு இடையிலும் ஒழுங்காக வளர வைக்க வேண்டுமென்றும் மனதிலும் அவன் உறுதியை எடுத்துக் கொண்டான்.

பொறுமையை கடைப்பிடிப்பதென்பது மிகச் சுலபமான காரியமல்ல, என்பதை அவன் கண்டு கொள்ளவாக அவனது தந்தை என்ன ஒரு காரியம் செய்தார் தெரியுமா? அவருக்கு அந் நேரம் வெறுப்பு வியாதியே வரவில்லையே! என்று அவன் அதை பார்த்து புரிந்து கொள்ளக் கூடியதாகத்தான் அந்தச் சம்பவம் நடந்தது.

அன்று முகுந்தனின் சின்ன அக்காள்தான் சமையல் வேலையெல்லாம் செய்தாக வேண்டும் என்ற முறை. அவளுக்கு சமையல் வேலை செய்வதிலே பொறுமை என்பதே இருப்பதில்லை. மும்முரமாக எதையாவது செய்து சமையல் வேலையை முடித்து விட வேண்டும் என்பதே அவளது ஒரே குறிக்கோள். இவள் சமையல் வேலை செய்யும் நாளிலே முகுந்தனின் மூத்த சகோதரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இன்றைக்கு நான் பக்தியோடு விரதமிருக்கப் போகிறேன் " என்று எல்லோருக்கும் சொல்லி விட்டு இருந்து விடுவாள். இவளுக்கு திடீரென எப்படியாக இந்த விரதமிருக்கும் ஞான ஒளி வந்தது என்பது அவளது மற்ற சகோதரிகளுக்கெல்லாம் இது விஷயம் நன்றாகவே விளங்கும். என்றாலும் மற்ற சகோதரிகள் அவளைப் போல் அன்றைய நாளிலே உணவில் பிரியம் இல்லாமல் பட்டினி கிடந்துகொள்ள மாட்டார்கள். நேரம் கடந்து போகும்போது " சரியா பசிக்குதே" என்று சொல்லி தங்கை சமைத்த உணவினை எப்படியோ அவர்கள் சாப்பிடத்தான் செய்வார்கள்.

"என் திறமையை எல்லாம் சமையலில் பயன்படுத்தி நன்றாகத் தான் நான் இன்று சமைத்திருக்கிறேன்" என்று அவளது சகோதரிக ளுக்கெல்லாமே அவள் சொல்வதை கேட்டதிலே அப்படியானதான எது வித ஆர்வமும் வரவில்லை, மகிழ்ச்சியும் கூடவில்லை. அவள் சொன்னதுக்கு அவர்களெல்லாம் " ஓ...ஓ.." என்று பறவைகள் சேர்ந்து பாடுவதைப் போலத்தான் குரலெழுப்பி அவளை கிண்டல டித்தார்கள்.

அன்று மதியப் பொழுது சாப்பிடவென்று முகுந்தனின் அப்பா சமயறைக்கு வந்தார். நீரில் மிதக்கின்ற தாமரை இலையைப் போல முகத்தை குளிர்மையான மகிழ்ச்சியில் வைத்தப்படி "சாப்பிடலாம் பிள்ளை சோறு கறியைப் போடுங்கோ தட்டிலயம்மா" என்று சொல்லியபடி நிலத்தில் பலகையை இழுத்து வைத்துக் கொண்டு அதிலே பிறகு இருந்தார். அவள் சோறு கறி எல்லாம் தட்டிலே போட்டு குழம்பையும் பிற்பாடு கலக்கி அகப்பையில் அள்ளி எடுத்து வடிவாக சோற்றில் ஊற்றி விட்டு கொடுத்தாள். பிறகு அப்பா சாப்பிடுவதை மனத் திருப்தியாக அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இந்நேரம் " தண்ணீர் குடிப்போம்" என்ற யோசனையோடு முகுந்தனும் குசினிக்குள் போக வந்தான். என்றாலும் அப்பா இப்பொழுது சாப்பிட்டுக்கொண்டிருக்கிறாரே என்று பார்த்து விட்டு அப்படியே குசினிவாசலருகில் அவன் ஒரு கணம் நின்றான்.

இன்று சாப்பாட்டில் மச்சக்கறி நண்டுக்கறி என்பதால் நண்டுக் கால்களையெல்லாம் வாயில் வைத்து கடித்துச் சூப்பி அகற்றிச் சக்கையை ஒரு பக்கம் வைப்பதிலே அவர் சோறு தின்னாமல் சில வினாடி மினக்கட்டுக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நண்டுக்கறியை சாப்பிடுவதிலே அவருக்கு சுவை வளர நண்டுக் கால் என்ற கணக்கிலே ஒரு கட்டை நீட்டத் துண்டை எடுத்து அவர் வாயில் வைத்து – ஒரு உறிஞ்சு உறிஞ்சினார்.

உடனே அவருக்கு அந்த சுவையில் மாற்றம் தெரிந்தது. உடனே அதை வாயிலிருந்து கையிலெடுத்து பார்த்தார். அது என்ன வென்று அவருக்கு கண்ணில் பட்டது. விழிப்பின் ஒரு சிறு ரேகை மூளையிலே அவருக்கு தோன்றி விட்டது.

" அட இது அட்டையம்மா..." என்று முகம் ஒடுங்கிப் போகாமல் சொல்லிவிட்டு, கையிலுள்ளதையும் ஒரு பக்கத்தில் போட்டு விட்டு, தொப்பொன்று விழுகிறதாய் ஒரு பகடி சிரிப்புச் சிரித்தார். ஆனாலும் இது கண்டு அவளுக்கு முகம் அப்படியே சாம்பல் ரூபமாகிவிட்டது. அக்காவினது முகத்தையும் தந்தையின் செயலையும் கண்டு முகுந்தனுக்கு சிரிப்பு வந்துவிட்டது. ஆனாலும் அதை அடக்கிக்கொண்டு அந்நேரம் அப்பாவின் பொறுமைக் குணத்தைத்தான் உயர்ந்ததாக நினைத்து மனத்தினுள் அதிசயித்தான்.

அக்கா வேறு கறி சோற்று தட்டில் போட்டு பிறகு அப்பாவுக்கு கொடுத்தாள். "அந்தக் கறியை சட்டியாலிருந்து வெளியால குப்பையில இனி வீசி விடம்மா" என்று சொல்லி விட்டு கண்களை திறந்து கொண்டு பார்க்கும் மன அமைதியோடு அப்பாவும் பிறகு சாப்பிட தொடங்கி விட்டார்.

முகுந்தனும் அங்கே செம்பில் நிறைத்துக் கிடந்த தண்ணீரை எடுத்து நிமிர்ந்தபடி அண்ணாக்காக ஊற்றி நாலைந்து மிடறு குடித்துவிட்டு குசினியாலிருந்து வெளியே வெளிக்கிட்டு விட்டான்.

அவனது மனம் இப்போது தந்தையின் குணத்துடன் தன்னை ஐக்கியப் படுத்திக்கொண்டு ஒன்றாகிப் போவதற்கான நிலையில் ஆசைப்பட்டுக்கொண்டிருந்தது. அதற்காக மிக உயர்ந்த ஒன்று தனக்குள்ளாக இப்போது நடந்து கொண்டிருப்பதையும் அக்கணம் அவன் உணர்ந்தான்.

**ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை (2020)**
**மெட்றோ நியூஸ் (மார்கழி 18- 2020)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு பன்றிகள் தூக்கியவன்

இன்னமும் திருமணமாகவில்லை. வயது முப்பத்தி ஐந்தைத் தாண்டி விட்டது அவனுக்கு. அவனிடம் திருமணப்பேச்சை எடுப்பதற்கே தாய்க்கும் இப்போது பயம். அந்தக் கதையே பிடிக்காமல் கோபத்தில் வாய்ச்சொல்லால் அவன் சிதற அடிப்பான். வயதில் களைப்பு வந்தவிட்டதாலே "ம்" என்று பெருமூச்சு விட்தன் பின் அம்மாவும் " சிவனே " என்று இருந்து விடுவாள். ஆனாலும் ஆறுதலான நேரம் அம்மாவின் கவலையை எண்ணி சிறிது நேரம் இருந்து யோசித்துப்பார்பான். நிதானமான குரலில் பிறகு தன் அம்மாவுக்கு அவன் சொல்லுவான். "அம்மா என் பர்சில் ஆயிரக் கணக்கிலெல்லாம் நான் பணம் வைத்துக் கொண்டதேயிலை. நோட்டுகளை வெளியே உருவி எடுத்து செலவு செய்யக் கூடியவனுக்குத்தான் திருமணம் செய்வதற்கு பொருந்தும் அம்மா. அந்தத் தகுதியோ எனக்கில்லை. நான் ஒரு எழுத்தாளனம்மா. அந்த வாழ்க்கைதான் எனக்குச்சரி. நீ இப்படி யெல்லாம் என்னை இனி தொந்தரவு செய்ததாய் இடிக்காதே" இப்படி ஆறுதலாக சொன்னாலும் கண்டிப்பு அவன் கதையில் இருந்தது.

"எத்தனை நாளைக்குத்தான் நான் உனக்கு மகனே இப்படியே சமைச்சுப் போட்டுக் கொண்டிருப்பன் என்று நீ நம்புவாய்?" இதை யாவது அவன் செவி கொடுத்து கவனமாக கேட்பான், யோசிப்பான்! என்று, அவள் சொல்ல, கண் விழியை அவன் அங்குமிங்கும் ஆட்டியபடி கவனமாகக் கேட்டுவிட்டு, "ஆறுதலாக அப்படியென்றால் போய் அங்கே என் அக்கா வீட்டில் நீ இருக்கலாம்தானே" என்றிட்டான் பிறகு. அவளுக்கு இதை கேட்கவும் சோகம் தான். சமையலை போய் இனி கவனிப்போம் என்ற நினைப்பில் அந்த இடத்தை விட்டுப் பிறகு போய் விட்டாள். "எழுதி எழுதி இவனுக்கு உள்ளதெண்டுறது என்னதான் ஒரு பிரயோசனம்? அதனால ஒரு புண்ணியமும் நன்மையும் இவனுக்கு கொஞ்சமும் இல்லையே "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதையெல்லாம் யாருக்கு முன்னலே நின்றபடி அவள் சொல்கிறாள்? அதற்கென்று அவளுக்கு ஒரு இடம் வீட்டிலே இல்லாமலா போகும். நாள்காட்டி உண்டே! அதாவது கலண்டர். அதன் மூலமாகதானே அவளுக்கு காலம் கடந்து போவது பற்றி விளங்கும். அந்தக் கலண்டரைப் பார்த்துத்தானே அவளுக்கும் தன் கவலையை அதனிடம் ஒப்புவிக்க முடியும். இவனோவென்றால் நின்றுவிடாமல் இம்பொழுதும் நாவல் எழுதுவதையும், அதை பிறகு வெளியிடுவதையும் தொடர்ந்து கொண்டே இருந்தான். இவனது கதைகளை வாசகர்களெல்லாம் விரும்பித்தான் வாசித்துக் கொண்டிருந்தார்கள். இவன் கதைகளை படித்து விட்டு அவர்களும் இனிய கனவு, இன்பக் கனவு,பயங்கர கனவு, கசந்த கனவு என்ற வகையில் பல கனவுகளையும் கண்டபடி தங்கள் கனவிலும் கதைகளை ருசி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வித்தியாசம் வித்தியாசமாக எழுத புத்தி அவனுக்கு எப்போதும் வந்து விடும். புதிய நாவல் ஒன்று எழுத வேண்டுமே? அதையே யோசித்து யோசித்து நான்கு நாளாகவே அவனுக்கு நான்கு மணி நேர தூக்கம் தான்.

இப்போது நிச்சயமாகிவிட்டது அவனுக்கு, இதைதான் நான் எழுத வேண்டுமென்று! தீர்மானித்த முடிவு இப்போது சாத்திய மாகிவிட்டது.

வனக்குறவர்கள் வாழ்க்கையை வைத்து ஒருநாவல் எழுத வேண்டுமெனற ஆசை இவனுக்கு பல நாட்களாக இருந்தது தான். இந்தச் சாதியிலே குறப்பெண்கள் தான் எத்தனை அழகாக இருக்கி றார்கள். வலிமையான அந்தப் பெண்களின் உடல் எவ்வளவு அழகு. அந்தப் பெண்களிலே சில பெண்கள், அதுவும் இளம் வயதுப் பெண்கள் எவ்வளவு அழகாக இருக்கிறார்கள். அவர்களை பார்க்கும் போது இவனுக்கும் மனம் மிகவும் பலவீனப்பட்டுப் போகும்தான்.

அந்தப்பெண்கள் கதைக்கும் போதும் இவன் கண் சிமிட்டா மல் இருந்தபடி கவனமாக கேட்டு இரசிப்பான். அவர்களுக்கு உள்ள அந்தப் பற்கள் தான் எவ்வளவு அழகு! அந்தப்பெண்கள் சிரித்துக் கொண்டு கதைக்கும் போது நிறுத்த முடியாத ஆசை யாகத்தான் இவன் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பான். அழகு முழுவதையுமே இந்தப் பெண்கள் விழுங்கிவந்தார்களோ என்றும் உடனே ஆச்சரியப்பட்டுப்போவான். வலிவும் மெலிவுமான எழிலுட லைப் பெற்ற அந்தப் பெண்களினது, கண் ஒளியின் வசீகரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும், அந்த இனத்துக்கே உரியதானது போன்ற சிறுத்த இடையியல் பினையும், குறுத்த அளவிலான பிறை நெற்றியையும் இமை பொருந்தாமல் பார்த்தபடி இரசித்துச் சிந்தித்ததாகவே இருக்கலாம் என்றே அவன் மனம் அவ்வேளை தனித்தே அவாவுறும்,

என்றாலும் அவர்கள் மேலுள்ள மயக்கத்தை உடைய மனத்தை வேறு திசை நோக்கி திருப்பி வைத்துக்கொண்டு பிறகு அவன் சிந்திப்பான். “இந்தப் பெண்களிலே வயது சென்ற பெண்க ளுக்குக் கூட கையானது வந்து மரக்குத்தி மாதிரி உருண்டு பெருத்ததாக வரவில்லையே, எங்கள் சாதியில் பெண்களுக்கு திருமணமாகி சில ஆண்டுகள் கடந்திட்டாலே உடல் பெருத்து கை பெருத்து களைத்து மூச்சு விடுகிற நிலைக்கு வந்து விடும். ஒரு பக்கம் திரும்பிப் பார்ப்பதென்றால் கூட முனகித்தான் திரும்பு வார்கள்.

ஆனால் இந்தப் பெண்களுக்கு முளங்காலை மடித்து கீழே நிமிர்ந்து குந்தி இருந்தபடி “ சாஸ்திரம் சாஸ்திரம் ” என்று பகல் முழுக்க அப்படியே இருக்கச் சாதகமாயிருக்கிறதே என்றும் நினைத்தபடி, அதன் பிறகாயும், இன்னும் இவர்களைப்பற்றிய சரித்திர உண்மையையும் “ நீ அறி” என்று மனமும் இவனுக்கு ஆர்வத்தை முறுக்க, நூலகத்திற்கும் இவன் போனான். அங்கே இவர்களைப்பற்றி எழுதியதாய் உள்ள நூல்களை ஆராய்ந்தால், இலங்கையில் தேவநம்பியதீசன் ஆட்சிக் காலத்தில், மன்னனும், அவன் அரண்மனைப் பிரபுக்களும் மணந்து கொண்ட அந்த அரசகுமாரிகள், அரச குல பெண்களுக்கு இந்த வனக்குறவ பெண்கள் எனப்பட்டவர்கள் அவர்களுக்கு அணிவிடை பணிவிடை செய்யவென்றே கொண்டு இங்கு வரப்பட்டவர்கள் என்பது இவனும் அறிந்ததாகியது.

பின்பு இவர்கள் அரசாண்ட அந்த மன்னர்களையும் பிரபுக்களையுமே தங்கள் அழகினால் இவர்கள் மயக்கியவர்கள் என்றும் அவன் அந்த நூல்களின் வாயிலாக படித்து அறிந்தபோது, நானே மயங்கிக் கரைந்தேனே எனவும் தன் மனதுக்குள்ளும் அவன் அதை ஒத்துக்கொண்டான்.

இன்னும் பிறவும் எல்லாமே அவர்களைப் பற்றிய வாழ்க்கை யைப் பற்றித் தெரிந்துகொள்ள நேரிலே அவர்களைச் சென்று காண்பதே சிறந்தது என்று அவன் பின்பு முடிவெடுத்தான். அவர்களை காண்பதற்கு செல்லும் போது வெறுங்கையோடேயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவது.? இந்தக்கேள்வி மனதை துளையிட்டு உழ, உறவினர் களிடம் சென்று மிகதரமான நல்ல ஆடைகளை அவன் கேட்டு வாங்கினான். அவை எல்லாவற்றையும் பிறகு பெட்டிகளில் போட்டு கயிற்றால் கட்டிக்கொண்டு பஸ்ஸில் அவன் பிறகு பிரயாண மானான்.

முதன்முதலில் எங்கே போவது? தமுத்தேகம என்ற இடத்தில் அவர்கள் அனேக காலமாக சீவிக்கிறார்களாமே! அதை தெரிந்து கொண்டதாலே அங்கேயாக முதலில் சென்றான். அங்கே பஸ்ஸில் இருந்து இறங்கி ஆட்டோ பிடித்து அவர்கள் வாழும் இடத்திற்குப் போனால், குடிசையாய் இங்கெல்லாம் இருக்கும் என்று அவன் நினைத்தற்கு விரோதமாக கல்வீடுகள்தான் அங்கே எழும்பி இருப்பதாக அவனுக்குக் காட்சிதருகின்றன. அவைகளை காணவும் இப்படியா! என மனத்திலும் ஆச்சரியம்தான். அந்த குழுவின் தலைவனை இவன் சந்தித்துப்பேசலாம், என்று பார்த்தால் அங்கு அவர் அவ்விடத்தில் இருக்கவில்லை. அவன் மனைவிதான் இருந்தாள். தலைவனின் மனைவி தலைவிதானே.

அவள் கல்லைபோல கனிவற்ற இறுகிய கதைதான் இவனுடன் கதைத்தாள். தமிழ் தெரியும் அவர்களுக்கு என்று அவன் நம்பி வந்தான், ஆனால் அவள் இவனோடு தனிச்சிங் களத்தில்தான் கதைத்தாள். "சரி இருக்கட்டும்" என்று நினைத்துக் கொண்டு இவனும் பின்பு சிங்கள பாஷையில் கேட்டான்.

" உங்கள் அப்பாவின் அப்பாவுக்கு தமிழ் தெரியுமா? "

" ம் அவர் நன்றாக தமிழ்கதைப்பார் "

"அப்படியா! சரி அது ஒருபுறமிருக்கட்டும். உங்கள் இனத்து ஆட்களது, வாழ்க்கைபற்றி நீங்கள் எனக்கு சொல்வீர்களா? "

" அது என்னத்துக்கு? "

" உங்கள் வாழ்கையைபற்றி எழுதுவோம் என்று தான் நான் இங்கே வந்து இருக்கிறேன். நான் ஒரு எழுத்தாளன் "

என்று இப்படிச் சொன்னால் தனக்கான கௌரவம் தருவாள் என்று அவன் நினைத்தான். ஆனால் அவளுக்கு கரி அடுப்பு தணல்மாதிரி உடன் முகம்சிவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“குறவர் குறவர் என்று எங்களை பற்றி எழுத இங்க எத்தனை பேர் வாறீங்க? இனி அதிகம் என்னோடு பேசாமல் போங்க போங்க இனிமேலே இங்க இனி வரவேண்டாம்”

அவள் சாராயம் வாயால் நாற சொல்லிவிட்டு விறுக்கென்று போய் விட்டாள். அடுத்த நிமிஷம் அவன் மனவருத்தப்பட்டான். அந்த நிமிடம் நிறைய எதிர்பார்ப்பு அவனுக்கு சிதைந்தது. ஆனாலும் தாற்காலிக நிம்மதியாக வரக்கூடியதாய் வயது முதிர்ந்த ஒருவர் இவனோடு கதைத்தார்.

“இங்கேயெல்லாம் அங்கே இங்கே திரிந்து உங்களுக்கு ஒரு பிரயோசனமுமில்லை. இங்கே நன்றாக தமிழ் பேசக்கூடிய இளம் பெண் ஒருத்தி இருக்கிறாள். அவள் அக்கரைப்பற்று அலிக்கம்பே என்ற இடத்திலிருந்து இங்கே திருமணம் செய்ததால் வந்தவள்”

“ அவளுக்கு தமிழ் தெரியுமா” “ நன்றாக கதைப்பாள்” என்று சிங்களபாஷையில் சொன்னதும் இவன் சுணங்கவே இல்லை. உடனே அவள் வீட்டை நோக்கி போனான். அங்கே படலையடியில் நின்றபடி குரல் கொடுக்க உடனே அவள் வீட்டடிலிருந்து வெளியே வந்தாள் விஷயத்தை சொன்னதும் தான். “ வாருங்கள் உள்ளே வாருங்கள்” என்றுமிக்க மரியாதை கொடுத்து அவள் இவனை அழைத்தாள்’ வீடு சிறிய வீடு என்றாலும் சுத்தமாய் இருந்தது. “இருங்கள்” என்று நாற்காலியை காட்டி மரியாதையுடன் சொன்னாள். அவளை பார்த்தால் ஒருமுறை பார்த்துவிட்டு இன்னொருமுறை பார்க்கலாம் போன்ற அழகு! அந்த சந்தோஷத்துடன்,

“தங்கச்சி....உங்கள் இனத்தின் வாழ்க்கையை பற்றி கொஞ்சம் தெரிந்ததை சொல்லுவீர்களா? நான் ஒரு எழுத்தாளன்” என்று அழாகாக அவன் தமிழில் பேசவும் அவளுக்கும் சந்தோஷமாயிருந்தது. ஆனாலும் அவள்,

“ அலிகம் பேயில இருந்து நான் கலியாணம் முடிச்சுதான் நான் வந்தன் அங்கே பொனிங்களின்ணா வயிசு போனா ஆள்கள் எல்லாம் நல்லாஅலகா சொல்லுவாங்கள் ”

என்று சொல்லும்போது அவள் பேச்சிலே “ழ” எல்லாம் “ல” வாக ஒலித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அலிக்கம்பேயா" என்று அவன் நசுக்கி அதை சொல்லி விட்டு மறுபேச்சுப் பேசாமல் யோசிக்க, அவள் அவசரமாக அறைக்குள் சென்று ஒரு போட்டோ அல்பத்தை கொண்டு வந்து இவனிடம் கொடுத்தாள். அவன் அதை விரித்து ஒவ்வொரு புகைப் படமாக ஆவலாக பார்ப்பதையிட்டு சுகமான சந்தோஷம் அவளுக்கு முகத்தில் படர்ந்தது.

உடனே அவள் உள்ளே சென்று தேநீர் தாயாரித்துக் கொண்டுவந்து இவனிடம் கொடுத்தாள். மாப்பிளை என்றால் அவள் அழகுக்கு பொருத்தமில்லைதான்! புடலங்காய் போன்றுதான் அவன், என்றாலும் "நல்லாயிருக்கு" என்றான். அவன் சொன்னதை நினைத்து அவளுக்கும் சந்தோஷம் தான்!

சங்கடப்படாமல் அவள் கொண்டு வந்து அங்கே வைத்தி ருந்த தேநீரை அவன் குடித்தான். ஏனென்றால் அவன் விரும்புகிற சுத்தம் அதிலே காணவும் இருந்தது.

இருநூறு ரூபாய் காசு பின்பு தன் பாக்கட்டிலிருந்து எடுத்துக் கொடுத்தான்.

" எதற்கு "

" வைத்துக் கொள்ளுங்கோ "

"சரி" அவள் அவன் கொடுத்ததை மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டாள் அங்கேயிருந்து அவன் பிரயாணப்பட்டுத் தான் பின்பு அலிக்கம்பே என்ற இடத்துக்கு இவனாலே வரக் கிடைத்தது அந்த ஊருக்கு தத்தி தத்தி நகர்ந்ததாய் வந்த ஆட்டோவில் வந்து சேர்ந்தான். அங்கே வந்ததன் பிறகு எங்கே முதன் முதலாக போவோம் என்றும்யோசித்தான். அங்கேயுள்ள சிறிய கத்தோலிக்க தேவாலயம் கண்ணில்பட்டது.

"சரி அங்கேயே என்னை கோயிலடி வாசலில் இறக்கி விடப்பா" கொண்டு வந்த பொருட்களையும் ஆட்டோவிலிருந்து இறங்கி எடுத்துக்கொண்டான். கோயில் பாதரிடம் நான் எழுத்தாளன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டான். அவர் சற்றுவியப்புடன் பார்த்தார்.

" இவர்களை பற்றிய வாழ்கையெல்லாம் வைத்து ஒரு நாவல் எழுதலாம் என்றிருக்கிறேன்" " ஓ அப்படியா உள்ளே வாருங்கள் இப்படி இருங்கள் கதைப்போம்" " நன்றி பாதர் முதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் நீங்கள் தான் இங்கே உள்ள அவர்களினது வாழ்க்கையை பற்றி சொல்ல வேண்டும் "

" ஓ அதற்கென்ன எனக்குத் தெரிந்தவற்றையெல்லாம் சந்தோஷமாக சொல்கிறேன்" அவர் சொல்லும் போது முகத்திலு மாக ஒருவித ஒளிப்பருவம். இவனுக்கும் கூட அவர் பதிலினால் மனச்சாந்தி முகத்திலும் வந்துவிட்டது. அவர் பின்பு அமைதியாக அவர்களது வாழ்வுக்குள் உள்ள சிக்கல்களை வலை விரிப்பாக விரித்து வைத்தார்.

" இவங்களுக்குள்ள அந்த இளம் பெடியள் இருக்கிறாங்கள் பாரும் அவங்கள் நல்லாபடிச்சும் இருந்தா?. நாங்கள் எம்மாத்திரம். அடேயப்பா அவங்களுக்கு நல்ல மூளை ... புத்தி "

"அதெப்படி? " " காட்டுக்குள்ள வேட்டையாடப்போகேகுள்ள மிக கவனமாக அங்காலயும் இங்காலயும் பார்த்தபடி ஆலேட்டா எப்பவும் அவங்கள் எல்லாமே இருக்கிறதுதானே "

அதைக் கேட்கவும்தான் இவனுக்கு சிரிப்பு

"சிரிக்க வேண்டாம் மரபு வழிய வந்ததாய் உள்ள சுறுசுறுப்பு.. மூளையும் நல்லாவேலைசெய்யுது. சரித்திரம் எல்லாம் கேட்டுப்பாருங்கள்... எங்களுக்கு தெரியாததெல்லாம் அவங்களுக் குத் தெரியும் "

" இங்க எல்லாமா மொத்தம் எத்தனை குடும்பங்கள் இருக்கு பாதர்? " முன்னூறு! முன்னூறு குடும்பங்கள் இருக்கும்.! எல்லாருமே கத்தோலிக்கர்கள்தான்.. பிறதர்கூக் என்பவர்தான் இந்த இடத்துக்கு வந்து இவங்களையும் நாகரிகமாக ஆக்கி கத்தோ லிக்க மதத்திலயும் சேர்த்தவர்... இண்டைக்கு அவராலதான் இவங்கள் நல்ல மனுசர் மாதிரி சீவிக்கிறாங்கள்"

பாதர் இவன் மேல் அன்பும் ஆதரவுடனும் அவர்களைப் பற்றிய வாழ்க்கை விபரத்தை தான் அறிந்த மட்டுக்கு எல்லா வற்றையும் விபரமாக சொன்னார். அன்று இரவு " நீங்கள் இங்கேயே தங்குங்கள்" என்று சொல்லி ராத்தங்க இவனுக்கு இடமும் கொடுத்தார். இரவு சமைத்து, அங்கு வசிக்கும் ஒரு குடும்பத்த வர்கள் பாதருக்கு இரவு சாப்பட்டுக்கென கறி அனுப்பியிருந் தார்கள். " உங்களுக்கும் இண்டைக்கு லக்! உடும்பு இறச்சிக் கறி வந்திருக்கிறது நீங்களும் சாப்பிடுவியள் தானே" "ம்" அவனுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடும்பு இறைச்சிக் கறி என்றால் விருப்பதான்.! சாப்பிட்டு முடியவும் பிறகு இருந்து பாதருடன் சிறிது நேரம் கதைத்து விட்டு இரவு படுத்தால் நல்ல தூக்கம் போனது இவனுக்கு. அடுத்தநாள் காலை ஞாயிற்றுக்கிழமை நாளாக இருந்தது. பாதர் காலையில் திருப்பலிப்பூசையை ஒப்புக் கொடுத்தார். பூசைக்கு அங்கே வசிக்கின்றவர்களெல்லாமே வந்து திருப்பலிப்பூசையிலும் பங்கு பற்றினார்கள். நற்கருணையும் வரிசையாக ஒழுங்காக் போய் பெற்றுக் கொண்டார்கள் பூசை முடியவும் தான் கொண்டு வந்த சேலைகள் சட்டைகள் சேட் கால் சட்டை எல்லாம் பெட்டிகளோடு எடுத்துக் கொண்டுவந்து கோயிலுக்கு முன்னால் ஒரு படங்கு விரித்து அதற்கு மேலே இவன் ஒழுங்காக அழகாக போட்டு விட்டான். பாதர் உடனே அங்கே நின்ற எல்லோரையும் பார்த்து “உங்களுக்கு உங்களுக்கு தேவையானதுகளை மாத்திரம் எடுங்கள்” என்று கூறினார்.

உடனே அங்கு நின்ற அவர்களெல்லோரும் கடை கடையாகப் பார்த்துக் கொண்டு வருவதுபோல சந்தோஷத்துடன் சிரித்துக் கொண்டு சுற்றித்தேடுகிற பாவனையுடன் இருந்து பிறகு தங்களுக்குத் தேவையானவைகளை எடுத்துக் கொண்டார்கள். எல்லோரும் எடுத்தப்பின் வந்தவர்கள் கண்களெல்லாம் தேடமால் எஞ்சியவற்றை ஒரு பெண் அதிலேயிருந்த ஒரு சேலையை எடுத்து விரித்து அதன் மேலே எல்லாம் எடுத்து வைத்து ஒரு மூட்டை போன்று அதைக்கட்டி பின் தலையின் மேலாக அதை தூக்கி வைத்தபடி சுமந்து கொண்டு நடந்து போனாள்.

அவனுக்கும் அதை காண சிரிப்புத்தான், என்றாலும் மனதுக்குள் அவனுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. அவர்கள் எல்லாரும் அந்த இடத்தை விட்டு அகன்ற பின்பு அந்த ஆலய முன்றலே வெறிச்சோடித்த அளவிலாய் அவனுக்கு பார்க்கவும் தெரிந்தது.

காலை பத்து மணியாகிவிட்டது. அப்பொழுதே எதிர்த்து நிற்க முடியாத வெயில் சூடு போன்று உடம்பு அவனுக்கு வெட்கையில் தகதக என்றிருந்து பாதருக்கு நன்றி கூறி அவரிடம் விடை பெற்றுக் கொண்டுபின்பு அவன் ஊருக்குள்ளே போனான். அங்கே ஊருக்குள் அவனுக்கு நல்ல வரவேற்பாக இருந்தது. கண்பார்த்து பழகி முன்பு அறியாவிட்டாலும் இவனைக் கண்டதும் தான் இங்கு உள்ளவர்கள் மனக்களிப்புற்றார்கள் “பாதர் பாதர்” என்று இவனையும் பாதர் என்று நினைத்து அப்படி சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கத் தொடங்கி விட்டார்கள். " நான் பாதர் இல்லை.. நான் அவருடன் கூடவே அறைவீட்டில் தங்கியவன் மட்டும் தான் ஒழிய பாதர் நான் இல்லை என்று இவன் சொன்னாலும் அவர்களோ கேட்டபாடில்லை. அவர்களுக்குக்கென்றால் இவன் இப்போது பாதர் என்றதாகவே ஆகிவிட்டான். " சரி" என்று இவனும் பின்பு அவர்கள் இஷ்டம் என்று அதை பெரிதுடுத்தாமல் விட்டுவிட்டான்.

" சரி நான் இங்கேவந்த விஷயத்தை இனிபார்ப்போம்" என்று நினைத்து தன் விஷயத்திலே கருசனையாகி பின்பு அவர்களோடு கதை பேச்சை ஆரம்பித்தான். அங்கே வசிக்கிறதும் பண்ணா என்பவர் தன் வளர்ப்பு வேட்டை நாய்களுடன் காட்டுக்குள் சென்று பன்றி வேட்டையாடுபவர். ரங்கமுத்து என்பவர் பாம்பாட்டிப் பிழைப்பு நடத்துபவர். இவரும் காட்டுக்குச் சென்று நாகபாம்பு பிடிப்பவர். இவர்கள் இருவரும் காட்டுக்குள் இருக்கிற அதிசயங்கள் பற்றியும், வேட்டை ஆடுதலின் வீரம்பற்றியும், பாம்பு பிடிப்பதில் கைக்கொள்ளும் அவதானம் பற்றியும் சோடனை வடிவில்லாமல் உள்ளதனைத்தும் உண்மையாக உணர்வுடனும் சொன்னார்கள். " நானுதும்பண்ணா பொஞ்சிசாதி மசக்கா பாதேர் என்று சொல்லி தன்னை இவன் முன் அறிமுகப்படுத்திக் கொண்டவள். குறி சாஸ்திரம் சொல்லுகிற தங்கள் குலத்தொழிலை எப்படித் தங்களுக்கு இங்கே பழகி கொள்ள கற்றுத் தருகிறார்கள் என்பதைத் அழகான சிரிப்புடனும் இவனுக்கு சொன்னாள். அங்கே தேநீர் கொண்டு வந்து இவனுக்குக் கொடுத்தார்கள். அதை இவன் காலை களைப்பினாலே ருசித்தும் குடித்தான். சந்தோஷத்துடனும் அவர்களைப் பார்த்துச் சிரித்தான்.

" பார்த்தா இவரையா ராஜகுமாரன் மாதிரிதான் அழகாக இருக்கு" என்று தெலுங்கு மொழியில் தும்பண்ணா தன் பெஞ்சாதிக்கு சொன்னான். தெலுங்கு மொழி என்றாலும் ஒரு சொல்லில் இருந்து இன்னதுதான் அவர் கூறியது என்று இவனும் அதை விளங்கிக் கொண்டான். " உங்கள் ஆட்களது பெயர்களை எனக்கு சொல்லமுடியமா? " என்று அவன் கேட்பதற்கு அவர்கள் பலரது பெயர்களை சொன்னார்கள். அவர்கள் சொன்ன அந்த பெயர்களிலே ஒருவனது பெயர்மட்டும் வித்தியாசமாகவும் அதிசய மாகவும் இருந்தது"

"இப்படியும், இரண்டு பன்றிகள் தூக்கியவன் என்று ஒருவனது பெயரா? இது உண்மையா? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஐடி காட்டிலயும் அதிதான் பதுஞ்சி இருக்கு பாதர் "

இவனுக்கு சிரிப்புத்தான்! வேட்டையாடியபிறகு இவனே தன்னந் தனியனாய் அந்த இரண்டு பன்றிகளையும் தூக்கிக் கொண்டு ஊருக்குள் வந்திருப்பான். இந்த நினைப்போடு அவர்களிடமிருந்து விடை பெற்றான். இனி எங்கே போவோம் என்ற யோசனையுடன் பிறகு அவன் ஊருக்குள் உள்ள வீதி வழியே நடந்த போது ஒரு குடிசையின் வாசலிருந்து ஒரு பெண் இவனை அதிகம் பிரியமாக,

" பாதர்.... பாதர் " என்று சொல்லி அழைப்பது கேட்டது. உடனே அந்தகுரல் வந்ததிசையில் பார்த்தான். "எங்கே வூட்டுக்கும் ஒருவா வந்திட்டு போவுங்க பாதேர் "

அவளது அன்பான அழைப்பை இவனுக்கும் ஏற்றுக் கொள்ள முடியாததாக இருக்கவில்லை. குடிசை அருகே அவன் சென்ற போது வாசலில் நின்ற அவளுக்குப் பின்னே ஒரு அழகான இளம் பெண் நிற்பதும் அவனுக்குத் தெரிந்தது."

" உள்ள வாங்கோ வாங்கோ பாதேர் "

அவள் அழைக்கும் போது அந்த இளம் பெண்ணும் இவனைப் பார்த்து மகிழ்ச்சியில் சிரித்தாள். குடிசைக்குள் அவன் நுளைந்த போது அங்கு அவன் கண்ட சுத்தமான நிலைமை, முழுமையை எய்தியதாக அவனுக்குத் தெரிந்தது. மண் சுவர் அமைப்பு அறைக்குள் அங்கே ஒரு வயோதிபகிழவி பாயில் படுத்தபடி இருந்தாள் "

" இந்த அம்மா என்னயப் பெத்த அம்மா "

" ஓ! அம்மாவுக்கு எத்தனை வயசு இருக்கும்? "

" தொண்ணூறு பாதேர் "

" அப்போ உங்களது புருஷன்? "

" அவரு பாதேர் நடந்துதே முன்னமா யுத்த காலோம் அந்த காலம்றோம்டில போவக்கில ரெண்டூ பக்கம் தொவக்கு சூடுங்க நடேந்தவுடத்தீல வெடிப்பட்டு செத்திட்டா "

"அப்போ உங்களது சீவிய மெல்லாமே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனக்கவலையோடு அவளைப் பார்த்து இவன் கேட்டான்.

"என்னதான் செய்யிறேது பாதேர்... நெல்லு இங்கிட்டெல்லாம் விதேச்சு அறுக்குவாக்குள்ள இந்த ஊரு பொம்பளங்களோட நானும் போயி கதிரு பொறுக்கி எடுத்துக்குவேன்... மத்தேய நாளு கூலிவேலைகளுக்கும் போவேன். கறிக் கீம் போயி ஆத்தில தூண்டிலுபோட்டு மீனுவும் பிடிச்சுக்குவேன் அப்படித்தா நம்ம சீவியம் "

" அம்மாவையும் நீங்கதான் பார்க்கிறீங்க "

" வேறுயாருதான் என் அம்மாவைய வைச்சு பார்ப்பாங்க "

" அப்போ இந்தப்பொண்ணு "

" இந்தப்பொண்ணு என் ஒன்னுவிடே அக்கா மக... இந்தப் புல்லைக்கும் ஆதரவு யாருமே இல்லை நானுதான் என்கூட வைச்சுகிட்டுப்பார்த்துக்கிறன் "

" படிச்சிருக்கிறாவா "

" ஓ லெவலு படிச்சிருக்கு "

அவள் சொல்லவும் அவன் உடனே அந்தப்பெண்ணைப் பார்த்தான். குற்றம் ஒன்றும் சொல்ல அற்ற மிக்க அழகுதான் அவள். பார்த்தவர் மனம் அலையும் அத்தனை கவர்ச்சி மிக்க முகமும் சுடர் விழி அழகும் ஒருங்கே பொருந்தியவள். என்றே அவளைப் பார்த்த அந்த கணம் அவனும் நினைத்தான்.

" இவளை நீங்களே ஒங்கலோட கூட்டிக்கொண்டு போங்கோ பாதேர் "

அவள் சொல்லிலே ஒரு தடங்கலுமில்லாமல் இப்படி கேட்க, நெஞ்சத்தில் அவனுக்கு விரைந்து ஓடிய எண்ணமே ஒரு கணம் விறைத்தது மாதிரி இருந்தது.

" நான் பாதர் இல்லையுங்கோ பாதர் இல்லையுங்கோ "

" பறவாயில்ல பாதேர் " என்று திரும்பவும் அவள் பாதர் என்று தான் கூறுவதை உடைக்காமல் அப்படியே ஒப்புவித்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இந்தப்புல்ல பாவேம் பாதேர் நல்லேகுண்ம் நல்லாவா கறி ஆக்குவா! நீங்க கூட்டிக்கிட்டு போங்க பாதர் இவள் நல்லா இருப்பா "

அவள் அப்படி கூறிக் கொண்டிருக்கும் போதே இவன் அந்தப் பெண்ணைப் பார்த்ததான். அவளும் விழி விரித்தும் ஏங்கிய தாபம் வைத்தபடி இவனின் முகத்தை சோர்வோடு பார்த்தாள். ஏழ் உலகும் எங்கும் நெடுந்திசையிலும் சென்றாலும் இப்படி ஒரு அழகான அமைதியான பெண் உனக்குக் கிடைப்பாளா? என்று உடனே அவன் மனம் பேசியது. ஆனாலும் அந்த எண்ணங்களை திரையிட்டு இறக்கியதுபோல சற்று தடை ஏற்படுத்தப் பார்த்தான். அது அவனாலே முடியவில்லை. அவளது உருவம் அவன் மனதை தொடர்ந்து சிதைத்துக் கொண்டுதான் இருந்தது. என்றாலும் மனத்தை ஒழுங்குக்கு கொண்டு வந்த நிலையில்,

" நான் வீட்டுக்குப்போய் என் தாயிடமும் சொல்லி அவரது சம்தத்துடன் கட்டாயம் சந்தோஷமாய் நிச்சயம் வருவன் வருவன்" என்று சொன்னான்.

அவன் அப்படி சொல்லவும் அவளின் கண்களின் மகிழ்ச்சியில் நீர் வந்து இறங்குவதையும் அவன் கண்டான். அந்தப் பெண்ணை பெற்ற மகளைப்போல பராமரிக்கும் அந்த தாயானவளுக்கும் எங்கிருந்தோ புது வெள்ளம் சலசத்து ஓடி வந்து நீர் பரவ நிற்பது போன்ற மகிழ்ச்சி இவ்வேளை அவள் முகத்தில் காணப்படுவதாவும் இவன் அறிந்திட்டான்.

" அவர்கள் இருவரிடமும் பின்பு வருகிறேன் நிச்சயம் வருவேன்" என்று நம்பிக்கைக்குரியதாகவும் சொல்லி அவர்களிடமாக விடை பெற்றுக் கொண்டான். அந்த இடத்திலிருந்து வெளியேறி அவன் நடந்து கொண்டிருந்த போது தண்மையான அந்த வெயில் வெப்பம் அவன் உடலை சுட்டது. ஆனாலும் கூட அந்தப் பெண்ணின் அழகிய மலர்ந்தமுகம் அவன்மனதில் நிழலின் குளிர்மையினை உண்டாக்கியபடியாகவே தொடர்ந்ததாக இருந்தது.

**ஜீவநதி சஞ்சிகை (கார்த்திகை 2021)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதையாத அன்பு

ஒரே இடத்தில் என்று இருந்தபடி கட்டுப்பட்டதாய் இருந்து கொள்ளாமல் ஒடித்திரிவது தானே வாழ்க்கை. நதி கூட அப்படித்தானே ஓடுகிறது. குளத்தைப் போல அது அம்மிப் போனதாய் ஒரே இடத்தில் தேங்கியதாக இருப்பதில்லையே? தேங்கி நிற்கிற குளமானது ஒரே இடத்தில் நின்று எதைத்தான் கண்டு கொண்டது? ஒரு புதிய முறையிலாய் தன்னைமாற்றிக் கொண்டு அனுபவிக்க அதற்கு எங்கே சந்தர்ப்பம் எப்பொழுதேனும் வரப்போகிறது.

ஆனால் நதி ஆனதின் நிலைமை பார்த்தால் தேங்கி நிற்கும் குளத்தைப் போன்றதாகவா சொல்வதற்கு உண்டு. அது பொங்கித் ததும்பும் வேகத் துடிதுடிப்புடன் ஒடுகிறது ஓடுகிறது, அப்படி அது கடலாவதற்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. இப்படியே ஓடிச்சென்று பின்பு அது கடலிலே கலந்ததாய் சங்கமிக்கிறது. தேங்கிப்போன குளம் நிலைமாறியதாய் எங்கும் போவதில்லை. நதி மட்டும்தான் கடலிலே போய் சேர்கிறது. அந்த கடல் நீரில் கலந்த படி எங்கும் அது சங்கமமாகி சமுத்திர நீரோடு வலுவடை கிறது. உலகயுத்தம் என்ற ஒன்று வந்த பின் யூத இனத்தினர் எனப்பட்ட வர்கள் உலகெங்கிணுமே சிதறடிக்கப் பட்டார்கள். அப்படி சிதறிப் போனவர்களாகி இருந்தாலும் பிறரைப் பின்பற்றி பிறருக்கு நகலாகி அவர்கள் போனதில்லை. அவர்கள் அச்சு அசலாக இருந்தபடி உலகெங்கிலும் உள்ள மக்களில் நிகரற்ற திறமை பெருமை உடையவர்களாகவே எப்பொழுதும் இருக்கிறார்கள். அவர்களைப் போன்றுதானே ஈழத் தமிழர்களாகிய நாங்களும்! பல நாடுகளிலும் சிதறிக்கப்பட்டு இன்று வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் அவர்கள், எங்கள் வாழ்க்கை முழுக்க வீணாகிப் போச்சே என்ற வாறு சோம்பிப்போய் அங்கெல்லாம் சும்மாவா இருக்கிறார்கள்? அவர்களது தளராத முயற்சி கடும் உடல் உழைப்பு அவர்களை யெல்லாம் உயர்வான காட்சிக்கு மற்றவர்களெல்லாம் பார்த்து பிரமிக்க கொண்டு வருகிறதுதானே!”

என்று குழந்தைவேல் அளவுக்கதிகமாக இப்படியெல்லாமே யோசித்து இவற்றையெல்லாம் சிறிது நேரம் பிறகு நினைத்துப் பார்த்தார்.

“ சரி சரி! இப்படித்தான் இப்பொழுது எங்கள் வாழ்க்கை யெல்லாமே மாறிப் போயிருக்கிறது! அப்படி மாறிப்போனது போலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே நம் மனத்தையும் ஆற்றி நாங்கள் புதிய வாழ்க்கைக்குள் போக வேண்டியிருக்கிறது!" என்றதாய்த்தான் இப்போது இவருடையதுமான நிலை. யாருடனாவது இவர் கதைத்தால் அப்படியான ஒரு கருத்தை முன்னிலைப் படுத்தி வைத்துக்கொண்டதாகத்தான் இவரது பேச்சே இருக்கும்.

" பிள்ளைகள் வெளியால! நாங்கள் இங்கயா தனியாக!" என்று சிலர் கண்களில் சோகத்தோடு இவருடன் கதைக்கும்போது, இப்படியொரு விஷயத்தை கதையில் கொண்டு வருவார்கள். "என்ன அவ்வளவு சோகம் மனதிலே உங்களுக்கு? பிள்ளை குட்டியள் என்று உள்ள அவர்களெல்லாம் அங்கு இப்போது நன்றாகத்தானே சீவிக்கிறார்கள்?" என்று இவர் ஒரு கதையை உடனே பதிலுக்காக போடுவார்.

"ஆ அது சரிதான்! ஆனாலும் பிள்ளைகளோடேயாய் இல்லாமல் அவர்களுடன் கூடவே இருந்து சீவிக்க முடியாமல் மனதில் உள்ள மகிழ்ச்சியே போய்விட்டதே! அது என்னப் போன்றவர்களுக்கு மிகப் பெரிய சோகமாகத்தானே எப்போதும் பார்த்தால் இருக்கும். இதெல்லாம் சொல்லி உங்களுக்குப் புரியவே புரியாது "

என்று ஒரு நாள் இதை வெகு நுட்பமான சித்திரவதையை தான்பட்டுக் கொண்டிருப்பது போன்ற துயரத்தில் ஒருவர் குழந்தை வேலுக்கு சொன்னார்.

"சரி புரியாது என்று நீங்கள் அப்படியெல்லாம் சொல்லும் படியாக நான் நீங்கள் நினைக்குமாப் போலெல்லாம் இல்லை. விஷயத்தை நன்றாகத் தெரிந்துக்கொண்டு சரி பிழை என்று இதிலே உள்ளதை என்னாலும் உங்களோடு கதைக்க முடியும் தானே? அதனாலே நீங்கள் இப்போது நான் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லுங்களேன் உங்களுக்கு எந்தச் சலிப்பு முக்கியமாக இருக்கிறதென்று?" என்று அவரது துயரத்தை தானும் பங்குப் போட்டுக் கொள்ளும் அளவுக்கு குழந்தைவேல் இப்படி ஒரு கேள்வி கேட்டார். " அதுதான் சொல்ல வருகிறேனே! அங்கே வெளிநாட்டுக்குச் சென்று நானும் போய் என் பிள்ளைகளுடன் இருந்துகொண்டு பேரப்பிள்ளைகளைத்தூக்கி விளையாடிக்கொண்டு பொழுதைப் போக்குவதுதானே இந்த வயசிலே எங்களுக்குக் கிடைக்க கூடிய பெரிய ஆனந்தம்! அதோடு பூட்டப் பிள்ளையைக் கண்டு கொள்ளக்கூடிய வயதுக்கு நானும் நல்ல வயசுக்கு இருந்து சீவிச்சு அதை அனுபவிக்குமாப்போல கடவுள் அனுக்கிரகமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியம் பெற்றால் அது அது வந்து சொல்லப்போனா மிக மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் அளவு ஒரு வெற்றிக்கொண்ட பெரிய மகிழ்ச்சிதானே'' என்று மிகமிக உணர்வுடன் அவர் சொன்னார்.

''இதுதான் உங்கள் வாழ்க்கை முடிவடையும் வரை உங்களுக்குள்ள மாற்றமடையாத ஒரேயொரு யோசனையா?'' என்று குழந்தைவேல் பிறகு கேட்டார்.

''வயது போனால் எளிமையாக போய்விடும் அன்பு பாசத்துக்காக ஏங்கும் உள்ளத்தில் ஒருவருக்கு வேறு என்னதான் சிந்தனை இருக்கும்? நான் நினைப்பதைத்தானே என்னைப்போன்ற வயதுக்காரர்களும் நினைப்பார்கள்'' என்று நெஞ்சு திறந்த அளவில்தான் இதை அவர் பிற்பாடும் குழந்தை வேலுக்கு சொல்லி விட்டு அவர் முகத்தை பார்த்தபடி நின்றார். இந்த காலிப்பாத்திர வெறுமைக்குள் என்னதான் இருக்கிறது என்ற நினைப்பில் குழந்தை வேலும் அவரை அக்கறை ஏதுமில்லாமல் தானும் அப்போது பார்த்தார்.

''சுற்றி சுற்றி உங்களது வாழ்க்கையில் மனிதனானவனுக்கு வாழ வேண்டிய தேவைப்பட்ட நினைவுகள் இப்படியாகவா இறந்து பட்டுப் போகும்! உங்கள் வாழ்நாள் சொல்லப் போனால் சிரிப்பாகவும் போய்க்கொண்டிருக்கிறது... ஒரு வயதிலாவது இந்தப் போக்கை கழித்துக்கட்டாமல் உங்களுக்கு இருந்து வாழத் தெரியாதா? ''

''இது என்ன ஒரு கதை? உங்களது கதை அப்படி யென்றால் வேறு என்ன நினைவு வரவேண்டுமென்று இதற்காக நீங்கள் ஒன்றைபிறகு சொல்ல இருக்கிறிர்கள் ''

''அதுதான் இதைப்பற்றி இப்போது சரியாக ஒன்றை உங்களுக்கு சொல்லவென்று நான் இருக்கிறேன்! மனிசனாக இருக்கிறவனுக்கு அவனது வாழ்க்கையில் ஒரு மதிப்பு இருக்க வேண்டும் என்றதாகத்தான் நான் ஒரு விளக்கம்சொல்லுகிறேன். ஒரு மனிசன், மனைவி, மக்கள் சொந்தம் என்று அந்த வட்டத் துக்குள்ளே முழுவாழ்க்கை முழுவதும் பிணைந்த நினைவுடன் வாழாமல் சமூகத்துக்கென்றும் சேவை செய்ய ஒருகாலத்தில தன் பயணத்தைத் தொடர வேண்டும் தானே இதற்காக ஒரு மகாத்மா போன்ற சிகரமளவிற்கு செய்காரியம் செய்யவென்று வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையே? முடிந்த அளவுக்கு சமூக சேவை செய்யிறது என்று வைத்துக்கொண்டாலே அதுமட்டும் போதுமே.! ”

“சரி! சரியப்பா! நீதிபதிமாதிரி இதேபோல பல கதைகள் பலரும் சொல்லலாம்.. ஆனால் என்னைப் போன்றவனது நிலமைக்கு இதெல்லாம் ஒத்துவராதே.. இந்த நிலையிலே இன்னொருவர் துன்பத்யையும், துயரத்தையும் நான் தலையிலே இந்த வயதிலே போட்டுக்கொண்டு அவர்களோடு கிடந்து இழுப்பறிப்பட எப்படி என்னாலயா முடியும்? ”

என்று என்னை நான் இதிலே அமுக்கிக்கொள்ள தேவை யில்லை என்பது போல அவர் குழந்தைவேலுக்கு சொல்லிவிட்டு ஆள் அவர் பாட்டுக்கு பிறகு போய் விட்டார். அவர் போனதன் பின்பு குழந்தைவேலுக்கு சொல்லிவைத்ததுபோல ஒரு சிலருக்கு போய் தன்னாலான உதவிகளை செய்துகொடுக்க வேண்டி இருந்தது. அந்தக் காரியங்களையெல்லாம் செய்து முடிந்த பினபு தன் உடல் முற்றிலுமாகத் தன்னை புதுப்பித்துக்கொண்டது போல அவருக்கு உணர்வாக இருந்தது.

அவர் அதன் பிறகு கடைக்குப்போய் தேவையான பொருட் களை வாங்கிக் கொண்டு திரும்பி வீட்டை நோக்கு வருகிற பொழுது சின்னத்தூறல் மழையில் நனைந்து விட்டார், அதன்பிறகு வீட்டுக்கு வந்து தலைதுவட்டி ஆறுதலாகிய நேரம் அவருக்கு மூக்குக்குள் அரித்தது. அதை வெளிப்படுத்தும் இயக்கம் மாதிரி தும்மல் வந்தது. அந்த தும்மலிலே அவருக்கு முழு உடலும் பங்குக்கொண்ட அளவிலே முழு உணர்வுகளும் அவருக்கு சுகமாக இருந்தது. இந்நேரம் மேசையில் இருந்த அவரது கைபேசி விழிப்படைந்து வெளிச்சம் காட்டி சத்தம் போட்டது. அதை கையில் உடனே எடுத்து இயக்கிய போது அவரது இளைய மகள் அப்பா என்று அழைப்பது கேட்டது. உடனே அவர் மகிழ்ச்சியில் சிரித்தார்.

“ அப்பா எப்படி அப்பா இருக்கிறீங்க? ”

“ இந்தப் பூமியில் ஒரு மனிதன் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடியுமோ அப்படி இருக்கிறேன் ” இதை கேட்டு அவளும் சிரித்தாள் “ நீங்கள் எல்லோரும் அங்கே எப்படி ” அவர் பிறகு மகளை கேட்டார்.

“நாங்கள் பிள்ளைகள் எல்லோரும் நலம்தான்.. ஆனால் இலண்டனில் இப்போது கொரோனா வைரஸ் தொற்று அதிகமாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறது.. இறப்புக்களும் அப்படித்தான்.... இது விஷயம் உங்களுக்குத் தெரியும்தானே? ''

'' தெரியும்! அதனால்தான் நானும் இந்த விஷயம் பற்றி உனக்கு ஒன்றை சொல்கிறேன்... விழிப்புடன் இரு என்பதிலே எல்லாமே அடங்கியிருக்கின்றது மகளே! அப்படியாகத்தான் மிக கவனமாக எல்லாவற்றிலுமே இருக்க வேண்டும் ''

'' நீங்கள் சொல்வது சரிதானப்பா! ஆனால் செயல் முறையில் இது எல்லாவற்றிலும் எப்படியாக கடைப்பிடித்தாய் நடைமுறைப்படுத்துவது? நீங்கள் எனக்கு பல மொழிகளையும் நீ கண்டிப்பாகக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறி ஆங்கிலம், பிரென்சு, சிங்களம் போன்ற மொழிகளையெல்லாம் ஒழுங்காகக் கற்றுக்கொள்ள முன்னமாக உதவினீர்கள்.. அதற்கு பிறகு திருமணமாகி நான் லண்டனுக்கு வந்ததன் பிறகு, அந்த வேலைக்கு நீ முயற்சி செய், இந்த வேலைக்கு நீ முயற்சி செய், என்று எனக்கு நீங்கள் ஆலோசனை கூறிவந்தீர்கள். ஆனால் பிறகு நான்'' என்று அவள் பேசுவதை நிறுத்திவிட்டு ஒரு சிரிப்பு சிரித்தாள்.

'' அதுதான் உன்னைப் பற்றி உன் விருப்பம் என்னதான் அப்படி இருக்கும் என்பது பற்றி நானும் அறிந்துக்கொண்டு இதுதான் உன் விருப்பத்திற்கும், குணத்திற்கும், சந்தோஷத்திற்கும் பொருத்தமான ஒரு தொழில் என்றேனே? ''

'' ஓமப்பா எனக்கு இந்த குழந்தைப் பிள்ளைகளுக்கு படிப்பித்துக்கொடுக்கின்ற ஆசிரியத் தொழில்தான் மனதுக்கு மிகவும் பிடித்ததாக இருந்தது... அதையே நான் என் தொழிலாக வும் விரும்பி அந்தத் தொழிலில் என்னை இப்போது விரும்பி இணைத்துக் கொண்டதாகவும் இருக்கிறேன்.''

'' ஆ.. இந்த விஷயம் தெரிந்த விஷயம்தானே உனக்கும் குழந்தையைப்போன்ற உள்ளம் குணம்.. அதனால் நீ குழந்தைக ளோடு சேர்ந்து இருப்பதற்கு விரும்புவதில் ஆச்சரியமில்லைதானே பிள்ளை.''

'' சரிதானப்பா! ஆனாலும் உங்களுக்கு இப்போதைய இங்கே உள்ள நிலமை தெரியும்தானே? '' கொரோனா வந்து அடைக்கப்பட்ட செயல்பாடுகளெல்லாம் இப்போதுதான் மீண்டும் இங்கே சிறிது சிறிதாக செயல்பட தொடங்கி இருக்கிறது. இந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளுக்கான கற்பித்தலும் ஆரம்பிக்கப்பட்டதாய்விட்டது. எனது பணிக்கும் நான் செல்கிறேன். சின்ன பிள்ளைகளென்றாலும் சில விஷயங்களை செய்ய அவர்களுக்கு விழிப்புணர்வு இருக் கிறது. கையை கழுவி உள்ளே வருகிறார்கள். ஆனால் நோய்த் தொற்று பற்றிய அறிதல் அவர்களுக்கு விளக்கமாகத் தெரிய வரவில்லையப்பா! அவர்கள் குழந்தைப் பிள்ளைகள்தானே! சொல்லும் விஷயங்களை தொடர்ந்து செய்யக்கூடியதான கவனம் மிக்க உணர்வுகளும் அவர்களிடம் இல்லையப்பா. ஒருவரோடு கையால் தொட்டுக்கிட்டுப் பேசாதீர்கள் என்று சொன்னால் அந்தப் பேச்சை அவர்கள் எவ்வளவு நேரத்துக்குதான் ஞாபகம் வைத்திருப் பார்கள் அப்பா.. அப்படி அவர்கள் ஏதாவது செய்து விட்டால் எந்தக் கண்டனமும் நான் காட்ட முடியுமா? கோபமாக நான் எதையுமே அந்தப் பிஞ்சுக் குழந்தைகளுக்கு சொல்ல முடியாதே அப்பா... அவர்கள் குழந்தைகள் தானேயப்பா?"

என்று அவள் கடைசியாக சொன்ன குழந்தைகள் என்ற சொல்லின் குழைவு, குழந்தைவேலின் மனத்தை அப்படியே உருக்கியதாய் நெகிழ வைத்து விட்டது. அவளுக்கென்று உள்ள குழந்தையைப்போன்ற குண அழகு, அவள் குரலிலும் கேட்ட சந்தோஷத்திலாய் அவர் சிரித்தார். அப்பாவினது இந்த சந்தோஷத் தினை தானும் உணர்ந்த அறிவிலே அவளும் உடனே அப்பாவின் சிரிப்புப் போன்று சிரித்தாள்.

" இதைக் கேளுங்களேன் அப்பா இன்னும் பிறகாய் " என்று தன் கதையினை பிறகும் தொடர அவள் உற்சாகமானாள்.

"சொல்லம்மா" என்று உடனே அவரும் மனம் துளிர்க்க வாய் கேட்டார். "அப்பா அந்தப் பிள்ளைகளப்பா சில நேரத்தில எனக்குக் கிட்டவா வந்தப்பா.. ரீச்சர் மாம்.. என்டு சொல்லிக் கொண்டு என்ரை கால்களை அப்படியே கட்டி பிடிங்குங்களப்பா நான் அதுகள் அப்படியாச் செய்ய அன்பை வெறுத்து என்ன தானப்பா அதுகளுக்கு ஒன்றைச் சொல்லவா ஏலும்" என்று சொல்லிக்கொண்டு மனதுக்குள் அள்ளித்தந்த சந்தோஷத்திலாய் அவள் சிரித்தாள். அவரும் சிரித்தார். தகப்பனுக்கும், மகளுக்கும் சிறகு விரிந்த சந்தோஷமாக இவ்வேளை மனம் விரிந்திருந்தது.

**மெட்றோ நியூஸ் (மாசி 5,2021)**

**ஜீவநதி கலை இலக்கிய சஞ்சிகை (2021)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையின் வசந்தம்

இருபது வருஷத்துக்கு முன்னம் நடந்த கதைதான் இது.

அந்த ஞாபகமெல்லாம் சாகுமா? சாகவே சாகாது. என்னுடைய ஊரைப்பற்றி யாருக்காவது சொல்லவேணுமெண்டால் அவருக்கு சொல்லக்கூடியதாய் எனக்கு உடனே வாயால வருகிறது தான் என்னுடைய இந்தப் பெருங்கதை.

நெஞ்சை நிமிர்த்தி ஊருக்குள் நான் நடந்த அந்த வயசுக் காலம். எனக்கெண்டா அது பொற்காலம் தான்! அப்ப எல்லாம் தீபாவளி, வருஷ பொங்கல் அண்டைக்கு வண்டில் சவாரி போய் பார்க்கிற குஷி என்ன! நெருப்பில தின்னப் பக்குவமா என்னைச் சேர்ந்ததா உள்ள பெடியளெல்லாமா நாங்கள் சுட்டதாயதோது பண்ணி திண்ட மரவள்ளி கிழங்கை பற்றி சொல்லுறதெண்டா அது என்ன ஒரு ருசி. அப்ப எல்லாம் பின்னேரமா பொழுது பட்டு நாவல் மரத்தில வந்து கடைசிப் பறவை அடையுற நேரம் மட்டுமா பொடியள் நாங்கள் எல்லாருமா சேந்து அங்க அக்கம் பக்கம் எல்லாம் அந்த மண்ணை மிதிக்கிற சத்தமாத்தான் திடு புடு எண்டு ஓடி ஒரே விளையாட்டு.

ஆள் அரவம் இல்லாத எங்கட காட்டிலயா நாங்கள் கூட்டாளிப் பெடியளா சேர்ந்து சுணுடுவில்லோட குருவி அடிக்க வெண்டும் சில நாளில போவம். கால் சட்டைப் பொக்கட்டுக்க மிளகாய்த் தூளும் உப்பும் சரைசுத்தி ஒரு பெடியன் வைச்சி ருப்பார். நெருப்பெட்டியும் அவர் வைச்சிருப்பார். காட்டுக்க போயிட் டாலே மனம் எங்களுக்கு நல்ல சந்தோஷமாயிருக்கும். முடியில தூசு தும்பு சேர்ந்தாலும் செடிய கொடியள விலத்தி கொண்டு காட்டுக்குள்ள நாங்கள் முன்னேறிப் போவம். அந்தக் காட்டுக் குள்ள முந்தி எல்லாம் போய்ப் பழக்கமானவன் தான் எங்களுக்கு முன்னால போவான். அவனுக்குப் பின்னாலயா நாங்கள் போவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அந்த மட்டையில இந்த அணில் இருந்து என்ன தான் தின்னுது, என்ன சாப்பிடுது ” என்று ஒருவன் அதை பார்த்து விட்டு கேட்பான்.

“என்னவோ ஓண்டை அது சாப்பிடுது! டேய் அடியடா அதுக்கு பாத்து கெட்டப் போலால! ” என்பான் மற்றொருவன். அவன் நல்லா றப்பரை இழுத்து குறிபார்த்து கெட்டப்போலால அடிச்சாலும் அணில் சுறுக்கெண்டு பாஞ்சு ஓடீடும். கோயில் மாடு என்று அவனுக்கு பேச்சு பிறகு கிடைக்கும். சில தூரம் போக சடைத்த மரத்தில பச்சைப் புறா நிக்கும். சின்ன சத்தம் கேட்டாலும் அது எண்டா உடனே பறந்திடும். அதனால அதை கண்டிட்டால் கீழ சருகு சத்தமும் கூட கேக்காத அளவில அது நிக்கிற மரத்தடி பக்கம் போக பம்மிப் பம்மித்தான் நாங்கள் நடப்போம். குனிஞ்சு குனிஞ்சு கவனமாய் நடந்து முன்னால போறானே அவன்தான் அந்த புறாவை அடிக்கப் போறான். நாங்கள் எல்லாம் தின்னுற ஆசையில சத்தம் போடாம ஒரு மறைவில நிண்டபடி புறாவைப் பார்க்கிறம். ஈ காகம் கூட இப்ப சத்தம் போடுது அந்தக் காட்டுக் குள்ள. ஆனா நாங்கள் எல்லாம் கப் சிப்பெண்டதா அடங்கினதா நிக்கிறம்.

பச்சைப் புறாவெண்டா பாக்க தளதளவெண்டு அப்பிடி சோக்கா இருக்கு. பச்சை நிறமா என்ன ஒரு வடிவு. அழுக்கா அதில ஒட்டிக்கிடக்கு? ஆனா கெட்டபோலால அடிபட்டா அது பிறகு செத்திடும். அதால திண்டு கழிக்கிற குருவிதான். அவன் மரத்துக்குக் கீழ போன நேரம் மற்றைய மரத்தில் உள்ள ஒரு குரங்குச்சனியன் இன்னொரு குரங்கை விரட்டி விரட்டி பாயுது. புறா உடனே கழுத்தை நீட்டி மாறி பாறிப் பாக்குது. காச் மூச்சென்று பாஞ்சு குரங்கு காட்டையே இப்ப ஒரு கலக்கு கலக்கிப் போடுது. குருவிகளுக்கு பிறவியில உள்ள பொதுவான குணமே பயப்படுறது தானே. சுரீர் என்றதா ஓங்கி சிறகடிச்சு அது உடனயா பறந்து போச்சு. மின்னல் வெட்டின கணக்கா இருந்திச்சு அது பறந்த அந்தப் பறப்பு.

சா... அவன் எவ்வளவு கெட்டப் போலை றபர் இழுத்து விட்டு, இழுத்து விட்டு, அப்படி அதை அடிக்க குறிவைச்சவன். அந்த குருவியை பாத்து ஊற வைச்சதாயிருந்த வாய் எங்களுக்கு இப்ப காஞ்சு போச்சு. பேந்தென்ன எல்லேருமா நாங்கள் ஆசை கலைஞ்ச அளவில் பிறகும் அங்காலயா நடக்கிறம். சில இடங்களில் பொந்துகளில் குடியிருக்கிற உடும்பும் நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நேரம் கானுறம்தான். ஆனா அதுகளைப் பிடிக்கவும் எங்க ளுக்கு வேட்டை நாய் இப்ப இருக்க வேணுமே. அங்க முன்னால காட்டுக்கபோகேக்கிள்ள ஒரு புற்று இடத்தைப் பார்த்த இடத்தில அங்க பாம்பு சட்டை கழட்டி வைச்சிருக்கு என்றான் ஒருவன். இதடியிலவால உள்ள சுருட்டியதா வைச்சபடி படமெடுத்ததா பாம்பும் சிலவேளையிலா இருக்கும் எண்டு சொன்னான் பயத்தோடு பிறகும் அவன். அவன்ரை மண்டையில நல்லா ஒரு குத்து குத்தி அவன்ரை மண்டையை எடுத்து துண்டா எடுத்து வச்சிடலாம் போலத்தான் கிடந்தது. வந்த கோபத்துக்கு... இவன் மற்றபெடிய ளுக்கும் எல்லே இப்ப பயம் காட்டுறான்.

"டேய் கட்டையா நடவடா உன்ரை வாயபொத்திக்கொண்டு இப்பிடியா பயந்து சாகிறதெண்டா காட்டுக்க ஏன்ரா நீ வந்தாய்... நடவடா நடவடா.." இந்தப் பேச்சை வாங்கிக் கொண்டு அவனும் இப்ப ஏதும் பேசாமத்தான் வாறான். காட்டுக்குள்ள போயிட்டா இப்பிடி வாற துன்பத்திலயும் பாத்தா பிறகு ஒரு இன்பமிருக்கு. கரம்பை மரத்தில சோக்கான நல்ல கரம்பைப்பழம். அந்த மரத்துக்கு பக்கத்தில உள்ள சூர மரத்திலயும் நல்ல இறுகின சூரபழம்! கட்டெறும்பும் அதிலயா போக்குவரத்துப் பண்ணிக் கொண்டே இருக்கு. நாங்கள் எல்லோருமா அந்த மரத்துகளில பழம் பிடுங்கிச் சாப்பிட்டனாங்கள் தான்! ஆனா அதுக்கிள்ளயா ஒருவன் எறும்பைப் பார்த்து அதுகள உதறி விலக்கி பழத்தை சாப்பிடாத அவா பிண்டத்தில, ஒரே முழுக்கா முழுங்கியதா உள்ள தள்ளின அவனுக்கு, எறும்பு சொண்டில கடிச்சு உதடு மேடு கட்டின மாதிரி வீங்கியும் போச்சு.

சூரப்பழமும், கரம்பைப்பழமும், இன்னொரு மரத்தில பிடுங்கின கூழாம் குலைப் பழமும், நல்லா மூ.. மூ.. எண்டு மூச்சா திண்டிட்டுப் போன அளவில எங்களுக்கு பிறகு தொண்டையை நல்லா இறுக்கினதா கட்டிப் போச்சு. அதால கழுத்தில கயித்தை வைச்சு இறுக்கிற மாதிரி வந்திட்டுது. இறுக்கி இறுக்கி ஆப்படிச்ச மாதிரி தொண்டை பிறகு உறுத்துது. சரியான தண்ணி விடாய் போல இருக்கு இப்பவா எங்களுக்கு.

அதால பிறகு குருவி அடிக்கிற நினைப்பை விட்டுட்டு அந்த காட்டுக்க தண்ணிய தேடித் திரிஞ்சா, ரெண்டு மூண்டு நாளைக்கு முதல் அங்க பெஞ்ச மழையில திட்டுத்திட்டா அங்க உள்ள குழியளுக்குள்ளயா எங்களுக்கு தண்ணி இருக்கிறது தெரிஞ்சுது. இந்தக் காடு கரடில இப்படி தண்ணியக் காணவும்தான் எங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசிர் பிழைச்ச ஒரு பிறப்பு வந்த மாதிரி இருந்திச்சு. அந்த குழியில இடுப்புத் தண்ணியளவும் இல்ல, முழங்கால் உயர தண்ணியும் இல்ல கொஞ்சமா வழுவழுக்கிற சேத்துத் தண்ணிதான். எண்டாலும் தவிக்கிற வாய்க்கு அந்தத் தண்ணியை குடிச்சா நாக்கிலயும் பிறகு கொப்பளம் போடுமோ எண்ட பயம், அதில தண்ணி குடிச்சாப் பிறகுதான் எனக்கு வந்துச்சு. ஆனால் இதைப் பற்றி நான் மற்றப் பெடியளுக்கு ஏதும் பறையேல்ல.

தண்ணி குடிச்சதும் எங்களுக்கு உசிர நிறுத்தி வைச்சது மாதிரி வந்திட்டுது. காட்டை விட்டிட்டு போக இப்ப மனமே இல்லை. இந்தக் காட்டுக்கிள்ள வெயில் பாத்தா மங்கலாயிருக்கு! ஆனா, மத்தியான நேரமாப் போச்சுடா எண்டான் ஒருவன். அதுக் கென்னடா எண்டு அவனப்பார்த்து மற்றவன் கேட்டான். டேய் காணேல்ல எண்டு வீட்டயும் சில வேளை தேடுவினமெல்லே. டேய் சனிப் பிடிச்சவண்டா இவன். இவன ஏனடா காட்டுக்கு போறதுக் கெண்டு கூட்டிக்கொண்டு வந்தனீங்கள்! ஒருவன் அவனை பார்த்து நல்ல சரியான ஏச்சு.

பிறகு சரி சரி என்று நான் எல்லாரையும் சமாதானப் படுத்தியதாய் விட, பிறகு எல்லோருமா ஒற்றுமையாய் வந்திட்டதில பிறகும் காட்டுக்குள்ளயா நடக்கத் தொடங்கினம். கம்மெண்டு இருக்கு இப்ப காடு! ஒரு இலை தழை ஆடேல்ல! இந்த காட்டு வெக்கைக்கிள்ள உடம்பு என்டால் அப்பிடியே வெக்கையில வேர்வையா உடைஞ்சு ஓடுது. ஆனாலும் நடந்து நாங்கள் போகேக்க காட்டுச் சேவல் ஒண்டு அங்க கண்ணில பட்டிச்சு. கறுப்பும் சிவப்புமா தக்காளி நிறம் பூசின மாதிரி சேவலெண்டா தளதளவெண்டு பாக்க இருக்கு. நல்லா அணவு பண்ணித்தான் குறி வைச்சதாய் அவன் கெட்டப் போலால அதுக்கு அடிச்சான். றெக்கையில அதுக்கு அடியும் விழுந்ததுதான், ஆனாலும் காட்டுக் கோழி எண்டது சுருங்கின தசையெண்டாலும் நாட்டுக் கோழியை விட அது சரியான வலியனெல்லே. அதுக்கு அடிபட்டு சில வேளை சிறகொடிஞ்சும் இருக்கும்! ஆனாலும் பதறிப் பறந்ததாய் அதுவும் ஓடிட்டு.

'சிக்'

பேயிலியராய் போனதில கரும்புச் சக்கை மாதிரி வந்திட்டு எங்கள் எல்லாருக்கும் மனம். இந்த மனத்தோட நாங்கள் நடக்கேக் கிள்ள காலிலயும் கூட முள்ளுக் கிள்ளு பாட்டா றப்பர் செருப்புக் குள்ளால தச்சதுதான். ஆனாலும் கூட எங்களுக்கு அந்தக் காட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ளயா ஒரு லக் ஒண்டும் அடிச்சது. அப்பிடியா அங்க ஒரு தவிட்டை மரத்தில பளிச்செண்டு நாங்கள் முளிச்சுப் பார்த்த அளவில சின்ன கெட்டில ஒரு பெரிய தேன் கூடு ஒண்டு எங்களுக்கு எம்பிட்டிச்சுது. உடன அந்த தவிட்டு மரத்தில ஏறி ஒருவன் தேன் ஈக்கள எல்லாம் விடுவிச்சு அதை கொண்டு மரத்தால இறங்கினான். நல்ல சந்தோஷம் அதால எல்லாருக்கும்! அதை அப்பிடியே எல்லாருக்கும் பங்கிட்டதாய் திண்டம். தேன் திண்ட அந்த ருசியில எங்களிலயா ஒருவன் ஒண்டுமில்லாத தன்ரை உள்ளங்கையையே பிறகும் நசநசவெண்டு நக்கினான்.

இதுக்கு பிறகு இனியும் நேரம் செண்டதாய் இது வழிய இனி அலையேலாது எண்ட மட்டில காட்டைத் தாண்டி கடந்து, கண்ட மேடு ஏறி இறங்கி ஒத்தை ஆல மரத்தையும் கடந்ததாய் எல்லாரும் நடந்து ஊருக்குள்ளயா வந்து சேந்தம்.

வீட்ட நான் வந்து அங்க போனா அந்த நேரம் பாத்து ஐயாவும் “பெசன் புறூட்” பந்தலுக்குக் கீழ ‘புளிச் புளிச்’ செண்டு வெத்தில போட்டு துப்பிக் கொண்டு நிக்கிறார்.

“அலையிற ஊர்வெளி கழுதை மாதிரி எ...எ...எ... நீ எங்கயடா சனியனே ஊர் ஊரா அலைஞ்சு போட்டு வாறாய்? ”

எண்டு சொன்ன கணக்கிலயா முதுகில எனக்கு மளார் எண்டு ஒரு அடியும் விழுந்திச்சு. அந்த அடியோட அவர் நிறுத்தினதால ஆண்டவனே இண்டைய பொழுதில நான் தப்பிச்ச அளவிலயாவிட்டன்.

இதை விடுத்து வேற ஒணடை நான் சொல்லுறதெண்டால் அந்தக் குஷி எங்களுக்கு குளத்துக் குளிப்பு எண்டதாத் தானே இருக்கும்.

இந்த வவுனியாவில இலை தழை கூட ஆடாம அசையாம வறுத்தெடுத்தமாதிரியான காலம் கழிஞ்சு மாரி காலம் வந்திட்டா சுழட்டிப்போட்ட கடுங்காத்தோட போடு போடு எண்டதாய் மழை பெய்யிற நேரம் எனக்கும் என்னுடைய கூட்டாளிப் பெடியளுக்கும் எப்பிடி இருக்கும். மழை பெய்யப் பெய்ய சதசதவெண்டு நிலம் வந்தாலும் இப்ப குளிர்மையில மரமெல்லாம் சிலுப்பி முழிச்சதா நிக்குது. சடபுடவெண்டு ஒரே தூறல்தான் விடாதப்பா இந்த மழை. பூமி குளிர, மழை நல்லா ஒரு போடு போடுமே இந்தக் காலம்! அதால அடுப்பில விறகு தள்ளி நெருப்பில அம்மாவும் ஐயாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாளையில குளிர் காய்வினம். எனக்கெண்டா இரவில சுகம் சுகமா போர்வை போர்த்துப் படுக்கலாம்! சுகத்தேக்கமா அப்ப நல்ல நித்திரை வரும்.

வவுனியாவில இந்த மாரிகாலத்தில உள்ள குளங்களெல்லாமே மிச்சம் பெரிசா மழை பெஞ்சதால பார்த்தா மறு பிறப்பு கண்ட மாதிரித்தான் இருக்கும். மழைக்கு வீச்சமெடுத்து தண்ணி பெருகி கான் வளிய எல்லாம் ஆறாப் பெருகி... ஓடி குளத்தில போய் சேர குளம் இப்ப சமுத்திரம் மாதிரி நிறைஞ்சிடும். குளம் நிறைஞ்சா குமர் பெட்டையள் கூட வீட்டில குளிக்காம குளத்தில குளிக்கிற ஆசையில குளத்துக் குளிப்புக்கு வந்திடுவாளயவள். வெக்கம் வெக்கமா அங்காலயும் இங்காலயும் பார்த்துக் கொண்டு உடுப்பு மாத்திக்கொண்டு நெஞ்சை கையளால பொத்தினபடி குளத்தில இறங்கி அவளயள் எல்லாம் குளிப்பாளவயள். ஒரு இறுக்கு இறுக்கி நெஞ்சோட சேத்து தச்சது மாதிரித்தான் அப்ப அவளயள் குறுக்கு கட்டியிருப்பாளயள். எங்கட செற் பெடியள் எல்லாம் சேர்ந்து குளத்துக்கெண்டு போனா இந்த நேரம் பெட்டையள் குளிக்கிறதையும் நாங்கள் கண்டிட்டா பிறகு என்ன எங்கள் எல்லாருக்குமே உல்லாசம்தான்.

அந்த குளமே கலங்கி பிறகு கூழா வந்திடும். எங்களால! அப்பிடியாத்தான் அந்த குளத்துத் தண்ணியையே நாங்கள் போட்டு கலக்கி அடிப்போம். குளத்திலயிருந்து தண்ணீர் வயலுக்குப் பாயும் குலுசுக்கட்டுக்கு மேலியா நிண்டு எங்கட பெடியளெல்லாம் தண்ணீருக்கயா என்ன பாய்ச்சலெல்லாம் தொபுக்கடீர் என்று பாஞ்சு விழுவாங்கள்.

எங்கட இந்த கூத்தில குளத்து அலைகரைப் பக்கமா மேஞ்சு போட்டு வந்து தண்ணி குடிச்சுக்கொண்டிருந்த மாடுகளே தண்ணி குடிக்கிறத விட்டிட்டு இப்ப தலையை தூக்கி பயத்தில பாக்கும்.

இப்பிடி நாங்கள் பாயிற பேயாட்டப் பாய்ச்சலுக்க எங்களில ஒருவன் அங்கபார்த்தா அந்த மருத மரத்திலயா இப்ப மேல ஏறிட்டான். அந்த மருத மரம் குளத்துத் தண்ணீரக் கட்டு கரைப் பக்கமாத்தான் வெட்டருவாள் மாதிரி நிற்குது. உருண்டு திரண்ட மரக்கிளையொண்டு அந்த மரத்தில இருந்ததால, குளத்துக்கயா அது தண்ணீரப் பக்கமா நீண்டிருக்கு. அந்த கிளையில பிடிச்சு நுனிக்குப் போனவன் "டேய் டேய்" எண்டு பெரிய சத்தம் போடுறான். எல்லோரும் தன்னையப் பாக்க வேணுமெண்டு அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“டேய்” எண்டு கத்த நாங்கள் எல்லேரும் தண்ணிக்க நிண்டதா அவனைப் பாக்கிறம். ‘ ஏய்..ஏய்...ஏய் ’ எண்டு பிறகு நாங்களும் அவனுக்கு சப்போட்டா தொண்டை கிழிய கத்திறம்.

அவனும் “ டேய் டேய் ” எண்டு எங்களப் பாத்தும் பிறகு அங்க குளிக்கிற பெட்டையளப் பார்த்தும் பெரிசா கத்திக் கொண்டு அந்த மரக்கிளையிலயிருந்து தண்ணீருக்க தொபுக்கடீர் எண்டு குதிக்கிறான். அவன் தண்ணீருக்க பாய்ஞ்சு விழ, நாங்களும் ஒண்டடி மண்டடியா “ டேய் அடடேய் ” எண்டு கத்திக்கொண்டு சிரிக்கிறம். எங்களோடயா அங்கே பார்த்படி தண்ணிய கையால் அலசியபடி ஆயிரம் சிரிப்பா பெரிசா சிரிக்கிறாளயள் பெட்டையள்.

இப்ப இந்த பாய்ச்சலெல்லாம் பாஞ்சு காட்டின எங்கள விட அவன் தான் இப்ப பெடிச்சியளுக்குப் பார்க்கிறதுக்கு ஹீரோவா கீட்டான். அப்பிடித்தான் எங்களுக்கு அந்த பெட்டையள் வைச்ச மதிப்பிலயா விளங்குது.

ஆனாலும் நாங்கள் இப்பிடி செய்யிற கூத்துகளால ஆசை தீர அந்தப் பெட்டையள் குளத்தில குளிக்க அவளிண்ட தாய்மார் பிறகு விடேல்ல. ‘உர்’ என்று எங்களைப்பாத்து உறுமிக் கொண்டிருக்கிற மாதிரிதான் அந்தப் பெட்டையளிண்ட தாய்மார் எல்லாம் தங்களுக்கயா பேசுறமாதிரி எங்களுக்கெண்டதா அங்க இப்பவா விழுகுது பேச்சு.

“ தறுதல பிடிச்ச காட்டுவாடி சனியன்கள்! கூடிச் சேந்து அதுகள் இப்பவா இதுக்க குதிக்கிற துள்ளுற கூத்தப்பார்! நிம்மதியா குளத்துக்கு வந்து குளிக்க விடுதுகளே இந்தப் பேய் பிசாசுகள்...! குளிக்கவெண்டு நாங்கள் குளத்துக்கு வந்தா குரங்குக் குட்டிக் கரணம் போடுறதா பாய்ஞ்சு எழும்பி குளத்தை கலக்கி சேறாக்கி மனிசர் இதுக்க குளிக்க ஏலாமல் செய்யிதுகள் செம்மறியள்....! எடியேய்! குளிச்சது இனி காணுமடி! நீங்கள் குளத்தால வெளிக்கிடுங்கடி இனி வீட்ட போவம்! ”

என்று எங்கள காறித்துப்பாத கணக்கிளயா இடிச்சுப் பேசுற மாதிரி பேசிக்கொண்டு நிற்குதுகள் தாய்மார். அப்பிடி ஏசிக் கொண்டு கரையடிக்கு ஏறி அங்க கிடந்த சீலையை உடுப்புகளை திரட்டிச் சுருட்டி கைவளிய அள்ளிக் கொண்டு தாய்மாரெல்லாம் பிள்ளையளக் கூட்டிக்கொண்டு வீட்ட போகவெண்டு குளக் கட்டிலயா ஏறீட்டுதுகள். அந்த மூடுகிளை பரப்பின வட்ட இலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்துக்குக் கீழ போய் நிண்டு பிறகு உடுப்புகளை மாத்திக் கொண்டு இனி அதுகளெல்லாம் வீட்டயா இனி போயிருங்கள்.

பெட்டையள் குளத்தை விட்டு போனது உடைஞ்சு ஒழுகின மாதிரித்தான் மனம் எங்களுக்கு சோர்வாப் போச்சு.

அங்க குளிக்கவெண்டு வந்த எல்லாரையும் அந்த இடத்தை விட்டு இப்பிடி போக்கடிச்சாலும் வெயில் ஏற ஏற எங்களுக்கு உசாரும் ஏறிட்டுது. இலை தெரியாம சோறு நிரம்ப வைச்சாலும் இப்ப நல்லா எங்களுக்கு சோறு தின்னலாம்! அவ்வளவு எங்களுக்கு வந்திட்டு பசி! ஆனாலும் குளத்தை விட்டு வீட்ட போகவெண்டு மனமே எங்களுக்கு வரேல்ல.

பெட்டையள் குளத்துக்க குளிக்கேக்கிள்ள அந்தப் பெட்டையளுக்கு எங்களுக்குள்ள ஆர் ஹீரோவா தெரியிறது எண்டு, அதுகளுக்கு பாக்கிறதுக்கு சோக்காட்டிக் கொண்டிருந்த அந்த நிலைபரம் எங்களுக்கு போய் இப்ப எங்களுக்குள்ள ஆர் பெரிய வீரன் எண்டுற போட்டி ஒண்டு அவளயள் போன பிறகு எங்களுக்குள்ளையா வந்திட்டுது.

"இப்ப சொல்லுறன்...! எல்லாரும் நான் சொல்லுறதை கேட்டுக் கொள்ளுங்கோ...! "

என்று அவன் அப்படி ஒரு போடு போட, நாங்கள் எல்லாரும் அவனுக்குப் பக்கத்திலயா கூடினோம்.

" என்னடா சொல்லப் போறாய்?" என்று சேர்ந்ததாக அவனைக் கேட்டோம்.

" எல்லோருக்குமா பந்தயம் ஒண்டு! "

" என்ன பந்தயம் சொல்லன்? "

" ஓட்டப் பந்தயம் இல்ல....! நீச்சல் பந்தயம்...! நீச்சல் பந்தயம்! "

" அப்பிடியெண்டா? "

" இப்பிடித்தான் அது...! இந்தக் குளத்து தொங்கலில இருந்து பேந்து பிறகு இந்த தொங்கல் வரையாவும், பிறகு இந்தத் தொங்கலிலயா இருந்து பிறகு அங்க வரையாவும் நீந்திறதில ஆர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தி நீந்தி வாறது எண்டதுதான் போட்டி! அதுக்கு என்ன எல்லாரும் ரெடியா ரெடியா? "

" ஓ! ரெடி! ரெடி! ரெடி! எல்லாரும் நீங்களுமா அவன் சொன்னமாதிரி இப்ப ரெடிதானே "

" ஓஓ.... ரெடி! ரெடி! "

" அப்ப! வண், டு, திறீ! "

என்று சொன்னது தான் தாமதம் குளத்து தொங்கல் மாட்டுப் பக்கமாக இருந்து போட்டி நீச்சல் எங்களுக்கு தொடங்கி விட்டது.

தண்ணிப்பாம்பு மாதிரி நாங்கள் எல்லாருமே சீறிப் பாஞ்சதா நீந்துறம். தண்ணி ஆழத்துக்குப் பயமில்ல! ஒண்டுக்குமே பயமில்ல! இடுப்புத்தண்ணீர் மாதிரியா நினைச்சுக் கொண்டு நாங்கள் எல்லாருமே நீந்துறம். வெள்ளம் அடிக்கேக்கிள்ள போற மாதிரி உன்னலிலயும் சில பெடியள் தண்ணிக்கு மேல ஸ்பீடா போறாங்கள். இப்ப எல்லாரும் கடைசிக் கரைக்கு வந்து சேர்த்தாச்சு. இனி அந்தக் கரை போயாக வேணுமே! தண்ணியில விழுந்து உருவின மாதிரி வலிச்சு வலிச்சு இப்ப அடுத்த நீச்சல். களைச்சவன் களைக்க பறந்தது மாதிரி முன்னால போயிட்டான் நீச்சலில ஒருவன்.

நானும் முந்தேல்ல, மற்றவங்களும் அவனை முந்தேல்ல, அவன்தான் பிறகு நீச்சலில வெற்றி! எங்களுக்குள்ள நீச்சலில வீரன் அவன்தான் என்டதா பிறகு ஆயிற்று.

இதெல்லாம் முடிய இப்ப நேரம் போச்சு எண்டதாய் எங்களுக்கெல்லாம் இப்ப பயம்.

பருத்திப்பஞ்சு காத்தில பறந்து போகிற மாதிரித்தான் பிறகு ஒரே ஓட்டம் எங்கட எங்கட வீடுகளுக்கயா போயிச் சேர. என்ரை வீட்டுக்கு நான் போய்ச் சேர்ந்தா, அதே பெசன் புறூட் பந்தலுக்குக் கீழேயா ஐயா நிற்கிறார்.

பாத்தா அடுப்புத் தீக்கங்குகளாயிருக்கு அவற்றை கண். கையில குச்சி எடுத்து வைச்சிருக்கேல்ல. மாடு விரட்டுற பிரப்பம் கம்பும் தான் அவர் வைச்சிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அந்தக்குளம் தண்ணி முட்டினா ஆற்றையும் ஒரு உசிர் எடுக்கிற குளம், அதில போய் விடிய இருந்து பொழுது படவா ஆட்டம் நீ போட்டியோடா? "

எண்டு சொல்லி சொல்லி பத்து நாள் பதினைஞ்சு நாள் எண்டு சேர்த்து வைச்ச மாதிரி எல்லா அடியளும் எனக்கு இப்ப தாறுமாறா எனக்கு விழுகுது. அந்த அடிக்குள்ளயா வைராக்கியத்திய ஐயா என்னய எட்டி ஒரு மிதி கூட மிதிச்சவர் தான்.

எனக்கு அடி விழுகுது எண்டுபோட்டு அத தடுக்க அம்மா குறுக்க வர மாட்டா! ஏனெண்டா எனக்கு விழுகிற அடியோட சேர்த்து அம்மாவுக்கும் சில வேளை பிறகு அடி விழும்! அதால அவவுக்கு பயம். அதால நெஞ்சைப் பிடிச்சுக் கொண்டு என்ரை பிள்ளைய போட்டு உப்புடி அடிக்காதயுங்கோ அடிக்காதயுங்கோ எண்டு கத்திக் கொண்டு அம்மா நிலப்படியில அப்படியே கீழே குந்தியதாய் இருந்திட்டா.

ஐயா அடிச்ச அடியில எனக்கு காலுக்கீழவா பாம்புச் சட்டை உரிச்சது மாதிரி தோல் உரிஞ்ச காயம். இப்பிடி அவருக்கு பத்தியப்படுமளவுக்கு அடிமேல எனக்கு நல்ல அடியாப் போட்டிட்டு, மாட்டுப்பட்டியில மாடு கண்டு போட்டிருக்கெண்டு அதைப் பாக்குறதுக்கு ஐயா அங்கவா போயிட்டார்.

எனக்கு ராவு போல பாத்தா காலில கடுங்கொண்ட வலி. கட்டிலில நான் படுத்திருக்க ஏதோ சுண்டவைச்ச எண்ணையெண்டு ஒண்ட அம்மா கையில கொண்டு வந்தா. "எண்ணை ஒண்டும் போடாதயம்மா அரியண்டமா இருக்குமணை எனக்கு" என்றேன் நான்.

" அட மோனே இது நல்ல ஒரு நோவெண்ணையடா... மஞ்சள்,கருஞ்சீரகம், கருமிளகு பச்சைக் கற்பூரம், வெள்ளெருக்கம் பூ எல்லாம் நல் எண்ணையில போட்டு சுண்டக் காச்சின நல்ல எண்ணை மோனே இது. இதை தடவினா உனக்கு நோ பறந்திடும்."

எண்டு அம்மா சொல்ல, " சரியம்மா போட்டு விடு "– என்று நானும் கட்டிலில குப்புறவா திரும்பி படுத்தன்.

அம்மா பிறகு எண்ணை தடவி விட்டு, பனை விசிறியாலயும் கொஞ்ச நேரம் அதில கட்டிலில இருந்தபடி காத்தும் எனக்கு விசுக்கி விட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இப்பொழுது நோ கொஞ்சம் சுகமாயிருக்க அப்பிடியே கண்ணை மூடிக்கிடந்தன்.

அம்மா தன்ர பாட்டுக்கு இருந்தபடி ஒருத்தியாவே பேசிக்கொண்டிருந்தா.

" என்ரை பிள்ள ஒரு பாவம்... இந்தப் பாலகனைப் போய் அந்தாள் கண்மண் தெரியாத அளவுக்கு கண்டமாதிரி கம்பால எடுத்து அடிச்சுப் போட்டுதே... இனி எப்ப மாறுமோ என்ரை பிள்ளைக்கு இந்த நோவு வலி... சீ பிள்ளையளுக்கு இந்த லீவு விட்டது தான் விட்டது... இனி எப்பதான் இந்த பள்ளிக்கூடம் எண்டது துவங்கப் போகுதோ? "

சொல்லி சொல்லி அம்மா முதுகை கையால் தடவி விட்டுக் கொண்டே இருந்தா... அந்த ஆறுதலில் உறக்கம் எனக்கு நன்றாகவே வருகின்றது போல இருந்தது.

**ஜீவநதி கலை இலக்கிய சஞ்சிகை (ஆனி 2022)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேளாண்மை விளைச்சல்

"நெற்பயிரின் இலைப்பச்சை காய்ந்து கருகி சருகுகளின் ஓசையாகிவிட்டதே காற்றடித்தலுக்கு! பச்சைநிற அலையேயின்றி பூச்சிகளின் பாதையாகி சீரழிந்து விட்டதே என் நெல் வயல்! பச்சையான நெற்பயிராய் ஒளி திரள வளர்ந்து பலன் கொடுக்கும் வயல் நிலமா இந்த எனது வயல் நிலம்? இம் முறை இந்த வயல் விதைப்பு எனக்கு கண் மூடியதாய் சுருள் கொண்டு பயன் தராததாய் ஏமாற்றி விட்டதே கடவுளே! "

நாகநாதன் இவ்வாறு நினைத்தபடி, பிணியுற்றது போன்ற தளர்வுடன் வயல் வரப்பில் நடந்து கொண்டிருந்தார். வேர்வை கொட்டும்படி பாடுபட்டு உழைத்தும் இம்முறை வயல் போகம் களைப்படைந்த சோர்வாய் ஏமாற்றிவிட்டதே, என்ற கவலையோடு அப்படியே நடந்து காவல் குடிலுக்குள் வந்தார். சுவாச ஒழுங்கில் அவ்விடத்தில் முன்னம் படும் அந்த நெற்பயிர் வாசனையே இன்று இல்லாத நிராதரவான தனிமை அவ்வேளை அவருக்கு இருந்தது. அந்த கவலையோடு அப்படியே வந்து சாக்குக் கட்டிலில் சாய்ந்து படுத்தார். படுத்த கையோடு அதிரிச்சி மிருகமாக ஊருக்குள் வாங்கிய கடன் சுமை யோசனை வந்து அவரை பயமுறுத்திற்று. அந்த கடன் சுமை போன்ற நேரடி மிருகக் கனவு, பொம்மலாட்டம் போட்டது போன்று நடித்து வாடிய தனிமை வாசத்தில் மனதில் அவருக்கு பயங்கர இடியாக இறங்கியது.

முன்னம் செய்த நெற்போக காலத்திலெல்லாம் இப்படி வயல் காவல் குடிலுக்குள் உள்ள சாக்குக் கட்டிலில் அவர் வந்து சாய்ந்து படுத்தால், காற்றின் அடுக்கு வீச்சில் தலை சாய்ந்து கிடக்கும் நெற் கொத்து அசைவதான நினைப்பே அவருக்கு மகிழ்வூட்டும் தோற்றமாக வரும். தன் குடும்பத்தில் உள்ள மனைவி பிள்ளைகளின் சந்தோஷமான உரையாடல்களையே அவர் நினைவில் திரும்ப திரும்ப கொண்டு வந்ததாய் மகிழ்ந்தும் அவர் சிரிப்பார்.

பால் கனத்த நெல் பிஞ்சு, வயலில் அசைவாடும் காலத்திலிருந்தே அவருக்கு எத்தனை வித கற்பனைக் கனவுகள் விரியத் தொடங்கியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் இன்று உரிய பசளையின்றி எரிகின்ற அளவில் போய் விட்ட வயல் எல்லையை விட்டு அதை கடந்து செல்லும் நிலையையே அவருக்கு தொடமுடியாத அளவிலாக போன கால மாகவே இருண்டதாக வந்துவிட்டது. இன்றைய இந்த நினைப் பெல்லாம் கரு மேகச் சுருணைகள் போல வர சாக்குக் கட்டிலில் ஆறுதலாக அவருக்கு சாய்ந்து கிடக்கவே முடியவில்லை. உடனே கூனி சுருங்கி உடலை நெளித்தவாறே அப்படியே படுத்த கட்டிலால் இருந்து எழுந்து இருந்தார். தாகம் உஷ்ணம் அடங்காத மாடுகளின் மூச்சைப்போல ஒரு பெரு மூச்சை வெளிவிட்டார்.

ஆட்கள் சுருங்கிய வயல் காடு என்றாலும், சேர்ந்து உரை யாடுவதற்கென்று நாகநாதனுக்கு ஒரு ஆள் துணை அவ்விடத்தில் இல்லாமலா இருக்கும்? அழுத்துகிற வதைப்பு நிலையில் உள்ள தான நாகநாதனுக்கு வீரகத்தி ஆறுதல் சொல்லவென்று உள்ள ஏற்ற ஆள்தான்! பார்த்தால் வீரகத்தி என்பவர் தொப்பூள் கொடி உறவு போல நாகநாதனுக்கு அப்படி நல்லதொரு நெருக்கம்! அதோ பனைகள் எட்டிப் பார்த்த அளவிலாய் இங்கிருந்து பார்க்க தெரிகிறதே ஒரு நெல் வயல்! அந்த இடத்தில் தான் வீரகத்தியின் வயல் உள்ளது. வண்டிப்பாதை அழிந்து உழவாகிக் கிடப்பது போன்ற இடத்தினிலே இருந்து வீரகத்தி தன் வயல் பக்கமிருந்து நாகநாதனின் குடிலுக்கு வந்து சேரலாம்.

அந்த வழியாக இன்றும் வீரகத்தி நடந்து வந்ததாய் நாக நாதனின் காவல் குடில் பக்கம் வரவும், அவரைக் கண்டு விட்டு காட்டு ஜீவனைப் போல தனிமையில் கிடந்து துன்புற்ற நாக நாதனுக்கு சிறிது மனத் தெம்பு ஏற்பட்டது.

“ வீரகத்தி வாருங்கோப்பா.... வாங்கோ வாங்கோ”

என்று அவரை கண்ட பட்சத்தில் வரவேற்றார்.

“என்னப்பா நாகநாதன் ஒரே யோசனையிலயா கொட்டிலுக்க நெடுகவாப் படுத்தே இதுக்குள்ள கிடப்பீர் போல கிடக்கு? ”

இப்படி கேட்டபடியே வீரகத்தியும் குடிலுக்குள் வந்து, நாகநாதன் இருந்த சாக்குக் கட்டிலிலே தானும் ஒரு பக்கமாக இருந்தார்.

“அப்ப என்ன மாதிரி இப்ப உம்மடை நிலைமையள் யோசனையள் எல்லாம் இருக்கு?”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கால் ஆட்டியபடியே முன்னால் தெரிந்த வயலை கவனித்தவாறு அவர் கேட்டார்.

" உனக்கென்னப்பா! என்ன நடந்தாலும் அது சிம்பிள் என்ட கணக்காகத்தான் இருக்கும்... ஆனால் உம்மை மாதிரியே நான்? "

" அப்படி நீர் என்னத்தைத்தான் உம்மடைய யோசனையில வைச்சுக் கொண்டு சொல்லுறீர் காணும்? "

கேட்கும் போதே, ஒரு சின்னச்சிரிப்பை உதடுகளில் தவள விட்ட படிதான் வீரகத்தி கேட்டார்.

" அத என்ர வாயால சொன்னாத்தான் நீரும் கேட்டு சந்தோஷப்படுவீரோ? "

" ஆ... எப்படியும் நீர் இதைத்தான் எனக்கு நீர் சொல்லுவீர் போல, என்ர மகன்கள் ரெண்டுபேர் வெளிநாடுகளில இருக்கிறாங்கள். உனக்கென்ன குறை உனக்கென்ன குறையெண்டு, அப்படித்தானே? "

" அது உண்மைதானேயப்பா! உமக்கு அப்படி என்டாலும் ஒரு ஆறுதல் இருக்குத்தானே? ஆனா எனக்கு உம்மை மாதிரியே சொல்ல இருக்கு! எனக்கு இருக்கிறது மூண்டுமா பெம்பிளப் பிள்ளயளல்லே! அதிலயும் மூத்தவளை இங்க ஊருக்குள்ளயா கட்டி குடுத்ததில இப்ப எனக்கு ஏகப்பட்ட கடன் தனி! அது போதாதெண்டு கையில உள்ளதுகளையெல்லாம் வயலில நம்பிப் போட்டு வயலும் ஏற்ற பசளை மருந்து இல்லாத ஒரு வறட்சியில பெரும் பாய்ச்சலாய்க்கருகி இப்பவா உருமாறி விளைச்சலில்லாமப் போச்சு... இந்த வயலை நம்பித்தானேப்பா என்ரை குடும்பம் முழுதுமே சீவியம் பண்ணவெண்டு நம்பினதாக் கிடக்கு? "

" ம்! உம்முடைய பாடும் இப்பிடி அப்பிடி தனித்து நீர் ஒருவனே போட்டு அடிச்சதாய்க் கிடந்து காலம் தள்ளவெண்டு இருக்கிறதும் பார்க்கப்போனா பெரிய கஷ்டம்தான். "

" ஒருக்காலமும் இப்படி இந்த முறைபோல வயல் வேளாமையில சொல்லப்போனா கஷ்டம் எனக்கெண்டு எப்பவுமே வந்ததேயில்லையப்பா... குளப்பரப்பெல்லாமே சமுத்திரம் மாதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணியும் முட்டிக் கிடக்கிற இந்த இடத்தில எல்லா போகத் துக்கும் ஒழுங்கா வயல் விதைச்சி பலன் எடுத்து குறைவில்லாம விளைச்சலை வீட்டுக்கு கொண்டு போய் சேர்த்த காலமாகத்தானே எல்லா காலமும் எங்களுக்கு நெடுக இருந்துச்சு."

" அது தானேப்பா எனக்கும் எண்டுறனே நாகநாதன்! மண் பழக்கப்பட்டதுக்கு வேறு ஒண்டைய மாற்றீடாப் போட்டா எப்படித் தான் முன்னம் உள்ளதைப்போல விளைச்சல் அப்படியா வரும்? பயிரெல்லாம் வெளுத்து காஞ்சுபோன பாசிமாதிரியல்லே இந்த முறை வந்திட்டு! பாறையளுக்கு இடையில விழுந்து முளைச்ச நெல் மாதிரியல்லே வறுமையில கிடந்து வாடினமாதிரியா இப்ப இந்த பயிரையெல்லாமே பாக்கவாக்கிடக்கு! இதுக்கு எல்லாம் மன ஆறுதலா ஒண்ட சொல்லுறதெண்டா, நான் முந்தி அப்ப இளந்தாரிக் காலத்தில் படிச்ச ஒரு கதையொண்டு தான் இப்பவா எனக்கு ஞாபகம் வருகுது காணும் "

என்று வீரகத்தி கதை என்று அதை சொல்லும் வேளை அவரின் குரல் கொஞ்சம் இறங்கி வர நாகநாதன் அவரை கவனிப்பாய் பார்த்தார்.

" ஓ! அதொரு நல்ல கதை! "

என்று தனக்குள் நினைத்து வீரகத்தி ஒரு சிரிப்பும் சிரித்துவிட்டு,

" சா.... அப்பிடி அது ஒரு நல்ல கதையப்பா..." என்று அவர் சொல்ல, இருந்த தன் சோகத்திலும் கழுத்தை வளைத்து அவரை பார்த்தபடியே,

" ம்...." என்றார் நாகநாதன். தன் ஆர்வத்தை கலைக்காமல் வீரகத்தியும் பின்பு கதையை தொடர்ந்தார்.

"ரஸ்சியா எழுத்தாளர் டால்ஸ்டாய் எழுதிய கதைதானப்பா நான் இப்ப சொல்லுற இந்த கதை... அந்த கதை என்னெண்டு சொன்னா... அப்பத்தைய அந்த மன்னரின்ட ஆட்சியில தானிய களஞ்சியம் உள்ள அறையில ஒரு முட்டை அளவு மாறுபாடான ஒரு தானியத்தை அதுக்குள்ள ஒரு இடத்தில இருக்கிறதா அவயள் கண்டு கொள்கினம்... இதுக்குப் பிறகு அந்த தானியம் மந்திரியின்ர பார்வைக்குப் போய் அதை பிறகு மந்திரி கொண்டு போய் அரசனிட்டயா பிறகு காண்பிக்கிறார்... அரசன் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானியத்தை வடிவா பார்த்திட்டு பெரிய ஆச்சரியப்பட்டு எந்த பசுமை உலகிலேயப்பா இப்பிடிப் பெரிய திரள் உள்ள தானியம் விளைஞ்சுது... இது எந்தக் காலத்திலயப்பா இந்த மண்ணில விளைஞ்சிருக்கும்? இதைப் பற்றிய விளக்கம் உமக்கு சொல்ல முடியுமா மந்திரியாரே? " என்டு அவரை பார்த்து அரசன் கேட்க மந்திரி தன்ர மூளையைப் போட்டு குழப்பி யோசித்து தனக்குத் தானே நாடி பிடிச்சுப்பார்க்கிற மாதிரி ஒரு கண்டு பிடிப்புக்கு வந்திட்டு... அரசரைப் பார்த்து... "அரசே இந்த விஷயத்தை அறியிறதெண்டா எங்கட வயசுள்ள ஆக்களால எல்லாம் அது முடியாது... இதை சரியாக விளக்கமா தெரிஞ்சுகொள்ள வேணு மெண்டா எங்கட நாட்டில உள்ள நல்ல வயசாளி ஒருவரிட்டத்தான் பிடிச்சு அவரைக் கேட்க வேணும் " என்டிட்டார்.

இப்படி மந்திரி சொல்ல அரசரும் சரி அப்படியான ஒரு வயசாளியை கூட்டிகொண்டு வாரும் அவரிட்ட இதை பற்றி விளக்கம் கேக்கலாம் எண்டிட்டார். மந்திரியும் ஊர் முழுக்க நாடு முழுக்க அலைஞ்சு தேடுறதுக்கு சேவகர்களை விட அவயளும் ஊருகளுக்குள்ள உள்ள ஆக்கள் எல்லாரிட்டயுமா இருக்கிற வயசாளி ஒருவரை பார்த்து அவரை கூட்டிக் கொண்டு வர அவர் வந்து அந்த தானியத்தை நல்ல வடிவா கவனிச்சுப் பார்த்துப் போட்டு " அரசே இந்த வயசில இவ்வளவு காலமும் இப்படியொரு தானியத்தை நான் காணவும் இல்லை அதால இதைப் பற்றி எனக்குச் சொல்லவும் தெரியேல்ல ஆனாலும் என்ரை தகப்பனா ருக்கு இதைப்பற்றி சொல்லக் கூடியதாக இருக்கும்." எண்டிட்டார்.

அவர் இப்படியாச் சொல்ல மன்னருக்கு அவர் சொன்ன கதை கேட்டு ஆச்சரியமாப் போட்டுது. அவர் உடனே யோசிச்சார். அடட வந்திருக்கிற இவர் தான் ஊருக்குள்ளயே வயசாளி எண்டு கிறம் அப்பிடி வயசாளியான இவருக்கே தலை முடியில முகத்தில உடம்பில இந்த வயசுக்கு பெரிய எதிர் மாற்றம் வந்ததாயி ருக்கென்றே பார்க்க கண்டு பிடிக்கவே ஏலாததாய் இருக்கு. இவரே இந்த வயசுக்கு இப்பிடி இருக்க இவற்றை தகப்பனாரும் இவருக்கு இருக்கு எண்டுறார். அதுவும் இப்பவா பெரிய ஆச்சரியமா இருக்கு. என்று நினைச்சுக்கொண்டு, சரி இப்ப நீங்க அவரை கூட்டிக் கொண்டு வாங்கோ. எண்டு மந்திரிக்கு அரசர் சொன்னார். சரி எண்டு போட்டு இதுக்குப்பிறகு மந்திரி ஆக்கள் போய் இவரின்ட தகப்பன் இருக்கிறாரே அவரைப் போய் கூட்டிக்கொண்டு வருகினம். அவரும் மன்னரை பார்க்க வரேக்கிள அவற்றை அந்த வயசிலயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பீரமாகத்தான் நடந்து வாறார். அவரும் வந்து ஒளி ஒடுங்காத நல்ல வெளிச்சமான கண் பார்வையோடு நல்லா இந்த தானியத்தை பார்த்திட்டு "அரசே...!"

என்று அதைப் பற்றி ஏதும் அறியாததில உடன நிறுத் திட்டார். அரசருக்கு அவர் அப்படி தயங்கினது பெரிய ஏமாற்றமாய் போச்சுது. "அப்போ உமக்கும் இதைப்பற்றி ஏதும் சொல்லத் தெரியவில்லையா? உம்முடைய வாழ்நாள் காலத்தில் கூட இப்படி தானியத்தை நீர் கண்டதில்லையா?" என்று, சொல்லிவிட்டு அரசரும் மனம் குழம்பினார். அப்படி அரசர் மனம் குழம்புவதை பார்த்திட்டு அங்க வந்த வயசாளி ஆள் என்ன சொன்னார் எண்டு தெரியுமா நாகநாதன்? "

என்று வீரகத்தி இவ்வளவு நேரமும் ருசித்துப் பேசிக் கொண்டிருந்த தன் கதையின் கவனத்தை விலக்கி நாகநாதனின் முகத்தை பார்த்தார். நாகநாதனுக்கு வீரகத்தி இப்போ சொல்லிப் போகிற கதையிலே அவர் சொல்வதையெல்லாம் கேட்டபடி இருக்க ஒற்றைக் கொம்பு குதிரையை தேடிக்கொண்டிருக்கிறதைப் போன்ற தான ஆராய்வும் ஆச்சரியமுமாக இருந்தது. விவசாயமே அவருக்கு வாழ் நாளில் முழு நேரமும் அவருக்கு சிந்தனையும் செயலுமா யிருந்தால், வீரகத்தியின் கதை சொல்லல் அவருக்கு மனதில் உள்ள கவலையை விலக்கி தூரவைத்ததாய் விட்டது. அதனால் மிகுதிக் கதையையும் கேட்டு முடிக்க வேண்டும் என்ற மன உற்சாகத்தில்,

" என்னப்பா நல்ல சந்தேஷமா இருக்கு நீர் சொல்லுற கதையை நான் கேட்டுக் கொண்டிருக்கவெண்டு! அப்படியா நான் நினைச்சுக் கொண்டிருக்க, பழத்தை வெட்டி வைச்சுப்போட்டு நீ தின்னாம இரு எண்ட மாதிரியல்லே அரைவாசியில நீர் கதையை நிப்பாட்டீட்டு இருக்கிறீர்....? என்னப்பா நீர் சொன்ன கதையை கேட்டுக்கொண்டிருக்க எனக்கும் கூட எல்லாம் புதினமாயிருக்கு... அந்த நாளில அப்பிடி முட்டையளவா ஒரு தானியம் இருந்ததோ...! அந்தக் கதையில வாற மாதிரி இப்ப அப்பிடி ஒரு தானியம் அளவில எங்களுக்கு வேளாண்மையில விளைச்சல் வந்தா... இண்டைய இந்த பசளை இல்லாத குறைஞ்ச விளைச்சல் காலத்திலயும் அது விதமான தானிய விளைச்சல் உள்ளதுகளை சாக்கில போட்டா எவ்வளவு கனக்கவா மூட்டையள் சேரும்...! இப்பிடியா இந்த நிலைமையிலயும் நட்ட்..ட.ம் எண்டுறதே வா...ராதேயப்பா."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று காற்றையும் வாயால் உறுஞ்சி உள் இழுத்து ருசித்த அளவில் நாகநாதன் சொல்லிவிட்டு கவலை மறந்து சிரித்தார். அப்படி கவலைச்சுவரை உடைத்து சந்தோஷமான மனத்தோடு வீரகத்தியை பார்த்தபடி அவர்,

" என்னப்பா இந்தளவு வயசுக்கு மேலேயும் வாழ்வதான துயரம் இல்லாத மாதிரியெல்லே நீர் சொன்ன மாதிரியா இரண்டா வதா வந்த அந்த குடு குடு வயசாளிக் கிழவரும் கதைக்கிறார்... சரி அப்பிடி வந்த அந்தக் கிழவரும் அரசருக்கு ஏதோ தகவலை சொல்லவெண்டு இருந்ததாக உள்ள கதையோட நீர் மேலே ஏதும் சொல்லாம டப்பெண்டு அதை நிப்பாட்டிப் போட்டீர்... ஆ... அந்தக் கிழவர் இப்ப அரசரிட்ட என்னத்தை சொன்னார் எண்டு இனி எனக்கு சொல்லுமன் காணும் கேப்பம் "

" ஓம் ஓம் இனி நான் அதையெல்லாம் வடிவா உமக்கு சொல்லுறேனே கேளுமன்... இரண்டாவதா வந்த முன்னம் வந்த வற்ற அந்த கிழவன் அரசருக்கு என்ன சொன்னாரெண்டா... அரசே நான் வாழ்ந்த என்னுடைய காலத்திலயும் இந்த மாதிரியான ஒரு தானியம் விளைஞ்ச காலத்திலயா நானும் கூட கண்டதில்லையே ஆனாலும் என்ர தகப்பனார் இந்த காலத்திலயா இருந்திருப்பார். எண்டுதான் நான் நினைக்கிறன். ஆதனால நீங்கள் அவரிட்டயா இதைப்பற்றி கேட்டீங்களெண்டா சில வேளை அவருக்கு இதைப் பற்றி சொல்லக் கூடியதா தெரிஞ்சிருக்கும்." எண்டு ஒரு கதையை அரசருக்கு அவர் அவிட்டு விட்டிட்டார்.

" போச்சுடா எனக்கெண்டா இப்ப தலை விறைக்குது. கேக்க... இனியா இவற்றை தகப்பன் வரப்போறாரோ "

" ஓம் காணும் இப்ப இவயள் போய் அவரைத்தானப்பா இங்க அரசரிட்டயா கூட்டிக் கொண்டு வருகினம்...! இந்த மூண்டாவது கிழவர் இப்ப அரசரைப்பார்க்க அங்க வரேக்க கொஞ்சம் பொல்லை அப்பிடி இப்பிடி ஊண்டினதாத்தான் நடந்து வாறார்.. அவருக்கெண்டா சொன்னா வயசு சரியான எக்கச்சக்கம் தான். அப்பிடி நல்ல எகிறின சரியான வயசு... ஆனாலும் கண் பார்வை கிழவருக்கு வெளிச்ச அளவில நல்லாதான் தெரியுது...

பின்ன அவர் அங்க வந்து அந்த தானியத்தை பார்த்ததோட புதைவு கொண்ட ஒண்டை கண்டு பிடிச்சது போல முகம் வெளிச்சமான அளவில சந்தோஷப்பட்டார். அதுக்குப்பிறகு அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார், “ அரசே இந்த அளவான தானியம் பன்னெடு காலமாக நான் வாழ்ந்த காலத்திலயும் இருந்துச்சு. இந்த விதமான தானியங்களை அந்த நாளில சாப்பிட்ட எங்கள் எல்லாருக்குமா பாறைகளையே கையால் துளைக்கிற அளவுக்கு எங்களுக்கு பலம் இருந்துச்சு. என் காலத்துச் சனங்கள் அப்ப ஆளையாள் மோதுகிற மாதிரி வர்மம் கொண்டு சீவிச்சதெண்டே இல்லை. உனக்கு எனக்கு எண்டு இந்த நிலத்தை சொந்தங் கொண்டாடினதா யாருமே இருக்கேல்ல. கடுமை கொண்ட சிறகுகளை விரித்தது மாதிரி அடக்கு முறை எண்டுறதே அப்பவா இல்லாத காலம். எல்லாமும் எல்லாருக்கும் பொது எண்டதான நிலைப்பாட்டோட எல்லாருமே மகிழ்சியா சண்டை சச்சரவே துளியும் இல்லாம அன்பா வாழ்ந்த தான அருமையான காலம். இயற்கையே இலைப் பசுமையாய் பிஞ்சும் பூவுமாய் பார்க்கிற இடமெல்லாம் எவ்வளவு அப்பவா செழிப்பு. பச்சையாகவே அடிவைத்து நடனமாடுகிற அழகுதான் எங்க பார்த்தாலும். சனங்களும் அப்பவா இயற்கைக்கு விரோத மான வாழ்வை வாழ்ந்ததாகவே வாழேல்ல. அதனால இயற்கையும் தன்ர தொழில் பாட்டை ஒழுங்காகத்தான் அந்த நாளில வைச்ச அளவிலாதான் இருந்துது. நோயுமில்லாத வறுமையும் இல்லாத வாழ்வு என்ரைய காலத்திலுள்ள அந்த மக்களின்ர வாழ்வு!” எண்டு சோர்வில்லாத நிலையில சொன்னார் அந்த கிழவர். எண்டா தாகத்தான் அந்த கதையானது நிறைவாகிது காணும்.

பாருமன் இந்த நாளையில வாழுகிற மனிசரிண்ட வாழ்வை. இப்பிடியே அந்த மனிசர் சீவிச்ச காலத்தில எல்லாம் அந்த சனங்கள் சீவிச்சது. இப்பத்தைய எங்கட காலத்து மனுசரிண்ட மன அழுக்குகளையெல்லாமே சுத்தமா துடைச்சு விடக்கூடிய நல்ல படிப்பினையான கதையெல்லே லியோ டால்ஸ்டாய் எழுதிய இந்த கதை என்னவும் நாகநாதன்? ”

என்று நாகநாதனை பார்த்தபடி அடி மனக்குரல் ஒலியில் மிக அமைதியக கூறினார் வீரகத்தி.

“ ஓமோமப்பா நல்ல ஒரு சோக்கான அருமையான கதையப்பா நீர் இப்ப எனக்குச் சொன்ன இந்த கதை. நல்ல படிப்பினையான கதையாகவும் நீர் சொன்ன இந்த கதை என்டது இருக்கு காணும். இந்தகதையைக் கேக்கவும் எனக்கு இப்பவா மன ஆறுதலாகவும் இருக்கப்பா...”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ ஆ இப்பிடியா நீர் சொல்ல எனக்கும் இப்பவா நல்ல ஒரு சந்தோஷமப்பா. அப்பிடியா எண்டு இருக்கிற இப்பத்தைய உம்முடய நிலையோட நான் இப்பவா உம்மட்ட ஒண்டைக் கேக்கிறனே... அப்ப நாளைய உம்முயை நடவடிக்கை என்ன காணும்? அதையும் இப்ப என்னட்டையா ஒருக்கா நான் அறிய சொல்லுமன் காணும்? ”

“ அதென்ன நாளைய நடவடிக்கை? அப்பிடி எண்டா என்னத்தை ஒரு விஷயத்தை நீர் மனதில் வைச்சுக் கொண்ட அளவில என்னட்டயா கேக்கீறீர்? ”

“ என்னப்பா உம்முடைய கதை! சேர்ந்து தானே வயல் நாங்கள் ரெண்டு பேருமா நாள் கிழமைக்குள்ளா ஒண்டா விதைச்சனாங்கள்.... நான் எண்டா நாளைக்கே அரிவு வெட்டவா எல்லா ஆயத்தமும் இப்ப செய்திட்டன்! ”

“ அதுக்கெண்டு அரிவு வெட்ட வெண்டதா நீர் மிசின் பிடிச்சிட்டீராக்கும் ”

“ ஓமோமப்பா! அது எண்டால் எனக்கு பாரும் ஒரு கரைச்சலுமில்ல... ஆனா நீர் வந்து காணும் ஆக்களப் பிடிச்சே அரிவு வெட்டவாப் போறீர்? ”

“ அரிவு வெட்டவோ...? அரிவு வெட்டி எடுத்து என்ரை இந்த வயலில பிறகு என்னவா நான் ஒரு பிரயோசனம் எண்டுறது எடுக்கவாக்கிடக்கு ”

“ அப்பிடியெண்டா? ”

“ இப்பிடியே வயலில இறங்காமலேயே நான் அப்பிடியே வெள்ளாமய விட்டிடப் போறன்! வெட்டுக் கூலியும் அதுவும் இதுவும் எண்டதா எல்லாம் சிலவழிச்சுத் துலைச்சு... இனியும் வேற நான் நட்டப்படவேணுமே...? அரிவு வெட்டுற ஆக்களுக்கு சம்பளம் குடுக்கவே இதில இப்ப விளைஞ்சது காணாது! பேந்து ஒரு அரிவு வெட்டாம் அரிவுவெட்டு! வீட்டப்போய் இனி சும்மா இருக்கிறதுதான் இனி என்னரய திட்டம்! ”

என்று குரல் ஒருங்கிப் போன விதத்தில் நாகநாதன் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" என்னப்பா நீர் கதைக்கிற ஒரு கதை! ஒரு கமக்காரன் கதைக்கிற கதையே நீர் கதைக்கிற கதை? விதைச்சதை பிறகு அறுத்து எடுக்காம அப்பிடியே வயலுக்கயா அழிய விடுறதெண்டா அது என்ன ஒரு நீதி! விளையிற நேரம் மண்ணை போற்றி கும்பிட்டு பொங்கி படைச்சு செய்திட்டு பிரயோசனம் எடுத்திட்டு விளையாத நேரம் மாத்திரம் மண்ணைத் தூற்றி அப்பிடியே பிறகு அழிய விடுறதெண்டால் இந்த வேளாண்மைத் தொழில் உமக்கு இனி விளங்கினதா எப்பவும் வருமே? "

"அப்ப என்ன தான் காணும் என்னயச்செய்யச் சொல்லுறீர்? இனி என்னட்டயா கையில மடியிலயா என்ன தான் மிச்சமா கிடக்கு எண்டுறன் "

" சரி நான் தாறனேயப்பா கொஞ்சம் உமக்கு கடனா எண்டுறன் "

" முன்னம் வந்துநான் உம்மட்ட வாங்கினதுகளையே இன்னும் தந்து சரியா ஒண்டும் கடன் அடைக்கேல்ல... ஆனா.... வேணாம் வேணாம்! கடனே கடவுளே இனி நான் சென்மத்துக்கும் கூட பட வேண்டாம்! "

" அப்ப என்ன செய்யப் போறீர்...? இனி என்னத்தையா உம்மட்ட உள்ளதைக் கொண்டு போய் ஆரிட்டயுமா பேந்து வித்துத்துலைச்சுப் போட்டு அரிவு வெட்டவெண்டு இருக்கிறீர் காணும்? "

" ஆ... அதுக்கும் ஒரு வழி இருக்குத்தானே! நீர் சொன்ன மாதிரி அரிவு நான் வெட்டவும் தான் இனியா செய்ய போறன். ஆண்டவன் எனக்கும் வந்து கை விடப் போறானேயப்பா..."

என்று கண் விழிப்போடு இதை சொன்ன நாகநாதன்... பிறகு கவலையான ஒரு வித யோசனையில் கதிர்ச் சாய்வு மாதிரி கண் பார்வையை தாழ்த்தினார். வீரகத்தி இவ்வேளை நாகநாதனுக்கு உண்டான அந்த மாற்றமான நிலைமையை கவனித்தார். அப்படி யாக கவனித்து பார்த்துவிட்டு,

" ஏதோப்பா நீர் உம்மடைய இஷ்டத்துக்கு செய்யுறத செய்யுமப்பா! நான் எண்டா இனியா என்னர வயல் பக்கம் போகப்போறன்! "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லிய கையோடு நாகநாதனின் காவல் குடிலை விட்டு வெளியேறி நடந்து போய் விட்டார்.

நாகநாதனுக்கு இப்போது வீட்டில் உள்ள பொருட்கள் மீது ஒவ்வொன்றாக தேடல் என்பது ஆரம்பித்து விட்டது. அந்தத் தேடல் என்பது ஒவ்வொரு பொருட்களிலுமாக நினைவில் தாவித் தாவிச் சென்று ஈற்றில் மாட்டுப் பட்டியில் வந்து நிறைவானது.

அந்த மாட்டுப் பட்டிக்குள் எட்டு வைத்ததாய் நடந்து வந்த எருதுகள் இரண்டின் மீது அவர் நினைப்பு இப்போது சென்றது. கொம்புகள் வேல் நுனியாய் கூரியதாகவும் இருக்கும் அந்த இரண்டு மாடுகளிலும் அவரின் நினைவானது அதை சுற்றிய படியே வலம் வந்தவாறு பின்னர் இருந்தது.

**வீரகேசரி வாரமஞ்சரி (ஆனி 5 – 2022)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரன் விளையாட்டு

இது ஒரு காலத்தில நான் பிறந்து வாழ்ந்த அந்த கிராமத்தில நடந்ததான மகிழ்ச்சியான சம்பவங்கள். ஆனாலும் இன்றைய என்ர வயதில என் இதயம் இப்படியாக மாற்றமடைந்திட்டுதே என்று வலித்துக்கொண்டே தான் நினைக்கிறதாயிருக்கு.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாளில வாசலைப் பெருக்கி கோலம் போட்டு சூரியப் பொங்கல் கொண்டாடுற அண்டைக்குத்தான் இந்த மாட்டு வண்டில் சவாரிப் போட்டி யெண்டுறது அமர்க்களமாக எங்கட ஊரிலயும் நடக்கும். இறம்பைக்குளம் பக்கமா உள்ள விமான ஓடுபாதைக்கு அருக உள்ள நீளமான மண் தரைப் பாதையில தான் பின்னேர வேளையில இந்த வண்டில் சவாரி போட்டியும் ஆரம்பிக்கும். வெளி யான இடம் என்கிறதால அந்த இடத்தில 'விர்விர்' என்று வீசுது காற்று. இந்நேரமா அங்கயாத்தே சனம் எண்டால் சரியான சனம்தான்!

அப்பிடி அந்த இடமே கூடிக்குமிஞ்சதா போயிடும் சனக் கூட்டம். சிறுசுகள், பெருசுகள், நண்டான்கள், சுண்டான்கள், கிழடு கட்டையள் எண்டு அந்த நேரம் அந்த இடத்திற்கு வந்து சனங்கள் அப்பிடியாச் சேர்ந்திடுங்கள். வேற வேற கிராமங்களில இருந்தும் சனங்களெல்லாம் இந்த வண்டில் சவாரியைப் பார்க்கவெண்டு வண்டி வண்டியா கட்டிக்கொண்டு வந்து அங்கினயா இறங்கீருங்கள்.

வண்டில் சவாரிக்கெண்டு அங்க சவாரிக்காரர்களால கொண்டு வாற அந்த காளைகளை எல்லாருமே அப்பவா மனநிறைவோடயா பாக்கலாம். அவ்வளவு லட்சணமான காளைகள்தான் அதுகள் எல்லாம். அந்த மாடுகளிண்ட சுழி சுத்தத்தையும் வாகையும் பார்த்தாலே எல்லாமே ஒரு விதத்தில திறம் மாடுகள் என்றுதான் சொல்லலாம். எல்லா மாடுகளும் ஓடுறத்துக்கு தயாரா தீர மாட்டாத திமிரோடதான் வருசையில அப்படியா தயாரா நிக்குங்கள். குளத்துக் கரையில நிண்டு புல்லு மேஞ்சு, தவிச்ச நேரம் தண்ணி அங்கின குடிச்சு, சும்மா குளத்துப் பக்கம் மேய வந்து காஞ்சு கிடக்கிற மாடுகள் மாதிரியே இந்த மாடுகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ தின்னு! நீ தின்னு! எண்டு தூக்குவாளி வழிய தீனியும் வைச்சு சோங்கா சுகமா சவாரிக்காரங்கள் வளத்த செல்லக் காளையள் எல்லேயப்பா சொல்லப் போனா அப்புடியான இந்தக் காளையள்! இந்த மாடுகளுக்கெல்லாமே சவாரிப் போட்டிக்கெண்டு இதுகளை தயார் படுத்த பயிற்சி ஒவ்வொரு நாளும் பின்னேர வேளையிலதான் நடக்கும். வண்டில் நுகத்து இருக்கையில இறுக்கிப் பிடிச்சபடி பொருந்தி உட்காந்து கொண்டு வெறுந்தரைப் பக்கமா வண்டில் ஓட்டத்தில அந்த இடத்தையே அப்பவா ஒரு கலக்குக் கலக்குவாங்கள் இந்த சவாரிக்காரங்கள்.

சவாரியில ஓடி மாடுகள் அண்டைக்கு முதல் பரிசு வெண்டிட்டா சவாரிக்காரர் வீட்டில பார்த்தா அண்டைக்கு பெரிய திரு விழாக் கொண்டாட்டம் தான். அண்டைய மாட்டு வண்டில் சவாரிப் போட்டியில வண்டிலுக்கு கடைக்கிட்டி பிடிச்சதா ஓடி உதவி செய்திட்ட ஆட்களோட, வண்டிலோட கூடவே இருந்து மாடுகள் ஓடுகிற நேரம் அடிச்சு ஏவி விடுகிற ஏவலாலன் ஆள்வரை எல்லாருக்குமா அண்டைக்கு செம விருந்துதான் அமர்க்களமா அங்கவா நடக்கும். கிடாய் பிடிச்சு அடிச்சுக் கறியாக்கி, விடைக் கோழி அடிச்சு வேற கறியும் ஆக்கி, வெள்ளைச் சீல் சாராயம் வாங்கி, சுத்து வட்டாரத்தில இருக்கிற சொந்தக்காரர்களை யெல்லாம் கூப்பிட்டு நட்டுவ மேளம் மட்டும் அடிக்காத அளவுக்கு திருவிழாதான் அண்டைய தினம் அந்த வீட்டில.

இந்த போட்டியில வெண்டவருக்கு மினு மினு எண்டு ஒரு கனத்த தங்க மெடல்! அதையும் தான் நாங்களும் ஒருக்கா பாப்பமே, என்று வந்தவர்களெல்லாமே அவரின்ட மெடலை ஆளை ஆள் மாறி மாறி கையில பக்குவமா வாங்கி பார்ப்பினம். மெடல் எண்டுறது மட்டுமில்ல சும்மா மழு மழுவெண்டதா சரிகைப் பட்டு வேட்டியுமெல்லே சவாரி ஓட்ட வீரருக்கு கிடைச்சிருக்கு. அதோட அவருக்கு குத்து விளக்கு, பித்ளைக் குடம், எண்டு அதுவும் வேற... சவாரிக்காரரும் சவாரி வெண்ட சந்தோஷத்தில அண்டைக்கு பாத்தா ஆள் சும்மா நெத்தி தேயப் பட்டையடிச்சு கொழ கொழவெண்டு சந்தனமும் பூசி செழிப்பாத்தான் அங்க வந்திருக்கிற எல்லாருக்கும் முன்னாலயா நிற்பார். இப்பிடி பொத்தாம் பொதுவாக சிலதை சொல்லலாம் சவாரிப் போட்டியில வெண்டுவிட்டவரின் அண்டைய அவர் வீட்டு சந்தோஷ சமாச்சாரங்களை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி இன்றைய இந்த பொங்கலிலயும் நடக்கிற வண்டில் சவாரிப் போட்டியில யார் ஒருவர் இண்டைக்கு வெல்லப் போகிறார் என்ற கேள்விதான் இப்பத்தைக்கு அந்த தரை வெளியில குழுமியி ருக்கிற சனங்களுக்கு எல்லமே உள்ள ஆர்வம்! விரட்டி விரட்டி அடிச்சமாதிரி ஓடிப்போகுற மேகங்களைப் பார்த்தமாதிரியில சிலருக்கு யோசனையிலும் வந்து கொண்டிருக்கிது போல, இந்த சிக்கல்! அப்பிடித்தான் அவையளை பார்க்கவாவும் விளங்குது. சவாரிப் போட்டியில பங்கு பற்றுறதுக்கெண்டு அந்த வெட்ட வெளி யில ஆதிக்கம் செலுத்தின மாதிரியா இப்ப அங்க வந்து கொண்டி ருக்கிறது தான் சவாரிக்கார சின்னத்துரையர் என்கிறவரிண்ட வண்டில் சவாரி மாடுகள்.

சின்னத்துரை அப்பா தன்ரை வண்டில் மாடுகளை ஓட்டிக் கொண்டு வந்து அந்த லைனில தானும் நிப்பாட்டிக் கொண்டாப் பிறகு எனக்குப் பக்கத்தில நிண்டதான அந்த ரெண்டு பேரும் அந்த மாடுகளை கிட்டவா போய் பார்த்து தங்களுக்குள்ளயா கதைச்சுக் கொள்ளுறது இப்ப என்ரை காது வழியிலயும் விழுகுது.

“ இவற்றை இந்த செவிலி மாட்டை ஒருக்கவா வடிவா நீரும் பாருமன் மச்சான்... இந்த மாட்டுக்கு அப்பா இடது பக்கம் விரி சுழி இருக்கெல்லே அது வலு விசேஷமப்பா... அதோட பாருமன் அதுக்கு ஏரியிலயும் ராஜ சுழி இருக்கு! வாலும் இவற்றை மாட்டுக்கு எலிவாலாயிருக்கு... அதின்ர அந்த குஞ்சமும் முழங்காலுக்கு மேல இருக்கு... அடுத்த சோடி மாடு அந்த மயிலை.... ஆ..! அதுவும் சோக்கான மாடு...! நெத்திச் சுழி அந்த மாட்டுக்கு இருக்கிறதால நடக்கேக்கிள கூட அந்த மாடு நிமிந்து தான் நடக்குமப்பா.... இந்த ரெண்டு மாட்டுக்கும் பாருமன் கச்சைக் கட்டும் கறுப்பாத்தான் இருக்கு... அதோட ஆரமும் சின்னதா இருக்கு.... இப்பிடி எல்லா அம்சமும் பொருந்தின மாடுகள் எங்கயும் வாங்க கிடைக்கிறதெண்டதே... லேசில ஆருக்குமே கிடைக்கா தப்பா... இப்பிடி பாத்து எங்கயும் மாடு அவிழ்க்கிறது சொல்லப் போனா ரொம்ப கஷ்டம் தான்...! ஆனாலும் இப்பிடி மாடுகள் கிடைச்சு அதுகள வீட்ட கொண்டு வந்து கட்டினாலே பிறகு அந்த வீட்டுக்கே வலு செல்வாக்கும் லட்சுமியும் தான்! ”

என்று அவயளில ஒருவர் சொல்லுகிற கதை சின்னத்துரை யருக்கும் கேட்டிருக்கத்தான் வேணும் என்று நானும் அவரைப் பார்த்தபடி நினைச்சன். அப்படி நான் நினைச்சதுக்கான ஒரு காரணம், இவயளிண்ட கதைப் போக்கில அவரும் இவயளை ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வை பார்த்து பெரிய அந்த மீசைக்குள்ளால பல்லுத் தெரியாத மாதிரி விளங்கவா ஒரு சின்ன சிரிப்பும் அவர் சிரிக்கிறார் பார்!

இதுக்கு மேலேயாக அவயளும் அந்த இடத்தில நிற்காமலா அடுத்த வண்டில் மாடுகளையும் பார்க்கவென்று பின் பக்கமாக போக அங்கேயாக நடக்கினம் போலகிடக்கு. அதைக் கவனிச்சுப்போட்டு நானும் அடுத்து நிற்கிற அந்த சவாரி வண்டில் மாடுகளை அவயள் பார்த்துப்போட்டு வேறஏதும் மாடுகளைப் பற்றி நான் அறியாததுகள கதைச்சுக் கொள்வார்களாக்கும் என்ற ஆர்வத்தில நானும் அவர்களை பின் தொடர்ந்ததாகிப் போய் நெருங்குறன்.

மாடுகளப் பற்றி எல்லா விசயமும் தெரிஞ்சு கொண்டுள்ள அவர்தான் இப்பயும் கூட தன்னோட நிற்கிறவருக்கு இதுகளை சொல்லுறார். மாடுகளை பற்றி கதைக்கிற நேரமெல்லாம் சுகத்தில சொக்கிப் போன மாதிரியாத்தான் அவர் விபரம் சொல்லுறார்.

சாமி அருள் வாக்கு சொல்லுற மாதிரித்தான் அவர் சொல்லுகிறத பக்கத்தில நிற்கிறவரும் கேக்கிறார். "மச்சான் இதுவும் அந்த வண்டில் மாடுகளைப் போல வலு சோக்கான திறம் மாடுகள்தானப்பா.... இதுகள அங்க வவுனிக் குளம் பக்கமிருந்து லொறியில கொண்டு வந்து இறக்கியிருக்கினம் போல இப்பவா றேசுக்கெண்டு.....! இதுகளை பாத்தா மான் குட்டி மாதிரியப்பா ரெண்டும்..! இந்த மாடுகளுக்கு வயித்தில உள்ள அந்த புள்ளியளைப் பாரும்! சா.... என்ன வடிவப்பா! இப்பிடியா சுழியளும் ரெண்டுக்குமே வலு விசேஷம்! இந்த மாடுகளிண்ட உஷாருக்கு பாத்தா மூச்சைப் பிடிச்சுக் கொண்டு திறமா ஓடும் போல தெரியுதப்பா! கிளப்பிவிட்டா இந்தா அந்தா எண்டு பாயும் போல வெல்லே கிடக்குது இதுகள பாக்க! அடுத்ததா இந்த நிரையில நிக்கிற மாடுகள் அதுகளையும் பாக்க ஒண்டை ஒண்டு வெண்ட தாத்தான் கிடக்கும் போல தெரியுது.... ஒன்டப்பாத்து இதுக்க இன்னொண்ட சொல்லேலாது போல கிடக்கப்போல றேசில ஓடி பிறகு எந்த மாடு வெல்லுமெண்டு சுவர் பண்ண ஏலாது...! ஆர் இந்த றேசில ஓடி வெல்லப் போகினம் ஆர் தோல்வியில கவிழப் போகினமெண்டு இப்பவா பாத்து ஒண்டுமே முடிவு சொல்லேலாமக் கிடக்கப்பா.. அப்பிடியாத்தான் இண்டைக்கு நடக்கப் போற வண்டில் சவாரி றேஸ் இருக்கும் போல தெரியுது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது சரி மச்சான் அங்க அந்த தொங்கலில உள்ள மாட்டு வண்டில் காரரை உமக்கு தெரிமோ மச்சான்...? ஆரப்பா அந்த ஆள்...? ஆளைப் பார்த்தால் வயசு போன ஆள் மாதிரி எல்லே கிடக்கு. உந்தாள் உந்த வயசிலயும் இப்பவா றேஸ் ஓடப் போகுதோ! "

என்று அவருக்குப் பக்கதிதிலயா நின்றவர் இப்ப இந்தப் பாராக்கிலபோக கதைய இழுத்தார்.

"ஆரு அவர் சின்னத்துரை அப்பாவையோ நீர் என்னட்டையா கேக்கிறீர்?" என்று எல்லா விபரமும் சொல்லிக் கொண்டிருந்தவர் கேக்க

" ஓமோம் அப்பா அவருக்கு பெயர் வந்து சின்னத்துரையே! அதே குடுமிக் காரரைத்தான் அப்பா நான் உம்மட்டையா கேக்கிறன்! அந்தக் கறுப்பு வெள்ளை மீசையையும், முறுக்கி மேல ஏத்தி விட்டபடி நிற்கிறாரே அவர்தான்!"

" ஓ அட நாங்கள் முதல் பார்த்த அந்த வண்டில் மாட்டு சொந்தக்காரரே "

" ஓமப்பா அவர்தான்! அந்த கிழவர் இந்த வயசிலயுமா பார்த்தா, விலங்கு மாதிரி மொத்தமா பெரிய பவுன் மோதிரமு மெல்லே விரல்ல போட்டிருக்கிறார்.. ஆனாலும் ஆள் மீசை நரைச் சாலும் கூட ஆளுக்கு பாத்தா இளந்தாரி உடம்பா பார்க்க இருக்கப்பா! ஆரப்பா அவர் ஆள்? "

"அடேயப்பா! அந்தாள் சொல்லப்போனா இந்த ஊர் வழியவே பெரிய ஒரு விலாசமான ஆளப்பா...! உள்ளூர் ஆட்களுக் கெல்லாமே அவரை பற்றி நல்லா தெரியுமப்பா...! ஆனாலும் நீர் முள்ளியவளையில இருந்து இங்கஇப்ப வந்திருக்கிற கணக்கில உமக்கு அவரைப் பற்றி தெரியாமத்தானே இருக்கும்!"

என்று அவர் சொல்ல,

"அதுதான் ஆளை வடிவா எனக்கு தெரியாததாலதானே நான் உம்மட்டையா இப்ப இதுகளை கேக்கிறன்? "

"ஓமோம் அதெண்டா சரிதான்...! அவர் எங்கட சின்னத்துரை அப்பாவை பற்றி நான் உமக்கு சொல்லுறேனே கேளுமன்..! அவர் மச்சான் சொல்லப்போனா இந்த ஊரிலயே ஏறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையான ஆள்! அப்பிடித்தான் அப்பா ஆளுக்கு உள்ள வசதியள்! அவருக்கு நிலம் புலம் தோப்பு துரவு எண்டு தாறு மாறான சொத்துக்கள் இருக்கப்பா...! அவருக்கு ஒரே மகள் தான்! அவள் லண்டனில வாத்தியாராயிருக்கிறாள். ”

“அட அப்பிடியே! ஆள் அப்ப வசதிதான்! அது சரி ஆளுக்கு இப்ப என்ன வயசிருக்கும்?”

“எண்பத்தைஞ்சப்பா! எண்பத்தைஞ்சுக்குக் கிட்டவா இருக்கும்! ”

“சோ... என்னப்பா! இந்த வயசிலயும் இந்தாள் வண்டில் ரேஸ் ஓட போகுதோ? ”

“ அட போடாப்பா! அந்தாள் பெரிய வண்டில் ரேஸ் வீரனப்பா...! எத்தினை ரேஸ் வளிய ஆள் வெண்டிருக்கு! ஆளுக்கு ரேஸ் பைத்தியம் தான்! மாடு கயிறோடதான் எப்பயும் உவர் காணவா ஆள் திரிவார். ”

“ ம்.... ஆளப் பார்த்தா இப்பயும் வயசானாலும் லட்சணம் மாறாத ஆளா கம்மெண்டு திடமாத்தான் உம்பும் ஆளுமா இருக்கிறார்...! சும்மா கடப்பாரை மாதிரித்தானே ஆளப்பாக்க உடம்பும் இரும்பு கணக்கா இருக்கு... உந்த கிழவர் என்ன ஒண்டை அப்பா அப்பிடி சாப்பிட்டுக் கீப்பிட்டு இப்பிடி பாக்க இருக்குதோ தெரியேல்ல என்ன? ”

“ அவர் என்னப்பா எங்கள மாதிரி வீடு வழிய அதுகள் எங்கடதுகள் சமைக்கிறதுகளை பீங்கான் வழிய போட்டுக் கொட்டி தின்னுற ஆள் மாதிரியா இல்லையப்பா ”

“ அப்பிடியெண்டா அவர் என்னத்தைத்தான் தின்னுறவர் எண்டுறாய்? ”

“அவருக்கடாப்பா இந்த குளத்து விரால்மீன் இருக்கெல்லே... அந்த விரால் மீன் கறிதான் எப்பவும் சோத்தில வேணும்! ”

“ என்ன விரால் மீனோ? அதெப்பிடி உமக்கு தெரியும்? ”

“ அட நானும் அவர் இருக்கிற அயலில தானே இருக்கிறனப்பா....! இவர் சின்னத்துரை அப்பாவின்ர பேரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கும் கூட்டாளி...! அவன் இவற்றை சாப்பாட்டை பற்றியும் எனக்கு சொல்லி இருக்கிறான். ”

“சரி அதையும் எனக்கு சொல்லுமன் நானும் கேட்டறிவமே?”

“ அவர் மச்சானாம் மாக்கட்டுக்கு ஒவ்வொரு நாளும் போய் வரேக்க உங்க பாவக்குளத்து விரால் மீன் கோர்வையோடதான் வீட்ட வருவாராம்...! இவருக்கு ஒவ்வொரு நாளும் அந்த மீன் கறி இல்லாட்டி சோறு இறங்காதாம்! ”

“ ம்.... ம்...! ”

“ அதுவும் மீனில பெருங்கொண்ட துண்டா வெட்டி பொரிச்ச பொரியல் சோத்தில ஒரு பக்கம் வைச்சு குழம்பும் வேற புளிக் குளம்பா வைச்சு அப்பிடி முறி முறியா மீன் துண்டுகளோட சாப்பாடு இருந்தாத்தான் இவருக்கு சோறு இறங்குமாம்...! அதில்லாமல் ஒரு நாளும் அவர் சாப்பிடவே மாட்டாராம். ”

“ அவருக்கு வேணுமெண்டுற அப்பிடி வசதி இருந்தும் கடல் மீன் இல்லாம இந்த குளத்து மீனைத்தான் அவர் அப்ப விரும்பி சாப்பிடுறார் போல! ”

“ ஓமடா மச்சான்! ”

என்று கதை சொன்ன அவர் பிறகு பல்லி கத்துறது மாதிரி “ கிக் கிக் கிக் ” என்றதாய் ஒரு சிரிப்புச் சிரித்தார்.

இதற்குப் பிறகு உயரத்துக்குவளர்ந்த கதையை விட்டுப் போட்டு மிச்சர் விற்கிற தள்ளு வண்டி வடிக்குப் போய் அவயள் இருவரும் மிச்சர் வாங்கி சாப்பிட தொடங்கி விட்டினம்.

நானும் இங்காலிப்பக்கமாக பிறகு வந்து சனத்தோடு சனமாக நின்று கொண்டு சவாரியைப் பாப்போமெண்டமா நின்று கொண்டன்.

புதிசா ஒரு உச்சம் பெற்ற மாதிரி சனமெல்லாம் அலுப்பை எடுத்து எறிஞ்சிட்டு இப்ப உசாரா நிக்கிற மாதிரிதான் நிக்குதுகள். ஏனெண்டால் முதன் முதல்லா வந்த அந்த மாட்டு வண்டில்களில யெல்லாம் மூன்று மூன்று வண்டில்களாகத்தான் ஓட விட்டு அதில முந்தியதா வந்த அந்த ஒரு மாட்டு வண்டியைதான் கடைசி வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேஸ் ஓட விடுவினம் என்ற நடை முறையிலதான் ரேஸ் போட்டி நடக்கப் போகிது எண்டதாத்தான் தெரியுது.

மடக்கெண்டு கொடி அடிக்க முதல் மூன்று வண்டில் மாடுகள் ரேசில ஓடிச்சு. வண்டிலிண்ட தட தடவெண்ட சத்தம் தரை வெளியில அதிர்ந்திச்சி. அந்த மூன்று வண்டில் மாடுகளில பாசாங்கு பண்ணின மாதிரி ஒரு வண்டிலிலுள்ள மாடுகள் வெளிக் கிட ஏவலாளன் அதுக்கு நல்ல பிரம்படியும் போட்டான். அந்த மாட்டு சவாரி ஓட்டத்தில நெடுங்கேணியில இருந்து கொண்டு வந்து இறக்கியிருந்த மாடுகள்தான் வெற்றி பெற்றதான முதல் இடமாக வந்திச்சு.

சின்னத்துரை அப்பாவின்ர வண்டில் மாடுகள் மற்றைய இரண்டு வண்டில் மாடுகளுடன் அடுத்து ஓட்டத்துக்கு விடப்பட்ட நேரம் இறுக்கிப்பிடிக்கிற பார்வையோடதான் நான் அந்த வண்டில் ரேஸ் ஓட்டத்தைப் பார்த்தன்.

என்ர மனமுள்ள இடத்தில அவர்தான் நிச்சயம் வெல்லு வார் என்று நான் நம்பினது போலதான் அவர் அந்த ரேசில முதல் இடத்திற்கும் வந்தார்.

அடுத்து வேறே மூன்று வண்டில் மாடுகளுக்கான ரேஸ் பிறகு விட்டுச்சினம். அந்த ரேசில முதல் இடத்துக்கு கிளிநொச்சி யில இருந்து வந்த வண்டில் மாடுகள் முதல் இடத்திற்கு வந்திச்சு. நல்ல ஓட்டம்தான் அந்த மாடுகள் ஓடினதுகள். அதனால அந்த வண்டில் மாடுகளுக்கும் பெரிய மதிப்பு கிடைச்சிட்டுது.

கடைசி வெற்றி ரேஸ் இனிமேல்தான் நடக்கப் போகிது. இந்த கடைசி ரேஸ் எண்டறது லேசா இருக்க முடியாது எண்டது போலத்தான் நான் மனசுக்குள்ள அப்பவா நினைச்சிட்டன். கடைசி ரேஸ் துவங்திறதுக்கு முன்ன பீக்கரிலயும் அது பற்றி எல்லாம் உறுமி அறிக்கையிட்ட மாதிரித்தான் சொல்லிக் கொண்டு இருந்தாங்கள்.

நான் இந்தநேரம் ரேஸ் ஓட்டத்தை அழகாப் பார்க்கவெண்டு ஓடு பாதையில நடுப்பக்கமா போய் பிறகு கரைவழிய போய் நின்று கொண்டன்.

ரேஸ் துவங்கி விட்டுது. வண்டில் சக்கரங்கள் இவ்வளவு சுழலுமா எண்டதா தான் எனக்கு ஓட்டத்தை பார்க்க அப்பிடியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையே சுத்துற மாதிரி இருந்துது. அப்பிடித்தான் முழிச்சுப் பார்க்கிற அளவுக்கு அந்த ரேஸ் ஓட்டம் திறமா இருந்திச்சு.

இந்தப் பாணியிலயெல்லாம் கடைசி ரேஸ்சை பற்றி நான் சொல்லுற அளவுக்கு யார்தான் வெண்டிருப்பார் எண்டுறியள். அதில வெற்றி பெற்ற பெருமை யாருக்குத்தான் நிச்சயமா கிடைக்கும் எண்டுறியள். எங்கட சின்னத்துரை அப்பாவை விட வேற ஆர்தான் இந்த வண்டில் ரேஸ் வழிய இங்க வவுனியாவில இந்தத் தரைவழிய ஓடேக்க வெல்லக் கூடியதா இருப்பினம்.

ரேஸ் ஓடுறத்துக்கு முதல் இங்க உள்ள நீங்களெல்லாம் அவர் சுருளிதான் கட்டாயம் வெல்லுவார், இல்லை இல்லை கிளிநொச்சி கந்தையாவின்ர ரேஸ் மாடுகள் தான் வெல்லும் எண்டதா எப்பிடி எல்லாம் விதம் விதமா பறைஞ்சனியள்?

நடக்கிற கதையை பேசுங்களனப்பா நீங்கள்? இப்ப பாருங்களன் ரேசில ஆர் வெண்டது எண்டு! எங்கட சின்னதுரை அப்பா தானே இந்த ரேசில வெண்டது! என்று நான் அப்பவா மனதுக்குள்ள நினைச்சுக் கொண்டு நெஞ்சை நிமிர்த்தினபடி எனக்கு முன்னால நின்றபடி உள்ளவங்களை தெம்பு திறமாக ஒரு பார்வை பார்த்தன். பீக்கரில இப்ப சின்னத்துரை அப்பாவின்ர வண்டில் மாடு வெண்டது பற்றி சொல்லுறது வெற்றி முழக்கமா வருகுது.

இந்த நேரம் அந்த வெளியில வீசின நல்ல காத்து என்ரை உடம்பையே ஒரு தட்டுத் தட்டின மாதிரி இருக்கு. வண்டில் ரேஸ் பார்த்ததில எனக்குப் பூப் போல மலர்ந்து போச்சு மனம். விருது கொடுக்கிற இடத்திலயா அலை அலையா சனம் குமிஞ்சதா போச்சு.

நல்ல கூட்டம்! அதால நானும் ஏன் போய் அதுக்க கிடந்து இடிபடுவான் எண்டு நினைச்சு வீட்டுக்கு போய்ச் சேர தரைவழி பாதையில நடந்தன்.

தரைவழிக்குப் பக்கத்தில உள்ள விமான ஓடு பாதை முன்னம் பிரிட்டிஷ்சார் இரண்டாவது மகாயுத்தத்தில போட்டதாம்.

இந்த வெயில் தாழும் நேரம் அந்த இடத்தில நடந்தா, காலை ஆத்தாது எண்டு போட்டு புல்தரையால நடந்து போனன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து வருகிற அப்பவா அங்க றண்வேக்கு கிட்டவா உள்ள றம்பைக் குளத்திலயிருந்து காத்து உடம்பிலபட ஒரு குளிர்ச்சாடை ஒண்டு பேசுது. அந்த இடத்திலயிருந்து நடந்து வந்தா என்ர வீடும் கிட்டவேதான். எண்டதால நானும் சுறுக்காக நடந்து என்ர வீட்டுக்கும் வந்து சேர்ந்தும் விட்டன்.

இதெல்லாம் இங்க நடந்தது எண்டுறது ஒரு காலமப்பா.... அந்தக் காலம் இப்பவா முற்றுமா மாறினதாய்ப் போச்சப்பா..

கண்ணைச் சிமிட்டி சிமிட்டி சிரிக்கிற அந்த காலத்தை நினைக்க நினைக்க எனக்கு இப்பவும் கவலையாத்தான் இருக்கு.

அண்டைக்கு பெற்ற இன்பத்தை இப்பவா நினைக்க மனம் சரியான துன்பமாத்தான் இருக்கு.

ஏனென்டா அந்த இடமே இப்பவா, நாங்கள் எல்லாமே போகவே போகேலாத அப்படியானதொரு பாதுகாப்பு வலயமாத் தான் போச்சு.

ஒரு காலம் அனுபவிச்ச அந்த இன்பம் எண்டுறது நினைச்சால் இப்ப எண்டால் பெரிய மனத் துன்பம்தான்.

வைச்ச கண் வாங்காத அளவிலதான் அந்த இடத்தில அண்டைக்கு நடந்தவைகளை எல்லாமே நான் பறிபோன அளவிலா நினைத்துக்கொண்டு இப்பவும் கூட கவலையோடதான் பார்க்கப் போனா நான் இருக்கிறன்.

**(2023)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமகள் பதிப்பகத்தில் வெளியான ஆசிரியரின் நூல்கள்

## சிறுகதை

01. மாற்றங்கள் மறுப்பதற்கில்லை [ 12 சிறுகதைகள் ]
02. கபளீகரம் [ 22 சிறுகதைகள் ]
03. ஆமைக்குணம் [ 23 சிறுகதைகள் ]
04. கறுப்பு ஞாயிறு [ அரசின் சாகித்தியவிருது பெற்றது2006] [13 சிறுகதைகள்]
05. அகதி [ 10 சிறுகதைகள் ]
06. ஒரு பெண்ணென்று எழுது. [ 16 சிறுகதைகள் ]
07. வெளிச்சம்[2010ஆம் ஆண்டு அரச இலக்கிய விருதுக்காக கருத்திற்கொள்ளப்பட்ட சிறுகதைத் துறையிலான நூல்களில், இறுதிச்சுற்றிற்காக விதந்துரைக்கப்பட்டஇந்நூலுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.] [12சிறுகதைகள்]
08. ஓ! அவனால் முடிவும் [ 12 சிறுகதைகள் ]
09. எதிர் மறை [ 23 சிறுகதைகள் ]

## நாவல்

01. வாழ்க்கையின் நிறங்கள் [2007ம் ஆண்டு அரசின் சாகித்திய விருது பெற்றது. மற்றும் வடமாகாணக்கல்விப் பண்பாட்டலு வல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் சாகித்திய விருது பெற்றது.]

02. துயரம் சுமப்பவர்கள் [2010ஆம் ஆண்டு அரசின் சாகித்திய விருது பெற்றது. மற்றும் கொடகே தேசிய சாகித்திய விருது - இலங்கை இலக்கிய பேரவையின் விருது – எழுத்தாளர் சின்னப்ப பாரதியின் அறக்கட்டளை விருதும் பெற்றது.] [ ஞானம் சஞ்சிகை நடத்திய நாவல் - குறுநாவல் போட்டியில் 3ம் பரிசு பெற்றது.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பதினான்காம் நாள் சந்திரன் [ 2012 ஆம் ஆண்டு அரச இலக்கிய விருதுக்காக கருத்திற் கொள்ளப்பட்ட நாவல் துறையலான நூல்களில் இறுதிச்சுற்றிற்காக விதிந்துரைக்கப் பட்ட இந்நூலுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.]

04. இந்தவனத்துக்குக்குள் [அரசின்சாகித்தியவிருது பெற்றது2015]

05. ஒன்றுக்குள் ஒன்று

06. யோகி

## கவிதை

01. வேருடன் பிடுங்கிய நாளிலிருந்து. [ 2009 ஆம் ஆண்டு அரச இலக்கிய விருதுக்காக கருத்திற் கொள்ளப்பட்ட கவிதை இலக்கிய துறையிலான நூல்களில் இறுதிச் சுற்றிற்காக விதந்துரைக்கப்பட்ட இந்நூலுக்கு சான்றிதல் வழங்கப்பட்டது.]

02. கடந்து போகுதல் [ 2010 ஆம் ஆண்டு வட மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் சாகித்திய விருது பெற்றது.] [2010 ஆம் ஆண்டு ஈழத்து ஆக்க இலக்கியங்களில் மிகச் சிறந்தது என இலங்கை இலக்கியப் ரேரவையின் சான்றோர் குழுக்களால் தெரிவு செய்யப்பட்ட இந்நூலுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது]

03. மௌனமான இரவில் விழும் பழம்

04. இலைகளே என் இதயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்

01. Changes can not be denied [ 15 சிறு கதைகள் அடங்கலானது. ]

## மணிமேகலைப் பிரசுரம் வெளியிட்ட நூல்கள்

01. அம்மாவுக்குத்தாலி, [ கணையாழி தாமரை சஞ்சிகைகளில் வெளியான தெரிந்தெடுக்கப்பட்ட 14 சிறு கதைகள் அடங்கலான நூல் ]

02. அப்பிள் பழவாசமும் நெருஞ்சி முட்களின் உறுத்தல்களும் (19 சிறுகதைகள்)

03. சொர்க்கத்தில் முடிவான பந்தங்கள் (32 சிறுகதைகள்)

## மேலும் இவர் பெற்ற பரிசுகளும் விருதும் - வேறு பங்களிப்புக்களும்

அன்பு பாலம் சஞ்சிகை நடத்திய வல்லிக்கண்ணன் ஞாபகார்த்த சர்வதேச சிறுகதைப்போட்டியில் இவரது சிறுகதையான இரத்தம் கிளர்த்தும் முள்முடி முதற்பரிசினைப் பெற்றது. (2008போட்டிக்காக அனுப்பப்பட்ட 900 கதைகளுக்குள் இருந்து முதல் பரிசுக்குத் தெரிவான சிறுகதை இது. இதற்கான பரிசை, பாலம் மாத இதழின் சிறப்பாசிரியரான ஞானபீட விருது பெற்ற த.ஜெயகாந்தன் அவர்கள் இவருக்கு வழங்கி கௌரவித்தார்.)

பூபாள ராகங்கள் 2004 விழாகுழு தினக்குரல் பத்திரிகையுடன் இணைந்து நடத்திய உலகலாவிய ரீதியான சிறுகதைப் போட்டில் ஆறுதல் பரிசு பெற்றார்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் 2005ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தமிழ்மொழியும் இலக்கியமும் தரம்8 மாணவருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான பாடநூலில் ஆசிரியரின் "நாணயம்" எனும் சிறுகதையும் உள்ளடங்கி இருக்கிறது.

நாடகம் இலக்கியம் சார்ந்த துறைகளில் சிறந்த பங்களிப்பு செய்த மைக்காக 2015ஆம் ஆண்டு கலாபூஷணம் அரச விருது இவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

கலையுலகிற்கு கலைச்சேவையை வழங்கி வருவதனைக் கௌரவித்து 2019இல் அரச விருது வழங்கும் வைபவத்தில் கலைமாமணி விருது வழங்கப்பட்டது.

லண்டன் புதினம் சஞ்சிகை உலகலாவிய ரீதியில் நடத்திய சிறுகதைக்கான பரிசு போட்டியில் இவரது மூன்றும் குரங்குகள் என்ற சிறுகதையானது ஆறுதல் பரிசைப் பெற்றுக்கொண்டது.

ஆசிரியர் இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட அளவில் இலங்கையின் முக்கிய பத்திரிகைகளான தினகரன், வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் கட்டுரை ஆக்கங்களையும் எழுதியிருக்கிறார்.

தமிழ்ச்சங்கம் பேராதனைப் பல்கலைக்கழகம் 2003ஆம் ஆண்டு அதன் பவளவிழாவையொட்டி நடாத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் சிறப்பு இடம் பெற்றமைக்காக இவரது சிறுகதைக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

விபவி2003ஆம் ஆண்டு நடத்திய சிறுகதைப்போட்டியில் சான்றிதழ் பெற்றார்.

சக்தி T.V தொலைக்காட்சி நாடகங்களிலும் இவர் நடித்திருக்கிறார்.

ஆசிரியர் இதுவரை 6 சமூகமேடை நாடகங்களை எழுதியிருக் கிறார். அவைகளில் முக்கியமாக பாத்திரங்களிலே நடித்தும் இருக்கிறார். அந்நாடகங்களை இவரே இயக்கியும் இருக்கிறார். இந்நாடகங்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற பல இடங்களில் மேடையேற்றம் கண்டிருக்கிறது. பல சரித்திர நாடகங்களையும் இவர் இயக்கியுள்ளார். அவற்றில் முக்கிய பாத்திரங்களில் நடித்தும் இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர் பட்டப்படிப்புக்கு ஆசிரியரின் "துயரம் சுமப்பவர்கள்" நாவல்

***ஆசிரியர் திருமதி.கலையரசி திருமாவளவன் (B.A, M.A, P.G.D) அவர்கள் நீ.பி.அருளானந்தத்தின் துயரம் சுமப்பவர்கள் நாவலை ஆய்வு செய்ததில் பெற்றுக்கொண்ட கல்வித்தகைமை சால் உயர்தகு பெறுபேறு –***

முதுகலைமாமணி பட்டத்துக்குரிய பகுதித் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்திற்கு துயரம் சுமப்பவர்கள் என்ற நாவல் - திருமதி. கலையரசி திருமாவளவன் என்பவரால் ஆய்வுக்கு எடுக்கப்பட்டது. இதுகுறித்த இவரது ஆய்வு சம்பந்தமான நிறைவில் பேராசிரியர்களால் பாராட்டப்பட்டு உயர்பேறான சித்தியடைந்த நிலையில் ஏ(A) தகுதியினை இவர் பெற்றிருக்கிறார். துயரம் சுமப்பவர்கள் நாவலுக்குள் அடங்கலாக உள்ள கதைப் பரிமாணங்கள் பூராக பகுதி பகுதியாக்கி பிரித்து எடுத்து அத்தனை விசயங்களையும் தன் ஆய்வுக்கு உட்படுத்தி அதன் விபரங்கள் பூராகவும் தெள்ளத் தெளிவாக அவர் ஆய்வு செய்து சமர்ப்பித்திருக்கிறார். இந்தவித ஆய்வின் பெறுபேறாக இவருக்கு முதுகலைமாமணி எனும் உயரிய பட்டம் இவருக்கு உயர்பட்டப் படிப்புக்கள் பீடம், யாழ்பல்கலைக் கழகமானது (தமிழ்த்துறை) வழங்கி கௌரவித்திருக்கிறது.

இதையடுத்து இவர் எம்பில் பட்டம் பெறுவதற்கும் எழுத்தாளர் நீ.பி.அருளானந்தம் எழுதிய நான்கு நாவல் நூல்களை ஆய்வு செய்யும் நிலையிலும் தற்பொழுது ஈடுபட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை என்பது ஒன்றை விவரிப்பது. ஒரு புள்ளியில் பேருருவம் காட்டுவது. கருத்துக் களமும் தொடக்கமும் முடிவும் தலைப்பும் மொழிநடையும் சிறந்திருந்தால் காலவெள்ளத்தில் சிறுகதையின் அடிப்படைப் பண்புகள் நிலை பெறும். எங்கே தொடங்கி எப்படி முடிக்க வேண்டும், எவற்றைக் கருப் பொருளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும், மையப் பொருளைப் புலப்படுத்தும் வகையில் தலைப்பினை சூட்ட வேண்டும், பாத்திரங்களின் இயல்புகளுக்கேற்ப மொழிநடையைக் கையாள வேண்டும் என்பவை எல்லாவற்றிலுமாக நூலாசிரியர் மிகவும் நுட்பமிக்க கவனத்தைச் செலுத்தியுள்ளார்.

மூத்த எழுத்தாளர் நீ.பி. அருளானந்தம் எழுதிய "எதிர் மறை" என்கிற இச்சிறுகதைத் தொகுப்பின் கதைகள் யாவும் - எம்மக்கள் பட்ட வேதனைகளின் வெளிப்பாடுகள் என்றுதான் குறிப்பிட வேண்டும். வாழ்க்கையில் பலவிதமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து துன்பத்தில் வாழும் மக்களைக் கொண்டது எமது சமூகம். இச்சமூகத்தின் பிரச்சினைகளை கருப்பொருளாகக் கொள்ளாமல் யாரும் எழுதிடவே முடியாது என்பதை நன்குணர்ந்து தனது "எதிர் மறை" சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார் நூலாசிரியர் நீ.பி. அருளானந்தம்.

திரு.ந.பார்த்திபன் (முன்னுரையிலிருந்து)
(ஆசிரியர், பசுமை பல்சுவைச் சஞ்சிகை)

ISBN 978-624-6049-02-7
9 786246 049027 >

திருமகள்
பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org